# செவ்வந்திப்புராணம்



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்
றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T.24739

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 580

# செவ்வந்திப்புராணம்

முனைவர். **ஜெ. ஜெயவாணிஸ்ரீ,**
சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்,
உதவிப்பேராசிரியர்,
அரசினர் கலைக்கல்லூரி, கும்பகோணம்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

## சரசுவதி மகால் நூலகம்
## மற்றும்
## ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2017] [விலை: ரூ. 120-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | செவ்வந்திப்புராணம் |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ<br>சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 580 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2017 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 224 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | இலக்கியம் |
| ISBN | : | 978-93-85343-18-6 |
| விலை | : | ரூ. 120/- |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும் பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். வரலாற்றுச் சிறப்புடைய சரசுவதி மகால் நூலகம் தன்னிடத்தே உள்ள வெளிவராத அரிய சுவடிகளின் அடிப்படையில் பல்துறை சார்ந்த பன்மொழி நூல்களை நூலக மொழிப்பண்டிதர்கள், துறை வல்லுநர்கள் மற்றும் சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களை நியமித்து நூல்களாகப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் செவ்வந்திபுராணம் என்னும் இந்நூல் தற்பொழுது முதல் பதிப்பாக வெளியிடப்படுகிறது.

திருச்சிராப்பள்ளி என்னும் ஊரில் கோயில் கொண்டுள்ள சிறப்பு வாய்ந்த உச்சிபிள்ளையார் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கு செவ்வந்தி நாதர், திருமலைக்கொழுந்தர், தாயுமானவர், திருமலைப் பெருமான் அடிகள், மாத்ருபூதேச்வரர் என்றும், இறைவிக்கு சுகந்தகுந்தளாம்பிகை, மட்டுவார்குழலி யம்மை என்பதாக பல திருநாமங்கள் உள்ளன. இந்நூல் இக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு இறைவன் அருள் பாலித்த செய்திகளையும், இத்தலத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தச்சிறப்புகளையும் எடுத்தியம்புகின்றது. சாரமா முனிவர் பாதாள உலகத்திலிருந்து செவ்வந்திமலர்ச் செடிகளைக் கொண்டுவந்து பயிரிட்டு அம்மலர்களால் சிவபெருமானை அர்ச்சித்து வழிபட்டதால் இச் சிவபெருமானுக்கு செவ்வந்தீச்வரர் என்னும் மற்றொரு

திருநாமமும் வழங்கப்படுகிறது. இச்சிவபெருமானைப் பற்றி இயம்புவதால் இந்நூல் செவ்வந்திப்புராணம் என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. இந்நூலின் பதிப்புப்பணியை சிறப்பாகச் செய்துள்ள சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ஜெ. ஜெயவாணிஸ்ரீ அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள நூலக நிருவாக அலுவலர் **அ. பூங்கோதை, M. A.,** அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit.. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், ஒளியச்சு மற்றும் கணினி அச்சகப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர் களுக்கும், என் பாராட்டுக்கள்.

இந்நூல் ஆன்மீக அன்பர்களுக்கும், ஆய்வாளர் களுக்கும், ஆர்வலர்களுக்கும், மாணவர்களுக்கும் பெரிதும் பயன்படும்.

**தஞ்சாவூர்,** **ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,

**21-01-2017** மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்

இயக்குநர்.

# பதிப்புரை

திருச்சிராப்பள்ளி என்றாலே எல்லோருடைய கண்முன்னே தோன்றுவது நகரின் நடுவே உயர்ந்து காணப்படும் மலைக்குன்றான உச்சிப்பிள்ளையார் கோயில் தான். 'மலைக்கோட்டை' என அழைக்கப்படும் இக்கோயிலில் தாயுமானவர் சுவாமியும், மட்டுவார் குழலியம்மையும் எழுந்தருளி அனைவருக்கும் அருள் மழை பொழிகின்றனர்.

*"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்*
*வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே''*

என்பது தாயுமானசுவாமிகளின் அருள்வாக்காகும். இக்கோயிலின் வரலாற்றை நோக்குமிடத்து திருச்சிராப் பள்ளிக்கென பல்வேறு திருப்பெயர்கள் இருந்தமையும், தென் கயிலாயத்திற்கு இணையாக இறைவனும், இறைவியும் இங்கு இருந்துள்ளமையும் நன்கு அறியமுடிகிறது.

தமிழ் மொழியில் செய்யுட்சுவை, பொருட்சுவை, கற்பனை வளங்களுடன் இயற்றப்பட்டுள்ள தலபுராணங்கள் பல உள்ளன. அத்தலப்புராணங்கள் திருக்கோயில்களின் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகளை எடுத்தியம்புவது திருத்தலயாத்திரை மேற்கொள்ளும் மெய்யன்பர்களுக்கு ஒரு நற்வழிகாட்டியாகவும், நல்லாசிரியரைப் போன்று நெறிப்படுத்துவதாகவும் செவ்வந்திப் புராணம் அமைந்துள்ளது.

இச்சுவடியானது விகாரி வருடம் ஐப்பசி மாதம் 7 – ஆம் தேதி புதன் வாரநாள் தசமி சதய நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் சுவாமிநாதன் செவ்வந்திப் புராணம் எழுதி நிறைந்தது என்ற குறிப்பு சுவடியின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ளது.

சுவடியிலுள்ள எழுத்துகளின் தன்மை, குறிகள் போன்றவற்றைக் கொண்டு நோக்குமிடத்து இவை சுமார் நூற்றைம்பது அல்லது இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பர். அதற்கும் முன்பாகவே இது வழக்கில் இருந்திருக்க வேண்டுமெனவும் அறியமுடிகிறது.

பல சுவடிகளையும் ஆராய்ந்து, மூலநூலின் வடிவங்கள் இவையாகத்தான் இருக்க வேண்டுமென்ற நிலையைப் பெற வேண்டி இருந்தாலும், குறிப்பிட்ட சில சொற்களில் பின்வரும் மாற்றங்களை மட்டும் செய்து, அந்தந்த இடத்திற்கேற்றவாறு பொருள் மாறுபாடு இல்லாமல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இப்பிழைகளில் எழுத்துப்பிழை மற்றும் இலக்கணப்பிழை களைந்து பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பிறைசைச் சார்ந்தக் கவிராயர் என்னும் புலவரின் கருத்தின்படி சுவடியிலுள்ள நூற்பொதி செய்திகளையோ கருத்துகளையோ பதிப்பின்போது மாற்றுதல் கூடாது என்பதில் எவருக்கும் எவ்வித ஐயமுமில்லை. அதன் எளிமைக் கருதி மூல ஆசிரியரின் பதிப்பையும், அந்த மூலத்தின் கதை இடையே தெளிவுபடுத்தவும், புரிய வைக்கவும், எளிய தமிழிலில் இடத்திற்குத் தக்கவாறு சொந்த நடையில் நானே கதைத்தொகுப்பாக ஆங்காங்கே வழங்கியுள்ளேன்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் சதுர்விதங்களையும் இந்நூலினால் அனுபவிக்க முடியும் எனும் நோக்கத்தினால் இது எழுதப்பட்டுள்ளது. இதில் சொற்குற்றம், பொருட்குற்றம் இருப்பின் பொருட்படுத்தாது இவ்வரிய நூலை அங்கீகரிக்க வேண்டுகிறோம்.

அப்போதைய ஆட்சித் தலைவராய் இருந்து இந்நூலினைப் பதிப்பிப்பதற்கு ஆணை வழங்கிய திரு.எம்.எஸ்.சண்முகம்,இ. ஆ.ப., அவர்களுக்கும், நூல்கள் மறைந்து வரும் இக்காலக் கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து நூல்களை வெளிக் கொண்டு வந்து மக்களுக்குப் பயனடைய செய்யும் விதமாக வெளியிடும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதிமகால் நூலக இயக்குநர் **ஆ. அண்ணாதுரை,** இ.ஆ.ப., அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் சம்ஸ்கிருத பண்டிதர் முனைவர் ஆ.வீரராகவன் அவர்களுக்கும், இந்நூலை அச்சுப்பிழைத் திருத்தம் செய்து கொடுத்த கும்பகோணம் திரு. வய். மு. கும்பலிங்கம், தலைமையாசிரியர் (ஓய்வு) அவர்களுக்கும், எனக்கு உறுதுணைபுரிந்த திரு. ஆர் செந்தில்குமார் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்,

**ஜெ. ஜெயவாணிஸ்ரீ**
பதிப்பாசிரியர்

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

# முன்னுரை

*நன்றுடையானைத் தீயதில்லானை நரை வெள்ளேறு*
*ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானை*
*சென்றடையாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்*
*குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே.*

## கோயில் மலைச் சிறப்பு

இத்தலமானது வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரித்தாயின் கரையில் அமைந்துள்ளது. இது திரிசிராமலை, திரிசிரபுரம், திரிசிரகிரி, முத்தலை மலை, பிரம்மகிரி என்னும் திருப்பெயர்களைக் கொண்டது. ரிசபாசலம், தென்கயிலை எனவும் வழங்குவர். கல்விக்கு இருப்பிடமாகவும், கலைகளுக்குப் பிறப்பிடமாகவும், ஆன்மீகத்தின் உறைவிடமாகவும் விளங்கு கின்ற திருநகரமாக திருச்சிராப்பள்ளி அமைந்துள்ளது.

திருச்சிராப்பள்ளியின் கிழக்கே திருவெறும்பீசுவரரும், தெற்கே விராலிமலையும், மேற்கே வயலூர் முருகப்பெருமானும், வடக்கே ஆனைக்காவில் அகிலாண்டேசுவரித் தாயும் அரங்கநாத பெருமானும், சமயபுரத்து அன்னையும் எழுந்தருளி வருகின்றனர்.

## இறைவன் திருப்பெயர்கள்

மலைமேல் எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் திருநாமமாக, செவ்வந்திநாதர், திருமலைக் கொழுந்தர், தாயுமானவர், திருமலைப் பெருமான் அடிகள், மாத்ருபூதேசுவரர் என்றும், இறைவிக்கு மட்டுவார் குழலியம்மை, சுகந்த குந்தளாம்பிகை என்னும் திருநாமங்களும் உண்டு.

## தீர்த்தங்கள்

வடக்கே காவிரியும், வடமேற்கே சிவகங்கையும், கோவிலுக்கு மேற்கேயுள்ள தெப்பக்குளம் பிரம்ம தீர்த்தம் என்றும் சோம ரோகணி என்றும் அழைப்பர். கோயிலுக்குக் கிழக்கே நன்று உடையானும், தெற்கே தீயது இல்லானும் தீர்த்தங்களாக அமைந்து உள்ளன.

## திருக்கோயிலின் அமைப்பு

மலைமேல் அமைந்த இத்திருத்தலம் கலைக் கருவூலமாகும். தச்சினக்கயிலாயம் எனவும் அழைப்பர். மலையில் குகைக் கோயில் இருப்பது பல்லவக் காலத்திற்கு எடுத்துக்காட்டாகும். தமிழிலும், கிரந்தத்திலும் கல்வெட்டுகள் உள்ளன. நகருக்கு நடுவே நடு நாயகமாக இம்மலையும், கோயிலும், நெடும் பெருங்குன்றமாக விளங்குவதை, "கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது நெடும் பெருங்குன்றம்'' என்று சங்க இலக்கியத்தில் அகநானூற்றுப் பாடல் விளக்குகின்றது.

இத்திருக்கோயிலில் ஆயிரங்கால் மண்டபம், வாகன மண்டபம், சகத்திர மண்டபம், நூறுக்கால் மண்டபம், சித்திர மண்டபம், பதினாறுகால் மண்டபம், மணிமண்டபம், ஆத்தான மண்டபம் எனப் பல மண்டபங்கள் காணப்படுகின்றன.

இக்கோயிலைச் சுற்றி நயினார் கோயில், பிடாரி கோயில், அனுமன்கோயில், முருகன்கோயில், நந்திகோயில், மாணிக்க விநாயகர் கோயில் ஆகியவை சுற்றுக் கோயில்களாக விளங்குகின்றன.

## இத்தலத்தை வணங்கிப் பேறு பெற்றோர்

உமையம்மையான பார்வதி, கௌதம முனிவர், திரிசிரா, ஆதிசேடன், வாயுதேவன், பிரமதேவன், இந்திரன், இராமபிரான், ஜடாயு, சப்தமுனிவர்கள், அனுமன், வீடணன், அருச்சுனன், சாரமாமுனிவர், சூளாமணி சோழன், சூரவாதித்த சோழன், கரிகாற் சோழன், மௌனகுரு, தாயுமானவர், அருளையர் மற்றும் எண்ணற்ற தேவர்கள், முனிவர்கள், அருளாளர்கள் வணங்கிப் பேறுபெற்றுள்ளனர்.

## பாடியருளிய சான்றோர்கள்

நாராயணன், வேம்பையர் கோன் சிராமலை அந்தாதியையும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், ஐயடிகள், தாயுமானவர், அருணகிரிநாதர், காடவர்கோன் நாயனார் ஆகியோர் பக்திப் பாடல்களையும் பாடியுள்ளனர்.

## புராணச் சிறப்பு

செவ்வந்திப் புராணத்தில் செவ்வந்தீசுவரர், மட்டுவார் குழலியம்மை, தலவிநாயகர், முருகன், ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி, ஆளுடைய அடிகள், சேங்ஞலூர்ப் பிள்ளையார் எனப் பாயிரமும் இறைவணக்கமும் ஆக 11 பாடலும் அவையடக்கமாக ஒரு பாடலும் கொண்டு விளங்குகிறது.

கிளைக்கதையென முதலாவதாக, திருமலைச்சருக்கம் – 54 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. இதில் வாயு தேவனுக்கும், ஆதிசேடனுக்கும் நிகழ்ந்த போரில் கயிலை மலையிலிருந்து மூன்று கொடிமுடிகளை வேருடன் பறித்து எறிய திருக்காளத்திமலை, திரிசிராமலை, திருக்கோணமலை என மூன்று தலங்களாக உருவாகியதைத் தக்கனக்கயிலை என வழங்கினர். திரிசிராமலையில் பிரம்மாவின் அசத்தியமாகிய தீவினையை நீக்கியதும், அகத்திய முனிவருக்கு நினைத்ததைக் கொடுத்ததும், செம்பன் என்னும் அசுரனால் இந்திரனுக்கு வந்த பாவத்தையும் நீக்கினார்.

இரண்டாவதாக, பிரம்மாவின் சத்தியத் தீர்த்தச் சருக்கம் – 46 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. பிரமன் அன்ன வடிவமெடுத்து தாழம்பூவைப் பொய் சொல்லச் சொன்னக் குற்றத்திற்காகத் திரிசிராமலையில் தவம் செய்தார். தாமரைமலர் பொருந்திய குளத்திற்குச் சோமரோகிணி எனப் பெயர் சூட்ட வேண்டினார். அப்போது பிரமதேவன் தவம் செய்த கல்லின் நன்மையும், சிவக்குளத்தின் மேன்மையும் கண்டுணர்ந்து சத்தியலோகத்தை அடைந்தார்.

மூன்றாவதாக, அகத்தியச் சருக்கம் – 43 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. விந்தமலையை அடக்கி நேரிமலையின் உருவத்தை உடைத்து, திரிசிராமலையை வலம் வந்து சிவபெருமானின் அருளைப் பெற்ற அகத்தியமுனிவர் பின் பொதியமலையின் மேல் அமர்ந்தார்.

நான்காவதாக, இந்திரச் சருக்கம் – 21 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. இந்திரன் செம்பனைக் கொன்ற பழியையும், தீவினையையும் நீக்கிய தலமாகும். பின் இங்கிருந்து புறப்பட்டு இந்திரன் ஐராவதம் என்னும் யானை மேலேறித் தனது கற்பக நாட்டுக்குச் சென்றான்.

ஐந்தாவதாக, தீர்த்தச் சருக்கம் – 32 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. உமாதேவி சிவபெருமானிடம் மலைகளிலேயே மேலானது எதுவென்று கேட்க, திருக்காளத்தி மலைக்கும், திருக்கோணமலைக்கும் நடுநாயகமாக விளங்கும் தெக்கனக்கயிலை என்று கூற, உமையம்மை இமயமலையை விட்டு திரிசிராமலையை அடைந்து சிவனிடத்தில், சிவகங்கைத் தீர்த்தம் கேட்க கங்காநதி குளமாக உருப்பெற்றது. இக்குளத்தில் நீராடி உமையம்மை தவம் மேற்கொண்டு சிவபெருமானை அடைந்தார். மேலும் அக்குளத்தில் நீராடிய சப்தமாதர்கள், சித்தர்கள், சாரணர்கள், அரக்கர், இயக்கர், கந்தர்வர்கள், பாம்பும் வண்டும் நீராடி துவாரபாலகராகப் பதவிப் பெற்றது, சடாயு, சப்தமுனிவர்கள் ஆகியோரும் சாயுச்சிய பதமான சிவபெருமானின் திருமேனியில் அடக்கிக் கொண்ட தலமாகும்.

ஆறாவதாக, திருநகர்ச் சருக்கம் – 17 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. அரக்கர் அரசனாகிய இராவணனிடத்தில் காவலராகப் பணியாற்றிய திரிசிரன், தூடணன், கரன் ஆகியோர் தங்கிய இடமாகும். திரிசிரன் இங்கு ஒரு நகரை உருவாக்கி இறைவனை வேண்டியும் தோன்றாத காரணத்தால் தன் தலை மூன்றினுள் இரண்டினை நெருப்பில் தந்து, பின் தன் கழுத்தை அறுக்க முற்பட இறைவன் காட்சியளித்தார். பிரம்மன் முதல் தேவர்கள் வணங்கியது போல என்னுடைய பெயரே இந்நகருக்கு வழங்க வரம் தந்தருள வேண்ட, இறைவனும் அருளினார்.

ஏழாவதாக, நினைத்ததுக் கொடுத்தச் சருக்கம் – 17 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. இதில் அஞ்சனாதேவியின் புதல்வன் அனுமனுக்கு இறைவன் காட்சியளித்தபோது, என்னுடைய முத்திரை அடையாளம் இத்தலத்தில் நிலைபெற வேண்ட அருளிய தலமாகும்.

எட்டாவதாக, சாரமாமுனிச் சருக்கம் – 14 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. பரமயோகியான பிரமசன்மன் என்பவர் இமயமலையில் தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது சிவபெருமான் காட்சியளித்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். தனக்கு முக்தி தந்தருள வேண்டுமென்றார். சிவபெருமானும் உடனே, "நீ காசியில் வாழும் சோமசன்ம முனிவருக்கு மகனாகப் பிறந்து இல்லற வாழ்க்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், திரிசிராமலையை அடைந்து, பாதாள லோகத்திலுள்ள செவ்வந்தி மலரைக் கொண்டு வந்து எம்மை வழிபட்டால் நீ முக்தி பெற தருவோம்'' என்று அருளினார்.

அதன்படி பிரமசன்மனும், சோமசன்மனுக்கு மகனாகப் பிறந்தார். சாரன் என்ற பெயரும் பெற்று, வேதங்களையும், ஆகமங்களையும் கற்றார். ஆன்மிக வழியில் இல்லறம் நடத்தி பின் துறவறத்தை மேற்கொண்டார். இறைவனின் வரத்தின்படி திரிசிராமலையை அடைந்து, அம்மை அப்பனாக இறைவனை வணங்கினார். நாள்தோறும் நல்மலர்களைக் கொண்டு பூசித்து வந்தார்.

ஒன்பதாவதாக, சூரவாதித்தன் சருக்கம் – 146 பாடல்களைக் கொன்டு விளங்குகிறது. இப்பகுதியில் சனநாத சோழன் திருத்தல யாத்திரைப் பயணமாகச் சென்று திரிசிராமலையை வணங்கித் திரும்பும்போது, ஒரு கோழி இந்தப் பூமியின் வலிமையைக் காட்டியதால் நாம் ஆட்சி செய்வதற்கு ஏற்ற இடம் இதுவெனக் கருதி சோழமன்னன் அளவில்லாத திருநகரமாக அமைத்து ஆட்சியைச் செலுத்தினான். அவ்வேளையில் சாரமாமுனிவர் இறைவனின் திருவருள் தமக்கு எப்போது கிடைக்குமோ என எண்ணித் தவித்த நாளிலே பாதள உலகத்திலிருந்து வந்த நாககன்னியரைக் கண்டார். அப்பெண்கள் சிராமலை வாசனைச் செவ்வந்தி மலர்களால் பூசித்ததைக் கண்ட சாரமாமுனிவர் தானும் பாதளலோகம் வந்து அச்செடியினைக் கொண்டு வர அப்பெண்களிடம் உதவுமாறு வேண்டினார்.

நாக கன்னியருடன் சாரமாமுனிவர் சென்று நாகராசனான ஆதிசேடனைச் சந்தித்து செவ்வந்தி மலர்ச்செடியினைப் பெற்று

வந்து நாள்தோறும் இறைவனை அம்மலர்க் கொண்டு வணங்கி வழிபட்டு வந்தார். அச்சமயத்தில் சூரவாதித்தன் என்னும் சோழமன்னன் மிருக வேட்டைக்குச் சென்று கானகத்தில் உலாவும் சமயத்தில் நாக கன்னியர் எழுவரும் சிவதீர்த்தத்தில் மூழ்குவதைக் கண்டான். அவர்களில் தன்னை ஒருவர் மணப்பதற்கு ஆசைக் கொண்டு அவர்களின் ஆடைகளைக் கவர்ந்தான். அப்பெண்கள், தன் தந்தையின் அனுமதியைக்கேள் என்பதற்கு இணங்க அவர்களுடன் பாதாளலோகம் சென்று ஆதிசேடனைச் சந்தித்தான். மன்னனின் நல்வினைப் பயனாக, தன்பெண்ணில் ஒருவளான காந்திமாமதியைச் சூரவாதித் தனுக்கு திருமணம் செய்து கொடுத்தான். ஆதிசேடனின் குல இலிங்கத்தைத் தனக்குக் கேட்க இரு இலிங்கமானதில் ஒரு இலிங்கத்தைக் கொடுத்து ஆதிசேடன் பொன், பொருள் அனைத்தையும் தந்து தன் மகளையும், மருமகனையும் திரிசிராமலைக்கு அனுப்பி வைத்தான்.

பின் காந்திமாதேவி கருவுற்று இருக்க தினமும் இறைவனை வழிபட்டு வரும் சமயத்தில் சோர்வினால் மயங்கி விழ அங்கே இறைவன் அப்பெண்ணிற்காக, சுயம்பு வடிவமாகத் தோன்றி காட்சி கொடுக்க ஒரு புத்திரனைப் பெற்றாள்.

பத்தாவதாக, உறையூர் அழித்தச் சருக்கம் – 102 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. உறையூரை ஆட்சி செய்த சோழப்பரம்பரையில் ஐம்பதாம் தலைமுறையாக வன்பராந்தகச் சோழன் வந்தான். பராந்தகன் என்னும் பூ வணிகனின் துணைக் கொண்டு நாள்தோறும் தான் சூடிக் கொண்டு அரசாட்சி செய்தான். அதனைத் தவறென உணர்த்தியும், கடிந்தும், எச்சரிக்கையும் செய்தும் பார்த்தார் சாரமாமுனிவர்.

மன்னனும் தன் தவறை உணராமல் செய்ததை இறைவனிடம் முறையிட மண்மாரி பொழிந்து மன்னனும், நாடும் அழிந்தது. அரசமாதேவி மன்னனின் குதிரையிலிருந்து காவிரியில் விழுந்து தப்பினாள். பின் அவளை ஓர் அந்தணன் காப்பாற்றி நான்கு ஆண்டுகள் வளர்த்தார். தன்னால்தான் இவ்அழிவு நிகழ்ந்தது என அமைச்சர்களிடம் வர, அமைச்சர்களும் ஒருமுகக் கருத்துடன் பட்டத்துயானையை ஏவி

இளவரசனைத் தேர்வு செய்ய அனுப்பினர். பின் பட்டத்துயானையும் அக்குழந்தையைக் கண்டு தேர்ந்து கரிகால சோழனாக நாட்டிற்குள் அழைத்து வந்து பட்டமளித்துச் சிறப்பித்தனர். சேரனும், பாண்டியனும் கப்பம் செலுத்தும்படி ஆட்சி செய்தான். அதன்பின் சாரமாமுனிவர் இறைவனின் காட்சியால் முக்திப் பெற்றார்.

பதினோராவதாக, தாயான சருக்கம் – 54 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. அரதநகுத்தன் தன் மகள் அரதநமதியைத் திரிசிராமலையில் வாழும் மெய்த்தநகுத்தன் எனும் வணிகனுக்கு மணம் செய்து கொடுத்தான். அந்தப் பெண்ணும் கணவனின் அனுமதியுடன் வெள்ளிக்கிழமை தோறும் செவ்வந்திநாதரை வணங்கி வழிபட்டு வந்தாள். அதனால் கர்ப்பந்தரித்தாள். அப்பெண்ணின் தாய் மகள் நிலையை அறிய நினைத்தும் காவிரியின் வெள்ளத்தால் வர இயலவில்லை. இறைவன் அப்பெண்ணின் தாய் உருவத்தில் வந்து அப்பெண்ணிற்கு மருத்துவம் செய்து குழந்தையை ஈனச் செய்தாள். கரையான், சிற்றெறும்பு, இளைய கரு, கல்லினுள் தேரை, அற்ப மனிதர்கள், தேவர்கள், இந்திரன், நான்முகன் ஆகியோரை வளர்த்தருளும் இறைவன் இக்குழந்தையையும் வளர்த்தார்.

அச்சமயத்தில் காவிரி வெள்ளம் தணிய ஈன்ற தாய் வர, மருண்டாள் அரதனவதி. அதிசயம் தோன்ற இறைவனும் விண்ணில் மறைந்தார். நாயினும் கடையவரும் விரும்பி அழைத்தால் குழந்தையை விட அன்பாக வந்து அருளும் சிவபெருமான் ஆயிரம் பெயருடைய அண்ணலைத் தாயினும் நல்லவன் என்று உலகமெல்லாம் அழைத்தது, இப்பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

சாரமாமுனிவர் பாதாள உலகத்திலிருந்து கிடைத்தற்கரிய செவ்வந்திமலர்ச் செடிகளைக் கொண்டு வந்ததும், திரிசிராப் பள்ளியில் பயிரிட்டதும், அம்மலர்களைக் கொண்டு வழிபட்டு முக்தி பெற்றதும், அதனால் இறைவனுக்கே செவ்வந்தீசுவரர் என்னும் திருநாமம் அமைந்து வரலாறாக தன்னுள் கொண்டு

விளங்குவதால், இதற்கு செவ்வந்திப்புராணம் என்னும் திருப்பெயர் வழங்கப்படுகிறது.

சைவ. எல்லப்பநாவலரவர்கள் இயற்றிய இச்செவ்வந்திப் புராணம் எனும் இந்நூலை திரிசிரபுரம், மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்ட பிரதிக்கிணங்க திருமயிலை வித்வான் சண்முகப் பிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டு திரிசிரபுரம் ஸ்ரீ தாயான செல்வருக்கடிமை பூண்டொழுகும் வீ.சண்முகப் பிள்ளையினது வேண்டு கோளின்படி, திரிசிரபுரம் புத்தகவியாபாரம் தி. அப்பாசாமி முதலியார் சென்னை மீனாட்சியம்மை கலாநிதி அச்சுக்கூடத்தில் 1887 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலையும் சரசுவதி மகால் நூலகத்திலுள்ள சுவடி எண் 1792 மற்றும் 1879 என்ற இரு சுவடியிலும் செவ்வந்திப் புராணச் சுவடியை ஆய்ந்து ஒப்பிட்டு இந்நூல் வெளியிடப்படுகிறது.

ஒப்பீடு செய்ததில் பாயிரம் பாடலில் எண். 1, பிரம்மதேவன் அசத்தியந் தீர்ந்த சருக்கத்தில் பாடலில் எண். 8: வரிசை எண். 74; சூரவாதித்த சருக்கத்தில் பாடலில் எண். 3, 8, 9, 10: வரிசை எண். 259, 264, 265, 266; தாயானச் சருக்கத்தில் பாடலில் எண். 4, 30: வரிசை எண். 508, 534; ஆக 8 பாடல்கள் சுவடியில் அதிகமாக இடம் பெற்றுள்ளது. சுவடிப் பதிப்பு என்பதால் அப்பாடல்களை நீக்காமல் அப்படியே இந்நூலில் சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இனி இப்புராணத்தைப் பாடல் வாயிலாகக் காண்போம்.

**ஜெ. ஜெயவாணிஸ்ரீ**
பதிப்பாசிரியர்

■ ■ ■ ■

திருச்சிற்றம்பலம்

# ஐயடிகள் காடவன் கோனாயனார்

அருளிச்செய்த

## சேத்திரத் திருவெண்பாவில்

# திரிசிராமலை

கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
யொழிந்த துடலிரா வண்ண - மழிந்த
திராமலையா கொண்டுபோ வென்னாமுன் னெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

## திரிசிராமலைப் புராணம்

## என்னும்

# செவ்வந்திப் புராணம்

திருவாக்குங் செய்கருமமுங் கைகூட்டும்
செஞ்சொல் பெருவாக்குந் பீடுங் பெருக்க
முருவாக்கு மாதலால் வானோரு மானை
முகத்தானை காதலாற் கூப்புவார் தம்கை.

## பாயிரம்

*கலிவிருத்தம்*

அருளெனுங் கடல்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதவுசெவ் வந்தி யானையின்
றிருவடி யிணைமலா சென்னி சேர்த்துவாம்.

இறைவனின் அருளாகிய கடல் நீரைக் கொண்டு, அடியவருடைய சிந்தையில் ஞானத்தைப் பெற்று, சிவயோகத்தில் மூழ்கி விளைய பெற்று, வரமாகிய மழையைப் பொழிய செவ்வந்தி விநாயகரின் திருவடியில் மலர்களை தூவி வணங்குவோம்.

தாயான செல்வம் பாதார விந்தமே சரணம்

## இறை வணக்கம்

திரிசிர கிரியுரை செம்மலார்க் கதை
யுரைசெயப் பசுந்தமிழு தவிசெயு மாற்
மரகத மணிநிறை யணைய வண்டெனுந்
கரைபொரு கடாமலை கமலப் பாதமே 1

(இ–ள்.) இறைவன் ஆணையின் வண்ணம் திரிசிரா மலையை அடைந்து அன்னையையும் அப்பனையும் ஆனந்தமாக வணங்கினர். நாகராசனிடம் செவ்வந்தி மலர்ச் செடியைப் பெற்று ஒரு நந்தவனம் அமைத்து நாள்தோறும் செவ்வந்தி மலர் பறித்து இறைவனுக்குச் சூட்டி இறுதியில் முக்தியும் பெற்றார்.

## வேறு

## இறைவன் . செவ்வந்திப்பெருமான்

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

சொற்கொண்ட கிளியனையா ரனங்கனுக்குத்
துணையாகத் துணைப்பு ரூர
விற்கொண்டு விளையாடுந் திரிசிரா
மலையிலுறை விமலன் றன்னைப்
பொற்கொண்ட நிறந்தானுங் கரியமுகி
னிகர்வானும் புலரா வண்ண
மற்கொண்ட மிடற்றானைச் செவ்வந்திப்
பெருமானை யகத்திற் சேர்ப்போம்! 2

(இ.-ள்.) கிளிபோல மொழி பேசும் பெண்கள் மன்மதனுக்குத் துணையாகக் கொண்டு தமது இரண்டு புருவங்களையும் கரும்பைப் போன்று வில்லாக வளைத்தும், தாமரைப் பூவாகிய அம்பைப் போன்ற கண்களையுடையவளும் தன்னுடைய கணவனின் மேல் செலுத்தி அனுபவிக்கும் இடமாகிய திரிசிராமலை அமைந்துள்ளது. அங்கு விமலனாகிய சிவபெருமான் வீற்றிருந்து திருமாலுக்கும் பிரம்மனுக்கும் உயிர் வாடாத அருளை வழங்கினான். அத்தகைய மிடற்றானை மனத்தினில் வைப்போம்.

*கலிநிலைத்துறை*

திரிசி ராமலை யடைந்திட வேண்டியே துதிக்கும்
பரிசி ராமலை வயற்கணே கயற்கணம் பாய
மரிசி ராமலை மதனிரு கணைகளால் வயங்குந்
திரிசி ராமலை யிறையவர் மலர்ப்பதங் சேர்மின். 3

(இ—ள்.) இறைவனை அடைய வேண்டி நினைப்பவர்கள் நீர் வளமும், நிலவளமும் நிறைந்த, இரவுப்பொழுதில் ஆடவரும் பெண்டிரும் மன்மதன் எய்யும் அம்புகளுக்கு இன்பம் கொள்ள விரும்புபவரும் திரிசிராமலையில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குப் பாதங்களில் மலர்களைத் தூவி வணங்குவோம்.

## இறைவி . மட்டுவார் குழலாள்

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

பனிகொள் வரையிற் பிறந்தபிடி
 பரனா ரிடத்திற் படர்ந்தகொடி
முனிவ ரிமையோர் மகிழவற
 முப்பத் திரண்டும் வளர்த்தருளும்
வனிதை வடிவே லனைப்பயந்த
 மடந்தை மட்டு வார்குழலா
ளினிய பதமா மிருபோதுந்
 தலைமேற் றரிப்பா மிருபோதும் 4

(இ—ள்.) பனி நிறைந்த இமயமலையில் பிறந்த பெண்யானை போலவும், பரமசிவனிடத்தில் படர்ந்த கொடி போலவும், முனிவர்களும், தேவர்களும் மகிழும்படியாக முப்பத்திரண்டு அறத்தையும் வளர்க்கின்ற வனிதையாகவும், வடிவேலனை ஈன்ற தாயாகவும் விளங்கும் மட்டுவார் குழலியம்மையின் திருவடி களைக் காலை மாலையாகிய இருவேளையும் கைகளைத் தலைமேல் வைத்து வணங்கிக் கொள்வோமாக

## வேறு . தலவிநாயகர்

*கலிநிலைத்துறை*

மருப்ப தாமெழுத் தாணியா லாயிர மாற்றுப்
பொருப்ப தாந்தனி யேட்டிலே பாரதப் பொருளை
விருப்ப தாம்படி யெழுதிய கரிமுக விமலன்
றிருப்ப தாம்புய மலரிணை யிறைஞ்சுவாஞ்
 சிரத்தால் 5

(இ—ள்.) தம்முடைய கொம்பையே எழுத்தாணியாகக் கொண்டு ஆயிரம் மாற்றுப்பொன் போல விளங்கும் மகாமேரு என்னும் தனி ஏட்டில் பாரதத்தை அனைவரின் விருப்பத்தின்படி எழுதிய, யானையின் முகத்தை உடைய விநாயகப் பெருமானின் மலர்ப் பாதத்தைப் பணிந்து வணங்குவோம்.

## முருகன்

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

ஓகையாற் றிரைமுன் னாளி
  லுழக்குமா வினையும் வாட்டு
மேகவெவ் வரையி னெல்லை
  யிடித்திடு மிமையோர் போற்றத்
தோகைமே லுலவுங் கந்தன்
  சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை
  வணங்குவ தெமக்கு வேலை 6

(இ—ள்.) எப்பொழுதும் ஓசையை உடைய அலைகடலில், ஒளிந்திருந்த சூரபத்மன் என்னும் மாமரத்தைப் பிளந்தும், கொடிய கிரௌஞ்ச மலையின் நான்கு எல்லைகளை இடித்தும், தேவர்களும் போற்றி வணங்கும்படி, மயில் வாகனத்தின் மேல் விளங்கும் முருகப் பெருமானின் திருக்கரத்தில் விளங்கியும், வெற்றியைத் தாங்கி விளங்கும் வேலாயுதத்தை வணங்குவதே எம்முடைய வேலையாகும்.

## ஆளுடைய பிள்ளையார்

*கலிநிலைத்துறை*

வண்டகத்தே குடைந்தூத
  முறுக்க துடைந்து வாய்திறந்து
தண்டகத்தே மதுவொழுகி
  வழியுங் கமலத் தார்ப்புயந்தான்
கண்டகத்தே விடமாகி
  அடியார்க் கமுதாங் கவுணியன்றன்
முண்டகத்தாண் மலர்த்தலைமேல்
  முடிந்தே னிந்நூன் முடித்தேனே! 7

(இ—ள்.) வண்டுகள் தேனை உண்பதற்காக அரும்புகளைக் குடைந்து உறிஞ்சுகின்றன. அதனால் மலரில் தேன் வழிகின்றது. அத்தகைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவர் திருஞானசம்பந்தர். அடியவர்க்கு அமுதாகவும், விருந்தாகவும் விளங்கும் அவரின் பாதங்களை வணங்குவோம்.

## ஆளுடைய அரசு

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

புத்தியற் றிருக்கும் பொய்யர் புறச்சம யத்தை நீங்கிச்
சத்தியப் பொருளை யோர்ந்து தலைவனை யறிந்து சைவ
பத்தியிற் கனிந்த ஞானப் பழத்தினை யொரு கற்றூணா
லத்தியைக் கடந்த நாவுக் கரசினை வணங்குவோமே 8

(இ–ள்.) அறிவில்லாத பொய்யர் சமயமாகிய சமண சமயத்தை விட்டு நீங்கி உண்மைப் பொருளை உணர்ந்து, சைவ சமயத்தில் கனிந்து கல்லையும் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்த திருநாவுக்கரசர் பெருமானை வணங்குவோம்.

## ஆளுடைய நம்பி

*வேறு*

தீங்கும் பெருமா நிலத்திடருந்
தீரத் தீரத் திரைக்கடலிற்
தூங்கும் பெருமா ளுடன்வேதன்
துதிக்கும் படிக்குச் சுடர்க்கிரியா
யோங்கும் பெருமாள் புகழ்பரவி
யோரா யிரம்பொ னொருமொழிக்கு
வாங்கும் பெருமாள் சவுந்தரியப்
பெருமாள் பதத்தை வணங்கிடுவோம்! 9

(இ–ள்.) உலக மக்களுடைய பாவமும், தீமையும், துன்பங்களும் நீங்கும்படியாக இறைவனைச் சுந்தரர் பாடி அருளினார். பாற்கடலில் உறங்கும் திருமாலும், படைப்புக் கடவுளான பிரம்மனும் காண முடியாதவாறு சோதி வடிவமாக உயர்ந்தோங்கிய சிவனின் புகழைப் பாடி வணங்கிய, ஒரு சொல்லுக்கு ஆயிரம் பொன் பெற்ற சுந்தரமூர்த்தியை வணங்குவோம்.

## ஆளுடையவடிகள்

*கொச்சகக்கலிப்பா*

தேனூறும் வாசகங்க ளறுநூறுந் திருக்கோவை
நானூறு மமுதூற மொழிந் தருளு நாயகனை
வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை யிருபோது மிறைஞ்
சிடுவேன்! 10

(இ—ள்.) சிவஞானத்தேன் ஊறுகின்ற திருவாசகத்தின் பாசுரங்கள் அறுநூறும் திருக்கோவை நானூறும் பாடல்களாக பாடி அருளிய ஆகாய கங்கைக்கு நிகரான மாணிக்கவாசகரை எனக்கு இடையூறு ஏற்படாதவாறு காலையும் மாலையும் வணங்குவேன்.

## சேய்ஞலூர் பிள்ளையார்

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

மணத்தாது செறிமலருஞ் செழுங்கனியுங்
கொணர்ந்துசிறு மணலை வாரி
யணைத்தாதி சிவன்வடிவா யமைத்தருளி
யவற்கினிதா வாட்ட ஏவண்டிக்
கணத்தாவின் பாலைக்கறந்து நிறைத்துவைத்த
கலசமெலாங் கவிழ்த்த தாதை
யிணைத்தாளைத் தடிந்திறைவர் துணைத்தாளை
யடைந்தவர்தா ளிறைஞ்சு வோமே! 11

(இ—ள்.) மணமிக்க மலர்களையும், செழுமையான கனிகளையும் கொண்டு வந்து, சிறுமணலிலும் தொடங்கி எல்லாப் பொருளுக்கும் ஆதியாக விளங்கும் சிவனின் வடிவை அமைத்தவர் சண்டிகேசுவரர். சிவபெருமானுக்கு நீராட்டுவதற்காகப் பசுக் கூட்டத்தின் பாலைக் கறந்து கலசத்தில் வைத்தார். அக்கலசத்தைக் காலினால் உதைத்துக் கவிழ்த்த தம் தந்தையின் இரண்டு கால்களையும் வெட்டிய அவர்தம் பாதங்களை வணங்குவோம்.

## அவையடக்கம்

*வேறு*

நாவலந் தீவிற் கிட்டா நவமணி பொதிந்து வைத்த
மேவருங் கிழியு மந்த மணியுடன் விரும்பு மாபோற்
பாவருங் குற்றமாமென் கவிதையின் பழுதும் பாரா
தியாவருங் கொள்வ ரீசன் பெயரதி விருக்கை
யாலே! 12

(இ–ள்.) நாவலந்தீவில் கிடைக்கப் பெறாத உயர்ந்த நவரத்தினத்தைத் துணியில் முடிந்து வைத்துள்ளேன். இரத்தினத்தை விரும்புவது போல் இதனையும் விரும்புவர். சிவபெருமானுடைய திருநாமத்தையும் அதன் பெருமையையும் என்னுடைய கவிதை என்கின்ற துணியினால் கட்டி வைத்துள்ளேன். என் கவிதையின் குற்றத்தைப் பாராமல் அனைவரும் விரும்புவர். ஏனெனில் சிவபெருமானின் திருப்பெயரை இக்கவிதையில் எழுதி இருப்பதனால் விரும்புவர்.

பாயிரம் முற்றும்.

# 1. திருமலைச்சருக்கம்

*கலிநிலைத்துறை*

**எலிக்க ராவெயிற் கவிகையாப் படத்தினை யெடுக்கும்**
**புலிக்க ராகமா யருளினாற் பசுவினம் பொருந்தும்**
**வலிக்க ராசல மடங்கலுக் குணர்வினை வழங்கும்**
**கலிக்கா ராமுது கேறிமான் புனலினைக் கடக்கும்13**

(இ–ள்.) நைமிசாரண்யத்தில் உயர்ந்த மனிதர்கள் வாழ்வதால் பகைமையே இல்லை. பாம்பு, வெயிலுக்குக் குடையாகத் தன் படத்தை எடுத்து எலியைக் காக்கும். புலியோடு பசுக் கூட்டங்களும் சேர்ந்து வாழும். சிங்கத்துக்கு வலிமையுள்ள யானை கொல்லாமையைப் போதிக்கும். முதலையின் முதுகில் மான் ஏறி நீரினைக் கடக்கும்.

**வன்ப தாகமுட் பிடித்திடுங் கவரியின் மயிரை**
**யன்ப தாகவே விடுக்குமை வாய்விலங் கனைத்து**
**மின்ப தாகவே புலிமுலைப் பாலுணு மிரலை**
**புன்பு லாலுணா நகமுடைய விலங்குடன் புட்கள் 14**

(இ–ள்.) முள்ளில் சிக்கிய கவரிமானின் மயிரினை அன்புடன் சிங்கம் முதலிய விலங்குகள் விடுவித்து உறவினை வளர்த்துக் கொண்டு பாராட்டும். புலியின் முலைப்பாலை மான் உண்ணும். இவ்வனத்தில் நகங்களையுடைய விலங்குகளும், பறவைகளும் இறைச்சியை உண்ணுவதில்லை.

**சலம ருந்தியும் வாயுவை யருந்தியுஞ் சருகிற்**
**சிலவ ருந்தியும் பச்சிலை யருந்தியுந் திங்க**
**ணிலவ ருந்தியு மைங்கன லிடையிலே நின்றும்**
**பலவ ருந்தியுந் தவம்புரிந் திடுமவர் பலரால் 15**

(இ–ள்.) அவ்வனத்தில் தவம் செய்யும் முனிவர்கள் எல்லாரும் தண்ணீர், காற்று, சருகுகள், பச்சிலைகள், சந்திரன் ஒளி, கனிகள் ஆகியவற்றை உணவாக உட்கொள்கின்றனர். பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று தவத்தை மேற்கொள்கின்றனர்.

**காலெ லாமரா வடுத்தவன் மீகமேற் கமழ**
**மாலை மார்பெலாங் குடலைபோல் வல்லரி மறைக்க**
**வேல மார்தரு குஞ்சிமேற் குருவிகூ டெடுக்க**
**பால லோசன னருள்பெறத் தவஞ்செய்வார் பலரால்** 16

(இ–ள்.) தவம் செய்யும் முனிவர்கள் நின்று கொண்டே இருந்ததால் கால்களில் புற்று வளர்ந்திருக்கின்றன. அவர்களுடைய மார்புகளில் கொடிகள் படர்ந்திருக்கின்றன. தலையின் முடிமேல் குருவிகள் கூடு கட்டி வாழ்கின்றன. இந்நிலையில் முனிவர்கள் சிவபெருமானின் திருவருளைப் பெற தவம் செய்கின்றார்கள்.

**மேதை மேலருக் கீசன்மேல் விடகலை விந்து**
**நீதியாகிய வருத்தசந் திரிகைமே னிரோதி**
**நாத நாதமேல் சத்திக ணான்கின்மே னால்வர்**
**பாத மேற்பரங் கண்டுவாழ்ந் திருப்பவர் பலரால்** 17

(இ–ள்.) மேதையாகிய சூரியனிடத்தில் விளங்குவது ஈசனாகிய விந்தாகும். தத்துவமென்னும் நீதியாகிய சந்திர ஒளியிடத்தில் நாதமாக விளங்குவது பரநாதமாகும். நான்கு சக்திகள் இடத்தும், அவற்றினுடைய நான்கு பாதங்களிலும் பர தத்துவ சொரூபத்தைப் பாவித்து அறிந்து வாழ்பவர்கள் பலராவர்.

**அத்த கைப்பெறு மாச்சிர மத்திலோ ரருகி**
**னித்தி லப்புது மணலின்மேற் பெருந்தரு நிழலிற்**
**பத்தி யிற்பொலி நவமணி வேதிகை பண்ணிச்**
**சித்தி ரச்சிறு புலியதன் மெல்விரி செறித்து** 18

(இ–ள்.) அத்தகைய பெருமை வாய்ந்த நைமிசாரண்யத்தில் ஒப்பற்ற ஆச்சிரமம் ஒன்றுண்டு. அதன் அருகிலுள்ள ஒரு பெரிய மரத்தின் நிழலில் நவரத்தினங்கள் இழைத்த இருக்கை உள்ளது. அதன் மேல் அழகான சிறிய புலித்தோல் விரிக்கப்பட்டிருக்கும்.

**வைத்த வாதனத் திருந்தனன் சடைமுடி மார்பங்**
**கைத்த லங்களங் காதினிற் கண்டிகை கமழ**
**வுத்த ரியம்வெண் ணிலவெழப் புரிமுந்நூ லொளிர**
**முத்த ரானவர் பணிந்திடக் கோதம முனிவன்** 19

(இ—ள்.) அந்த இருக்கையில் சடாமுடியுடனும், மார்பு, கழுத்து, காது ஆகிய இடங்களில் உத்திராட்சமும், நிலவைப் போன்ற மேல் ஆடையும், மார்பில் முப்புரி நூலும் விளங்க கோதமமுனிவர் வீற்றிருந்தார். அவரை முத்தரான முனிவர்கள் வணங்கி நின்றனர்.

**இருந்த கோதம முனியுடன் மதங்கமா விருடி**
**யருந்த வம்புரி கௌசிகன் பராசர னனந்தன்**
**பொருந்து காசிப னுரோமசன் புலத்தியன் புலகன்**
**பரிந்து மற்றுள விருடிக ளனைவரும் பகர்வார் 20**

(இ—ள்.) கோதம முனிவருடன் மதங்கமா முனிவர் அரிய தவம் செய்யும் கௌவுசிகமுனிவர், பராசரமுனிவர், அனந்த முனிவர், காசிபமுனிவர், உரோமசமுனிவர், புலத்தியமுனிவர், புலகமுனிவர் முதலிய முனிவர்கள் அனைவரும் பரிந்து கூறலாயினர்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**வேதநறுங் கொடிபடருங் கொழுகொம்பே**
**யாகமத்தின் வேரே ஞானப்**
**பரதவமே பரபோக மதுநிறைந்த**
**வானந்தப் பழமே யோக**
**மாதவரெண் சதானந்த முனிவரெனு**
**மணிபிறந்த வரையே தெய்வக்**
**கோதமனே கோதமிலா வொருமுதலே**
**நிறைந்தபெருங் குணத்தி னானே! 21**

(இ—ள்.) வேதமாகிய கொடிபடரும் கொழு கொம்பே, சிவாகமே வேரே, ஞான விருட்சமே, பரபோக ஆனந்தப் பழமே, சிவயோகிகளால் வணங்கப் பெறும் சதானந்த முனிவராகிய மாணிக்கமலையைப் பெற்ற மலையே, தெய்வ கோதம முனிவரே, குற்றமில்லாத ஒப்பற்ற முதலே நற்குணம் நிறைந்தவரே என்று முனிவர்கள் வணங்கி நின்றனர்.

### *கலிநிலைத்துறை*

**தொல்லை நூலுள கதையெலாம் விரித்துமுன் சொன்னீர்**
**வல்லி பாகனார் தெக்கணக் கயிலையின் வரவைச்**
**சொல்ல வேண்டுமென் றுரைத்திரு மருங்கினுந் துதித்தார்**
**நல்ல வாசக மிதுவென வவருட னவில்வான் 22**

(இ–ள்.) பழமையான நூல்களிலுள்ள கதைகளையெல்லாம் விரிவாக எங்களுக்கு எடுத்துரைத்தீர்கள். பார்வதியைப் பாகத்தில் வைத்த சிவன் தட்சண கயிலையின் வரவை இப்போது சொல்ல வேண்டுமென முனிவர்கள் இருபுறமும் சூழ்ந்து நின்று துதித்தனர். அதைக் கேட்ட கோதமமுனிவர் நல்ல வாசகம் இதுவெனப் பாராட்டி உரைக்கலானார்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**தெக்கணக் கயிலை யென்னுஞ்**
**சிராமலைப் பெருமை யெல்லா**
**நக்கனார் குமார ரந்தச்**
**சனற்குமா ரர்க்கு நல்க**
**வக்கணஞ் சனற்கு மார**
**ரறைந்தன ரெமக்கு மக்கு**
**முக்கண ரருளினாலே மொழி**
**குவாம் விரும்பிக் கேண்மின் 23**

(இ–ள்.) தட்சணகயிலை எனும் சிராமலையின் பெருமைகளை முருகப்பெருமான் சனற்குமார முனிவருக்குக் கூறினார். அதனை அப்பொழுதே தமக்குச் சொல்லிய அதனை நான் உங்களுக்குச் சிவபெருமானுடைய அருளால் சொல்கிறேன் விருப்பமுடன் கேளுங்கள்.

### *எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**சூதமுனி முனிவார்க்குப் பரிவாற் சொன்ன**
**தோற்றமிகு சிவபுரா ணத்திற் கண்டு**
**கோதமனார் பலமுனிவர் விரும்பிக் கேட்பக்**
**கூறியிடுஞ் சிராமலையின் புராணந் தன்னை**

யேதமற வடநூலைத் தமிழ்நூ லாக்கி
யினியசருக் கங்களொரு பதினொன் றாகப்
போதமிகு திருவிருத்த மைஞ்னூற் றைம்பான்
பொருந்திடவிக் கதைவிரித்துப் புகல
லுற்றேன்! 24

(இ—ள்.) சூதமகாமுனிவர் மற்ற முனிவர்களுக்கு அன்பினால் கூறிய சிவபுராணத்திலிருந்து, கோதமமுனிவர் பல முனிவர்க்குச் சொல்லிய சிராமலைப்புராணம் எனும் வடமொழி நூலைத் தமிழாக்கி, இதன் சருக்கங்கள் பதினொன்றையும், ஞானம் மிகுந்த ஐநூற்று ஐம்பது திருவிருத்தங்களையும் விரித்துக் கூறுகிறேன்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

சிவவடி வாகு மிந்தத் திருக்கதை யறங்க ளாகு
நவமிகு பொருளு மாகு நயந்தபே ரின்ப மாகுந்
தவமுயர் வீடு மாகுந் தவத்தினற் பயனு மாகு
முவமையின் ஞான மாகு முண்மையி னுணர்ந்த
பேர்க்கே 25

(இ—ள்.) சிவபெருமானின் இக்கதையை உண்மையாக உணர்ந்தவர்களுக்கு இதுவே அறமாகவும், நல்ல பொருளாகவும், நயமுடைய பேரின்பமாகவும், தவத்தின் வீடாகவும், அதன் பயனாகவும், உவமையில்லாத ஞானமாகவும் உணர்ந்து கொள்வார்கள்.

வருமலைக் கொழுந்தாங் கங்கை
மௌலிதென் கயிலை யென்னுந்
திருமலைக் கொழுந்தாய் நின்ற
சிவகதை சனன மென்னுங்
கருமலைக் கொழுந்தை வாட்டுங்
கதிர்கொடும் பாவம் பஞ்சாம்
பெருமலைக் கொழுந்தீ யென்றா
லதனலம் பேச லாமோ! 26

(இ—ள்.) அலைக்கொழுந்தாகிய கங்கையைத் தலையில் அணிந்தவரும், தட்சிணகயிலை என்னும் திருமலையில்

கொழுந்தாய் இருப்பவருமாகிய சிவபெருமானின் கதையாகும். பிறவி என்னும் அந்தகாரத்தின் கொழுந்தை வாட்டும் சூரியன், கொடுமையான பாவம் என்னும் பஞ்சுமலையை அழிக்கும் நெருப்பு. எனவே, இதன் பெருமையைப் பேசுவது முடியாததாகும்.

### *கலிவிருத்தம்*

**துதித்திடுந் திரிசிராச் சொல்லுஞ் சொல்லினான்**
**மதிச்சடை முடியினான் வரங்கொ டுத்தலா**
**லுதித்திடு மளகையே யொப்ப தாகுமப்**
**பதிப்பெயர் திரிசிராப் பள்ளி யானதே ! 27**

(இ—ள்.) திரிசிரா என்னும் பக்தன் அன்பினால் துதித்ததனால், சிவபெருமான் வரம் தந்தார். அவ்வரத்தால் தோன்றியதே அழகாபுரி எனும் திருச்சிராப்பள்ளி ஊராகும்.

**அத்தலந் தனக்கிணை யமரர் நாட்டிலை**
**யித்தலத் துளதென வியம்ப லாகுமோ**
**வித்தக விலிங்கமந் தீர்த்த மேன்மையவ்**
**வுத்தம தவத்தலா லுலகில் வேறுண்டோ! 28**

(இ—ள்.) இந்நகரத்திற்கு ஒப்பானது தேவலோகத்திலும் இல்லை. எனவே, இவ்வுலகத்திலும் உண்டெனக் கூறமுடியாது. ஞானவடிவான சிவபெருமானும், தீர்த்தங்களின் உயர்வும் இவ்வுத்தமமாகிய திருச்சிராப்பள்ளியைத் தவிர வேறெந்த உலகிலும் தலத்திலும் இல்லை.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**அப்பதி நினைந்த பேர்க் கமரர்தம் பதவி யுண்டா**
**மப்பதி கண்ட பேருக் கயன்பதத் தடைய லாகு**
**மப்பதி தனி லிருந்தா லரியமால் பதவி சேரும்**
**மப்பதி தனிற் பிறந்தா லரனென இருக்க லாமே! 29**

(இ—ள்.) இத்தலத்தை மனத்தில் நினைப்பவர்க்குத், தேவலோகப் பதவிக் கிடைக்கும். அத்தல இறைவனை வணங்குபவருக்குப் பிரமதேவனின் பதமுண்டு. இங்கு வசிப்பவருக்கு உயர்ந்த திருமாலின் பதவிக் கிடைக்கும். இங்கே பிறந்தால் உருத்திர மூர்த்தியைப் போன்று வாழலாம்.

*வேறு*

அன்ன தான மொருவர்தமக்
கந்தப் பதியி னளிப்பவர்கள்
கன்ன தானக் கரிமகவா
னெனவே ழுலகுங் காத்தருள்வார்
சொன்ன தான முதலாகச்
சொன்ன தானங் கொடுப்பாரென்றா
லென்ன தானங் கரிய
தவர்க்கெல்லாப் பொருளு மெளிதாமே! 30

(இ–ள்.) திருச்சிராப்பள்ளியில் ஒரு சிவனடியார்க்கு அன்னதானம் செய்தால் ஏழு உலகங்களையும் காத்தருளும் மேன்மையும், இந்திரனைப் போன்ற வாழ்வும் அடைவர். தங்கத்தைத் தானம் செய்பவர்க்கு அனைத்து தானங்களையும் செய்யும் ஆற்றல் உண்டாகி எல்லாப் பொருளையும் எளிமையாக அடையும் அன்பராகத் திகழ்வர்.

*வேறு*

ஒருவருக் கிருக்கை யீந்தோ ரும்பராய் வாழ்வா ரன்றி
யிருவருக் களித்தா லந்த விந்திர னாவ ரங்கே
மருவுறப் பூசை பண்ண வந்திளைப் பாற வன்பாய்த்
திருமடங் கண்டோ ரந்தச் சிவனவ ராவர் தாமே! 31

(இ–ள்.) திருச்சிராப்பள்ளியில் ஒரு சிவனடியாருக்கு இருக்க உறையுள் தருவோர்க்குத் தேவர் வாழ்வும், இரு சிவனடியார்க்குத் தந்தால் தேவேந்திர வாழ்வும் கிடைக்கும். சிவனடியார் வசிக்கவும், சிவபூசை செய்யவும், இளைப்பாறவும் அன்புடன் திருமடம் கொடுத்து உதவியவர்கள் சிவ சொரூபமாக விளங்குவர்.

*எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

வேத முங்கண் டிறைஞ்சுசிரா மலைப்புராணம்
விளம்பியசொற் பொருளுடனே விரிப்போர் கேட்போர்
போத கஞ்சேர் புரந்தான்போ லுலக
மெல்லாம் புரந்திடுவர் வினைத்தவிர்வர் புகழுண்டவ

ரேத முறு பிணிதீர்வர் பகையை வெல்வ
ரெண்ணின்மைந்த ருண்டாவ ரிகத்தின் மேலு
மாத வன்சந் திரன்முகுந்தன் பிரமன்றேவர்க்
கரிதான பதத்தினையு மடைவர் தாமே! 32

(இ–ள்.) வேதங்கள் வணங்கும் திரிசிராமலைப் புராணத்தை விளக்கமாக உரைப்பவருக்கும், அதனைக் கேட்பவருக்கும், ஐராவதம் என்னும் யானையை வாகனமாகக் கொண்ட தேவேந்திரனைப் போல எல்லா உலகங்களையும் ஆளும் வல்லமையைப் பெறுவர். பாவம் அகன்று பகையை வெல்லுவர். நல்ல புதல்வர்களைப் பெறுவர். இவ்வுலகத்திலும், பரலோகத்திலும் சூரியன், சந்திரன், திருமால் (முகுந்தன்), பிரம்மன் முதலிய தேவர்களுக்கு அரிதான பதவியைப் பெறுவார்கள்.

*கலிநிலைத்துறை*

பருவ மேகலை யிரதிநா யகன்கிளிப் பரியு
மருநி றைந்ததார் முருகவே ணடாத்திடு மயிலுந்
திரும ணந்தவன் கலுழனும் பதுமனோ திமமு
மிரும ருங்கினுஞ் செறிந்தது கயிலையோ திமமே! 33

(இ–ள்.) எக்காலத்திலும் இளமை மாறாத இரதியின் கணவனுடைய வாகனமாகிய கிளியும், அருள் நிறைந்த முருகப்பெருமானின் மயிலும், இலக்குமியின் நாயகன் திருமாலின் கருடனும், பிரமனுடைய அன்னமும், கயிலைமலையின் இரு பக்கத்திலும் இருக்கும் அன்னத்தின் அருகில் சேர்ந்திருந்தன.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

அளியார் கடுக்கை நறுமலரு
மணியார் சுடிகை யாடரவும்
பிளவார் மதியும் புனைந்தருளும்
பெருமா னிருக்கும் வெள்ளிமலை
வளமார் புவன மொருநூறும்
வளைக்கு அண்ட கடாகமெனு
மிளவோ திமத்தின் பேடைவயிற்
றிருக்கு மண்ட மெனலாமே 34

(இ—ள்.) மணம் பொருந்திய கொன்றை மலரையும், மணிகளைக் கொண்ட பாம்புகளையும், பிறை நிலவையும் அணிந்து வெள்ளிமலையில் வீற்றிருக்கின்றார். நூறு உலகங்களையும் வளைக்கும் அண்டகடாகம் என்னும் அன்னத்தின் வயிற்றிலுள்ள முட்டை என்று அந்த வெள்ளி மலையை எண்ணமுடியும்.

*எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**சோதி மதியின் பாதி யரவஞ்**
**சூடு சடையன் றோடு கமழுங்**
**காதி லமிர்தம் போல வரசுங்**
**காழி யிறையுங் கூறு தமிழின்**
**பாத கமலம் பாடு பவர்தம்**
**பாத கமலம் மாறி யகலும்**
**போது செறியும் போது விரியும்**
**பூவை மருவும் பூவை மருவும் 35**

(இ—ள்.) ஒளி பொருந்திய பிறை நிலவையும், பாம்பையும் சூடுகின்ற சடையையும், காதில் அமிர்தம் போல திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் அருளிய தேவாரத்தைப் பாடுபவர்களுடைய மும்மலங்களை நீக்கி அருளுகின்றவர். தோட்டத்திலுள்ள மலரில் நாகனவாய்ப் பூவினைப் போன்று, இனிய சொற்களைப் போன்ற உமாதேவியையும் நினைக்கின்றனர்.

**கோடு செறியும் பாணி யவனுங்**
**கோக நகனுந் தேட வரியன்**
**றேடு மவரன் பாக விழிமுன்**
**பாக வருவன் றேவ ரிறைகொண்**
**டாடு மயிலன் காள முகில்கண்**
**டாடு மயிலன் ராதை சடிலஞ்**
**சூடு மரவ னாடு மொருவன்**
**சோதி மதியன் பாதி மதியன் 36**

(இ.—ள்.) சிவனைத், திருமாலும் பிரம்மனும் தேடியும் காணாதவர். அன்பாகத் துதிப்பவர்களுக்குத் தோன்றுகின்றவர்.

இந்திரன் வேலாயுதத்தைக் கண்டு கார்மேகமென எண்ணியாடிய மயிலையுடைய முருகப்பெருமானுக்குத் தந்தையானவர். பாம்பையும், பிறைநிலவையும் சூடி, கனக சபையில் நடனமாடுபவர். சோதிமயமான இயற்கை ஞானத்தை உடையவராவார்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

வள்ள லணிந்த விளமதியி
　　　னிலவா லந்த வரைச்சுனையிற்
கள்ளு நெகிழும் பொருட்டுமலர்க்
　　　கமலம் விரியாக் காலையினும்
புள்ளி யரவஞ் சொரியுமணி
　　　விரித்த வொளியாம் பொறிக்கனலின்
வெள்ளி யுருகி விழுவதெனப்
　　　பெருகும் வெள்ள வெள்ளருவி 37

(இ-ள்.) இத்தகைய வள்ளலாகிய சிவபெருமான் அணிந்துள்ள பிறைநிலவின் ஒளியால் கயிலையிலுள்ள சுனையில் தேன் சிந்துகின்ற மலர்கள் காலையில் மலராமல் இருக்கும். படத்தின் போது புள்ளியையுடைய பாம்புகளின் மணியின் ஒளியானது நெருப்பு போன்று தோன்றும். அதனால் மலையில் வெள்ளி உருகி அருவி விழுவது போன்று நீரானது விழும்.

*கலிநிலைத்துறை*

அந்த மால்வரைக் கொருபுடை யடைந்தன ரயன்மா
லிந்தி ராதியர் மருத்துவர் வசுக்கணா லிருவர்
சந்தி ராதியர் சித்தர்சா ரணர்கள்விஞ் சையர்க
ணந்தி வாகனக் கடவுள ரிமையவர் நாகர் 38

(இ-ள்.) பெருமை வாய்ந்த கயிலைமலையின் ஒரு பக்கத்தில் தர்மதேவன், திருமால், எட்டுத் திக்குப் பாலகர்கள், மருத்துவர்கள், எட்டு விதமான வசுக்கள், சந்திர சூரிய கிரகணங்கள், சித்தர்கள், சாரணர்கள், வித்தியாதரர்கள், ருத்திரர்கள், தேவர்கள், ஆதிசேடன் முதலானவர்களும் சிவபெருமானின் தரிசனம் பெறவேண்டி வந்து சேர்ந்தனர்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**துங்கமழு வுழைத்தரித்துச் சுரிகைதிரு**
**வரையார்த்துச் சோதி யான**
**செங்கையிலே பிரம்பேந்திக் கயிலைமலைக்**
**காத்தருளுஞ் செய்ய மூர்த்தி**
**மங்கைபங்க ரவதாம்பார்த் தருள்புரிந்து**
**விடுமளவும் வாயின் முன்னே**
**யங்கொருதிக் கினிலிருந்தா ரவரவர்தா**
**மிருக்குமிட மறிந்து தானே 39**

(இ–ள்.) மழுவை கையில் தரித்து, உடைவாளை அரையில் கட்டி, பிரம்பை ஏந்தி கயிலைமலையைக் காக்கும் நந்தியம் பெருமான், சிவபெருமானின் திருநோக்கம் அறிந்து உள்ளே அனுமதிக்கும் வரை கோபுரவாயிலின் முன்னே தேவர்கள் அனைவரும் அவரிடத்தில் காத்து நின்றனர்.

### *வேறு*

**ஆரா தனைகண் முடிவிடம்பார்த்**
**திருக்கு மிமையோர்க் கருகாகப்**
**பாரா மனைத்து யொருமலர்போன்**
**முடிமேற் றரிக்கும் பணிவேந்த**
**னோரா யிரஞ்செம் முடிமணிகள்**
**கதிரா யிரம்போலொளி பரப்ப**
**வீரா யிரநற் பிறைபோற்பல்**
**லிரண்டா யிரமு மிலங்கிடவே! 40**

(இ–ள்.) அப்பொழுது பூசை முடியும் நேரத்தைப் பார்த்திருக்கும் தேவர்களின் அருகில், உலகம் அனைத்தையும் பூவைப்போலத் தலையில் தரிக்கும் ஆதிசேடன் வந்தான். அவனுடைய ஆயிரம் தலைகளின் மேலிருந்த மணிகள் ஆயிரம் சூரியனைப் போல ஒளியைப் பரப்பின. அவனுடைய இரண்டாயிரம் பற்களும் பிறையைப் போல் விளங்கின.

செய்ய கவர்நா விருபாலுஞ்
செக்கர் வானச் செயல்காட்ட
வெய்ய நெடிய வாளெயிற்றி
னிருள்போற் சிறிது விடந்தோன்ற
வைய னடிகண் டிறைஞ்சுமதற்
கணைந்தா னவனை யமரரெலாங்
கையி னிறைஞ்சி யிருக்கையளித்
திருந்து மகிழ்வாற் கட்டுரைப்பார்! 41

(இ—ள்.) அவனுடைய பிளவோடு கூடிய நாக்குகள் செவ்வானம் போல் திகழ்ந்தன. நீண்ட கூர்மையான பற்களிலிருந்து இருள்போல் நஞ்சானது கசிந்தது. ஆதிசேடன் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்குவதற்காக வந்தான். தேவர்கள் அனைவரும் அவனை வணங்கி இருப்பிடம் கொடுத்து மகிழ்ச்சியோடு கூறினர்.

வாயு வான பஞ்சடைத்துத்
திருமா றுயிலு மலரணையே
யாய விடமாம் யாக்கையமைத்
தரனா ரணியு மரும்பணியே
தாய ருதர மெனவுலகைத்
தலையிற் சுமையாத் தரிப்போனே
தூய பொருளே யுனக்குநிக
ருளரோ வுலகிற் சொல்லாயே 42

(இ—ள்.) காற்றினைப் பஞ்சாக அடைத்துத் திருமால் உறங்கும் படியான பூம்படுக்கையே! நஞ்சினையுடைய உடலைப் பெற்று சிவபெருமானின் அணிகலனான அணியும் அருமையான ஆபரணமே! தாய் தன் வயிற்றில் இருக்கும் குழந்தையைத் தாங்குவது போல உலகத்தைத் தலையில் சுமப்பவனே! சுத்தமான பொருளே! உலகத்தில் உனக்கு நிகர் ஏதுவுமில்லை.

என்ன வுரைக்க மிகநாணி
யொடுங்கு மனந்த னிமையோர்கள்
சொன்ன மொழிக்குத் தாழ்ந்தவுரை
பலவு முரைத்துச் சுடிகைமணி

**மின்ன நெடிய கயிலைமலை**
**வேரோடிய போலொர் புடை**
**மன்ன விருந்தான்சதா கதியு**
**முரைத்தான் பொறாத வழுவுரையே! 43**

(இ–ள்.) மேற்கண்டவாறு தேவர்கள் புகழவும், ஆதிசேடன் நாணி ஒடுங்கினான். தன்னை அடக்கத்துடன் தாழ்வாக கூறிக் கொண்டான். தன் தலையிலுள்ள மணிகள் ஒளிவிட, கயிலை மலையானது வேரோடியதைப் போல் ஒருபக்கத்தில் இருந்தான். அப்போது வாயுதேவன் பொறாமையால் குற்றம் பொருந்திய சொற்களை உதிர்க்கத் தொடங்கினான்.

*வேறு*

**கண்ணிலா தானைக் கஞ்சக்**
**கண்ணனென் றுரைப்பார் போல**
**நண்ணிய செவியி லானைக்**
**காலிலா நடையி னானை**
**யெண்ணிய விருநா வானை**
**விடஞ்செறி யெயிற்றி னானைப்**
**புண்ணிய விமையோர் சொன்ன**
**புகழ்ச்சிதான் பொய்மை போலும்! 44**

(இ–ள்.) கண்ணற்றவனை, தாமரைக் கண்ணன் என்று சொல்வதைப் போல, காது அற்றவனை, கால்கள் அற்றவனை, இரண்டு நாக்குகள் உடையவனை, நஞ்சு பொருந்திய பற்களை உடையவனை, தேவர்கள் புகழ்வது பொய்மையானது என்று கூறினான். மேலும் பேசலானான்.

அமையவே யுலக மேழுந்
தரித்திரிடு மரசே யென்றென்
றிமையவர் முனிவர் கூற
விடும்பையா லகந்தை யுற்றா
யுமையவ ரேவ லாலே
யுலகெலாஞ் சுமந்தாய் கூவிச்
சுமையவர் சுமப்ப தெல்லாம்
புகழ்ச்சியோ சொல்லு வாயே 45

(இ—ள்.) ஆதிசேடனே! தேவர்களும், முனிவர்களும் அச்சத்தினால், ஏழு உலகங்களையும் தலையில் அணியும் அரசே என்றனர். அதனால் நீ ஆணவம் கொண்டாய். சிவபெருமானின் ஏவலால் உலகங்களைச் சுமந்தாய். கூலிக்காகச் சுமப்பதெல்லாம் ஒரு பெருமையா? நீயே சொல்வாய் என்றான் வாயுதேவன்.

படுத்திடும் பாயுந் தாங்கும்
பணியுமா னதுவோ மேன்மை
விடுத்திடுன் வலியை யெல்லா
வுயிரினும் விரவி நானே
யடுத்திடா திருக்கி லிந்த
வுலகெலா மமைவ தெங்கே
கடுத்தினை யிறைக்கு நீயோ
காப்பவ னெனவுஞ் சொன்னான் 46

(இ—ள்.) உறங்குபவர்க்குப் படுக்கையாகவும், அணியும் நகையாகவும் ஆவது மேன்மையல்ல. ஆதலால் உன் பெருமையை விட்டுவிடுவாயாக! எல்லா உயிர்களிடத்தும் கலந்து நான் உதவாவிடில் இவ்வுலகங்கள் எல்லாம் எப்படி வாழமுடியும்? அப்படி இருக்கும்போது நஞ்சை வெளிப்படுத்தும் நீ எப்படிக் காப்பவன் ஆவாய்? என்றான் வாயுதேவன்.

என்றலு மனந்தன் கூறு
மிமையவர் முனிவர் முன்னே
வென்றிக ளுரைத்தா யுன்னை
விழுங்கினாற் கதிவே றுண்டோ
பொன்றுவை விடுத்தேன் யானீ
திருக்கவிப் பொருப்பைச் சுற்றி
நின்றுடன் மறைப்பே னுன்றன்
வலியினா னெகிழ்க்க வென்றான் 47

(இ—ள்.) தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் முன்னே உன்னுடைய பெருமையைப் பேசுகின்றாய். நான் உன்னை விழுங்கி விட்டால் உனக்கு வாழ்வு ஏது? இறந்து விடுவாய் என்று உன்னை விழுங்காமல் விட்டேன். இது போகட்டும். இந்தக் கயிலைமலையைச் சுற்றி நின்று என் உடலால் மறைப்பேன். உன்னுடைய வலிமையால் அக்கட்டு நெகிழும்படிச்

செய்யமுடியுமா உன்னால். எங்கே பார்க்கலாம் என்று வாயுதேவன் ஆதிசேடனைக் கேட்டான்.

*கலிநிலைத்துறை*

**தேவ ரேபகுத் தறிகவென் சிறப்புமுன் சிறப்பு**
**மேவு கென்றெழுந் தனந்தனு மறைந்தனன் வெற்பைக்**
**கோவு மின்பமுங் கொழுநனென் றிறைஞ்சுநற் குலத்துப்**
**பாவு மங்கையர் மனமெனப் புரையறும் படியே! 48**

(இ—ள்.) என்னுடைய உயர்வையும், உன்னுடைய பெருமையையும் தேவர்களே முடிவு செய்யட்டும் என்று எழுந்தான் ஆதிசேடன். தனது கணவனைத் தெய்வம் என்று வணங்குகின்ற நல்ல குலத்தில் பிறந்த கற்பினை உடைய பெண்களின் மனத்தைப் போல, ஒருமைப்பாட்டோடு அணுவளவும் இடைவெளி இல்லாமல் கயிலைமலையை மறைத்தான் ஆதிசேடன்.

அரன மர்ந்தநா ளளவிடப் படாதநா ளதனாற்
பரவு வெள்ளியங் கயிலையும் பழகிய படிக்கோ
விருப தங்கையா னெடுத்தநா ணெகிழ்ந்துள தென்றோ
புரையறுபெரும் புரியினால் ,வளைந்தது போலும்! 49

(இ—ள்.) ஆதிசேடன் அக்கயிலைமலையை மறைத்த காட்சி, சிவபெருமான் எழுந்தருளிய காலமானது அளவிடப்பட முடியாதது. அதுபோல கயிலைமலையையும் பழமையாகியது போல இருண்டு இருந்தது. இருபது கைகளையுடைய இராவணன் எடுத்த காலத்தில் அசைந்தது போல இருந்தது. குற்றமற்ற கயிற்றால் கட்டியது போலும் இருந்தது.

பங்க மின்றியே கற்பகத் தருவின்மேற் படர்ந்திட்
டெங்கு மாய்வளைத் தழுத்திய பெருங்கொடி யெனவு
மங்க மெங்கணு முருகவே கொழுநரை யணைக்கு
மங்கை மாரிரு கரங்களா மென்னவும் வளைத்தான்! 50

(இ—ள்.) கற்பக மரத்தில் குற்றமில்லாமல் மேலே படர்ந்த நிழல், அதனை மறைக்கும் ஒரு பெரிய கொடியைப் போலவும்,

உடல் முழுவதும் உருகும்படித் தம் கணவரைத் தழுவுகின்ற பெண்களின் கைகளைப் போலவும் ஆதிசேடன் அந்தக் கயிலைமலையை மறைத்தான்.

**வந்து கால்புகா விடங்களிற் றலைகளை மடுத்துச்**
**சிந்தை யானதும் புகாவகை மறைந்தனன் சேட**
**னந்த வேளையி லமலனை யிமையவ ரடைந்தார்**
**கந்த மார்தரு சதாகதி யவையெலாங் கண்டான்!** 51

(இ—ள்.) காற்று நுழையும் இடங்களிலெல்லாம் தலைகளை வைத்து அக்காற்றை உறிஞ்சி மனம் கூட நுழையாத வண்ணம் ஆதிசேடன் கயிலையை மறைத்தான். அப்பொழுது சிவபெருமானைத் தரிசிக்க தேவர்கள் வந்தனர். அப்போது மணத்தைப் பரப்பும் வாயுதேவன் அனைத்தையும் கண்டான்.

**வெற்பெ லாஞ்சிறை யுடைமைபோற் பறந்திட விசும்பிற்**
**கற்ப கங்கள்போ னிலத்துள தருக்கண் மேற்காணச்**
**சர்ப்ப ராசனுக் கிறுதியென் றனைவருந் தளர**
**வற்பு தத்தினா லறைந்தனன் வளைந்தன னடர்த்தான்!** 52

(இ—ள்.) மலைகள் எல்லாம் சிறகு கொண்டவைப் போல பறக்கும்படியாகவும், பூமியிலுள்ள மரங்கள் யாவும் வானத்திலுள்ள கற்பக மரங்களைப் போல காட்சி அளிக்கும்படியாகவும், ஆதிசேடனுக்கு முடிவு காலமென்று யாவரும் தளரும்படியாகவும், வாயுதேவன் மோதி அறைந்து வளைத்துப் போர் புரிந்தான்.

*கலிவிருத்தம்*

**எட்டர விளைத்தன விளைத்தகளி றெட்டு**
**மட்டதிசை சுற்றின வமைந்தவரை யெட்டு**
**மிட்டமுறு தண்கடல்க ளேழுமுகி லேழு**
**மட்டற வளைந்தபுனல் வற்றியொழி வுற்ற** 53

(இ—ள்.) பூமியைத் தாங்குகின்ற எட்டுத்திக்கு நாகங்களும், எட்டுத்திக்கு யானைகளும் இளைத்தன. எட்டு மலைகளும் எட்டுத் திக்குகளிலும் பெயர்ந்து போய் சுற்றின. ஏழு கடல்களும், ஏழு மேகங்களும் வளைந்தன. கடல் நீர் முழுவதும் வற்றிப் போயிற்று.

அடுக்கழிவு பட்டபுவ னத்திர ளனைத்து
முடுக்கள்சித றிப்பொரி யிறைத்ததனை யொத்த
கொடுக்குமமிர் தத்தினை யிறைத்துமதி குன்றித்
தடித்துநெய் வடித்துதறு தட்டினைநி கர்த்தான்! 54

(இ—ள்.) உலகக் கூட்டங்களின் அடுக்குகள் அழிந்தன. விண்மீன்கள் சிதறின. அமிழ்தத்தை வழங்கும் சந்திரன் வடிவம் சுருங்கி நெய்யைத் தடுத்து வடித்து உதறுகின்ற வெறும் தட்டினைப் போன்று ஆயிற்று.

ஆதவன் வருந்திசை யகன்றுதடு மாறிச்
சோதியு மகன்றது துளங்கவொரு பூதம்
பூதமொரு நாலுநிலை போய்நடு நடுங்கிப்
பேதமுறு கின்றதுயர் பேசவெளி தாமோ! 55

(இ—ள்.) சூரியன் திசைமாறி ஒளியும் குன்றியது. ஐம்பூதங்களில் ஒன்றான வாயுதேவன் செயலினால் மற்ற நான்கு பூதங்களும் நடுங்கி நிலைகுலைந்து பேதமடைந்தன. இத்துயரத்தினை எளிதாகக் கூறமுடியாது.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

தக்க பவன னறைந்தீர்த்துச்
சுழன்று நடுங்கிச் சலித்திடவு
மிக்க நகமும் பன்னகமு
மசையா திருந்த மேதினியி
னக்க னமலன் றிருப்பாத மறைவா
துரைக்கு நான் மறையீர்
பைக்கு ளடைத்த கனகமொரு
காலா லவிழ்க்கப் படுங்கொல்லோ! 56

(இ—ள்.) வாயுதேவன் எல்லா மலைகளையும் பொடி பொடியாகும்படிச் செய்தான். ஆனால் கயிலைமலையையும், ஆதிசேடனையும் அழிக்கமுயன்றான். ஆனால் இரண்டும் அசையவில்லை. சிவபெருமானின் திருவடியை மறவாமல் துதிக்கும் நான்கு வேதங்களையும் உணர்ந்த முனிவர்களே பையின் உள்ளே அடைத்த பொன்னை ஒரு காற்றினால் அவிழ்க்க முடியாது அல்லவா?

**வெற்றி யனந்தன் படைத்ததுகண்**
**டயர்ந்து பவனன் மிகநாணிப்**
**பற்றி யுயிரின் பரப்பையெலாங்**
**கொடுபோய்ப் புகுந்தான் பாதலத்தி**
**னுற்ற வுலகத் துயிர்களெலா**
**மசையா திருந்த வோவியம்போ**
**லற்ற மதுகண் டருள்புரிந்தா**
**னடியார்க் கெளிய வற்புதனே! 57**

(இ—ள்.) ஆதிசேடன் வெற்றியடைந்ததைப் பார்த்து வாயுதேவன் நாணம் அடைந்து பாதளத்தில் புகுந்து கொண்டான். இதனால் உலகத்து உயிர்களெல்லாம் காற்றில்லாமல் சித்திரவதையை அடைந்தன. அப்பொழுது சிவபெருமான் அருள் புரியத் தொடங்கினான்.

*வேறு*

**நிரைந்திடு நன்மை கூறி**
**நிமலனும் பணியே நீயா**
**முரைத்திடும் பணிகே ளென்றான்**
**வினவினா னுரக வேந்தன்**
**வரைத்தடம் படத்தி னாலே**
**மறைத்தது சிறிது வாங்கித்**
**திரைத்திட வேணு மென்றா**
**னனந்தனத் திறமே செய்தான்! 58**

(இ—ள்.) சிவபெருமான் முறையாக ஆதிசேடனிடம் நன்மைகளை எடுத்துரைத்து, கயிலைமலையைச் சற்றே வெளிப்படுத்தி அசைத்திடும்படியாகக் கூறினார். ஆதிசேடனும் அவ்வாறே செய்தான்.

***கலிநிலைத்துறை***

**வந்து வாயுவும் வந்துவந் தறைந்தனன் வரையை**
**முந்தி வேரறப் பறித்தனன் கொடுமுடி மூன்றை**
**அந்த மூன்றையும் கொடுநமன் திசையினி லடைவே**
**சிந்தி னான்றல மூன்றிலே விழுந்தன சிகரம் 59**

(இ—.ள்.) அப்பொழுது வாயுதேவனும் மகிழ்ச்சியடைந்து, கயிலைமலையிலிருந்து மூன்று கொடுமுடிகளை வேருடன் பறித்து அவற்றைத் தக்கணத் திசையிலே கொண்டுபோய் சிதறினாள். அந்த மூன்று சிகரங்களும் மூன்று தலங்களில் விழுந்தன.

**முன்னர் வீழ்ந்திடு சிகரிகா ளத்தியா மொழிவர்**
**பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்க**
**லன்ன தின்பிற கமைந்தது கோணமா வசல**
**மின்ன மூன்றையுந் தெக்கண கயிலையென்**
**றிசைப்பார்! 60**

(இ—ள்.) அந்த மூன்றில் முதலில் விழுந்த சிகரத்தைத் திருக்காளத்திமலை என்றும், அதன்பின் விழுந்த சிகரத்தைத் திரிசிராமலை என்றும், மூன்றாவதாக விழுந்த சிகரத்தைத் திருகோணமாமலை என்றும் கூறுவர். இந்த மூன்று தலங்களையும் தக்கணகயிலை என்றும் மேலோர் வழங்குவர்.

**வெள்ளி மால்வரை தனினுமன் றிமையவர்**
**விடைகொண்**
**டுள்ள மானது மகிழ்ந்துதம் முறையுளிற் புகுந்தா**
**ரெள்ளு றாததென் கயிலையா மூவகை யிடத்தும்**
**வள்ள லார்மலைக் கொழுந்தராய் வடிவமாய்**
**வளர்ந்தார்! 61**

(இ—ள்.) கயிலைமலையிலிருந்து தேவர்கள் மகிழ்ச்சியோடு விடைபெற்றுத் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றனர். தக்கணகயிலைமலையாகிய மூன்று தலங்களிலும் சிவபெருமான் திருமலைக் கொழுந்தாய் வளர்ந்தருளினார்.

**பக்க நாயகம் போன்றன வவையிரு பாலு**
**மிக்க நாயக மானது திரிசிரா விலங்க**
**றக்க வானவர் தானவர் மானவர் தமக்கு**
**நக்க னாரதி லிருந்துநல் வரங்களை நயந்தார்! 62**

(இ–ள்.) திருக்காளத்தி மலையும், திருக்கோண மாமலையும் இரண்டு பக்கங்களிலும் நாயகமணிபோல் விளங்க உயர்ந்த நடுநாயகமாகத் திரிசிராமலை விளங்குகின்றது. சிவபெருமான் அதில் எழுந்தருளி தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் நல்ல வரங்களைக் கொடுத்து அருளினார்.

**மந்த ராசலங் கடலிலே சுழன்றது மறுகி**
**விந்த மானது புதைந்தது புவியிலே மிகவு**
**மந்த மேருவும் வளைந்துவில் லுருவமே யான**
**தெந்த மால்வரை யிதற்கிணை யாவதென்**
**றிசைத்தான்!** 63

(இ–ள்.) மந்தரமலையானது பாற்கடலிலே மத்தாகிச் சுழன்றது. விந்தமலையானது பூமியினுள்ளே புதைந்தது. உயர்ந்த மகாமேருவும் வளைந்து வில்லுருவமானது. ஆகவே எந்த மலையும் திரிசிராமலைக்கு ஒப்பாகாது என்று கவுதமமுனிவர் கூறினார்.

**இம்பர் வாழ்வெனுந் தெக்கண கயிலையா மிடத்தி**
**லம்பு யாசன னசத்திய வினையகன் றதுவுங்**
**கும்ப மாமுனி நினைத்தது கொடுத்ததுங் குலிசன்**
**செம்ப னால்வரு தீவினை யகற்றிய திறமும்** 64

(இ–ள்.) தக்கணகயிலையாகிய இந்தத் தலத்தில் பிரம்மாவின் அறியாமையின் தீமை நீக்கியதும், அகத்திய முனிவருக்கு நினைத்ததைக் கொடுத்ததும், சேம்பன் என்னும் அசுரனால் இந்திரனுக்கு வந்த பாவத்தை நீக்கியதும் திரிசிராமலையில் தான்.

**அத்த லத்திலே யுமைசிவ தடமமைத் ததுவுஞ்**
**சத்த மாதரே ம்ருடிகள் கழுகுசஞ் சரிக்குஞ்**
**சித்தர் சாரணர் திரிசிரா தயரதன் சிறுவன்**
**பத்தி செய்தது மருச்சுனன் வணங்கிய பலவும்** 65

(இ–ள்.) உமாதேவி சிவகங்கையை உண்டாக்கியதும், சப்த மாதர்கள், சப்தமுனிவர்கள், சடாயு, சித்தர்கள், சாரணர்கள், திரிசிரா, தயரதன் மகனாகிய இராமபிரான் ஆகியோர் வணங்கி வரங்களைப் பெற்றதும், அருச்சுனன் வணங்கியதுமாகிய பல வரலாறுகள் திரிசிராமலைக்கு உள்ளன.

அனும முத்திரை வந்ததுஞ் சூரனா மருக்கன்
பனிம லர்க்கொடு பணிந்ததும் பாதலத் துறையும்
வனிதை மாதர்கள் வணங்கிய மகிழ்ச்சியுஞ் சார
முனிவன் முத்தியுந் தாயராங் கருணையு
மொழிவாம். 66

(இ–ள்.) அனும முத்திரை இந்தத் தலத்திலே வந்ததும், சூரவாதித்த சோழமன்னன் குளிர்ந்த மலர்களைக் கொண்டு வணங்கியதும், நாககன்னியர்கள் வணங்கியதும், சாரமாமுனிவர் முத்தி பெற்றதும், செட்டிப்பெண்ணுக்காக இறைவன் தாயாகி (மருமகனான) வந்ததுமாகிய வரலாற்றினை எல்லாம் கூறுகின்றேன்.

திருமலைச் சருக்கம் முற்றும்.

## 2. பிரம்மதேவன் அசத்தியந் தீர்ந்த சருக்கம்

### *கலிநிலைத்துறை*

**கோதை நாரியைச் சிலைவடி வாக்கிய குரிசில்**
**பூத ராதிகட் கரசெனப் பொருப்பினைப் புகல**
**வேத னாரதிற் றவஞ்செயுங் கதையினை விரித்திங்**
**கோது வீரெனக் கோதம முனிவனு முரைப்பான்! 67**

(இ–ள்.) தன் மனைவி அகலிகையைக் கல்லுருவமாக்கிய கவுதமமுனிவர், மகாமேரு முதலான மலைகளுக்கெல்லாம் 'திரிசிரா' மலையானது அரசனைப் போல சிறந்ததென உரைத்தார். அதனைக் கேட்ட முனிவர்கள் அனைவரும், பிரம்மதேவன் அந்தத் திரிசிராமலையில் தவம் செய்த வரலாற்றை விரிவாகக் கூற வேண்டினர். கவுதமமுனிவரும் தொடர்ந்தார்.

**முன்ன மேயொரு காரணத் தாலரன் முகுந்த**
**னன்ன வாகனன் மூவரு மொருதலத் தடைந்தார்**
**மன்னு மேழிசை நாரத னவ்வயன் வந்தான்**
**கன்னி பாகனை மாயனைப் பதுமனைக் கண்டான்! 68**

(இ–ள்.) முந்நாளில் உருத்திரமூர்த்தியும், திருமாலும், பிரம்மனும் ஒரு காரணத்திற்காக ஒரு தலத்தில் ஒன்றாகக் கூடினர். அப்போது ஏழிசையினையுடைய நாரதமுனிவர் அங்கு வந்திருந்த அம்மூவரையும் கண்டார்.

**அன்று மூவரைப் பொதுவிலே யிறைஞ்சிநின் றவனு**
**மின்று நானிறைஞ் சியதிதிற் பெரியவற் கென்று**
**சென்று போயினான் றெளிவிலா மொழியினாற்**
**திகைத்தார்**
**துன்று வானவ ரானவ ரிருடிக டொகையாய் 69**

(இ–ள்.) அவர்களைப் பொதுவாக வணங்கிவிட்டு, இப்பொழுது நான் வணங்கியது உங்கள் மூவரில் பெரியவருக்கே என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். தேவர்களும், முனிவர்களும் நாரதமுனிவர் கூறிய தெளிவில்லாத பேச்சைக் கேட்டுத் திகைத்தனர்.

**கலக நாரதன் வழங்கிய மொழியினைக் கமலத்**
**திலகு வேதியன் றனதென வரிதன தென்றான்**
**மலைவு கொண்டனர் ரெழுந்தனர் பொருதனர் வலியா**
**லுலக மெங்கனு நடுங்கின விமையவ**
**ரொளித்தார்! 70**

(இ—ள்.) கலகப்பிரியனான நாரதன் கூறிய சொல் தன்னைத்தான் குறிக்குமென்று வேதத்தை உடைய பிரம்மதேவனும், தன்னைத்தான் குறிக்குமென்று திருமாலும் கூறி ஒருவரோடு ஒருவர் தான் பெரியவரென எதிர்த்து வலிமையோடு போர் புரியலானார்கள். இதனால் உலகம் நடுங்கியது. தேவர்கள் ஓடி ஒளிந்தனர்.

**சோதி யவ்விடத் தேசுட ரிலிங்கமாத் தோன்ற**
**வேத நாரணர் பயந்திது வேதென வியந்தார்**
**பாத மீதிதற் களவுதா னிலையெனப் பகர்ந்தா**
**ராதி யந்தமீ தறிந்தவர் பெரியரென் றறைந்தார்! 71**

(இ—ள்.) அவ்விருவருடைய மயக்கத்தைப் போக்கி தெளிய வைப்பதற்காக அங்கே சிவபெருமான் வந்தார். அடியையும் நுனியையும் யாராலும் அறியமுடியாதவாறு ஒரு அக்கினி லிங்கமாகத் தோன்றினார் சிவபெருமான். இருவரும் அதனைக் கண்டு பயந்து வியந்தனர். இவருடைய அடியையும், முடியையும் அறிந்தவரே பெரியர் என்று அங்கிருந்த மற்றவர்கள் கூறினர்.

**பொருவி லாவரி யேனமாய்ப் பாதலம் புகுந்தான்**
**விரைவி னாலடி தேடுவா னிசைந்திடும் விருப்பாற்**
**பரவு மோதிம னோதிம மாகிமேற் பறந்தான்**
**கருதி வானினுஞ் செம்பொனாட் டிடத்தினுங்**
**காணான்! 72**

(இ—ள்.) ஒப்பற்ற திருமால் பன்றியின் வடிவமாகி லிங்கத்தின் திருவடியைத் தேடிப் பாதாள உலகம் புகுந்தார். அன்ன வடிவமெடுத்து பிரம்மன் அந்தச் சோதி லிங்கத்தின் முடியைக் காண வானத்தில் பறந்து சென்றார். ஆனால் மேலுலகத்தில் முடியைக் காணமுடியவில்லை.

வீர பத்திர புவனமுந் தேடினான் மிசையிற்
பார வித்தியா கலைக்குள புவனமும் பார்த்தான்
கார ணத்தினா னழற்கொழுந் தெனுமுடி காணா
னார ணத்தினான் சிறையெலா முதிர்ந்திளைத்
தயர்ந்தான்! 73

(இ—ள்.) மேல் உலகத்திற்கு அப்பால் வீரபத்திர உலகத்தையும், அதற்கும் மேலான வித்தியா தத்துவ உலகத்தையும் சேர்ந்த கலை என்னும் தத்துவத்திலுள்ள உலகத்திலும் தேடினார். அங்கும் திருமுடியைக் காணாமல், அவருடைய சிறகுகளெல்லாம் உதிர்ந்தன. இளைத்துத் தளர்ச்சியை அடைந்தார்.

கமல லோசன பூவுறை பதத்துணைக் கருதி
யமல நாடகேச் சுரமுதற் புவிகீழித் தயந்தான்
திமிர மீறழற்பதந் தெறிப்பு யரியதாய்த் தெரிந்தே
விமலனா ரடியுன்னி மீண்டன னிப்பாற் விரிஞ்சன 74

(இ—ள்.) பிரம்மதேவன் பூவையே உறைவிடமாகக் கொண்டிருந்ததால் மேலே உள்ள சூரியபகவானின் வெப்பத்தை தாங்க இயலாமல் அயர்ந்து சோர்ந்தார். மூச்சுவிட முடியாமலும், சூரியனின் வெப்பத்தன்மையைத் தாங்க முடியாமலும் திரும்பிவிட எண்ணினார்.

வெய்து யிர்த்தன னிரங்கின னிரங்கிடும் வேலை
கைதை யிற்பெரு மடல்வர மகிழ்வினாற் கண்டா
னெய்தி யந்தமா மடலினைத் தகைந்துகொண்
டெதிரே
நொய்தி னீவருஞ் செயலினை நுவலுவா
யென்றான்! 75

(இ—ள்.) பிரம்மதேவன் தளர்ச்சியடைந்து அழுது கொண்டிருந்த சமயத்தில் தாழையினுடைய பெரிய மடல் ஒன்று அவருக்கு அங்கே தென்பட்டது. அதனைப் பார்த்து மகிழ்ந்து, அதனைத் தடுத்து நிறுத்தி, நீ வருகின்ற செயலைச் சுருக்கமாகச் சொல்வாயாக என்று பிரம்மதேவன் கேட்டார்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**அங்கே தகையும் பொழுதயனா**
**மன்னந் தனைப்பார்த்தலர் முகத்துச்**
**செங்கே தகையுஞ் சிலமொழியுஞ்**
**சிவனார் கனகத் திருமுடிமேற்**
**கொங்கே தகையும் படியிருந்து**
**விழுந்தே னி்.தென் குறையென்ன**
**விங்கே தகையு மோதிமமே**
**யெவனீ வரவே தென்றதுவே! 76**

(இ–ள்.) பிரம்மதேவனாகிய அன்னத்தைப் பார்த்து, மலர்ந்த முகத்தையுடைய சிவந்த தாழைமடல் கூறத் தொடங்கியது. நான் பொன்மயமான சிவபெருமானின் திருமுடியிலிருந்து விழுந்தேன். இங்கு என்னைத் தடுக்கின்ற அன்னமே நீ யார்? இங்கு நீ வந்ததற்குக் காரணமென்ன? என்று தாழைமடல் வினவியது.

**என்பே ரயனென் றுரைத்திடுவா**
**ரெழுபூ தலமு மென்செயலே**
**முன்போர் தினத்தி னெடியவற்கு**
**மெனக்கும் பகையாய் முனிவாகி**
**மின்போ லெழுமித் தழலிங்க**
**முதலீ றிடையே விதிப்பவரே**
**வன்போ ரெனவே யெடுத்துரைத்தோந்**
**திருமால் வராக வடிவானான்! 77**

(இ–ள்.) என் பெயர் பிரம்மதேவன். ஏழு உலகங்களும் என்னுடைய படைப்புகளால் ஆனது. ஒருநாள் எனக்கும், திருமாலுக்கும் யார் பெரியரெனப் பகை உண்டாயிற்று. மின்னலைப் போல ஒளியோடு விளங்கும் இந்தச் சோதி லிங்கத்தினுடைய முடியையும், அடியையும் கண்டு சொல்லு பவர்களே வலிமை உடைய பெரியர் என்று எடுத்துக் கூறினோம். திருமால் பன்றி வடிவமெடுத்து உள்ளார் என்றார்.

**மண்ணிற் புகுந்தே யடிதேடப்**
**பாதா ளத்தின் வகையடைந்தான்**
**விண்ணிற் கிடையே யோதிமமா**
**யெழுந்தேன் மிகவும் விரைவாகிக்**

கண்ணிற் குறித்தே னெத்திசையுங்
காணா துழன்றே னினைக்கண்டே
னெண்ணிற் பெரிய தழற்றூணின்
முடிவே தறிய வியம்பாயே! 78

(இ–ள்.) திருமால் பன்றி வடிவமெடுத்து அடியைக் காணப் பாதாள உலகம் சென்றுள்ளார். நான் அன்னத்தின் வடிவமெடுத்து வேகமாக விண்ணில் பறந்தேன். அந்தத் திருமுடியை எங்கும் காணாமல் திகைத்தேன். உன்னைக் கண்டேன். அளவில்லாத இந்தச் சோதியின் முடி எங்குள்ளது என்று கூறுவாயாக என்றார் பிரமதேவன்.

என்று பதுமன் மொழிந்திடலு
மடற்கே தகையு மினிதுரைக்கு
நன்று மொழிந்தா யித்தூர
நடந்த வழியோ ரணுவளவாங்
குன்றி னளவுண் டினியேகு
நெறிதான் மனத்தாற் குறிக்கரிது
சென்று தலையிற் புவனமெலா
மிந்நா ளவுந் தேடினையே! 79

(இ–ள்.) இவ்வாறு பிரம்மதேவன் கூறியதும், தாழைமடல் மகிழ்ச்சியாகக் கூறியது. இவ்வளவு தூரம் நீ கடந்து வந்தவழி ஓர் அணுவளவேயாகும். மீதமுள்ள தூரம் மலையளவாகும். அதனை மனத்தாலும் நினைக்க முடியாது. தலைமை இல்லாத உலகங்களை எல்லாம் வீணாக இவ்வளவு காலம் தேடி அலைந்திருக்கின்றாய் என்றது.

சுத்த வித்தை யீசுரமேற்
றுலங்குஞ் சதாக் கியமெனவுந்
தத்துவங்க ளினிமூன்றுண் டவைமே
லிருப்பர் சதா சிவனா
ரொத்த மூர்த்தி சதாசிவத்தின்
வடிவாமந்த வொளி யுருவம்
பத்தியுடையோர் பரம்பரனா
ரருளா லகத்தே பாவிப்பார்! 80

(இ—ள்.) சுத்தவித்தை எனவும், ஈசுரம் எனவும், அவற்றின்மேல் விளங்கும் சாதாக்கியம் எனவும், மூன்று தத்துவங்கள் உண்டு. அவற்றுக்கு மேலே சதாசிவனார் இருப்பார். அவருடைய வடிவம் தான் இந்தச் சோதிலிங்கம். இதனைப் பக்தியுடன் சிவபெருமானின் அருளினால் தவம் மேற்கொள்பவர்கள் அறிவர்.

**ஆகையாலே யறியவரி துனக்கு**
**முன்னை யளித்த வற்கு**
**மாகமீது கிளராதே திரும்பா**
**யென்று மடலு ரைக்க**
**வோகை யாகி யயனுரைப்பா**
**னெனக்கோ ருதவியுள தரியே**
**தோகை பாகன் முடியையிவ**
**னறிந்தா னென்று சொல்வாயே! 81**

(இ—ள்.) ஆகையினால் உன்னால் அதனுடைய முடியை அறிய இயலாது. திருமாலாலும் அடியை அறிய இயலாது. எனவே, மேலும் செல்லாமல் நீ திரும்புவாயாக! என்று தாழைமடல் விளக்கமாக எடுத்துரைத்தது. பிரம்மதேவனும் மகிழ்ந்து, நீ பிரம்மதேவனாகிய நான் சிவபெருமானின் முடியை அறிந்தே னென்று திருமாலிடம் கூற வேண்டும் என்று கேட்டார்.

**எனக்கே தகையு மிசைந்திடலா**
**லெழுந்த சோதி யிறைசிவந்த**
**சினக்கோ பமதா யுரைத்திடுவா**
**னிடும்பர னமது திருமுடியை**
**யனக்கே தனன்கண் டனனென்ன**
**வுரைத்தாய் நமக்கு மாகாமற்**
**புனக்கே தகையே முள்ளுருவாய்ப்**
**போவா யெனவே புகன்றருளி 82**

(இ—ள்.) இவ்வாறு பிரம்மதேவன் கூறியதைத் தாழைமடலும் ஏற்றுக் கொண்டது. அவ்வாறே திருமாலிடம் உரைத்தது. உடனே சிவபெருமான் வெளிப்பட்டு, கோபத்துடன் கூறலானார். தாழைமடலே! எமது திருவடியை அன்னவடிவமெடுத்த பிரம்மன் கண்டான் என்று பொய் கூறினாய். எனவே, நீ எமக்கு எப்பொழுதும் ஆகாமல் முள் உருவம் கொள்வாயாக! எனச் சாபமளித்தார்.

விடைக்குன் றுகைப்பான் வெகுண்டுரைப்பான்
னிதழா யிரமும் வெண்மதியு
மடைக்குங் கமலத் திருப்போனே
யாரா தனையு மரிதாவாய்
படைக்குந் தொழிலு முனக்கொழித்தோ
மென்றா னயனும் பயந்தயர்ந்தான்
சடைக்கொன் றையினான் றாளிணைமேல்
வீழ்ந்தா னெழுந்து சாற்றிடுவான்! 83

(இ–ள்.) சிவபெருமான் மேலும் சினமடைந்து, வெண்மையான சந்திரனால், ஆயிரம் இதழ்களை அடையும் தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவனே! உனக்கும் பூசனை இல்லாமல் போகட்டும். படைக்கின்ற தொழிலும் இல்லாமல் நீக்கினோம் என்றார். பிரமதேவனும் பயந்து கொன்றைமாலை அணிந்த சிவபெருமானின் திருவடிகளில் விழுந்தான். பின்னெழுந்து கூறினான்.

*வேறு*

ஐயனே போற்றி போற்றி யனகனே போற்றி யெட்டுக்
கையனே போற்றி கால காலனே போற்றி சோதி
மெய்யனே போற்றி போற்றி விமலனே போற்றி
பொய்யர்
பொய்யனே போற்றி போற்றி புண்ணியப்
பொருளேபோற்றி! 84

(இ–ள்.) தந்தையே வணக்கம். மாசற்றவனே போற்றி. எட்டுத் திருக்கரங்களை உடையவனே, வந்தனம். காலகாலனாகிய தலைவனே சரணம். சோதி மயமானவனே போற்றி. விமலனாகிய தூயவனே போற்றி. பொய்யனுக்குப் பொய்யனாகவும், புண்ணியப் பொருளாகவும் விளங்குபவனே போற்றி.

ஆறணி சடையாய் போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி
யேறணி கொடியாய் போற்றி யிருவினை தவிர்ப்பாய்
போற்றி
வீறணி யரவா போற்றி வேலவன் நற்குரவா போற்றி
நீறணி யமலா போற்றி நின்மலர் போற்றி யென்றான்! 85

(இ—ள்.) கங்கையை அணிந்தவனே, அடியவருக்கு எளியவனே, அழகிய காளைக் கொடியை உடையவனே, இருபிறவி அறுக்கும் எம்பெருமானே, பெருமையுடைய பாம்பினை அணிந்தவனே, முருகப்பெருமானின் தந்தையே, திருநீறணிந்த தூயவனே, உன்பாதத்தை வணங்குகின்றேன்.

பாபமே புரித லாலே பத்தியே வழுத்த வேண்டிச்
சாபமேல் வரவே நொந்தேன் றளர்ச்சியுந் துயருந் தீரக்
கோபமே தவிர வேண்டுங் குணப்பெருங் குன்றே ஞானத்
தீபமே யருளே யென்று திருவடி யிறைஞ்சி நின்றான்! 86

(இ—ள்.) அடியேன் பாவம் செய்தேன். எனக்குப் பக்தி வருமாறு வரம் பெற்றேன். என்னுடைய வருத்தமும், தளர்ச்சியும், துன்பமும் நீங்க தங்களின் கோபத்தை நீக்கி அருளவேண்டும். குணப் பெருங்குன்றே, ஞான விளக்கே, திருவருள் வடிவமே என்று போற்றி பிரம்மதேவன் வணங்கி வேண்டி முறையிட்டு நின்றான்.

*கலிவிருத்தம்*

முறையென மொழிதலு முனிவு நீங்கியே
பிறைமுடி யண்ணலு மகிழ்ந்து பேசுவான்
மறையவா தெக்கண கயிலை மன்னியே
யிறைநமை வழுத்தினா லேகுஞ் சாபமே! 87

(இ—ள்.) இவ்வாறு பிரம்மதேவன் முறையிடவும், பிறையணிந்த சிவபெருமானும் மகிழ்ச்சியடைந்தார். வேதத்தை உணர்ந்த அந்தணர்கள் வாழும் தெக்கணகயிலையில் வந்து எம்மை வணங்கினால் உன்னுடைய சாபம் நீங்கும் என்று சிவபெருமான் பிரம்மதேவனுக்கு அருளினார்.

தெக்கண கயிலையைச் சேர்ந்த பேர்க்குமுன்
புக்கதீ வினையறும் பொருந்து நற்கதி
யக்கண மாகுமென் றருளிப் போயினான்
முக்கணன் திரும்பினான் முண்ட கத்தினான்! 88

(இ—ள்.) தெக்கணகயிலையை அடைந்தவர்க்குத் தீவினை நீங்கி, நற்கதியும் சேரும் என்று சிவபெருமான் அருளினார். தெக்கணகயிலையை நோக்கிப் பிரம்மதேவன் சிவபெருமானை வணங்கச் சென்றார்.

**அத்திசை முகத்தினா னசல மேவிய**
**மெய்த்திசை விரும்பியே மேவும் போழ்தினி**
**னத்தின நிறைமழ நாடு தன்னிலே**
**யத்தர்வாழ் தென்கயி லாயங் கண்டனன்! 89**

(இ—ள்.) நான்கு முகத்தினையுடைய பிரம்மதேவன், தெக்கண கயிலையை நோக்கிப் பயணம் செய்து சங்குகள் நிறைந்த மழை நாட்டில் சிவபெருமான் எழுந்தருளிய அம்மலையை அடைந்தார்.

*வேறு*

**அக்கிரியி னெல்லையரை யோசனை வளைக்கு**
**மொக்கநில மூழ்கியிடு யோசனைகண் மூன்றாந்**
**தக்கவொரு யோசனை யுயர்ச்சிதவம் வல்லீர்**
**மிக்ககிரி யின்பெருமை வேதநிலை போலாம்! 90**

(இ—ள்.) அந்த மலையின் நான்கு எல்லைகள் நான்கு புறமும், அரை யோசனை தூரம் வளைந்திருக்கும். அதற்கேற்ற வாறு மூன்று யோசனை தூரத்தின் பரப்பு பூமியினுள்ளே மூழ்கியிருக்கும். ஒரு யோசனை தூரம் உயர்ந்திருக்கும். தவ வலிமையுடைய முனிவர்களே இந்த மலையின் பெருமையானது வேதத்தின் உயர்வை ஒத்தியிருக்கும்.

*வேறு*

**அந்தமால் வணயினை யங்கம் பூவுற**
**வந்தனை யாகவே வலஞ்செய் வோர்கடஞ்**
**சுந்தர மேனியிற் றுகளுக் கெண்ணினா**
**ணந்திடாச் சிவபத நண்ணு வார்களே! 91**

(இ—ள்.) உடலானது பூமியில் பொருந்தும்படி அந்த மலையினை வணங்கி, வலம் வருகின்றவருடைய அழகான உடலில் படிந்த தூசிகளுக்கு எண்ணிக்கையில்லாத காலம் அழியாதபடி அவர்கள் சிவதவத்தில் அமர்ந்திருப்பார்.

**இட்டமாந் திருவினை யிணங்க வேண்டிடி**
**லட்டமா சித்தியு மடைய வேண்டிடிற்**
**றிட்டமாப் பரகதி சேர வேண்டிடின்**
**மட்டுலாந் திருமலை வலஞ்செய் வார்களே! 92**

(இ—ள்.) உள்ளம் விரும்பும் அளவில் செல்வங்களைப் பெற விரும்பினாலும், அட்டமா சித்திகளை அடைய விரும்பினாலும், உயர்ந்த பரகதியைச் சேர விரும்பினாலும், மணம் வீசுகின்ற அத்திருமலையை வலம் வருவார்கள்.

**திருமலை தனைவலஞ் செய்த பேரெலாம்**
**பரகதி யடைவது பகர வேண்டுமோ**
**வொருபதம் வலஞ்செய வுன்னி யூன்றினா**
**லரியநா லாம்பத மடைகு வார்களே! 93**

(இ—ள்.) அந்தத் தெக்கணகயிலை மலையை வலம் வருபவர்கள் மீண்டும் பிறவாநிலையாகிய வீடுபேறு அடைவது உறுதியாகும். அதற்குமேல் அந்த மலையை வலம் செய்யவேண்டுமென்று மனத்திலே நினைத்து, பூமியில் ஒரு காலை ஊன்றினால் போதும். அவர்கள் சாயுச்சிய பதவியாக இறைவனுடன் கலந்துவிடுவர்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**சரியையை யறிந்து மற்றச் சரியையின் வழியே வந்து**
**கிரியையை விளங்கி யந்தக் கிரியையை முடித்தபின்பு**
**பரவிய யோக மெல்லாம் படிந்துபக் குவம தாகிப்**
**பெருகிய ஞான நேயம் பிறந்திடுந் தவத்தி னோர்கள்! 94**

(இ–ள்.) சரியையாகிய ஆணவத்தை உணர்ந்து, அதன் வழியாகவே கிரியையாகிய கன்மத்தில் விளங்கி, அதனையும் முடித்த பின்பு, யோகங்களெல்லாம் பழகிப் பக்குவமடைந்து ஞானத்திலே பற்று கொள்ளுகின்ற தவத்தை உடையவர்கள் அந்த மலையில் வாழ்கிறார்கள்.

**ஊசியிற் பதத்தை யூன்றி யுணவுடன் விருப்பு நீங்**
**நாசியின் விழியை நாட்டி நன்கன லைந்து மூட்டிப்**
**பேசிய தொழிந்து ஞானப் பெருக்கினின் மூழ்கி யந்தத்**
**தேசிகன் றன்னை வைத்த சிந்தைமா தவத்தி னோர்கள்!95**

(இ–ள்.) ஊசியின் மேல் காலை ஊன்றி, உணவை நீக்கி, புருவமத்தியின் நடுவில் கண்ணை நிறுத்தி, பஞ்சாக்கினியாகிய மூலமந்திரத்தை மவுன ஞானப் பிரவாகத்தில் முழுகி, சிந்தையில் இறைவனை இருத்திய மாமுனிவர்கள் பலரும் அந்த மலையில் வாழ்கின்றார்கள்.

**மாதவம் புரிய முன்னாண் மாதவம் புரிந்து செய்ய**
**பாதிரி குருந்து கோங்கு பாடல ஞாழல் புன்னை**
**மாதளை கமுகு தாழை வகுளமா சினிசெந் தாழை**
**சூதமே முதலா யுள்ள பாதவ நெருங்கித் தோன்றும் 96**

(இ–ள்.) அந்தத் தெக்கண கயிலைமலையைச் சுற்றிலும் இருந்து பெருமை பொருந்திய தவத்தைச் செய்வதற்காகவே, முற்காலத்தில் மாதவங்களைச் செய்து பாதிரி, குருத்து, கோங்கு, குங்குமம், புன்னை, மாதுளை, கமுகு, தென்னை, மகிழம், பலா, செந்தாழை, மாமரம் ஆகிய மரங்கள் நெருங்கி வளர்ந்திருக் கின்றன.

**பண்பகர் வண்டு பாடப் பரம்பிய சாதி யெங்குஞ்**
**செண்பக வனங்க ளெங்குந் திகழ்ந்தல ரிறைக்கத் தேவர்**
**விண்பொதி கற்ப தாரு மலரினு மிக்க தென்று**
**நண்புடன் மகிழ்ந்து சூடு நன்மலர் வனங்க ளெங்கும் 97**

(இ–ள்.) இசையோடு வண்டுகள் இசைக்கும் மலர்களை உடைய, அகன்ற சாதி மரங்களும், செண்பக மர வனங்களும், அந்த மலையைச் சூழ்ந்துள்ளன. விண்ணகத்திலுள்ள கற்பக

மலர்களை விட இவை மேலானவை என்று தேவர்களும் சூடும் நல்ல மலர்களை உடைய, நந்தவனங்கள் எங்கும் நிறைந்துள்ளன.

**சிங்கமும் புலியு மெண்குந் திரிதரு கலையு மாமா**
**தங்கமு நிறைந்து தம்மிற் பகையற வுறவு கூர**
**வங்குள கனியுந்தேனு மருந்திவா னரங்க ளெல்லாந்**
**தங்களி லொன்றோ டொன்று தருக்கிய இயல்பு கூர 98**

(இ-ள்.) சிங்கங்களும், புலிகளும், கரடிகளும், மான்களும், யானைகளும், பகையின்றி உறவோடு வாழ்கின்றன. வானரங்கள் அவ்வனங்களில் உள்ள கனிகளையும், தேனையும் தம்முள் பெருமிதத்தோடு உண்டு வாழ்ந்திருக்கின்றன.

**செறிதா விளங்கு கின்ற**
**தெக்கண கயிலை நாமத்**
**துறுவரைத் தன்னைக் கண்டா**
**னுற்றபே ருவகை கூர்ந்தான்**
**குறையற மணியின் பொன்னின்**
**குவையுமுன் கண்டு கொண்ட**
**வறிஞர்க ணிகரா மென்ன**
**மகிழ்ச்சி வெள்ளத்தில் வாழ்ந்தான்! 99**

(இ-ள்.) இப்படிப்பட்டத் தெக்கண கயிலைமலையைப் பிரம்மதேவன் கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைந்தான். பிரம்மதேவன் நவமணிக் குவியல்களையும், பொன்மணிக் குவியல்களையும் கண்ட வறுமையாளர்களைப் போன்று மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தான்.

### *கலிவிருத்தம்*

**எந்தையார்க் கனுதின மிருப்பு மாமலை**
**சிந்தைநைந் தமரர்கள் செப்பு மாமலை**
**சுந்தரன் தூதன்முன் சொன்ன மாமலை**
**கந்தமா மலருறை கஞ்சன் போற்றினான்! 100**

(இ-ள்.) இந்த மலையானது என் தந்தையாகிய சிவபெருமானுக்கு என்றும் எழுந்தருளி இருக்கும் தகுதியுள்ளது. தேவர்களால் வணங்கப்படுகின்ற பெருமையானது. சுந்தரமூர்த்தி

சுவாமிகளின் தூதராகிய சிவபெருமானால் அருள் செய்யப்பட்டது என்று எண்ணி மணம் பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவன் வணங்கினான்.

### *கலிநிலைத்துறை*

**அந்த வெற்பினல் லுச்சிமேற் கங்கைவந் தனையச்**
**சந்த வெண்பிறைக் கொழுந்தெழுந் தருகினிற் றவழச்**
**சுந்த ரத்திரு மலைக்கொழுந் தாமிறை சூடுங்**
**கந்த மாநதி மதியென விளங்குதல் கண்டான்! 101**

(இ—ள்.) அந்த மலையின் உச்சியின்மேல் ஆகாயகங்கை வந்து பொருந்தி இருக்கிறது. அழகிய பிறையாகிய இளம்பிறை எழுந்து தவழ்கிறது. இக்காட்சி அழகிய திருமலைக் கொழுந்தாகிய சிவபெருமான் சூடுகின்ற கங்கையையும், சந்திரனையும் போல் விளங்குவதைப் பிரம்மதேவன் கண்டான்.

**எந்தை யார்திரு மலைக்கொழுந் தெனமுளைத் தெழுந்து**
**வந்த வேளையிற் சிரகிரி யுச்சிமேல் வைத்த**
**தந்தி மாமுகக் கடவுளைக் குகையில்வைத் தருளுங்**
**கந்த வேளையும் பிரமனெண் கண்களாற் கண்டான்! 102**

(இ—ள்.) என் தந்தையாகிய சிவபெருமான் திருமலைக் கொழுந்தாக எழுந்தருளிய காலத்தில், சிராமலையின் உச்சியின் மேலே வீற்றிருக்கின்ற யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளையும், மலைக்குகையில் எழுந்தருளி இருக்கின்ற முருகப் பெருமானையும் பிரம்மதேவன் தன்னுடைய எட்டுக் கண்களாலும் பார்த்தான்.

**வணங்கு வார்தமக் கெளியரா மட்டுவார் குழலா**
**மணங்கோர் பாதியார் மலைக்கொழுந் தானநா ளருகே**
**யிணங்கி யிம்மலைக் காவலா யிருக்கென விசைத்த**
**கணங்க ளாகிய தேசுமிக் கார்தமைக் கண்டான்! 103**

(இ—ள்.) தன்னை வணங்கும் அடியார்களுக்கு எளியவராகவும், மட்டுவார் குழலியம்மையை ஒருபாதியாகவும் கொண்ட சிவபெருமான் மலைக் கொழுந்தாக எழுந்தருளிய

காலம் தொடங்கி, அவருடைய ஆணையின்படி இந்த மலைக்குக் காவலாக விளங்கும் ஒளி பொருந்திய சிவகணங்களையும் பிரம்மதேவன் வணங்கினான்.

### *கலிவிருத்தம்*

**உத்தர கயிலையி னுமைதன் கேள்வனா**
**ரத்தனார் வரங்கொடுத் தருடல் கண்டனஞ்**
**சித்தர்வாழ் தெக்கண கயிலை யாவது**
**மித்தகை யெனவெடுத் தியம்ப லாகுமோ! 104**

(இ–ள்.) உத்திர கயிலைமலையில் உமாபதியாகிய சிவபெருமான் வரம் கொடுத்து அருளுவதைக் கண்டிருக் கின்றோம். ஞான சித்தர்கள் வாழ்கின்ற இந்தத் தெக்கண கயிலையின் பெருமையை இத்தகையது என்று என்னால் எடுத்து இயம்ப முடியவில்லை.

**மனமகிழ்ந் தயனுமவ் வரைக்கு நண்ணியே**
**தனிவரை மேற்றிசைத் தடத்தின் மூழ்கியே**
**சினவிடை யூர்தியைச் செய்ய போதினா**
**லனவர தமுமினி தருச்சித் தானரோ! 105**

(இ–ள்.) பிரம்மதேவன் மனமகிழ்ச்சியோடு இம்மலையை அடைந்தான். ஒப்பற்ற இம்மலையின் மேற்குத் திசையிலுள்ள தீர்த்தத்தில் முழுகினான். பகைவர் மேல் கோபம் கொள்ளும் காளை வாகனத்தை உடைய சிவபெருமானைச் சிவந்த மலர்களால் பிரம்மதேவன் நாள்தோறும் மலர்மாலை அணிவித்தும், மலர்களைத் தூவியும் தவம் செய்து வணங்கினான்.

**மலைதனை யனுதினம் வலமுஞ் செய்தொரு**
**சிலையிடை யருந்தவஞ் செய்து போற்றினா**
**னலையிடைத் துயில்பவற் கரிய வண்ணலும்**
**விலகரு முமையுடன் விடையிற் றோன்றினான்! 106**

(இ–ள்.) நாள்தோறும் அந்த மலையை வலம்வந்து, அதன் அருகிலுள்ள ஒரு கல்லில் அமர்ந்து பிரம்மதேவன் தவம் செய்தான். அப்போது பாற்கடலில் நித்திரை செய்கின்ற திருமாலுக்குக் காண்பதற்கரிய சிவபெருமான் உமையொரு பாகனாக விண்ணில் தோன்றினார்.

**நின்பெருஞ் சாபமும் வினையு நீக்கினோ**
**மின்புற வுலகெலா மியற்று கென்றலுந்**
**தென்கயி லாயவிச் சிலையி னாமமு**
**மென்பெய ராகவே யிசைக்க வேண்டுமால்! 107**

(இ–ள்.) பிரம்மதேவனே! உன்னுடைய சாபத்தையும், பொய் கூறிய பாவத்தையும் நீக்கிவிட்டோம். உலகங்களெல்லாம் இன்பத்தோடு வாழ முன்போலவே படைக்கும் தொழிலை மேற்கொள்வாயாக! என்று சிவபெருமான் அருளினார். அதைக் கேட்ட பிரம்மதேவன் இந்தச் சிலையாகிய மலைக்கு என் பெயர் விளங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

**பொய்த்துரை பகர்ந்திடும் வினைகள் புண்ணிய**
**வித்தல நினைத்தவர்க் கேக வேண்டுமே**
**மெய்த்தவந் தமியனேன் புரிய மேவிய**
**வுத்தமச் சிலையுமென் பெயரி னோங்கவே! 108**

(இ–ள்.) மேலும், பொய் கூறும் பாவங்கள் எல்லாம் இந்தப் புண்ணியத் தவத்தை நினைப்பவர்களுக்கு நீங்கவேண்டும். மெய்மையாகிய தவத்தை அடியேன் அமர்ந்து செய்த இந்தச் சிலையும், என் பெயரினாலேயே விளங்க அருள்புரிய வேண்டும் என வேண்டி வணங்கினான்.

**திங்களி னுரோகிணித் தினத்தின் மூழ்குவார்**
**மங்கரு வினையெலா மாற்ற வேதகும்**
**பங்குனி மாதமுட் படிகு வாரெனி**
**னங்கவர்க் கருங்கதி யளிக்க வேண்டுமே! 109**

(இ–ள்.) சோமவாரமான திங்களன்று உரோகிணி நட்சத்திரம் கூடிய தினத்தில் மூழ்குகின்றவர்களுடைய கொடிய பாவங்களை எல்லாம் நீக்கி அருளவேண்டும். பங்குனி மாதம் முழுவதும் இக்குளத்தில் நீராடுபவர்களுக்குப் பெருமை பொருந்திய மோட்சத்தை அளிக்கவேண்டும்.

**அத்தட மூழ்கிநல் லறுகு மூவிலைப்**
**பத்திர மிரண்டுநின் பதத்தி லேற்றினார்**
**புத்திர செல்வமும் புகழு மேன்மையுஞ்**
**சித்தியு முத்தியுஞ் சேர வேண்டுமே! 110**

(இ–ள்.) அக்குளத்தில் மூழ்கி நல்ல அருகம்புல்லையும், மூன்று இலைகளையுடைய வில்வத்தையும் சாத்தி, உம்முடைய திருவடியை வணங்கியவர்கள் குழந்தைச் செல்வமும், புகழும், மேன்மையும், சித்தியும், முத்தியும் பெறவேண்டும்.

**சோமரோ கணியெனும் பெயருஞ் சூட்டிவி**
**தாமரைத் தடத்தினுக் கென்று சாற்றினான்**
**மாமலர்க் கோயிலாய் வரங்கள் யாவையும்**
**யாமளித் தனமென வியம்பி யேகினான்! 111**

(இ–ள்.) இந்தத் தாமரை மலர்கள் பொருந்திய குளத்திற்குச் சோமரோகிணி என்ற பெயரை அருளவேண்டும் என்று வேண்டினான். தாமரைமலரைக் கோவிலாகக் கொண்ட பிரம்மதேவனே! நீ வேண்டிய வரங்கள் அனைத்தையும், யாம் உமக்கு வழங்கினோம் என்று கூறிச் சிவபெருமான் அருளி மறைந்தார்.

**விதிசிலை நன்மையுந் தடத்தின் மேன்மையு**
**மதியணி யிறைசிரா மலையைப் போற்றுவார்**
**கதிபெறு நீர்மையுங் கண்டு கஞ்சளாற்**
**பதுமனு மகிழ்ந்துதன் பதியி லெய்தினான்! 112**

(இ–ள்.) பிரம்மதேவன் தவம் செய்த கல்லின் நன்மையையும், அவன் மூழ்கிய சிவதடாகத்தின் மேன்மையையும் பிறையணிந்த சிவபெருமான் எழுந்தருளிய தெக்கண கயிலையையும் வணங்குபவர்கள் அடைகின்ற மேன்மையைக் கண்டு பிரம்மதேவன் மகிழ்ச்சியோடு தன் இருப்பிடமாகிய சத்திய உலகத்தை அடைந்தார்.

பிரம்மதேவன் அசத்தியந் தீர்ந்த சருக்கம் முற்றும்.

# 3. அகத்தியச் சருக்கம்

*எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**இந்தமாக் கதையான் மனமகிழ்ந் திறைஞ்சி**
**யிருந்தவ ரெழுந்துநின் றுரைப்பார்**
**நந்துவா ரிதியைப் பருகிய முனிவ**
**னயந்துதெக் கணதிசை யடைந்து**
**விந்தமால் வரையைப் புதைத்ததுங் கயிலை**
**விமலனை யமலனை யிறைஞ்சிச்**
**சந்தனா சலத்தி லிருந்தது முரைப்பா**
**யெனச்சொலப் புகலுவான் றவத்தோன்!** 113

(இ–ள்.) இந்தப் பெருமை பொருந்திய வரலாற்றைக் கேட்ட பெரிய தவத்தையுடைய முனிவர்கள் மகிழ்ச்சியுடன் எழுந்து நின்றார்கள். அவர்கள் கவுதமமுனிவரே, சங்குகள் நிறைந்த கடலைக் குடித்த அகத்தியமுனிவர் மனம் விரும்பி, தெற்கே சென்று விந்தமலையைப் பூமியுனுள்ளே புதைத்ததையும், தெக்கண கயிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கிப் பொதிய மலையில் போய்த் தங்கியதையும் கூறுவீர்களாக! என்று வேண்டினார்கள். கவுதமமுனிவரும் கூறத் தொடங்கினார்.

**முக்கண னொருநா ளிமகிரிச் சிகர**
**முகட்டிலே முனிவர்க ளுடனே**
**புக்குறை தருமப் பொழுதினி லுரைப்பான்**
**பொருவிலா நாரத முனிவா**
**தக்கண திசையி னுயர்ச்சியே தென்றான்**
**றவமுனி யுரைசெய்வான் றலைவா**
**வக்கணி சடையாய் முன்னையான் குமரி**
**யாடுவா னத்திசை யடைந்தேன்!** 114

(இ–ள்.) முக்கண்ணனான சிவபெருமான் ஒருநாள் முனிவர்களுடன் இமயமலைச் சிகரத்தின் முகட்டில் தங்கி யிருந்தார். அப்பொழுது நாரதமுனிவரிடத்தில் தெற்குத்திசையின் பெருமை யாது? எனக்கேட்டார். அதற்கு அந்த நாரதமுனிவர் சங்குமாலை அணிந்த சடையை உடைய சிவபெருமானே!

கன்னியாகுமரியில் மூழ்கும் பொருட்டு நான் தெற்குத்திசை நோக்கிச் சென்றேன்.

விந்தமென் றொருமால் வரைநெறி யிடையே
விளங்கிய ததுதனை வினவின்
மந்தர கிரியைப் பகைத்துமற் றுள்ள
வரைகளை நகைத்துநாற் றிசையி
னந்தர முழுது மடைக்கவு மெழுந்த
தரும்பொருள் விரும்புமங் கனையார்
சிந்தையை யளவிட் டறியலாஞ் சிறிதுந்
தெளிவுறப் படாததன் றிறமே! 115

(இ.—ள்.) விந்தம் என்னும் பெயருடைய பெரியமலை வழியில் தோன்றியது. அதனைப்பற்றிக் கேட்டபொழுது அது மந்தர மலையைப் பகைத்து, மற்றுமுள்ள மலைகளையும் இகழ்ந்து, நான்கு திசைகளிலுள்ள ஆகாய வெளி முழுவதையும் அடைக்கும் படியாக எழுந்தது. பொருளை விரும்புகின்ற பெண்களுடைய மனத்தைக் கூட அளவிட்டு அறியமுடியும். ஆனால் அந்த மலையின் தன்மையை அறிய முடியாது.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

தந்த விலங்கு மடங்கலரா
சரபங் கரடிகளை முதலா
எந்த விலங்கு மதிலுறையு
மழியா மையினா விராவணனார்
வந்த விலங்கை நிகராகு
நமனா டெனலாம் வன்கொலையா
லந்த விலங்க றனைக்காணி
லெணக்கும் விலங்க லாய்விடுமே! 116

(இ—ள்.) கொம்புகளையுடைய யானைகளும், சிங்கங்களும், பாம்புகளும், சரபங்களும், கரடிகளும், புலிகளும், அந்த விந்தமலையில் இருக்கும். அவற்றுக்கு அழிவில்லை. எனவே, இராவணன் ஆட்சி செய்த இலங்கைக்கு அது ஒப்பானதாகத் திகழ்ந்தது. அதனைக் கண்டால் என் மனமும் கலங்கிவிடும் என நாரதமுனிவர் உரைத்தார்.

*வேறு*

**என்றுமறை நாரதனா முனிவனந்த**
**மலையியல்பை யிறைஞ்சிக் கூற**
**நன்றுமுனி வரனுரைக்கு மலையெழுச்சி**
**யெனநகைத்து நவில்வான் யாமே**
**சென்றுமிகை தவிர்த்திடுவ தொன்றுதிரு**
**மானடந்து சிதைக்க வேண்டு**
**மொன்றுதமிழ் முனியாலே யடக்குவதொன்**
**றெனமுனிவற் குரைப்ப தானான்!** 117

(இ—ள்.) வேதமுனி நாரதர் இவ்வாறு வணங்கிக் கூறினான். அதைக்கேட்ட சிவபெருமான் நகைத்து, அந்த மலையினுடைய ஆணவத்தைச் சென்று நாமே நீக்கவேண்டும் அல்லது திருமாலோ, அகத்தியமுனிவரோ சென்று அடக்கவேண்டும் என்று கூறினார். அவர் அகத்தியமுனிவரிடம் கூறலானார்.

**முன்னமலை தனையடக்கு முனிவரனே**
**நாரதமா முனிவ னின்று**
**சொன்னமலை தனையடக்கக் குறிஞ்சிநிலங்**
**கடந்துமலர்ச் சுரிசங் கொடே**
**யன்னமலை வயற்பழனத் திருநாடு**
**கடந்துதென்பா லடைவா யென்றான்**
**மன்னமலை கேள்வனிவை யருளுதலும்**
**பயந்துரைப்பான் மலயத் தோனே!** 118

(இ—ள்.) முன்பு கடலை அடக்கிய மாமுனிவரே, நீர் நாரத மகாமுனிவர் இப்பொழுது கூறிய விந்த மலையை அடக்கவேண்டும். அதற்குக் குறிஞ்சி, தாமரை மலர்களையும், சங்குகளையும், அன்னங்களையும் கொண்ட வயல்களையுடைய மருதநிலம் சூழ்ந்த அழகிய நாடு ஆகியவற்றைக் கடந்துத் தென்திசைக்குச் செல்வாயாக! என்று சிவபெருமான் கூறினார். அகத்தியமுனிவரும் அச்சமடைந்து கூறலானார்.

### *கலிநிலைத்துறை*

**கான வாரிசப் பொருட்டுறைக் கடவுளுங் கனகத்**
**தான வாரியும் வலாரியுந் தெளிகிலாத் தலைவா**
**ஞான வாரியி லமுதமே கருணைமா நதியே**
**வான நாடனே யுனைப்பிரிந் தெங்ஙனம் வாழ்வேன்! 119**

(இ–ள்.) தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மதேவனும், இரணியனை வதைத்த திருமாலும், இந்திரனும் அறியமுடியாத தலைவரே! ஞானக்கடலில் தோன்றிய அமிழ்தமே! பெருமை பொருந்திய கருணை மாநதியே! தெய்வலோகத்திலுள்ள உம்மைவிட்டுப் பிரிந்து அடியேன் எப்படி வாழ்ந்திருப்பேன்.

**செப்பு லாமுலை யுமையிட மருவிய தேனே**
**கைப்பி லாமது ரங்கொளா நந்தமாக் கனியே**
**தப்பி லாமறைப் பொருளினுக் களவிடாத் தனியே**
**யொப்பி லாநினைப் பிரிந்தியா னெங்ஙன**
**முய்வேன்! 120**

(இ. ள்) செப்பை ஒத்த மார்பினை உடைய உமை அன்னையை இடப்பாகத்தில் கொண்ட தேனே! கசப்பில்லாத சுவையைக் கொண்ட ஆனந்தக் கனியே! குற்றமற்ற வேதப் பொருளுக்கும் எட்டாத ஒப்பற்ற தலைவரே! உம்மைப் பிரிந்து அடியேன் எப்படி வாழ்வேன்.

**எண்பு யத்தினல் லழகுநின் றிருமுகத் தெழிலுங்**
**கண்க ளிற்பொழி கருணையு மிவரெலாங் காண**
**மண்கொ ளச்செறி வரையது பொருட்டினான் மயங்கி**
**விண்பு லத்திடைச் செல்வதோ வெனச்சொலி**
**வீழ்ந்தான்!121**

(இ–ள்.) உம்முடைய எண்தோளின் அழகும், முகத்தின் எழிலும், கண்கள் பொழியும் கருணையும் காணாமல், இவர்கள் எல்லோரும் காணுமாறு மண்ணுலகத்தில் உள்ள விந்தமலைக்காக அடியேன் செல்லவேண்டுமோ என்று இறைவனுடைய பாதத்தில் விழுந்தான்.

அண்ண லிப்படி யிரங்கிய முனிவனுக் கருளி
யெண்ண முற்றிலை மலையினைப் பாதலத் திருத்தி
நண்ணி லப்புறந் திரிசிரா மலையத னடுவே
புண்ணி யத்தினான் மலைக்கொழுந் தாயதிற்
பொலிவோம்! 122

(இ–ள்.) இங்ஙனம் வருந்திய அகத்தியமுனிவரை நோக்கிய சிவபெருமான், நீர் வருத்தமடைய வேண்டியதில்லை. விந்த மலையைப் பாதாளத்தில் அடக்கி மேலே சென்றால் அருகில் திரிசிராமலை விளங்கித் தோன்றும், உங்கள் புண்ணியப் பயனால் நாம் அங்கு மலைக்கொழுந்தாய் வீற்றிருப்போம் என்றார்.

விந்த மால்வரைத் தெக்கண திசையிலே விளங்கு
மந்த மால்வரைக் கொழுந்தரைச் சிறிதுநா
ளருச்சித்
தெந்த மால்வரைத் திரளினுந் தவம்புரிந் திருக்குஞ்
சந்த னாசலத் திருக்கென விடைகொடுத்
தனனே! 123

(இ–ள்.) விந்தமலையின் கொழுந்தாய் திரிசிராமலையில் வீற்றிருக்கும் சிவபெருமானை, நீர் சிறிது காலம் பூசையினைச் செய்து பின்னர் எல்லா மலைகளிலும் உயர்ந்த சந்தனமரங்களைக் கொண்ட பொதியமலையில் தங்கி இருப்பீராக என்று கூறி விடை கொடுத்தருளினார்.

விட்பு லங்களா லணுகியே விந்தமால் வரையைக்
கட்பு லங்களா லகத்திய முனிவனுங் கண்டா
னெட்ப குந்ததி னளவும்வெள் ளிடையிலா தெழுந்து
முட்பொ திந்திடு புதலினாற் செறிந்தது முழுதும்.124

(இ–ள்.) இறைவனின் கட்டளையின்படி அகத்தியமுனிவர் வான்வழியே சென்று அந்தப் பெரிய விந்தமலைஎ்யக் கண்டார். எள்ளளவு இடைவெளியும் இல்லாமல் முட்புதர்களால் அந்தமலை மூடப்பட்டிருந்தது.

### *கலிவிருத்தம்*

**சீய மங்கதிற் கண்டு திரும்புவ**
**வாயி ரங்கதிர்ச் செல்வன ரும்பரி**
**பாயும் வெம்புலி கண்டிருட் பாலெழுந்**
**தூய திங்களின் மானுந் துளங்குமே! 125**

(இ–ள்.) அந்த மலை சிங்கங்களைக் கண்டு, ஆயிரம் கதிர்களையுடைய சூரியனின் தேரில் பூட்டிய குதிரைகள் அம்மலையைக் கடக்க இயலாமல் திரும்பியது. தூய்மையான சந்திரனிடத்தில் உள்ள மானும், அம்மலையிலுள்ள புலிகளைக் கண்டு அஞ்சியது.

**குஞ்ச ரத்திற் குதிக்குங் கடாநதி**
**நஞ்சு கக்கு மரவொடு நண்ணிடும்**
**வஞ்சர் பெற்ற வளமென வேபிறர்**
**நெஞ்சி னுக்கும் புகாத நெறியதே! 126**

(இ–ள்.) அம்மலையில் மலைகளிடமிருந்து பெருகும் மதநீரானது வெள்ளமாகக் குதித்து ஓடியது. அந்நீரானது நஞ்சினைக் கக்குகின்ற மலைப்பாம்புகளிடத்தில் சென்று சேர்ந்தது. வஞ்சகர்களுடைய செல்வத்தைப் போல, பிறருடைய நெஞ்சத்திலும் நுழையாத வழியையுடையதாக அம்மலையானது விளங்கியது.

**தாக்க ணங்குறை தாழ்வரை யுள்ளது**
**நோக்க ணங்கு பயிலு நுனியது**
**மாக்க ணங்கண் மயங்க நெடுங்கழை**
**தீக்க ணங்களைச் சிந்திடுந் தீயது 127**

(இ–ள்) தாக்கும் அணங்குகள் வாழும் அந்த மலை அச்சமூட்டும் தன்மையுடையதாக இருந்தது. விலங்குக் கூட்டங்கள் அஞ்சும்படியாக நீண்ட முகில்கள் நெருப்புக் கூட்டங்களைச் சிந்தும் கொடுமையுடையதாக விந்தமலைக் காட்சியளித்தது.

**கற்பி லாதவர் கட்டழ கென்னவு**
**மற்பி லாவர சாள்பதி யென்னவு**
**மெற்பெ லாநிறை காடிது வென்னவும்**
**வெற்பை யாவருங் காண வெறுப்பரே! 128**

(இ–ள்.) கற்பில்லாத பெண்களின் கட்டழகு போலவும், அன்பில்லாத மன்னனுடைய நாட்டைப் போலவும், எலும்புகள் நிறைந்த சுடுகாட்டைப் போலவும் தோன்றியது. இதனால் அம்மலையை எல்லோரும் வெறுத்து ஒதுக்கினர்.

**கருவி வான்முகி லார்ப்பன கார்வரை**
**பொருமி வாய்விட் டிரங்குதல் போன்றது**
**மருவு மாமுனிக் கஞ்சியம் மால்வரை**
**யருவி தானு மழுவது போலுவே! 129**

(இ–ள்.) ஆகாயத்திலுள்ள மேகங்களின் இடிமுழக்கம், அந்த விந்தமலையானது அகத்தியமுனிவரைக் கண்டு அஞ்சி அழுவன போன்று காட்சியளித்தது. அந்தப் பெரிய மலையிலிருந்து விழுகின்ற அருவி அகத்தியமாமுனிவருக்கு அஞ்சி அந்த மலையே கண்ணீர் விடுவது போலக் காட்சியளித்தது.

**நெய்கு ழைத்தெனத் தேனெகிழ் கின்றன**
**மெய்கு லைத்த வெயர்த்துளி போன்றன**
**மைகு லைத்த மரங்க ளசைவன**
**கைகு லைப்பன போன்றன கார்வரை 130**

(இ–ள்.) நெய்யுருகி ஓடுவது போல மலைத்தேன் உருகி ஓடியது. அது அந்த மலையின் உடல் நடுக்கத்தால் வியர்வைத் துளிகள் ஒன்றாகச் சேர்ந்து ஓடுவது போலக் காட்சியளித்தது. வான்வரை உயர்ந்த மரங்கள் அசைவது, அகத்தியமா முனிவருக்குப் பயந்து விந்த மாமலை கைகளை அசைத்து நெரிப்பது போலக் காட்சியளித்தது.

வண்ண வெற்பின் மலர்சொரி யுங்கணி
நண்ணு தேற லொழுக்க நனைந்திட
லெண்ணு மிந்திரன் வச்சிர மேற்றிய
புண்ணி லெண்ணெய் பொழிவன போலுமே! 131

(இ–ள்.) அம்மலைகளில் காணப்படும் மலர்களைச் சொரியும் வேங்கை மரத்திலுள்ள தேனும், கனிகளில் பொருந்திய தேனும் ஒழுகி அம்மலையை நனைத்தன. அது இந்திரன் தன்னுடைய வச்சி ராயுதத்தால் முன்னாளில் மலைகளில் இறகுகளை அரிந்த புண்களிலிருந்து எண்ணைப் பொழிவது போன்று காட்சியளித்தது.

### வேறு

உருமின நிறைதலி னுரக மாமணி
சொரிதலி னலகைவாய் விளக்குத் தோன்றலின்
மருவிய விரவெரி மரங்க ளிற்செறிந்
திரவெனும் பெயருமவ் விடத்தி னில்லையே! 132

(இ—ள்.) மேகத்தில் தோன்றிய மின்னலும் பாம்புகளின் மணிகளில் தோன்றிய ஒளியும், கொள்ளிவாய்ப் பேயின் ஒளியும், சோதி மரங்களின் ஒளியும் நிறைந்து இருப்பதால் இரவு என்ற ஒன்று விந்தமலையில் இல்லாமலே போயிற்று.

மலையது நெடுமுழை மருங்கெ லாஞ்சிறு
புலிகளுஞ் சீயமும் புயங்க ராசியுங்
கலைகளுங் கயங்களுந் துயிலுங் காலையி
லுலகினை யுண்டவ னுதரம் போலுமே! 133

(இ—ள்.) விந்தமலையின் நீண்ட குகைகளின் பக்க மெல்லாம் சிறிய புலிகளும், சிங்கங்களும், பாம்புக் கூட்டங்களும், யானைகளும், உறங்குவது உலகத்தையே விழுங்கிய திருமாலின் வயிற்றைப் போலிருந்தது.

நிறைதரு வேங்கையு நெடிய சந்தமு
மறுவற நிறைந்திரு மருங்குந் தோன்றுதல்
குறுமுனி வருமெனக் குவடு முன்புபோற்
சிறைகளை விரித்தெழுஞ் செய்கை மானுமே! 134

(இ—ள்.) நிறைந்து அடர்ந்து வளர்ந்த வேங்கை மரங்களும், நீண்ட சந்தனமரங்களும் அம்மலையின் இரண்டு பக்கங்களிலும் தோன்றுகின்றன. அது அகத்திய முனிவர் வருவார் என்று அஞ்சி அந்த விந்தமலையானது முன்புபோல சிறகுகளை விரித்துப் பறக்க முயல்வது போலத் தோன்றியது.

புயற்றிகழ் வரைநடு முழையிற் பொங்கிய
வெயிற்றர வுமிழ்மணி யிருளை நீக்குத
லுயர்ச்சியின் றடங்குமென் றுருகு மோங்கலின்
வயிற்றிடை கொளுந்திய வன்னி போலுமே! 135

(இ–ள்.) மேகங்கள் சூழ்ந்திருக்கும் அந்த விந்தமலையின் நடுவிலுள்ள குகைகளில் பாம்புகள் மணிகளை உமிழ அம்மணியிலிருந்து ஒளி வீசிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சி அகத்தியமாமுனிவரால் நமது முயற்சி அடங்கிப் போய்விடுமென்று மனம் உருகுகின்ற அந்த மலையினுடைய வயிற்றில் கொளுத்தப்பட்ட நெருப்பைப் போலிருந்தது.

**சித்திரப் பெருங்கழை திறந்து கண்களி**
**னித்தில மணிகளை நெடிது வீசுதன்**
**மெய்த்தமி ழகத்தியன் மேவு றாவகை**
**கைத்தல மெடுத்தெறி கற்கள் போலுமே! 136**

(இ–ள்.) அழகிய பெரிய மூங்கில்கள் வெடித்து அவற்றின் கணுக்களிலியிருந்து முத்துகள் நெடுந்தூரம் வீசப்படுகின்றன. அந்தக் காட்சி அகத்தியமாமுனிவருக்குத் தன்னிடத்தில் வராதபடி அம்மலையானது தன் கைகளாலே கற்களை எடுத்தெரிவது போலத் தோன்றியது.

**விஞ்சிய சிகரியின் முடியின் வெள்ளிய**
**மஞ்சினந் தவழுதல் குதிக்க மாமுனி**
**யஞ்சுவ னெனத்திரண் டமர ரானவர்**
**பஞ்சினை யமைத்திடும் பண்பு போலுமே! 137**

(இ–ள்.) உயர்ந்த அந்த விந்தமலையின் உச்சியில் வெண்மேகக் கூட்டங்கள் தவழ்ந்தன. அந்தக் காட்சி, அகத்திய மாமுனிவர் அந்த மலையில் குதிக்க அஞ்சுவார் என்று, தேவர்கள் கூடி மென்மையான பஞ்சைப் பரப்பி வைத்தது போலத் தோன்றியது.

### *எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**அந்த மால்வரை யெந்த மால்வரை**
**யான தோவென வையமுற்**
**றிந்த மால்வரை விந்த மால்வரை**
**யென்று மாமுனி யெண்ணியே**
**தந்த மால்வரை யன்று ரித்தவர்**
**தாளை நெஞ்சு தரித்துவெண்**
**குந்த மால்வரை சூழு மவ்வரை**
**யுச்சி மீது குதித்தனன்! 138**

(இ–ள்.) அகத்தியமாமுனிவர் அந்தப் பெரிய விந்த மலையைப் பார்த்தார். இது எந்த மலையென அச்சமுற்றார். இது விந்தமலை தான் என்று முடிவு செய்தார். தந்தங்களை உடைய பெரியமலை யானையை உரித்தருளிய சிவபெருமானுடைய திருவடிகளை மனத்தில் தியானித்தார். குருந்தமரங்களும், மூங்கில்களும் சூழ்ந்த அந்த விந்தமலையின் உச்சியின் மேல் குதித்தார்.

**ஆர மான வெயிற்றி னார்தன**
**பார மான தழுந்தியே**
**மார வேளை நிகர்ந்த காதலர்**
**மார்பின் மீது புதைந்தது**
**மீர மானநி லத்தி லேமுளை**
**யெய்தி யிட்டது மென்னவே**
**பார மாமரு விப்பெ ருங்கிரி**
**பாத லத்திடை புக்கதே! 139**

(இ–ள்.) முத்துப் போன்ற பற்கள் விளங்கும் பெண்களுடைய மார்பில், மன்மதனை ஒத்த தங்கள் கணவர்களின் மார்பின் மேலே அடங்கிப் புதைவது போலவும், ஈரமுள்ள நிலத்தில் இரும்பு முளை இலேசாக இறங்குவது போலவும், பாரமான அருவிகளுடைய அந்தப் பெரிய மலை பூமியில் அழுந்திப் பாதாளத்தில் புகுந்தது.

**அந்ந கந்த னிளைப்பி னோடெழு**
**பாத லத்தி னழுந்தியும்**
**பன்ன கந்த னிளைப்பொ ழிப்பது**
**போல நின்றது பார்சுமந்**
**தின்ன லுற்றவவ் விந்த மால்வரை**
**யொன்று கூறிடு மெந்தையே**
**யென்ன குற்றமு னக்கி ழைத்தன**
**னென்ன தீமை யிழைத்தனன்! 140**

(இ–ள்.) அந்த விந்தமலை இளைப்புடன் ஆறு லோகங் களையும் கடந்து ஏழாவதான பாதளத்தில் அழுந்தியது. பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனுடைய களைப்பைப் போக்கி, பூமியைச் சுமப்பதுபோல் உயர்ந்து நின்றது. அகத்திய மாமுனிவரைப் பார்த்து விந்தமலை, எனது தந்தையே, உமக்கு நான் என்ன குற்றம் செய்தேன் என்று வருந்திக் கூறியது.

வினைசெய் வில்வலன் றம்பியானலன்
வேலை வாரியும் யானலன்
முனிவு செய்திடு நகுடன் யானலன்
முனிவ தேதெனை முனிவனே
யனக னேயினி யான் வளர்த்திடு
காலம் யாதென வருள்செய்வான்
கனக மேருவின் மீள யான்வரு
கால நீவளர் காலமே! 141

(இ-ள்.) அகத்தியமாமுனிவரே, உமக்குத் தீமை செய்த வில்வலன் தம்பியான் அல்லன். சமுத்திரமோ, நகுடனோ யானல்லன். எம்மீது சினம் கொண்ட காரணம் யாது? இனி, யான் வளர்வதற்குரிய காலமும் யாதென்று மலை கேட்டது. அதற்கு அகத்தியமாமுனிவரும் பொன்மயமான மேருமலையை நோக்கி யான் மீண்டும் வரும் காலத்தில் நீ வளர்வாய் என்று அருள்புரிந்தார்.

என்று மாமுனி சென்ற போதெதிர்
திருசி ராமலை யிணையதாங்
குன்று மேற்றிசை யொன்று நின்றது
கண்டு நெஞ்சு கொதித்தெழுந்
தின்று நாமிது வென்று போதுவ
மென்று தாளி லடக்கினா
னன்றி ராவணன் பாத லத்தி
னடங்கு மாறென வானதே! 142

(இ-ள்.) இவ்வாறு விந்தமலைக்கு அருள்செய்து தெற்குநோக்கிச் சென்றார் அகத்தியர். அவருக்கு எதிரில் திரிசிராமலைக்கு ஒப்பாக மேற்கில் ஒரு மலை நின்றது. அகத்தியர் மனத்தில் கோபமடைந்தார். இதையும் பூமியில் அடக்கிச் செல்வோம் என்று அதனைத் தமது கால்களால் பூமியில் அழுத்தினார். அக்காட்சி சிவபெருமானுடைய திருவடிப் பெருவிரலால் இராவணன் பாதாளத்தில் அடக்கியது போன்று இருந்தது எனச் சிறப்பிக்கின்றார்.

வட்ட மாகிய நேரி மாமலை
பரத லத்தின் மறைந்தபின்
துட்ட ராமவர் சென்ற பின்பு
துலங்கு மேலவ ரென்னவுங்
கொட்ட மார்கவி போன பின்பு
கொழிக்கு நல்லற மென்னவு
மட்டு வார்குழல் பாக னார்திரு
மலைவி ளங்கி வளர்ந்ததே! 143

(இ–ள்.) வட்டமான அந்த நேரி மாமலை மறைந்ததும், தீயவர்கள் மறைந்த பின் ஓங்கி நிற்கும் உயர்ந்தவர்களைப் போலவும், துன்பம் தரும் பாவம் மறையும் போது செழிக்கும் புண்ணியத்தைப் போலவும், மட்டுவார் குழல் அம்மையை இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமான் எழுந்தருளியிருந்த மலையானது அழகாக வெளிப்பட்டது.

*கலிவிருத்தம்*

விண்ணவர் பரவுமவ் விலங்கன் மீதிலே
வண்ணமென் கவரிமர மகிழ்ந்து லாவுதல்
புண்ணிய வரையா மகளிர் புஞ்சமர
யெண்ணருந் திருவல கிடுதல் போலுமே! 144

(இ–ள்.) தேவர்கள் வணங்கும் திரிசிரா மலையின் மேல் அழகிய கவரிமான்கள் மகிழ்ச்சியுடன் உலாவுவது புண்ணியம் பொருந்திய தேவமகளிர் அலகிடுவதைப் போல குப்பையில்லாமல் தூய்மையாகக் காட்சியளித்தது.

நீலவட் டச்சிறை விரித்து நிண்மயி
லோலவட் டப்புய லுவந்து லரவுதன்
மாலைவட் டத்தன வரைய ரம்பைய
ராலவட் டங்கள்கொண் டணைதல் போலுமே! 145

(இ–ள்.) நீலநிறமான வட்டத் தோகையை விரித்துப் பெரிய மயில்கள் மேகங்களைக் கண்டு மகிழ்ந்து உலாவருவது இரத்தினமலையை அணிந்த மார்புகளைப் பெற்ற அரமகளிர், ஆலவட்டங்களை எடுத்து வருவது போல் காட்சியளித்தது.

**தோமறு சுரும்பினங் குடையத் தூளெழுந்**
**தாமரை யலர்சுனைத் தடத்திற் றோன்றுதன்**
**மாமைகொ ணீரா மகளிர் பற்றிய**
**காமரு தூமமென் கலசம் போலுமே! 146**

(இ–ள்.) குற்றமில்லாத வண்டுக் கூட்டங்கள் தாமரை மலர்களைக் குடைகின்றன. அவற்றிலிருந்து மகரந்தப்பொடி எழுந்து பறக்கின்றது. அக்காட்சி அழகு பொருந்திய நீரர மகளிர் வாசனைப் புகையுள்ள கலயங்களை ஏந்துவது போலக் காட்சியளித்தது.

*வேறு*

**சென்று கானவ ரிட்ட தினைகளுந்**
**துன்று நீள்கழை தூவிய முத்தமு**
**முன்றி லைவன ராசிமு கிழ்த்ததுங்**
**குன்றின் மேலெழு குன்றென வானதே! 147**

(இ–ள்.) வேடர்கள் விளைவித்த தினைகளும், நீண்ட மூங்கில்களால் தூவப்பட்ட முத்துகளும், குறவருடைய முற்றங்களில் குவிக்கப்பட்ட மலைநெல்லும் கூடி, மலையின் மேலெழுந்த மலையைப் போலத் தோன்றின.

**வண்டு சூழ மணிச்சிறு பாறையில்**
**விண்ட கொங்கலர் மென்கனி வீழ்தலிற்**
**கொண்டன் மின்னனை யார்குழற் கொண்டையின்**
**மண்டு செம்பொன் மணியணி மானுமே! 148**

(இ–ள்.) வண்டுகள் சூழும்படியாகச் சிறிய மாணிக்கப் பாறைகளில் மலர்களும், மென்மையான கனிகளும் வீழ்ந்திருந்தன. இக்காட்சி மின்னல் போன்ற அழகுடைய மாதர்கள் கொண்டையில் இருக்கும் செம்பொன்னால் செய்த மணிகள் பதித்திருக்கும் அணிகலன் போன்று விளங்கியது.

*வேறு*

**மரகதப் பாறைமேல் வயங்கு மாசுணஞ்**
**சொரிதரு பலமணி சுடரை வீசுதல்**
**புரையறு பாசடை புதைத்த பொய்கையி**
**லரியுண மலர்ந்தசெவ் வாம்பல் போலுமே! 149**

(இ—ள்.) மரகதப் பாறையின் மேல் நாகங்களால் சொரியப்பட்ட பலமணிகள் ஒளி வீசுகின்றன. அது குற்றமில்லாத, பசுமையான இலைகள் நிறைந்த பொய்கையில், வண்டுகள் உண்ணும்படிச் சிவந்த ஆம்பல் மலர்களைப் போல் காட்சியளித்தது.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**வடத்திலே துயிலுமவன் காணாத**
**சிராமலையை வலம்கொண் டேத்திக்**
**குடத்திலே வந்தமுனி தடத்திலே**
**மூழ்கியிறை கோயின் மேவி**
**யிடத்திலே யுறையுமுமை யவள்பூசை**
**யிறைபூசை யியற்றி யேத்த**
**நடத்திலே மகிழ்ந்தபிரான் முனிக்கெதிரே**
**விடையின்மிசை நண்ணி னானே! 150**

(இ—ள்.) ஆலிலையில் உறங்கும் திருமாலினால் காணப்படாத திரிசிராமலையை அகத்தியர் வலம் வந்து துதித்தார். சிவதடாகத்தில் முழுகி, ஆலயத்தை அடைந்து, இறைவனின் இடப்பாகத்தில் வீற்றிருக்கும் உமாபதியை வணங்கி இறைவனைத் தொழுதார். நடனநாயகன் ஆகிய சிவபெருமான் அகத்தியரின் முன்னே தோன்றினார்.

**இடபமிசை வந்தவனைக் கும்பமிசை**
**வந்தமுனி யிறைஞ்சி யேத்தி**
**யடிபரவி நெடுமீனக் கொடியானை**
**யெரித்தவிழி யானே போற்றி**
**மடலவிழுங் கரியகுழல் கன்னியொரு**
**பாலிருக்கு மணியே போற்றி**
**பொடியணியுந் திருத்தோளிற் சிங்கவுரி**
**புனைந்தபரம் பொருளே போற்றி! 151**

(இ—ள்.) அகத்தியமாமுனிவர் காளை வாகனத்தில் தோன்றிய இறைவனை வணங்கிப் போற்றினார். மீன் கொடியையுடைய மன்மதனை எரித்த விழியையுடைய இறைவா வணக்கம்! மலர்களை அணிந்த கரிய கூந்தலையுடைய

உமாதேவியாரை இடப்பாகத்தில் கொண்ட மாணிக்கமணியே போற்றி! திருநீறணிந்த அழகிய தோளில் சிங்கத் தோலை அணிந்தருளிய பரம்பொருளே போற்றி!

### *கலிநிலைத்துறை*

**நீல கந்தார போற்றியென் றிறைஞ்சினா நிமலன்**
**சால நாம்வரந் தருகுவோ முரையெனத் தவத்தோ**
**னால மாந்தநீ தோன்றிய தொன்றுமே யமையும்**
**பாலி னுண்டபேர் வேறுமோ ருணவினைப்**
**பாரார்! 152**

(இ—ள்.) நீல கண்டத்தையுடைய இறைவா போற்றி! என்று அகத்தியர் வணங்கினார். சிராமலை நாதர் மகிழ்ந்து மிகுதியான வரங்களை நாம் உமக்குத் தந்தோம். சொல்வாயாக! என்று கூறினார். வட ஆலவிருட்சத்தின் அடியில் அமர்ந்து அருளிய நீங்கள் என்முன் தோன்றியது ஒன்றே போதும். காமதேனுவின் பாலை அருந்தியவர் வேறு உணவைப் பாரார் என்று அகத்தியர் கூறினார்.

இத்த லத்தினி லனுதின மிடைவிடா திருந்து
பத்தி யிற்புரி பூசையின் பலத்தினைப் பலிப்பா
யெத்த லத்திலே யிருந்தவ ருனைநினைத் திடினு
முத்த ராம்வர முதவுவா யென்னவு
மொழிந்தான்! 153

(இ—ள்.) இத்தலத்தில் இடைவிடாமல் பக்தியோடு பூசை செய்யும் பலத்தை அருளுங்கள். மேலும், வேறு எந்தத் தலத்தில் இருந்தாலும் உங்களை நினைத்தால் கூட அவர்களுக்கும் முக்தியடையும் வரத்தையும் அருளவேண்டும் என்று அகத்தியர் கூறினார்.

வரமி யாவையு மப்படி யருளியே மறைந்தான்
பிரம னாரண னறிவுறா தொருதழற் பிழம்பாம்
பரம காரணன் மறைதலு மலைவலம் பண்ணி
யான தரனையாற் பொதியமால் வரைமிசைவ
யமர்ந்தான்! 154

(இ–ள்.) அகத்தியர் கேட்டதற்கு இணங்க சிவபெருமானும் வரங்களை அருளினார். பின்னர் பிரம்மனும், திருமாலும் காணமுடியாத சோதி வடிவான இறைவன் மறைந்தார். அகத்தியர் சிவபெருமானுடைய ஆணையின்படி திரிசிராமலையை வலம் வந்து பின்னர் பெருமை பொருந்திய பொதியமலையின் மேல் அமர்ந்தார்.

**ஒரும லைத்தலை யிறங்கிமற் றொருமலை யுடையப்**
**பொருது மற்றொரு மலைதனை வணங்கிநீள் பொதிய**
**மரும லைத்தலை யமர்ந்திடுஞ் செயலெலாம் வகுத்தாம்**
**பொரும லைச்சிற கரிந்தவன் கதையினைப் புகழ்வாம்!155**

(இ–ள்.) முனிவர்களே! விந்தமலையை அடக்கி நேரிமலையின் உருவத்தை உடைத்து, திரிசிராமலையை வணங்கி உயர்ந்த சந்தனமரங்களின் மணம் வீசும் பொதியமலையில் அகத்தியமாமுனிவர் அமர்ந்த வரலாற்றை எல்லாம் சொன்னோம். இனி, மலைகளின் சிறகை அரிந்த இந்திரனுடைய கதையைச் சொல்கிறேன் என்று கவுதமமுனிவர் கூறினார்.

அகத்தியச் சருக்கம் முற்றும்.

# 4. இந்திரச் சருக்கம்

*கலிநிலைத்துறை*

முன்னர் நாளிலே யுளனொரு தானவர் முதல்வ
னன்ன வன்பெயர் நினைக்கினு முலகெலா மழியுஞ்
சின்ன பின்னமாய்ப் பொடிபடு மவன்பெயர் செம்பன்
பொன்ன கந்தனைத் திருப்புவன் கதையினாற்
புடைத்து 156

(இ–ள்.) முன்னாளில் தானவர்களுக்கெல்லாம் அரசனாகச் செம்பன் என்னும் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயரை நினைத்தாலே உலகமெல்லாம் அழிந்து சின்னாபின்னமாகிப் பொடிப் பட்டுப்போகும். அவன் மகாமேருவைக் கதையினால் அடித்துத் திரும்புகின்ற வலிமையை உடையவன்.

ஏழு வாரியுங் கடப்பனேழ் தலத்தையு மெடுப்ப
னேழு பாதலங் களிலுமுட் புகுதுவ னிரவி
யேழு மாவணி யிரதமேற் றிரிகுவ னெங்கு
மேழு நாகமு மேழுமே கங்களு மெடுப்பன்! 157

(இ–ள்.) அவன் ஏழு கடலையும் கடப்பவன். ஏழு உலகங்களையும் எடுப்பவன். உலகம் ஏழினுள்ளும் புகுந்து கொள்பவன். சூரியனுடைய ஏழு குதிரைகள் பூட்டிய தேரின் மேலேறி எங்கும் திரிபவன். ஏழுமலைகளையும் ஏழு மேகங்களையும் எடுக்கும் ஆற்றல் பெற்றவன்.

வாயு வானவன் விழியிலே வருணனை வகுப்பன்
றேயு வானவந் தன்னிலே பவனனைச் செறிப்ப
னாயி ரங்கணான் மனத்திலே கனலினை யடைப்பன்
பாயு மூவிலைச் சூலமென் மறலியைப் பதிப்பன்! 158

(இ–ள்.) வாயுதேவனின் கண்களில் வருணனைச் சேர்ப்பவன். அக்கினியின் முகத்தில் காற்றினை இணைப்பவன். இந்திரன் மனத்தில் நெருப்பை அடைப்பவன். மூவிலைச் சூலத்தின் மேல் எமனைப் பதிப்பவன்.

**ஈம வங்கியி னிணத்தனை நறுநெயா விறைத்துத்**
**தாம மானிடர் குடர்களைத் தருப்பையாச் சமைத்து**
**நாம வென்பினை யிந்தனத் தொகையதா நாட்டி**
**யோம வேள்விமுன் மடந்தையர் தமைவரைந் துவப்பன்!159**

(இ—ள்.) அந்தச் செம்பன் சுடுகாட்டில் நெருப்பிலே வேகும் பிணங்களின் நிணத்தை நெய்யாக ஓமாக்கினியில் இறைப்பவன். மாலைகள் அணிந்த மனிதர்களுடைய குடலைத் தருப்பையாக அமைப்பவன். எலும்பை விறகுகளாக நாட்டி ஓமக்குண்டத்தின் முன்னே வேள்வி செய்து மாதர்களை மணந்து கொள்பவன்.

**வெருவி லங்கவன் வேட்டையில் வதைத்திடும் விலங்கைப்**
**பொருவி றேவர்தம் முடிமிசை யெடுப்பது பொருந்தா**
**னிருடி மார்கண்மேற் சுமந்துவ னேதினா லென்னின்**
**மருவும் அங்கவர் சடிலமே சுமடு அதாம் வழக்கால் 160**

(இ—ள்.) அந்தச் செம்பன் வேட்டையாடி வதைக்கும் விலங்குகளை, தேவர்களின் தலைமேல் எடுக்காமல் முனிவர்களைச் சுமக்கவைப்பான். ஏனென்றால் முனிவர்கள் சடையே சும்மாடாக விளங்குவதால் அங்ஙனம் செய்தான்.

**செம்ப மென்பவன் கொடுமையை யிமையவர் திரண்டு**
**கும்ப மால்வரை யிந்திரன் றன்னோடு கூற**
**வம்ப ராமலர்த் தருநிழற் பொருந்திய மகவா**
**னம்பு ராசியிற் றுயில்பவற் கவையெலா மறைந்தான்! 161**

(இ—ள்.) அவனுடைய கொடிய செய்கையை, மலை போன்ற ஐராவதம் என்னும் வெள்ளையானையை உடைய இந்திரனிடம் தேவர்கள் நடந்ததைக் கூறினார்கள். மணம் நிறைந்த மலர்களை உடைய கற்பகநிழலில் தங்கும் இந்திரன், பாற்கடலில் துயிலும் திருமாலுக்கு இதனை எடுத்தியம்பினான்.

**இந்த வாசகங் கேட்டலு நெடியவ னிசைப்பான்**
**சிந்தி யாதுசெல் படைத்துணை யாகயாஞ் செல்வா**
**முந்தி யேகென வுரைத்தனன் புகர்ப்புழை முகத்துத்**
**தந்தி வாகனத் தேறினான் சதமகன் சமர்க்கு 162**

(இ—ள்.) இந்திரன் கூறியதைக் கேட்ட திருமாலும், எதைப் பற்றியும் சிந்திக்காமல் நீ சொல்வாயாக! உனக்குப் படைத் துணையாக யாம் வருக்கின்றோம் என்று கூறினார். புள்ளிகளும், துவாரங்களும் பொருந்திய கையுடைய யானையின் மீதேறி இந்திரன் போருக்குப் புறப்பட்டான்.

**போத காதிக ளுடனிவ னெழுந்தனன் பொருநற்**
**கோதி னாரவன் வரவெலா மவுணனுக் கொற்றர்**
**தீதுகா லமோ யிவர்க்கெனக் கனன்றுகண் சிவந்து**
**யாது தானவர் தானவர் கணத்தொடு மெழுந்தான்! 163**

(இ—ள்.) யானைகள் மற்றும் சேனைகளுடன் இந்திரன் போருக்கு வருகிறான் என்பதைச் செம்பனுக்கு ஒற்றர்கள் கூறினார்கள். அதனைக் கேட்டு, தேவர்களுக்கு இது கெட்ட காலமென்று கூறி, அத்தேவர்கள் தமக்கு கடினமாக எண்ணாமல் கண்சிவந்து போருக்கு எழுந்தனர்.

**குந்த மூவிலைச் சூலம்வா டோமரங் குனிவில்**
**பந்தி யாகவே நடந்தன தொடர்ந்தன பரித்தேர்**
**தந்தி யாதிக ணெருங்கின பதாகையின் சால**
**நந்து காகன முரசுவான் முழவுவிவை நான்ற 164**

(இ—ள்.) குந்தம், மூவிலைச்சூலம், வாளாயுதம், தோமரம், வில் ஆகியவற்றுடன் சேனைகள் வரிசையாக நடந்தன. தேர்ப்படை, யானைப்படைகளும் நெருங்கின. கொடிகளும் நிறைந்தன. சங்கம், காகனம், முரசு, பேரிகை ஆகிய வாத்தியங்கள் முழங்கின.

**கடலி ரண்டுபோ லிருவர்தம் படைகளுங் கலந்த**
**புடவி நீடுயிர்ப் பொழுதுக ளெனத்துகள் பொலிந்த**
**வடலை யாயின வுலகமற் றமரரு மங்கைப்**
**படையெ லாமிழந் தேகினா ரிந்திரன் பார்த்தான்! 165**

(இ—ள்.) இரண்டு கடல்களைப் போல் அச்சேனைகள் கலந்து போர் செய்தன. அப்போது உலகமும், உயிர்களும் புழுதிபடிந்த தோற்றமாகக் காட்சிக் கொண்டன. உலகங்கள் சாம்பலாயின. தேவர்கள் ஆயுதங்களை இழந்தார்கள். இந்திரன் அதனைக் கண்டான்.

**வான வர்க்கிறை வச்சிர மாகிய மலையைத்**
**தான வக்கட லளறுபட் டலைவுறச் சலித்தா**
**னான வக்கடல் கொடுத்தது நிணப்பெய ரமிர்தஞ்**
**சேன மற்றுள வலகையா மிமையவர் தெவிட்ட 166**

(இ—ள்.) தேவர் தலைவனாகிய இந்திரன் வச்சிராயுதமாகிய மலையைக் கொண்டு தானவர்களாகிய கடலைச் சேறுபட்டு அலையும்படியாகக் கடைந்தான். அப்போது அக்கடலில் எழுந்த நிணம் என்னும் அமிர்தத்தைப் பருந்துகளும், பிசாசுகளும் தெவிட்டும் படியாக உண்டன.

**செம்ப னென்பவ னும்பர்கோன் களிற்றெதிர் திரும்பிக்**
**கம்ப மால்களிற் றுச்சிமேற் புடைத்தனன் கதையா**
**லம்பு ராசிநேர் கருநிறத் தவுணன்மே லாக**
**வும்பர் நாயக னழுத்தினான் வச்சிரா யுதமே! 167**

(இ—ள்.) செம்பன் என்னும் அந்த அரக்கன், இந்திரனுடைய யானையை அதன் உச்சியின்மேல் கதாயுதத்தால் அடித்தான். கருங்கடல் போன்ற நிறமுடைய அந்தச் செம்பனின் மேல் இந்திரன் வச்சிராயுதத்தினால் அழுத்தினான்.

**வச்சி ரத்தினைப் பறித்தெறிந் தெழுந்தெதிர் மலைந்து**
**முச்சி ரத்துவே லெறிந்தன னிந்திரன் முகத்தின்**
**மெய்ச்சி ரத்தினிற் கதையினாற் புடைத்தனன் விழுந்தான்**
**பச்சி ரத்தமேற் பறந்தன சிவந்தன பரவை 168**

(இ—ள்.) அங்ஙனம் அழுத்திய வச்சிராயுதத்தைச் செம்பன், பறித்து எறிந்தான். இந்திரனுடனே போர் செய்து மூவிலை வேலாயுதத்தை இந்திரனுடைய முகத்தில் எறிந்தான். உடலிலும், தலையிலும் கதையினால் அடித்தான். இந்திரன் தரையில் விழுந்தான். பச்சை இரத்தம் பூமியின் மேல் பரவிற்று. அதனால் கடலும் சிவந்தது.

**அச்ச மாகிய விந்திரன் றுயரெலா மகற்றிப்**
**பச்சை மாயனும் படைகளும் வரங்களும் பலித்தான்**
**வச்சி ராயுதன் செம்பனை வருகென மலைந்திட்**
**டுச்சி வேரறப் பறித்துவெம் பகையெலா மொழித்தான்! 169**

(இ–ள்.) அச்சத்தை அடைந்த இந்திரனுடைய துயரத்தைத் திருமால் நீக்கினார். ஆயுதங்களையும், வரங்களையும் அளித்தார். அவற்றைப் பெற்ற இந்திரன் செம்பனை மீண்டும் போருக்கு அழைத்தான். போரில் செம்பனுடைய தலை அறுந்து போகும்படியாக அடித்துக் கொடிய பகைகளை முழுவதுமாக அழித்தான்.

*கலிவிருத்தம்*

**தானவ ரெனுங்களை தவிர்ந்து போனபின்**
**வானவ ரெனும்பயிர் வளர்ச்சி யாகிய**
**வூனமி லிந்திரற் குள்ள மீதிலே**
**ஞானம்வந் ததுமுதற் பழிக்கு நாணியே!** 170

(இ–ள்.) இவ்வாறு அரக்கர் என்னும் களை நீங்கிய பின் தேவர் என்னும் பயிர் வளர்ந்தோங்கியது. குற்றமில்லாத இந்திரன் மனத்தில் செம்பனைக் கொன்ற முதல் பழி நாணத்தைத் தந்தது. ஞானம் வந்து பொருந்தியது.

**வாசவ னிப்படி வருந்து நாளிலே**
**தேசிகன் குறுகியோர் தெளிவு கூறுவா**
**னாகமி றெக்கண கயிலை நாதனைப்**
**பூசனை புரியிவை பொடிபட் டேகுமே!** 171

(இ–ள்.) இப்படி பழியால் நாணிய இந்திரனை வருத்தும் பொழுது, அவனுடைய ஆச்சாரியன் வந்தார். இந்திரா நீ தெக்கண கயிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வணங்கிப் பூசை செய்யுமாறு வலியுறுத்தினார். உன் பழியும், நாணமும் பொடியாகப் பட்டுப் போகுமென்றும் தெளிவாக எடுத்துக் கூறினார்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**என்று மொழிந்தா னிந்திரனு**
**மிமையோர் குருவின்மெய் மொழியாற்**
**சென்று கயிலைச் சிவதடத்திற்**
**படிந்தா னிறையைச் சேவித்தான்**

**குன்றி னிகராய் வருவினையுங்**
**குன்றி யெனவே குன்றியதா**
**லன்று முதலாத் துயர்களைதல்**
**பொன்போ லிலையென் றறிந்தனமே! 172**

(இ-ள்.) அதனைக் கேட்ட இந்திரன் தெக்கண கயிலைக்குச் சென்றான். சிவதடாகத்தில் மூழ்கினான். இறைவனைப் பூசித்தான். அதனால் மலை போன்ற அவனுடைய வினை குன்றுமணிப் போல் குறைந்தது. அன்றுமுதல், துன்பத்தைப் போக்குவதில் பொன் போன்ற இத்தலத்தைத் தவிர வேறு தலமில்லை என்று யாம் அறிந்து கொண்டோம் எனத் தேவர்களுக்கு இந்திரன் எடுத்துக் கூறினான்.

### *கலிவிருத்தம்*

**துள்ளிய செம்பனைத் தொலைத்த வான்பழி**
**தள்ளுவான் பொன்னுரைத் திட்ட தன்மையால்**
**வள்ளலைத் திரிசிரா மலையிற் போற்றினான்**
**வெள்ளிவெண் கயிலையான் விடையிற்**
**றோன்றினான்! 173**

(இ-ள்.) ஆணவத்தால் துள்ளிய செம்பனைக் கொன்ற பழி நீங்கும் பொருட்டு வள்ளலாகிய சிவபெருமானைத் திரிசிரா மலையில் இந்திரன் வணங்கித் துதித்தான். அப்பொழுது வெண்மையான வெள்ளி மயமுள்ள கயிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் தோன்றினார்.

**பொரும்பழி நீக்கினோம் வினையும் போக்கினோம்**
**விரும்பிய தளித்திட விளம்பு கென்றன**
**னிரங்கியிம் மலைதொழு மெவர்க்கு மக்கணத்**
**தரந்தையும் பாவமு மகல வேண்டுமே! 174**

(இ-ள்.) இந்திரனே! நீ செம்பனைக் கொன்ற பழியையும், உன்னுடைய தீவினையையும் நீக்கினோம். நீ விரும்பியதை அளிக்கின்றோம் என்று சிவபெருமான் கூறினார். இந்திரன் பெருமானே! அன்புடன் இம்மலையைத் தொழுகின்றவர்க்கு அக்கணத்திலேயே துன்பமும் பாவமும் நீங்கவேண்டும்.

**கன்னியிற் பூரணை கலந்த நாளிலே**
**மன்னிய சிவதட வனத்தின் மூழ்கியே**
**துன்னிய துரோணவெண் மலரைச் சூட்டுவா**
**ரந்நிலை சிவகதி யடைய வேண்டுமே! 175**

(இ-ள்.) கன்னியாகிய புரட்டாசி மாதத்தில் பூரணை என்னும் திதி பொருந்திய நாளில் இங்குள்ள சிவதடாகத்தில் மூழ்கி, வெண்ணிறமான தும்பை மலரை நின் திருமேனியில் சூட்டுகின்றவர்கள் அப்போதே சிவகதியை அடைய வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

**இப்படி யிந்திர னியம்பி யேத்தினா**
**னப்படி யாகவென் றரனுங் கூறினான்**
**மைப்படர் கயிலைமால் வரையி னீங்கியே**
**கைப்படை யிந்திரன் களிற்றிற் போயினான்! 176**

(இ-ள்.) அப்படியே ஆகக் கடவது என்று சிவபெருமானும் அருளிச் செய்தார். பின்னர் மேகங்கள் படர்ந்த தெக்கண கயிலைமலையிலிருந்து புறப்பட்டு இந்திரன் ஐராவதம் என்னும் யானை மேலேறித் தனது கற்பகநாட்டுக்குச் சென்றான்.

இந்திரச் சருக்கம் முற்றும்

## 5. தீர்த்தச் சருக்கம்

### *கலிவிருத்தம்*

**கோதம னிந்திரன் கதையைக் கூறலு**
**மாதவ ரனைவரும் வணங்கி வாழ்த்தியே**
**பூதர குமரியப் பொருப்பி லெய்திய**
**தியாதுகொ லெனமுனி யியம்பன் மேயினான்! 177**

(இ—ள்.) கவுதமமுனிவர் இந்திரனுடைய வரலாற்றைக் கூறி முடித்ததும், மாமுனிவர்கள் எல்லோரும் அவரை வணங்கி உமையம்மை அந்தத் திரிசிராமலையை அடைந்ததற்குக் காரணம் யாது? என்று கேட்டனர். கவுதமமுனிவர் அதனைக் கூறத் தொடங்கினார்.

**முக்கணன் றனையுமை முன்னோர் நாளிலே**
**மிக்கதெவ் வரையெனத் தனிவி னாவினா**
**ணக்கனு மிறைவியே நடுவி னெய்திய**
**தெக்கண கயிலையே சிறப்பென் றோதினான்! 178**

(இ—ள்.) ஒருமுறை உமாதேவியார் சிவபெருமானை மலைகளுக்குள்ளே மேலானது எதுவென்று, தனித்திருக்கும் போது கேட்டார். சிவபெருமானும் உமையே திருக்காளத்தி மலைக்கும், திருக்கோண மாமலைக்கும் நடுநாயகமாக விளங்கும் தெக்கணகயிலை மலையே சிறந்தது என்று கூறினார்.

**அன்னவா சகஞ்சொல விரும்பி யம்பிகை**
**யென்னகா ரணமதோ விமய நீங்கியே**
**புன்னைமா மலர்ப்பொடி பொதிந்து பொன்மலை**
**வன்னமாந் திரிசிரா மலையை மேவினாள்! 179**

(இ—ள்.) சிவபெருமான் அவ்வாறு கூறவும் உமையன்னைக்கு அம்மலைமேல் விருப்பமுண்டாயிற்று. என்ன காரணத்தினாலோ இமயமலையை விட்டு நீங்கிப் புன்னை மலர்களின் கொடியினாலே பொன்மலையின் நிறம் கொண்ட சிராமலையை அடைந்தார்.

**விரும்பினா லவ்விடை முழுக வேண்டியே**
**பொருப்பெலாந் தேடினாள் பொய்கைக் காண்கிலா**
**ளருப்புலா முலையவ ளதனை வேண்டியே**
**பருப்பதா லயனிரு பாதம் போற்றினாள்! 180**

(இ–ள்.) உமையன்னை ஆசையோடு அங்குச் சென்று நீராட விரும்பினார். ஆனால் அந்தமலை முழுவதும் தேடிப் பார்த்தார். பொய்கை எதுவும் காணப்படாததால் தாமரை போன்ற மார்பினையுடைய உமாதேவியார் இறைவனின் திருவடிகளைத் தொழுதார்.

**வெங்கரா சலவுரி தரித்து வெண்பொடி**
**யங்கார கமதென வணிந்து வெண்மதி**
**பொங்கரா முடிமிசைப் புனைந்த புங்கவா**
**சங்கரா விதனிடைத் தருக தீர்த்தமே! 181**

(இ–ள்.) கொடிய யானையின் தோலையும், வெண்மையான திருநீற்றையும், வெண்மையான நிலவையும், பாம்பையும் அணிந்தருளிய புங்கவனே! சங்கரனே! இவ்விடத்தில் தீர்த்தத்தை அருள வேண்டுமென்று உமையம்மை வேண்டினார்.

**மச்சமாய்க் கமடமாய் வராக மாகிய**
**வச்சுதா நந்தனுக் கரிய வண்ணலே**
**விச்சையாய் நாதமாய் விந்து வாகிய**
**சச்சிதா நந்தனே தருக தீர்த்தமே! 182**

(இ–ள்.) மேலும் மீன், ஆமை, பன்றி வடிவம் கொண்ட திருமாலுக்கு அரிதாகிய அமலோனே! வித்தை, நாதம், விந்து ஆகிய தத்துவங்களாக விளங்கும் சச்சிதானந்த மூர்த்தியே! இவ்விடத்தில் அடியாளுக்குத் தீர்த்தத்தை அருள வேண்டு மென்று உமையம்மை வேண்டினார்.

**ஆதியா னவனரு வான வாணியா**
**லோதுவான் கங்கைநீ ருனக்கு வேண்டிய**
**தேதுகா ரணமென விறைவி மூழ்கியான்**
**போதினா லருச்சனை புரிய வென்றனள்! 183**

(இ–ள்.) ஆதியாகிய சிவபெருமான் அசரீரியாக உமாதேவியே! உனக்குக் கங்கை நீர் எதற்காக? என்று வினவினார். அதற்கு உமாதேவியார் அந்தக் கங்கை நீரில் நான் மூழ்கி, மலர்களால் உம்மை வழிபடுவதற்கு என்றார்.

**தந்தன மெனச்சொலிச் சடையிற் கங்கையை**
**யந்தர மிசையினும் விடுக்க வந்நதி**
**யுந்திய கடலெலா மூர்வ தாமென**
**வந்தது பிரளய வனம தாகவே! 184**

(இ–ள்.) சிவபெருமானும் அப்படியே தந்தோம் என்று அருள்செய்து தன் சடையில் இருக்கின்ற கங்கையை ஆகாய மார்க்கமாக விடுவித்தார். அந்தக் கங்கை நதியானது, நதிகளையுடைய கடலையெல்லாம் விழுங்கிவிட்டு வருவதைப் போல உலகம் அழியும் காலத்தில் வருகின்ற நீர்ப்பெருக்காகவே வந்தது.

**சங்கென மிதந்தனன் சலத்திற் சந்திரன்**
**வெங்கதிர் பங்கயம் போல மேவிய**
**தங்குள வரையெலாங் கமட மாயின**
**மங்குலுஞ் சைவல வனங்க ளானவே! 185**

(இ–ள்.) அதன்மேல் சந்திரன் சங்கைப் போல் மிதந்தான். வெப்பமான கதிர்களையுடைய கதிரவன் செந்தாமரைப் போல மிதந்தான். மலைகள் எல்லாம் ஆமைகளைப் போலாயின. மேகங்கள் கொடிப்பாசியின் காடுகள் போல ஆகின.

**உலகெலாந் தெளிவுற வூழி காலமென்**
**றலகிலா வுயிர்களு நடுங்க வாயிரந்**
**தலையரா வசைவுறத் தறுகட் டீவிழிக்**
**குலமதா சலம்வீழ வதுகு தித்ததே 186**

(இ–ள்.) உலகங்கள் எல்லாம் தெரியும்படியாகவும், ஊழிக்காலம் வந்து விட்டதென்று அளவற்ற உயிர்கள் நடுங்கும் படியாகவும், ஆயிரம் தலைகளையுடைய ஆதிசேடன் அசையும் படியாகவும், அஞ்சாமையும் தீயை ஒத்த கண்களையும் உடைய அட்டதிக்கு மதயானைகள் விழும்படியாகவும் அந்தக் கங்காநதியானது பூமியில் குதித்தது.

மண்ணிடை யதுவரும் வரவி னானுதற்
கண்ணினன் மணிவிழிக் கடைசி வந்தது
பெண்ணியல் கங்கையும் பெரிதும் மஞ்சியே
புண்ணிய தீர்த்தமாய்ப் பொருப்பை யுற்றதே! 187

(இ–ள்.) பூமியின் மீது இவ்வாறு வருகின்ற கங்காநதியை நோக்கிய சிவபெருமானுடைய அழகிய கடைக்கண் சிவந்தது. அதனைக் கண்டு பெண்மையுடைய அந்தக் கங்காநதியும் அஞ்சிப் புண்ணியம் பொருந்திய தீர்த்தமாகத் திரிசிராமலையை அடைந்தது.

அங்கது வடதிசை யருகி லேசிவ
கங்கையென் றொருபெயர் காண நின்றது
பொங்குமத் தடத்திலோர் புறத்தி லேசிவ
சங்கரன் றோன்றினான் சுயம்பு வாகவே 188

(இ–ள்.) அந்தத் தீர்த்தம் திரிசிராமலையின் வடதிசையின் அருகில் சிவகங்கை என்ற ஒப்பற்ற பெயரைப் பெற்று யாவரும் காணும்படியாக விளங்கியது. பொங்குகின்ற அந்தத் தடாகத்தின் ஒரு புறத்தில் சிவபெருமான் சுயம்புவாகத் தோன்றினார்.

நந்துறை தடத்திலே நவ்வி மூழ்கினாண்
மந்தர கிரிதொழும் வரையின் மேவினாள்
சந்தத மிப்படித் தவஞ்செய் நாளிலோ
ரந்தணன் போலவே யமலன் றோன்றினான்! 189

(இ–ள்.) சங்குகள் வாழும் அந்தச் சிவகங்கையில் உமையன்னை நீராடினார். மந்தரமலையும் வணங்கும் திரிசிராமலையை அடைந்தார். சதாகாலமும் இடைவிடாமல் தவம் மேற்கொண்டார். ஒருநாள் அந்தணரைப் போல சிவபெருமான் தோன்றினார்.

வெள்ளிய பஞ்சினும் விளர்த்த குஞ்சியன்
றள்ளிய நடையினன் றளர்ந்த கோலின
னள்ளிய மூப்பின னழகு மேனியன்
றுள்ளிய வெயரின னாகிச் சொல்லுவான்! 190

(இ—ள்.) பஞ்சைவிட வெண்மையான தலைமுடியையும், தளர்ந்த நடையையும், கையில் கோலையும், அள்ளி எடுக்கும்படியான மூப்பினையும், அழகான மேனியையும், வேர்வைத் துளிகளையும் உடையவராகி வந்த சிவபெருமான் உமாதேவியை நோக்கிக் கூறலானார்.

**அனிச்சமுந் திறையிடு மழகு மேனியுங்**
**கனற்செறி தவத்தினாற் கருக வேண்டுமோ**
**நினைத்தது தருகுவா னிமல னித்தவந்**
**தனிச்சிலை நுதலியே தவிர்க வென்றனன். 191**

(இ—ள்.) அனிச்சமலரும் வணங்கித் திரையிடுகின்ற அழகுள்ள உன் திருமேனி கனல் நெருங்கிய தவத்தால் கருக வேண்டியதில்லை. நீ நினைத்ததைச் சிவபெருமான் கொடுப்பார். எனவே, வில்லைப் போன்ற நெற்றியை உடையவளே இந்தத் தவத்தை விலக்கிக் கொள்வாயாக! என்று கூறினார்.

**ஓதியத் தவத்தினை யொழிந்து சிந்தையில்**
**வேதிய னருச்சனை புரிதல் வேண்டினாள்**
**கோதற மாலினி குறிப்பி னல்கினாள்**
**சோதியு மறைந்துபின் விடையிற் றோன்றினான்!192**

(இ—ள்.) அன்னம் போன்ற உமாதேவி தவத்தை நிறுத்திப் பூசனைப் புரிய விரும்பினாள். மனோபாவனையால் ஞானப் பூசனை செய்தாள். சிவபெருமான் காளை வாகனத்தில் தோன்றினார்.

**எற்றினா னெதிர்நடந் திறைவி யெய்தினாள்**
**போற்றினா ளருந்தவம் புரிந்த வெந்துய**
**ராற்றினான் றிருமுடி யைந்தி னான்மதிக்**
**கீற்றினா னவளுடன் கிளத்த லாயினான்! 193**

(இ—ள்.) சிவபெருமான் அருகில் சென்று உமையம்மை வணங்கினாள். கடுமையான தவத்தைச் செய்த களைப்பைச் சிவபெருமான் நீங்கினான். பின்னர் உமாதேவிக்குக் கூறலானார்.

**பொருசிலை நுதலியே புகன்ற யாவையுந்**
**தருகுவ முரையெனச் சயில நாயகி**
**யுரைசெயு மித்தலத் துள்ள யாவையு**
**மருவுமென் பெயரினால் வழங்க வேண்டுமே! 194**

(இ–ள்.) போர் வில்லைப் போன்ற நெற்றியையுடைய உமையவளே! நீ சொல்லுகின்ற யாவையும் தருகின்றோம். சொல்வாயாக! என்றார். பெருமானே! இத்தலத்திலுள்ள அனைத்தும் என் பெயரால் வழங்கவேண்டும்.

**ஆதியே யிறுதியே யாதி பூரமென்**
**றோதிய நாளிலே நவமி யோங்கினாற்**
**றீதற வேவலஞ் செய்த பேர்க்கெலாஞ்**
**சோதியே நல்வரஞ் சொரிதல் வேண்டுமே! 195**

(இ–ள்.) ஆதியாய் உள்ள சித்திரை மாதத்தின் முடிவிலும், முதலிலும் பூரநட்சத்திரத்தில், நவமி என்னும் திதி உயர்ந்து வந்தால் அப்போது குற்றம் அற, மலை வலம் செய்தவர்களுக்கு எல்லாம் நீங்கள் நல்ல வரங்களை அருளவேண்டும் என்று உமாதேவியார் சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டார்.

**பூமழை யிமையவர் பொழிந்து போற்றினார்**
**மாமலர் முடிமிசை மணத்தை வீசிய**
**தேன்மலி மடந்தையைத் தெய்வ நாயகன்**
**கோமள மட்டுவார் குழலி யென்றனன்! 196**

(இ–ள்.) அப்பொழுது தேவர்கள் மலர் மாரி பொழிந்து போற்றினார்கள். அம்மலர்கள் அன்னையின் முடியின் மேலுள்ள இயற்கை மணத்தையும் பெற்று சிறப்புற்றன. தெய்வநாயகனாகிய சிராமலைநாதர் அன்னையை இளமையான மட்டுவார்க்குழலி என்று அருளி அழைத்தார்.

**விடைமிசை யுலவிய விமல னார்தம**
**திடமிசை யிருந்தன ளிமய நாயகி**
**சடைமிசைப் பிறங்கிய தாம நாயகி**
**கடலென வொருசிவ கங்கை யாயினாள்! 197**

(இ–ள்.) காளைவாகனத்தின் மேல் எழுந்தருளிய சிராமலை நாதருடைய இடப்பக்கத்தில் உமாதேவியார், இறைவனுடைய சடையின் மேல் விளங்கிய கங்காதேவி கடல் போன்று சிவகங்கை என்னும் தீர்த்தமாயினாள்.

**ஒருதுளி பருகினா லுடலி னோயறு**
**மிருதுளி பருகினார்க் கின்மை யின்மையா**
**மருளுடன் றுளிகண்மூன் றருந்தி னாலவர்**
**கருதிய பொருளெலாங் கரத்திற் கூடுமே ! 198**

(இ–ள்.) அந்தச் சிவகங்கையிலுள்ள நீரில் ஒரு துளி அருந்தினால் உடல் நோய் அனைத்தும் நீங்கும். இரண்டு துளிகள் அருந்தினால் வறுமை நீங்கும். அருளுடன் மூன்று துளிகள் அருந்தினால் அவர்கள் நினைத்த பொருள்களெல்லாம் கைவரப் பெறுவர்.

**சிவநதி யெனச்சொலிற் றேவ ராகுவர்**
**சிவநதி சிவநதி யென்றுச் செப்பினாற்**
**பவமறும் பலப்படப் பகர்ந்த பேர்க்கெலா**
**மவனியிற் பரகதி யடைத லாகுமே! 199**

(இ–ள்.) ஒருமுறை சிவநதி என்று சொன்னால் அவர்கள் தேவர்கள் ஆவார்கள். இருமுறை சிவநதி என்று கூறினால் பிறவிப்பிணி நீங்கும். பலமுறை கூறுபவர்க்கு இவ்வுலகிலேயே முக்தி கிடைக்கும்.

**தடத்தினை வலஞ்செய்வார் தம்மை வானுல**
**கிடத்தினில் வலஞ்செய்வா ரிந்தி ராதிய**
**ரடுத்ததின் மூழ்கியவ் வமிர்தங் கொண்டபேர்**
**விடத்தினை யருந்திய விமல னாவரே! 200**

(இ–ள்.) அந்தச் சிவகங்கை என்னும் தடாகத்தை வலம் வருபவர்களை இந்திராதி தேவர்கள் வலம் வருவார்கள். அதில் மூழ்கி, அந்த நீரை உண்டவர்கள் நஞ்சையுண்டு அருளிய சிவபெருமானுக்குச் சமம் ஆவார்கள்.

அத்தட மூழ்கினார்க் கலகை நோயற
மெத்திய பகையற வினையின் வேரறப்
புத்திர செல்வமும் புகழும் வீரமுஞ்
சித்தியு முத்தியுஞ் சேர்த றிண்ணமே! 201

(இ—ள்.) அந்தத் தடாகத்தில் நீராடுகின்றவர்களுக்குப் பேய்கள், பகை, வினைகள் ஆகியவற்றால் வரும் துன்பங்கள் நீங்கும். குழந்தைச் செல்வத்துடன் புகழும், வீரமும், சித்திகளும், முக்தியும் உண்டாவது உறுதியாகும்.

நீணலம் புகழுமந் நீரின் மூழ்கினா
லாணவ மெனுமுயி ரழுக்க நீங்கிடும்
பாணியி னொருதுளி பயங்கொண் டார்தமைக்
காணிலும் பயங்கொளுங் கடிய காலனே! 202

(இ—ள்.) உலகம் புகழும் அந்தச் சிவகங்கையில் முழுகினால், ஆணவமாகிய உயிரின் அழுக்கு அகன்று தூய்மையடையும். கையினால் ஒரு துளி நீரை எடுத்து உட்கொண்டால் அவர்களைக் கண்டு கொடிய எமனும் அஞ்சுவான்.

*கலிநிலைத்துறை*

சத்த மாதரு மத்தடம் படிந்துமா தவத்தாற்
பத்தி யாலர னருளினாற் பெருநலம் படைத்தார்
சித்தர் சாரண ரிராக்கத ரியக்கர்கந் திருவர்
முத்த ராயினா ரத்தடந் தன்னிலே மூழ்கி. 203

(இ—ள்.) சப்தமாதர்களும் சிவகங்கையில் மூழ்கி, தவமும் பக்தியும் செய்து சிவபெருமானின் அருளால் பெருகிய நலத்தை அடைந்தனர். சித்தர்களும், சாரணர்களும், அரக்கரும், இயக்கரும், கந்தர்வர்களும் அந்தத் தீர்த்தத்தில் மூழ்கி முக்தர்கள் ஆனார்கள்.

அரவ மானது மதுகர மானது மந்தத்
திரிசி ராமலைத் தடத்துமுற் றத்தினாற் செறிந்து
பரவி மாதவம் புரிந்தர னருச்சனை பண்ணிப்
பிரிவி லாதிறை காரணா திபர்பதம் பெற்ற 204

(இ–ள்.) பாம்பும், வண்டும் சிவகங்கையில் நீராடித் திரிசிராமலை இறைவனை வணங்கி, தவம் செய்து, சிவ அருச்சனை செய்து, அந்த இறைவன் அருளால் துவாரபாலகராகப் பதவி பெற்றன.

கழுகு நாயகன் முன்னமத் தடத்திலே கலந்து
முழுகி நாயக னருளினா லருந்தவ முடித்தா
னழகு நாயகி நாயக னினிதெழுந் தருளி
மழைய தாமென வரமெலாம் பொழிந்தனன்
மறைந்தான்! 205

(இ–ள்.) கழுகுகளின் தலைவன் சடாயு சிவகங்கையின் தீர்த்தத்தில் மூழ்கி சிராமலைநாதரின் அருளால் அரிய தவத்தை முடித்தான். இறைவனும் தன் அழகிய நாயகியுடன் எழுந்தருளி அந்தச் சடாயுவிற்கு மழைபோல வரங்களை எல்லாம் கொடுத்து அருளினார்.

எழுவ ராகிய முனிவரத் தடத்திலன் பெய்தி
முழுகி மாதவ முயன்றுநல் லருச்சனை முடித்தார்
விழைவ தேதென வினவினா னரனவர் விரித்தார்
தழுவி மேனியி லடக்கினான் கலந்தனர்
தவத்தோர். 206

(இ–ள்.) சப்தமுனிவர்கள் சிவகங்கையில் முழுகி மாதவம் செய்து சிவ அருச்சனையும் முடித்தார்கள். அப்பொழுது இறைவன் தோன்றி அவர்கள் விரும்பியது யாது? என்று கேட்டார். பின்னர் அவர்கள் வேண்டியவாறு அவர்களைத் தழுவி தன் திருமேனியில் அடக்கிக் கொண்டார். அவர்களும் சாயுச்சிய பதம் அடைந்தார்கள்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

நன்றுடையா னெனவுலகோ ரெடுத்துரைக்கு
மொருதீர்த்த நவம தாக
வென்றுளதா யிருக்குமது குணதிசையில்
விளங்குமதி லுவந்து மூழ்கிக்

குன்றுடையா னடிதொழுவார் பிறப்பகலு
மிறப்பகலுங் கொடுமை தீருந்
தென்றிசையிற் றீயதிலா லெனுந்தீர்த்த
மளிக்குநெடுஞ் செல்வந் தானே! 207

(இ. ள்) நன்றுடையான் என்று உலகம் போற்றும் ஒரு தீர்த்தம் கிழக்கில் விளங்கும். அதில் மகிழ்ந்து நீராடி சிராமலைநாதரின் திருவடியை வணங்கும் போது பிறப்பும், இறப்பும் பாவங்களும் தீரும். அம்மலைக்குத் தெற்கில் உள்ள தீயதிலான் என்னும் தீர்த்தத்தில் நீராடி இறைவனை வணங்குவோர்க்கு அத்தீர்த்தம் நிறைந்த செல்வத்தை அளிக்கும்.

மனத்தின்வரு வினைகளெலாம் விதிதடத்தால்
லகலுமன வாக்கி னாலே
கனத்தவினை யொழியும்வட திசையின்வரு
கங்கையினாற் காயம் வாக்கா
னினைத்தமையா லடைந்தவினை குணத்திசையிற்
றடமூழ்கி னீங்கு மிந்த
வெனைத்து மகன் றறம்பெருகுந் தீயதிலா
னெனுந் தடத்தி னெய்து வோர்க்கே! 208

(இ–ள்.) மனத்தில் நினைந்து வருகின்ற வினைகள் எல்லாம் பிரம்மாவுடைய தீர்த்தத்தால் நீங்கும். மனம், வாக்கு ஆகியவற்றால் செய்த வினைகள் சிவகங்கையால் அழியும். மனம், வாக்கு, காயம் ஆகியவற்றால் அடைந்த வினைகள் நன்றுடையான் தீர்த்தத்தால் அகலும். தீயதிலான் எனும் தீர்த்தத்தால் தருமம் வளரும்.

தீர்த்தச் சருக்கம் முற்றும்.

# 6. திருநகரச் சருக்கம்

*எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**இக்கதை பலவு முனிவர்தஞ் செவியி**
**லினியவா ரமிர்தென விசைத்த**
**மெய்க்கவு தமனை வணங்கிமா தவர்கள்**
**வினவுவா ரனகமா தவனே**
**தெக்கண கயிலை மலைசிரா மலையாந்**
**திருப்பெயர் படைத்திடு சிறப்பை**
**முக்கண னருளான் மொழிகவென் றுரைத்தார்**
**முனிவனு மவர்க்கிவை மொழிவான்! 209**

(இ-ள்.) அமிர்தம் போல இவற்றைக் கூறிய கவுதம முனிவரை முனிவர்கள் வணங்கினார்கள். தெக்கணகயிலை மலைச் சிராமலையாகப் பெயர் பெற்றதைச் சிவபெருமான் அருளால் எங்களுக்குக் கூறவேண்டுமென்று கேட்டார்கள். கவுதமமுனிவரும் அவர்களுக்கிணங்க கூறத் தொடங்கினார்.

*கலிநிலைத்துறை*

முன்ப ரக்கருந் கதிபதி யிராவணன் முனிவாய்த்
தென்பு லத்துறை திரிசிரன் றூடணன் கரனே
என்ப வர்க்கருஞ் சிறப்பளித் திம்மலை யிடத்தின்
வன்பு பற்றிய பகைதடுத் திடும்படி வைத்தான். 210

(இ-ள்.) முன்பு அரக்கர் அரசனாகிய இராவணன் கோபங் கொண்டு தென்திசையில் இருந்து காவல்புரியும்படி, திரிசிரன், தூடணன், கரன் என்பவர்களை நியமித்தான். அவர்கள் இருந்த தெக்கண மலையிடத்திலிருந்து பகைவர்களைத் தடுத்துக் காவல் புரிந்தனர்.

**கரனி ருந்துறை கொடுமுடி யவன்பெயர் காட்டும்**
**பெருகு தூடண னுறைவிட மவனது பெயராந்**
**திருசி ராவதி னுறைவதாற் றிரிசிரா மலையா**
**மிருவர் பேரொழித் தொருவன்பே ராகவே**
**யிலங்கும். 211**

(இ—ள்.) கரன் இருந்த மலை அவனுடைய பெயரால் விளங்கியது. தூடணன் இருந்த இடம் அவன் பெயரைப் பெற்றது. திரிசிரன் இம்மலையில் இருந்ததினால் இது 'திரிசிரா' மலையாயிற்று. ஆதலால் மற்ற இருவருடைய பெயரும் அழிந்து திரிசிரனுடைய பெயராலே இந்த மலை விளங்கிற்று.

தூட ணன்கர விருவரு மிரும் பகை தொலைத்து
வீட ணன்றிருத் தமயனங் கழைக்கவவ் விறலோன்
மாட ணைந்தன ரிராவணன் றனதனு மதியா
லேட னைந்ததார்த் திரிசிரன் பின்னுமங் கிருந்தான். 212

(இ—ள்.) தூடணன், கரனும் பெரிய பகைகளை அழித்தார்கள். பின்னர் அவர்களை இராவணன் அழைத்துக் கொண்டான். மாலை அணிந்த திரிசிரன் இராவணனுடைய அனுமதியினால் தொடர்ந்து தெக்கணகயிலையில் வசித்து வந்தான்.

துண்ட வெண்பிறை முடியனை யனுதினந் தொழுது
மண்ட பங்களு நவமணி குயிற்றிய மதிலுங்
கொண்ட றங்கிய கோபுரச் சிகரமுங் குழுமி
யண்ட ரின்புற மயன்சமைத் திடும்படி யமைத்தான்! 213

(இ—ள்.) பிறையணிந்த சிவபெருமானைத் தினமும் வணங்கினான். மண்டபங்கள் நவமணிகளால் பதிக்கப்பட்ட மதில்களாகவும், மேகங்கள் தங்கிய சிகரங்களுடைய கோபுரங்கள் ஆகியவற்றால் மயனால் உருவாக்கித் தேவர் கூட்டமும் இன்பம் பெறும்படியாகச் செய்தான்.

தந்தி யீருரி போர்த்தவறீ காலயஞ் சமைத்திட்
டந்த மால்வரைக் கீழொரு வளம்பதி யமைத்து
மந்த ராசல மெனும்படி யாமியம் வகுத்துக்
கந்த மாதன வரையென வெயில்களுங் கண்டான்! 214

(இ—ள்.) திரிசிரன் யானைத் தோலைப் போர்த்திய சிவபெருமானுக்கு அழகிய ஆலயம் கட்டினான். பெருமை பொருந்திய மலையின் கீழ் வளம் பொருந்திய ஒரு நகரத்தையும் உருவாக்கினான். மந்தரமலை போல் அரமியங்களை உண்டாக்கினான். கந்தமாதனப் பருவத்தைப் போல் மதில்களும் கட்டினான்.

பைய ராமணிக் கோபுரத் தலந்தொறும் பவளத்
துய்ய நீள்கொடி நிகரென விரிந்திடு சுடர்க
ளைய னாலயம் வலஞ்செய விறங்குதற் கமரர்
செய்ய நூலினாற் சமைத்திடு மேணிபோற் றிகழும் 215

(இ—ள்.) படத்தையுடைய நாகரத்தினங்கள் பொருந்திய கோபுரங்களின் மீதுள்ள பவளத்தின் ஒளியானது நீண்ட கொடியைப் போல் தோன்றியது. அது இறைவனுடைய ஆலயத்தை வலம் செய்ய தேவர்கள் இறங்குவதற்காகக் கட்டிய நூல் ஏணியைப் போன்று விளங்கிற்று.

*கலிவிருத்தம்*

கொடிச்சிய ரணிமலர்க் குறிஞ்சிச் சேரளி
யிடைச்சியர் குழற்றள விதழின் மேவுமே
கடைச்சிய ரெறிதரு கரும்பின் முத்தினாற்
புடைச்செறி கடற்கரைப் புள்ளு நீங்குமே! 216

(இ—ள்.) குறிஞ்சி நிலப்பெண்களாகிய கொடிச்சியர்களின் கூந்தலில் சூடிய மலர்களில் பொருந்திய வண்டுகள், முல்லை நிலப் பெண்களாகிய கூந்தலில் உள்ள மலர்கள் முல்லைப் பூக்களில் பொருந்துகின்றன. மருதநிலப் பெண்களாகிய கடைச்சியர் எறியும் கரும்பு முத்துகளால் கடற்கரையில் நெருங்கி இருக்கின்ற நெய்தல் நிலப் பறவைகள் நீங்குகின்றன.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

பரவைதான் பொய்கை யாகப்
பதுமமே தரணி யாக
மரையினு ளிதழ்க ளெல்லா
மற்றுள தலங்க ளாக
விரைகமழ் பொருட்டு செந்நெல்
விளைமழ நாட தாகத்
திருமக ளாகித் தோன்றுந்
திரிசிராப் பள்ளி தானே! 217

(இ—ள்..) இவ்வுலகைச் சூழ்ந்துள்ள கடலே தடாகமாகவும், உலகம் தாமரைப் பூவாகவும், தலங்கள் யாவும் அந்த மலரின் இதழ்களாகவும், செந்நெல் விளைவிக்க மழநாடு அந்தத்

தாமரையின் மணம் மிகுந்த பொருட்டாகவும், அப்பொருட்டில் வசிக்கின்ற திருமகளாகவும், திரிசிராமலைநகரம் விளங்கு கின்றது.

*கலிவிருத்தம்*

**காம ரம்பொற் கழனி மருங்கெலாந்**
**தாம ரைக்கிடை தண்கயல் பாயுமே**
**ரேம டுத்த கடைச்சியர் செவ்விய**
**மாமு கத்தினும் வாள்விழி பாயுமே! 218**

(இ–ள்.) யாவரும் விரும்பும் அழகிய வயல்களின் பக்கத்தில் உள்ள தாமரைக் குளத்தின் மலர்களின் மீது வயலிலுள்ள குளிர்ந்த மீன்கள் பாய்கின்றன. அதைப்போன்றே அழகிய தாமரை போன்ற கடைச்சியருடைய முகங்களில் உள்ள கண்களாகிய மீன்களும் பாய்கின்றன.

**ஆனு மேதியு மார்தலி லம்புயம்**
**பானல் சிந்தும் பரிமளத் தேறலாற்**
**சோனை போன்முலைப் பாலைச் சொரிதலாற்**
**றேனும் பாலு மறாததண் சேய்களே! 219**

(இ–ள்.) பசுக்களும், எருமைகளும் தாமரைகளையும், சுருங்கு வளைகளையும் உண்ணுகின்றன. அந்த மலர்களிலிருந்து மணம் பொருந்திய தேனும், சோனை மழையைப் போல அந்த மாடுகள் சொரிகின்ற பாலும், அந்தக் குளிர்ந்த வயல்களில் நிறைந்திருக்கின்றன.

*கலிநிலைத்துறை*

**முத்தி னஞ்செறி தடமொரு நான்கினு முழுகி**
**யத்த னின்புற வருச்சனை புரிந்தன னதன்பின்**
**மெய்த்த வம்பல லியற்றினா னங்கவன் மெலிந்தும்**
**பத்தி சோதனை யறிந்திட விருந்தனன் பரமன் 220**

(இ–ள்.) முத்துகள் நிறைந்த அந்த ஒப்பற்ற நான்கு தீர்த்தங்களிலும் திரிசிரன் மூழ்கி இறைவனை அருச்சனை செய்தான். உண்மையான தவங்களைச் செய்தான். தவத்தால் அவன் மெலிந்த பின்னரும் அவனுடைய பக்தியைச் சோதனை செய்யும் பொருட்டு இறைவன் தோன்றாமல் இருந்தார்.

**இன்ன மென்னெதிர் முன்னவன் றோன்றிடா திருந்த**
**தென்ன காரண மெனச்சொலித் தன்றலை**
**யிரண்டை**
**வன்னி மீதரிந் தாகுதி கொடுத்தனன் மற்றைச்**
**சென்னி தன்னையு மரிந்திடக் கரத்துவாள்**
**சேர்த்தான்! 221**

(இ-ள்.) இன்னும் இறைவன் தோன்றாத காரணம் யாது? என்று கூறித் தனது மூன்று தலைகளில் இரண்டை அரிந்து நெருப்பிலே ஆகுதியாகக் கொடுத்தான். மற்றொரு தலையையும் அரிவதற்காக வாளை எடுத்தான்.

**அனையன் வாளினால் விரைந்துதன் கழுத்தினை**
**யரிய**
**நினையு மெல்லையில் விடையின்மேற் றோன்றினா**
**னிமலன்**
**கனக மாமலர் மதுமலர் சொரிந்திரு கரத்தாற்**
**புனையு மால்விடைக் கெதிர்நடந் திறைஞ்சினான்**
**போற்றி! 222**

(இ-ள்.) விரைவாகத் தன்னுடைய கழுத்தை அரிய திரிசிரன் நினைத்த பொழுது இறைவன் காளை வாகனத்தின் மேல் தோன்றினார். உடனே திரிசிரன் இரண்டு கைகளாலும் பொன்மலர்களையும், தேன் மலர்களையும் தூவி இறைவனைப் போற்றி வணங்கினான்.

**ஐம்மு கத்தனை யறுமுகத் தவனையு மரிய**
**கைம்மு கத்தவன் றன்னையு மருளிய கனியை**
**மும்மு கத்தவ னான்முகன் முதலினோர் முன்னே**
**யெம்மு கத்தினும் பரவினான் பரவியொன்**
**றிசைப்பான்! 223**

(இ-ள்.) ஐந்து முகங்களையுடைய கடவுளே! ஆறுமுகனையும், விநாயகரையும் ஈன்று அருளிய கனியே! என்று திரிசிரன் துதித்தான். நான்கு முகங்களையுடைய பிரம்மன் முதலில் தேவர்கள் வணங்கியது போல இறைவனை வணங்கிக் கூறலானான்.

**நாக நாதனே யுனக்குமிந் நகர்க்குமென் னாம**
**மாக வேவரந் தருதியென் றிறைஞ்சினா னவனுக்**
**கேக நாதனு மப்படி யாகவென் றியம்பி**
**மாக மீதினில் வலிமழ விடையொடு மறைந்தான்! 224**

(இ.–ள்.) தேவர் தலைவனான இறைவா! உமக்கும் இந்த நகரத்திற்கும் என்னுடைய பெயரே வழங்க வரம் தந்தருள வேண்டும் என்று திரிசிரன் வணங்கினான். ஏகநாதனாகிய இறைவனும் அப்படியே அருள்செய்து ஆகாயத்தினுள் காளை வாகனத்துடன் மறைந்தார்.

**திரிசி ராவுமத் தலத்தினை யகன்றவை தெரியும்**
**பரிசி ராவணற் குரைத்தகன் றிலங்கையாம் பதியி**
**லரசு போனபின் கதியடைந் தனனென வறைந்து**
**முரசி ராகவ னருச்சனை புரிந்தது மொழிவான் 225**

(இ–ள்.) பின்னர் திரிசிராவும் அத்தலத்தை விட்டு நீங்கினான். நிகழ்ந்ததை எல்லாம் இராவணனுக்குக் கூறினான். இலங்கை ஆட்சி முடிவுற்றபோது சிவபதத்தையும் அடைந்தான். இவற்றைக் கூறிய கவுதமமுனிவர் தொடர்ந்து இராமபிரான் செய்ததைக் கூறலானார்.

திருநகரச் சருக்கம் முற்றும்.

# 7. நினைத்தது கொடுத்த சருக்கம்

*கலிவிருத்தம்*

தயரதன் மதலையா மிராமன் றாடகை
துயருறப் பொருதுசா னகியைத் தோய்ந்தபி
னயர்வுறும் பரதனுக் கரசு நல்கியே
கயலுகள் சரயுவைக் கடந்து போயினான். 226

(இ—ள்.) தயரதன் புதல்வனாகிய இராமபிரான் தாடகையை வதம் செய்துத் தளர்ச்சியடைந்த பரதனுக்கு ஆட்சியைக் கொடுத்துப் பின்னர் மீன்கள் பாய்ந்து விளையாடும் சரயூநதியைக் கடந்து சென்றார்.

சாநகி மயிலுடன் றம்பி தன்னுடன்
கானக மடைந்தொரு கருணையி னாலுற
மாநக மடந்தைமூக் கரிந்து மாரீச
மானையு மழித்துவா லியையு மாட்டினான்! 227

(இ—ள்.) இராமர், மயில் போன்ற சீதையுடனும், தம்பி இலக்குவனுடனும் காட்டிற்குச் சென்றார். மலை போன்ற சூர்ப்பனகையின் மூக்கினை அரிந்தார். ஒரு கணையால் மானாக வந்த மாரீசனை அழித்தார். பின்னர் வாலியாகிய வானர அரசனையும் வதம் செய்தார்.

விராவுறு கவந்தனைத் தொலைத்து வேலையைத்
தராதர நிறைகளாற் றடுத்து தம்பியோ
டிராவண னுயிர்குடித் திலங்கை வாழ்வினைப்
பராவுறு வீடணன் பரிக்க நல்கியே. 228

(இ—ள்.) அந்தக்காட்டில் வாழ்ந்த கவந்தனை அழித்தார். கடலின் குறுக்கே மலைகளால் சேது அமைத்தார். அதன் வழியாகத் தம்பியோடு சென்று இலங்கை அரசன் இராவணனை வதம் செய்தார். வணங்கிய வீடணனுக்கு இலங்கை ஆட்சியைக் கொடுத்தார்.

புட்பகத் திவர்ந்துதன் னகர்க்குப் போதுவான்
விட்புலம் படர்தரு பொழுதவ் வெற்பினைக்
கட்புலங் குளிரவே கண்டு போற்றினான்
சட்புலங் குடைந்தெழு தாம மார்பினன் 229

(இ–ள்.) புட்பக விமானத்தில் அயோத்திக்குச் செல்லப் புறப்பட்ட வண்டுகள் மொய்க்கும் மாலையணிந்த இராமபிரான், ஆகாய வழியாகச் சென்றார். அப்பொழுது தெக்கண கயிலாயமலையைக் கண்குளிரக் கண்டு போற்றினார்.

இழிந்தனன் சிவதடத் தினிது மூழ்கினான்
பொழிந்தனன் பதமலர் புயலி னீரென
வழிந்தன விழிமழை வணங்கி னான்மிக
மொழிந்தனன் சிவமெனு மூல மந்திரம் 230

(இ–ள்.) புட்பக விமானத்தில் இருந்து இறங்கிச் சிவதீர்த்தத்தில் மூழ்கிப் பலவித மலர்களால் இறைவனைப் பூசனைச் செய்தார். மேகம் சிந்தும் மழைநீர் போலக் கண்ணீர் வழிய வணங்கிச் 'சிவம்' என்னும் மூலமந்திரத்தை மிகுதியாக மொழிந்தார்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

மின்வாசி கொண்டசடை யிறைவனே
போற்றிசதுர் வேத மாக
முன்வாசி கொண்டவனே கனலெரிய
நின்றாடு முதல்வா போற்றி
தென்வாசி கொண்டபுரந் திரியநகைத்
தருள்பரம சிவனே போற்றி
பொன்வாசி கொண்டவனே வெள்ளிமலை
யுடையானே போற்றி போற்றி! 231

(இ–ள்.) மின்னலைப் போன்ற சடையை உடைய இறைவா! போற்றி! திரிபுரங்களை எரித்தபோது நான்கு வேதங்களையும் குதிரைகளாகக் கொண்டவனே போற்றி! நெருப்பில் நின்றாடும் முதல்வா போற்றி! திரிபுரம் அழியும்படி நகைத்து அருளிய இறைவா போற்றி! வெள்ளி மலையைக் கொண்ட பொன்மயமான இறைவா! போற்றி! என்று இராமபிரான் வணங்கினார்.

*கலிவிருத்தம்*

**பூசனை புரிந்தவன் புகழுங் காலையி**
**லீசனும் பலவர மீந்து போயினான்**
**கோசல மெனுந்தவங் குறுகி ராகவன்**
**வாசகன் மகிழ்வுற மகமி யற்றினான்! 232**

(இ–ள்.) இங்ஙனம் இறைவனைத் தொழுத பொழுது இறைவன் இராமபிரானுக்குக் கேட்ட வரங்களை அருளிச் சென்றார். பின்பு இராமபிரான் கோசலம் அடைந்தார். இந்திரன் மகிழுமாறு யாகமும் செய்தார்.

**ஒருதல மிறந்தவர்க் குறுதி நல்கிடு**
**மொருதலம் பிறந்தவர்க் குதவு நற்கதி**
**யிருதலந் தம்மினு மெய்தும் யாவையுந்**
**தருதல மிதுவலாற் றரையி னில்லையே! 233**

(இ–ள்.) ஒரு தலமாகிய காசி தன்னிடத்தில் வந்து இறந்தவர்களுக்கு முக்தி கொடுக்கும். மற்றொரு தலமாகிய திருவாரூர் தன்னிடத்தில் பிறந்தவர்களுக்கு முக்தியைக் கொடுக்கும். இத்தலங்கள் இரண்டிலும் பெறுகின்ற அனைத்தையும் திரிசிராமலை தரும். இது போன்ற தலம் இவ்வுலகில் வேறில்லை.

**நாவலந் தீவிலந் நகரை நண்ணியே**
**தேவரு முனிவரு நரருஞ் சித்தரு**
**மாவுடன் பறவையு முரசு மாதரும்**
**யாவரும் பரகதி யெய்தி னார்களே! 234**

(இ–ள்) நாவலந்தீவிலுள்ள அந்தத் திரிசிராமலையை அடைந்து தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும், சித்தர்களும், விலங்குகளும், நாகலோகத்து மாதர்களும், மற்றுமுள்ள யாவரும் முக்தியைப் பெற்றார்கள்.

*கலிநிலைத்துறை*

**ஐந்து பேர்தமக் கொருத்தியே தேவியா மளவில்**
**வந்து நாரதன் மொழிகுவா னொவ்வொரு வருட**
**மிந்த மாதனைப் புணருமிவ் வியல்புகண் டெதிர்ந்தோர்**
**நந்து பூமியை வலஞ்செயத் தகுமென நவின்றான்! 235**

(இ—ள்.) பாண்டவர்கள் ஐவருக்கும் பாஞ்சாலியே மனைவியாக அமைந்தாள். அப்போது நாரதமுனிவர் வந்து ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொருவர் இந்தப் பெண்ணைச் சேரவேண்டும். அவ்வாறு சேருவதை மற்றவர்கள் கண்டால் அவர்கள் இந்தப் பெரிய பூமியை வலம் செய்ய வேண்டும் என்று கூறினார்.

**அன்ன நாளினி லருச்சுனன் தருமனோ டவளைக்**
**கன்னல் வேளுட னிரதிபோ லிருப்பது கண்டா**
**னின்ன தீவினைக் குலகினை வலஞ்செய வெண்ணி**
**மன்னு நாவலந் தீவிலத் திசையிலே வந்தான்.** 236

(இ—ள்.) அப்பொழுது தருமனும் பாஞ்சாலியும், இரதி மன்மதனைப் போல உறவு கொண்டார்கள். அதனை அருச்சுனன் பார்த்துவிட்டான். அந்தத் தீவினையைப் போக்கிக் கொள்ள உலகை வலம் வர எண்ணி நிலை பெற்ற நாவலந்தீவில் தெற்கு நோக்கி வந்தான்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**ஓங்கானை பூசித்த காளத்தி**
**யிறையவனை யுவந்து போற்றித்**
**தூங்கானை மாடத்தி லகலாமல்**
**விளங்குபரஞ் சுடரை வாழ்த்தித்**
**தீங்கானை தனையுரித்த வழுவூர**
**னிருசரணஞ் சிரத்தி னேற்றிப்**
**பாங்கானைக் காவிலுறை யகிலாண்ட**
**வுமையிறையைப் பணிந்து போனான்!** 237

(இ—ள்.) உயர்ந்த யானை வணங்கிய திருக்காளத்தியில் இறைவனை மகிழ்ச்சியுடன் வணங்கினான். தூங்கானை மாடத்தில் விளங்கும் பரம்சுடரையும் வாழ்த்தினான். தீய யானையை ஒறுத்த திருவழுவூரரையும் தலையால் வணங்கினான். திருஆனைக்காவில் எழுந்தருளிய அகிலாண்டநாயகியின் ஜெம்புகேசுவரரையும் வழிபட்டுச் சென்றான்.

*கலிநிலைத்துறை*

**நான ருச்சுன னெனும்பெய ருடைய வனன்கா**
**வரன ருச்சனை புரிந்தன னமலனு மவற்கு**

வரம ளித்தனன் மடந்தையர் பலரையு மணந்து
பரக திப்பயன டைந்தனன் னெனமுனி
பகர்ந்தான்! 238

(இ—ள்.) அருச்சுனன் திரிசிராமலையை அடைந்து இறைவனை வணங்கினான். இறைவனும் அவனுக்கு வரங்களை அருளினார். பின்னர் பல மாதர்களை மணந்து வாழ்ந்தான். பிறகு முக்தியையும் அடைந்தான் என்று கவுதமமுனிவர் கூறினார்.

அறிந்த பாவமும் வலிகெடு மறிவிலா மையினாற்
செறிந்த வல்வினைக் கடனுமத் தலத்திலே தீரும்
பிறந்த மானிடப் பிறவியிற் பலன்களும் பெறலா
மிறந்த போதினிற் பிறந்தபேர் முத்திபெற்
றிருப்பார்!239

(இ—ள்.) அறிந்து செய்த பாவவினையும், திரிசிராமலையில் தீரும். அறிவின்மையால், அன்பில்லாமையால் செய்யும் தீவினையும் அங்கே நீங்கும். மனிதப் பிறவியின் பயனையும் அடையலாம். இறந்து பெறுகின்ற முக்தியையும் இங்கே பிறப்பதனால் பெறலாம்.

*எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

மனுகு லந்தனி லிரவி புங்கவன்
மதலை தந்தரு டயரதன்
றனுச னங்கவ னனுச னென்பவர்
தமது வெம்பகை தவிரவே
கனவி லங்கையி விடும வன்சொரி
கருணை யஞ்சனை பாலக
னனும னென்பவன் மலையில் வந்ததி
லரிய நன்புன லாடினான்! 240

(இ—ள்.) சூரிய குலத்தில் பிறந்த மனுகுலத்து அரசனாகிய தயரதனுடைய புதல்வர்களான இராமனுக்கும், இலக்குவனுக்கும் பகைவனான இராவணனுடைய இலங்கையில் நெருப்பை இட்டவன் அனுமன். கருணைமிகுந்த அஞ்சனா தேவியின் புதல்வன் அனுமன். அவன் சிராமலைக்கு வந்து உயர்ந்த தீர்த்தங்களில் முழுகினான்.

**மால யன்றொழு வானை நண்பகன்**
**மாலை கங்குலின் மாலையா**
**லால யந்தனின் மேவி மஞ்சன**
**மாதி கொண்டடி பேணினான்**
**வால சந்திர ரேகை தண்புனன்**
**மாசு ணந்திகழ் வேணியான்**
**வேலை நஞ்சணி நீல கந்தரன்**
**மேவி னன்விடை மீதிலே! 241**

(இ–ள்.) திருமாலும், பிரம்மனும் வணங்கிய சிராமலை நாதனை, அனுமன் மூன்று வேளையும் அபிசேகமும், அருச்சனையும் செய்து வணங்கினான். மூன்றாம் பிறை, கங்கை, பாம்பு ஆகியவை விளங்குகின்ற சடையை உடையவரும், பாற்கடலில் தோன்றிய நஞ்சினை அணிந்த நீலகண்டருமான இறைவன் காளை வாகனத்தில் அனுமனுக்கு எதிரே தோன்றினார்.

**குன்றெ னத்தொழு தனும னின்றன**
**னிறையு மன்பொடு கூறுவா**
**னன்று னக்கினி வரம ளித்திட**
**நவிலு வாயென மொழிகுவா**
**னென்றன் முத்திரை யுன்தலத்தினி**
**லெய்த வேண்டுமெ னச்சொனா**
**னன்ற ளித்தன னரிய செல்வமு**
**மடைக வென்று மளித்தனன்! 242**

(இ–ள்.) மலைபோன்ற அனுமன் இறைவனைத் தொழுது நின்றான். உனக்கு வேண்டிய வரத்தைக் கூறுவாயாக! என்றார். அதற்கு அனுமன் என்னுடைய முத்திரை அடையாளம் உங்களுடைய இந்தத் தலத்தில் நிலைபெற வேண்டுமென்று அனுமன் வேண்டினான். அவன் வேண்டிய வரத்தையும் உயர்ந்த செல்வத்தையும் இறைவன் அவனுக்கு அருளினார்.

நினைத்தது கொடுத்த சருக்கம் முற்றும்.

■■■■■■■■■■

# 8. சாரமாமுனிச் சருக்கம்

### *கலிநிலைத்துறை*

என்று கூறினான் கோதம னவன்றனை யிறைஞ்சி
நன்று கூறினா யெனச் சொலி யிருடியர் நவில்வா
ரன்று சாரனென் றொருமுனி தவஞ்செய வதிலே
சென்ற வாறெலா முரைக்கவென் றனர்முனி
செப்பும் 243

(இ–ள்.) சிராமலையின் பெருமையை எடுத்துக் கூறிய கவுதம முனிவரை மற்ற முனிவர்கள் வணங்கினர். மேலும், அந்தத் திரிசிராமலையில் முற்காலத்தில் அரிய தவங்களைச் செய்த சாரமா முனிவர் வரலாற்றினை உரைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். கவுதமமுனிவரும் கூறத் தொடங்கினார்.

### *எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

பரம யோகி யொருவ னுண்டு
பகரின் முன்னு கத்திலே
பிரம சன்மன் மறைக ணான்கு
மங்க மாறு பேதமுங்
கரத லாம லகம தாக
வுணர்வில் வைத்த காரணன்
வரையில் வீறு மிமய மீது
மாத வந்தொ டங்கினான்! 244

(இ–ள்.) திரேதாயுகத்தில் நான்கு வேதங்களையும், அவற்றிற்கு அங்கமான ஆறு சாத்திரங்களையும் உள்ளங்கை நெல்லிக்கனியாகப் பெற்றிருந்த பிரமசன்மர் என்று ஒரு பரமயோகி இருந்தார். அவர் இமயமலையில் பெருமை பொருந்திய தவத்தைத் தொடங்கினார்.

அன்ன யோகி யருமை யான
தவமி யற்ற வமலனு
மின்னு லாவு குன்ற மன்ன
விடையின் மீது மேவினான்

**பொன்னு லாவு போது கொண்டு**
**பரம யோகி போற்றினா**
**னென்ன வேண்டு மென்ன யோகி**
**முத்தி வேண்டு மென்றனன்!** 245

(இ–ள்.) அந்த யோகியின் தவத்தால் சிவபெருமான் மலைபோன்ற காளைவாகனத்தின் மேல் தோன்றினார். உடனே பிரமசன்மர் அருமையான மலர்களைக் கொண்டு இறைவனை வணங்கினார். இறைவனும் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டார். உடனே யோகி 'முக்தி' வேண்டும் என்று பணிந்தார்.

**இத்த லத்தின் முத்தி யில்லை**
**யிமய வெற்ப கன்றுகா**
**சித்த லத்து றைந்த சோம**
**சன்ம யோகி தேவிதன்**
**கைத்த லத்தி லமிர்தெ னப்பி**
**றந்து கண்க ளிக்கவே**
**பத்தி செய்து நீயு மங்கோர்**
**பால னைப்ப யந்தபின்** 246

(இ–ள்.) அதனைக் கேட்ட இறைவன், இந்தத் தலத்தில் உனக்கு முக்தியில்லை. காசியில் வாழும் சோமசன்ம யோகி என்பவருடைய மனைவிக்கு அமிர்தம் போன்ற குழந்தையாகப் பிறக்க வேண்டும். பின்னர் பக்தி செய்து நீ இல்லறத்தில் ஈடுபட்டு ஒரு பாலகனைப் பெறவேண்டும் என்று அருளினார்.

**மனைது றந்து தெற்கி னண்ணி**
**மன்று காவி ரிக்கணே**
**யினிது வீறு திரிசி ராந**
**கர்க்க ணெய்தி யெம்மையே**
**நனைகு லாவு பாத லத்து**
**மலர் பறித்து நாடொறும்**
**புனைதி முத்தி யெய்து மென்று**
**சிவன்மொ ழிந்து போயினான்.** 247

(இ—ள்.) பின்னர் இல்லறத்தை விட்டுக் காவிரி நதியருகே உயர்ந்து நிற்கும் திரிசிராமலையை அடையவேண்டும். அங்கு அரும்புகளால் நம்மை வழிபட்டுப் பாதாளத்திலுள்ள செவந்தி மலரைப் பறித்து நாள்தோறும் அருச்சனை செய்தால் நீ முக்தியைப் பெறுவாய் என்று சிவபெருமான் கூறி மறைந்தார்.

அடல மைந்த பிரம சன்ம
    னரிய யோக முறையினா
லுடறு றந்து சோம சன்மன்
    மகிழ வந்து தித்தனன்
புடைநெ ருங்கு கலனி றைந்த
    புணரி பொங்கும் மகரமீ
னிடைநெ ருங்கு பால லைக்குண்
    மதியெ ழுந்த தென்னவே 248

(இ—ள்.) பிரமசன்மன் தன்னுடைய அரிய யோக சக்தியால் சோமசன்மர் மகிழுமாறு அவருக்குப் பிள்ளையாகப் பிறந்தார். கப்பல்களும், மீன்களும் நிறைந்த கடல் பொங்குமாறு பாற்கடலில் தோன்றிய சந்திரனைப் போல தோன்றினார். சுற்றத்தினர் அனைவரும் பொங்கும் கடல் போல் மகிழ்ந்தனர்.

சோம சன்மன் மனம கிழ்ந்து
    செய்க டன்றொ லைத்தபி
னாம நாமி சைக்க வேண்டு
    மென்னு மெல்லை நாகமேல்
வாய்மை யொன்றெ ழுந்த திந்த
    மைந்தன் மாத வத்தினாற்
றாம மார்ப நாமம் வல்ல
    சார னென்று சாற்றுமே 249

(இ—ள்.) சோமசன்மன் மனம் மகிழ்ந்து உரிய சடங்குகள் எல்லாம் செய்து முடித்தார். பின்னர் அக்குழந்தைக்குப் பெயரிட வேண்டுமென்று எண்ணினார். உடனே ஆகாயத்தில் உண்மை வாக்கு ஒன்று எழுந்தது. மாலையணிந்த சோமசன்மனே! மாதவத்தால் பிறந்த இந்த மைந்தனுக்குச் சாரன் என்று பெயரிடுவாயாக! என முழங்கியது.

**என்று ரைக்க மனம கிழ்ந்து**
**தந்தை தாய ரிருவரு**
**நன்றி யுற்ற சார னென்று**
**நாம மன்று நல்கினார்**
**பொன்ற லற்ற கல்வி கேள்வி**
**புனித நூலு ணர்ந்தபின்**
**மன்ற லுற்ற கோதை யொடு**
**மனைய றத்தில் வைகினான்! 250**

(இ–ள்.) அந்த அசரீரியைக் கேட்ட சோமசன்மனும் அவருடைய மனைவியும் அக்குழந்தைக்குச் சாரன் என்றே பெயரிட்டனர். அழிவில்லாத கல்வி கேள்விகளையும் சாரனுக்கு வழங்கினர். பின்னர் திருமணமும் செய்து வைத்தனர். சாரனும் இல்லறம் ஏற்று மகிழ்ந்தார்.

**வயந்த புண்ட ரீக யாகம்**
**வாச பேய மாதிய**
**வியந்த பன்ம கம்பு ரிந்து**
**மெய்க்க டன்க ழித்தபி**
**னயந்து நன்ம கப்ப யந்து**
**துறவ றத்தை நண்ணினான்**
**பயந்த பால னினிது தன்கு**
**லத்து நீதி பயிலவே! 251**

(இ–ள்.) அப்பொழுது வயந்த புண்டரீகம், வாசபேயம் முதலிய பலவகை யாகங்களையும் செய்தார். தேவர்க்கும், முனிவர்க்கும் தென்புலத்தார்க்கும் உரிய கடன்களை முடித்தார். பின்னர் நல்ல புதல்வனைப் பெற்றுத் தன்னுடைய குலநீதியைப் பயிற்றுவித்தார். இவையனைத்தையும் செய்த சாரன் துறவறத்தை அடைந்தார்.

**முற்பி றப்பி னியல்ப றிந்த**
**முனிவில் சார முனிவனுந்**
**தெற்கி டத்தின் மேவி மிக்கத்**
**திரிசி ராம லைக்குள்வாழ்**
**பர்ப்ப தக்கொ ழுந்த ரான**
**பரமர் பாத மலரின்மே**
**லற்பு தத்தி னரிய போது**
**சொரியும் வண்ண மணுகினான்! 252**

(இ—ள்.) முற்பிறப்பை உணர்ந்த குற்றமற்ற சாரமாமுனிவர் திரிசிராமலைக்குச் சென்றார். மலைக்கொழுந்தாய் விளங்கும் சிவபெருமானுடைய திருவடித் தாமரை மலர்களின் மேல் உயர்ந்த மலர்களையிட்டு அருச்சனை செய்ய அணுகினார்.

*கலிநிலைத்துறை*

**கண்ட மட்டிலே யுருகினா னாலயங்கண்டு**
**கண்ட மட்டிலே விடஞ்செறி கடவுளைக் கழுகார்**
**கண்ட மட்டிலேய் கருங்குழ லிறைவியைக் கண்டான்**
**கண்ட மட்டிலே யடங்கிடா மகிழ்ச்சியாற்**
**களித்தான்! 253**

(இ—ள்.) அங்ஙனம் அணுகிய சாரமாமுனிவர் இறைவனைக் கண்டு உள்ளம் உருகினார். ஆலயத்தினுள் சென்று நஞ்சை உண்ட இறைவனையும், கமுடும், மேகமும் ஒப்பாக விளங்கும் கழுத்தையும், கருங்கூந்தலையும் உடைய இறைவியையும் வணங்கி அந்தச் சாரமாமுனிவர் அளவில்லா மகிழ்ச்சியை அடைந்தார்.

**பிரம னாரண னகத்தியன் முதலிய பெரியோர்**
**பரம யோகிய ரிமையவர் பணிந்திடும் பரனே**
**கரனு மங்கவற் கிளையவ னிருவருங் காண**
**விரவி போலவந் தரும்பல முதலிய விறையே! 254**

(இ—ள்.) பிரம்மனும், திருமாலும், அகத்தியரும் முதலாக உள்ள பெரியோரும், பரமயோகியரும், தேவர்களும் பணிந்து வணங்குகின்ற இறைவா! கரனும், தூடணனும் காணுமாறு ஒளியோடு தோன்றி அவர்களுக்கு அரிய வரங்களை அருளிய பெருமானே!

**அனும னென்பவ னருச்சுனன் வணங்கிய வரனே**
**யினிய மாதர்க ளெழுவரு மிறைஞ்சிய விறையே**
**வனையும் வார்குழ லுமையவள் வணங்கிய மணியே**
**தனிய ரானவர்க் கன்னையே யெனச்சொலித்**
**தாழ்ந்தான்! 255**

(இ–ள்.) அனுமனும், அருச்சனனும் வணங்கிய அரனே! சப்தமாதர்கள் வணங்கிய இறைவா! அழகிய கூந்தலையுடைய உமையன்னை வணங்கிய மணியே! என்றும் தனித்தவர் களுக்குத் தாயே! என்றெல்லாம் போற்றி சாரமாமுனிவர் வணங்கித் தாழ்ந்து நின்றார்.

**சிவத டத்திலே முழுகியம் மலைவலஞ் செய்து**
**பவம கற்றிடும் பொருட்டினி தருச்சனை பண்ணி**
**நவமு றச்செயும் பன்னசா லையினக நண்ணித்**
**தவமி யற்றினான் வேதவா சாரனாஞ் சாரன் 256**

(இ–ள்.) பின் சிவதீர்த்தத்தில் மூழ்கித் திரிசிராமலையை வலம் செய்தார். பிறவியை விலக்கிக் கொள்ள இறைவனை வேண்டினார். புதிய ஆசிரமத்தில் வேத ஆச்சாரத்தையுடைய சாரமாமுனிவர் தவம் செய்யலானார்.

சாரமாமுனிச் சருக்கம் முற்றும்.

# 9. சூரவாதித்த சருக்கம்

*கலிவிருத்தம்*

வாழி யந்த வருந்தவ மாமுனி
தாழ்வரு ருங்கதை தன்னை நிறுத்தியே
சோழ னவ்விடைத் தோன்றி யதுமவன்
கோழி மாநகர்க் கண்டதுங் கூறுவேன். 257

(இ–ள்.) உயர்ந்த பெருமை பொருந்திய தவத்தைச் செய்த சாரமாமுனிவருடைய வரலாற்றை அத்துடன் நிறுத்தினார். அதன்பின் சோழ அரசன் அங்கே வந்து தோன்றியதும், பின்பு கோழி மாநகரம் என்று அழைக்கப்படும் உறையூரைத் தன் தலைநகராக உருவாக்கியதைக் கூறினார்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

மண்ணி லழியாப் புகழ்படைத்த
மனுவின் குலத்திற் சனநாத
வண்ணன் மகிழ வவதரித்தா
னரசர் சூளா மணியென்பா
னெண்ணெண் கலைகண் முழுதுணர்ந்தா
வெழுவிற் படைவா ளிவைதெரிந்தான்
பண்ணும் பரியும் பரித்தேரும்
பகடுஞ் செலுத்தல் பயின்றனனே! 258

(இ–ள்.) இவ்வுலகில் அழியாதப் புகழ் படைத்த மனுக்குலத்தில் சனநாதன் என்னும் சோழ அரசன் மகிழும் படியாக ஒரு புதல்வன் அவதரித்தான். சூடாமணி என்னும் அவன், அறுபத்து நான்கு கலை ஞானங்களையும், வில், வாள் முதலிய வித்தைகளையும் அறிந்து கொண்டான். குதிரை, தேர், யானை ஆகியவற்றைச் செலுத்தும் பயிற்சிகளையும் பெற்றுத் திகழ்ந்தான்.

அண்ணன் மால்யானை வேந்தன்
யரசியல் நடத்து நாளில்
புண்ணிய மறையோ ரன்றித்தீத்
தொழில் புரிவோ ரில்லைக்

கண்ணியக் கவிகைக் கன்றிக்
கனக தெண்டங்க ளில்லை
நண்ணிய விடு பூவன்றி
நாரிலா தவரு மின்றே! 259

(இ—ள்.) பிரம்மாவும், திருமால் அறியாத சிவபெருமானை வணங்கி, யானையின் சோழ வேந்தனாக ஆட்சி நடந்தியபோது, அந்நாட்டில் புண்ணிய மறையோர்கள் வாழ்ந்தார்கள் அன்றி பகைக் கொள்ளும் தொழில் செய்வோர் இல்லை. கண்ணியவான்கள் வாழ்ந்தார்களே தவிர கலகம் செய்யும் தொண்டர்கள் அங்கில்லை. நல்ல வீடுமனையுடன் வாழ்ந்தார்கள் அன்றி பகைவர்களில்லை.

அந்த மகனைச் சன்நாத
வளவன் புடவிக் கரசனெனத்
தந்து புலனைந் தையுமடக்கி
முயன்றான் யோக சாதனையை
மைந்த னவனி முழுதினையுந்
தளரா தளித்து மதிக்கவிகை
சிந்து நிழலா லிளைப்பகற்றி
நடத்தா நின்றான் செங்கோலே! 260

(இ—ள்.) சனநாதசோழன் அவனை அரசானாக்கினான். பின்னர் ஐம்புலன்களையும் அடக்கிச் சிவயோக சாதனை செய்யலானான். ஆட்சியை ஏற்ற சோழமன்னன் தனது வெண்கொற்றக் குடை நிழலில் உயிர்களுடைய துன்பங்களை நீக்கி நாட்டைத் தளர்ச்சி அடையாமல் காத்தான்.

எட்டா னைகளுஞ் சுமைதவிர
வுரகா திபனு மிளைப்பகலக்
கட்டா நின்ற வரியகழல்
பகைத்தார் முடியிற் கதிர்பரப்ப
வொட்டா ரளக்கும் பெருந்திறையா
லிமையோ ருலக மூடுருவக்
கொட்டா நிற்க மும்முரசும்
புரந்தான் மனுவின் குலமணியே! 261

(இ–ள்.) அவனுடைய ஆட்சியில் அட்டதிக்கு யானைகளின் சுமை நீங்கிற்று. ஆதிசேடனுடைய களைப்பும் விலகிற்று. பகைவனுடைய முடியில் அவனுடைய வீரக்கனை பதிந்து ஒளி வீசிற்று. பகைவர்கள் கட்டிய கப்பம் தேவலோகத்தை ஊடுருவிற்று. மங்கல முரசு வெற்றி முரசு, கொடை முரசு ஆகியவை முழங்கின. இவ்வாறு அந்த மனுவின் குலமணி நாட்டை ஆண்டான்.

*எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

பொங்க விப்படி யுயிர்பு ரந்தெழு
புடவி தன்னைவ லஞ்செய்வான்
சிங்க ளத்தவர் யவனர் பப்பரர்
சீனர் சோனகர் கேரளர்
வங்கர் குச்சரர் கூர்ச்ச ரத்தவர்
கோச லத்தர் வணங்கவே
சங்க பத்திரி தண்பு னற்சொரி
தூய திண்கரை மேவினான். 262

(இ–ள்.) இப்படி எல்லாச் செல்வங்களும் ஓங்கும்படியாக உயிர்களைக் காத்த அந்தச் சோழமன்னன் உலகை வலம் வர விரும்பினான். சிங்களர், யவனர், பாரசீனர், சோனகர், கேரளர், வங்கர், குச்சரர், சமணர், கோசலர் முதலிய மன்னர்கள் வணங்கக் குளிர்ந்த நீரையுடைய துங்கபத்ரை நதியின் கரையை அடைந்தான்.

*கலிநிலைத் துறை*

அம்பை யின்கரை நுதற்கணா னடிபணிந் ததற்பின்
கம்பை யின்கரை யுமையிடத் திறைவனைக் கண்டு
பம்பை யின்கரை யழகிய நாதனைப் பணிந்து
செம்பொ னம்பல வாணனை வணங்கினான்
சிரத்தான்! 263

(இ–ள்.) பின் அந்நதியைக் கடந்து, கம்பாநதிக் கரையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருவடியைப் பணிந்தான். பிறகு காஞ்சிபுரத்தில் காமாட்சி உடனாய ஏகாம்பரேசுவரரை வணங்கினான். பின்னர் பம்பாநதிக் கரையில் வீற்றிருக்கும் நாதனையும், சிதம்பரத்தில் பொன்னம்பலத்தே நடனமிடும் நடராசப் பெருமானையும் வணங்கினான்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**வீறு பொன்னி நன்னாட்டில்**
**மிகுந்த பொன்னி நன்னாட்டி**
**லாறு கண்டு குளம்**
**பெருக்கி யாலயங்களுங் சமைப்பித்**
**தேறு கொண்ட கொடியவர்**
**முன்முழவு கலிக்கியா லொலிப்பச்**
**சீறு கொண்டை விழி மடவா**
**ராடவும் விழியும் செய்வித்தான்! 264**

(இ–ள்.) பின்னர் பொன்னி நாட்டில் பொன்னி நதிக்கரையில் குளம் உண்டாக்கி, கோயில்களையும் கட்டினான். அக்கோயிலில் விடைக் கொடியேற்றி முரசு அறிவித்து முழவு, யாழ் போன்ற இசைக் கருவிகளின் ஒலியுடன் பெண்கள் நடனமிடவும் திருப்பணிச் செய்வித்தான்.

### *கலிவிருத்தம்*

**ஞால மாகிய மயில்நகை வெண்**
**நித்தில மாலைமேற் மரகத மணியைப்**
**போலவே வேலை மேலடுத்த காவிரிமேவிய**
**கோலமாம் மரங்களைக் குறுகிப் போற்றினான்! 265**

(இ–ள்.) உலகத்தைத் தாங்கும் உமையம்மைக்கு வெண்மையான மலர்களைச் சூடி, அதில் மரகதமணியைப் போல் வீற்றிருக்கச் செய்தான். வேல் போன்று உயர்ந்ததாக காவிரியின் கரையோரத்தில் மரங்களை வளர்த்து வளத்தைப் போற்றிப் பெருக்கினான்.

**செம்மணி பலகொள் பொற்பணியில் சீரிய**
**மைமணி நடுவனிட்டு இழைத்தவா ரென**
**பைம்மணி ஆயிரவளைந் தபரந் தளிர்**
**பெய்முகி லெனத்துயில் பிராணனைப் போற்றினான்! 266**

(இ–ள்.) நெல்மணிகளை விதைக்கும் உழவர்களையும், பொன்வேலைச் செய்யும் கொல்லர்களையும், வெவ்வேறு வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களையும், வேதங்களைப் போற்றும் பிராமணர்களையும் போற்றினான்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**கனலுருவ மாயிருந்தால் மலர்க்கையில்மான்**
**பயந்தகலுங் கங்கை யாடன்**
**மனமுருகி வெதும்புமற்றை மலைமானுந்**
**தளருமென்றோ வடிவ மெல்லாம்**
**புனலுருவ மானவனை யமிர்தகதிர்**
**புனைந்தவனைப் பொருந்துங் கோடி**
**தினகரனை நிகர்த்தவனைத் திருவானைக்**
**காவானைச் சேவித் தானே! 267**

(இ—ள்.) நெருப்பின் வடிவமாக நாம் இருந்தால், நம் கையிலுள்ள மான் பயந்து நீங்கும். கங்காதேவி மனமுருகி வெதும்புவாள். உமாதேவி தளர்ச்சி அடைவாள் என்று எண்ணித் தன் வடிவமெல்லாம் நீர் உருவமானான் சிவபெருமான். அமிர்த கிரணங்களை உடைய சந்திரனை அணிந்து கோடி சூரியனைப் போல் ஒளிவீசும் திருவானைக்கா இறைவனையும் சோழமன்னன் வணங்கினான்.

**வெண்ணாவ னிழலானே யகிலாண்ட**
**நாயகியா மேனை யீன்ற**
**பெண்ணாவ லுடனணைக்கும் பெருமானே**
**மாணிக்கப் பிறங்கல் போலும்**
**வண்ணாவல் லசுரர்புர மெரித்தானே**
**பெருங்கருணை வழியா நிற்குங்**
**கண்ணாவல் லணிந்தமிடற் றரனேயென்**
**றடிபணிந்து களித்துப் போனான்! 268**

(இ—ள்.) வெண்நாவல் நிழலில் அமர்ந்தவனே! இமயமலை அரசனது மனைவியான மேனை என்பவள் தவத்தால் பெற்ற அகிலாண்டநாயகியை அன்புடன் கொண்ட பெருமானே! மாணிக்க மலைபோன்ற நிறத்தை உடையவனே! திரிபுரம் எரித்தவனே! கருணை பொங்கும் கண்களை உடையவனே! நஞ்சணிந்த கண்டத்தை உடைய சிவபெருமானே! என்று வணங்கினான்.

பொன்னி கடந்து சிவகங்கை
முதலாந் தடங்கள் புடைசூழ
மன்னி விலங்குஞ் சிராமலையின்
சிகரக் கொழுந்தை மணந்தகுழற்
கன்னி மயிலை விழிகுளிரக்
கண்டா னுடலங் களிப்புற்றான்
சென்னி வணங்கி யடிபணிந்து
நடந்தான் மேலைத் திசைதனிலே! 269

(இ—ள்.) பின்னர் அச்சோழமன்னன் காவேரிநதியைக் கடந்து சிவகங்கை முதலிய தீர்த்தங்கள் சூழும் சிராமலைக் கொழுந்தாகிய இறைவனையும், மட்டுவார் குழல் அம்மையையும் கண்கள் குளிரும்படி வணங்கி மகிழ்ந்தான். உடல் சிவானந்தக் களிப்பு அடையத் திருவடியைப் பணிந்து மேற்கு நோக்கிச் சென்றான்.

காவல னின்போடு மேறிசை
யின்புடை கானில் வரும்பொழுதூர்
மாவுகை யுந்திறல் வீரர்ம
தங்கய மாவுகை யுந்தகையோர்
மேவுதல் கண்டெதிர் சீறியு
டன்றழல் வேகமி குந்தலைநேர்
கூவியு கைந்தெதி ராகந
டந்தொரு கோழிதொ டர்ந்ததுவே 270

(இ—ள்.) குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை ஆகியவை சூழ அந்தச் சோழமன்னன் வருவதைப் பார்த்து ஒரு கோழி நெருப்பை ஒத்த சினத்தோடு சிறகை வீசி அடித்துக் கூவிக் கொண்டு சேனைகளுக்கு எதிராக வந்தது.

மேலெழு மண்கிளை யாவிழு
மென்சிறை வீசுமி குந்தெழுகால்
போலெழு மிந்திர ஞாலமெ
னும்படி போய்மறை யுந்தரைமேல்
வாலைய றைந்திடு மோடிவ
ருந்திசை மாறிவ ருந்தனையே
கோலுமி ருஞ்சிறை தாழமு
கங்கொடு கோதிவ கிர்ந்திடுமே! 271

(இ—ள்.) அது மேலே எழுந்தது. மண்ணில் விழுந்தது. மெல்லிய சிறகினால் வீசிக் கொண்டு காற்றைப் போல எழுந்தது. இந்திரசாலம் என்று சொல்லும்படி மறைந்தது. வாலை அறைந்து கொண்டு திசைமாறி வந்தது. வளைந்து சுழலும் தன்னுடைய பெரிய சிறகை, முகத்தைக் கொண்டு கோதியது.

*வேறு*

மரங்களி லொளிக்கு மீள
வரையிடைக் குதிக்கும் வீரர்
சிரங்களை நெருக்கும் வாசித்
தலையின் மேல்செறியும் யானைக்
கரங்களி லிருக்கும் பாகர்
கவசமே லிருந்து மேலம்
பரந்தனி லுகையுந் தீண்டிற்
றடித்தென பறந்து போமே! 272

(இ—ள்.) அந்தக் கோழி மரங்களில் ஒளிந்து கொள்ளும். மலையில் குதிக்கும். வீரர்களுடைய தலையை நெருக்கும். குதிரைகளின் தலைமேலும், யானைகளுடைய கையிலும் குதிக்கும். யானைப் பாகர்களுடைய கவசத்தின் மேலிருந்து மின்னலைப் போல பறந்து போகும்.

மன்னவன் றானையெல்லாம்
மருண்டதி சயிப்ப வேழச்
சென்னியிற் செறிந்து சென்னி
கவிகைமேற் செறிந்த போது
பன்னிரு கரத்தோன் கோழிப்
பதாகையா னாகையாலே
யிந்நில வரசுங் கோழிக்
கவிகையா னென்ன லானான்! 273

(இ—ள்.) பின்னர் அக்கோழிச் சேனைகள் மருண்டு வியக்கும் படியாகப் பட்டத்துயானையின் தலையில் ஏறிற்று. மன்னனுடைய வெற்றிக் குடையின் மேல் ஏறியது. அந்தக் காட்சி கோழிக் கொடியை உடைய முருகப்பெருமானைப் போல இந்தப் பூமியை ஆளுகின்ற மன்னனும் கோழிக் குடையோன் என்று சொல்லும் படியாகத் தோன்றிற்று.

### *வேறு*

கோதியாப் பறந்து கவிகையினுங்
குதித்துச் சென்னி குஞ்சரத்தை
யுதையாச் சரண முள்ளழுந்த
முகமுள் ளழுந்த வுள்ளழுந்தப்
புதையாக் குருதி நதிப்படியா
மதவா னையினும் பொங்கியது
மதவா ரணத்தைக் கண்டக்கால்
விடுமோ மற்ற வாரணமே 274

(இ—ள்.) மேலும் அந்தக் கோழி கொதித்துப் பறந்து வெண்கொற்றக் குடையில் குதித்தது. பட்டத்துயானையை உதைத்தது. முட்போன்ற கால் நகங்கங்களாலும், அலகாலும் யானையின் முகத்தில் பதியும்படியாகக் குத்தியது. நதி போன்ற பெருக்கெடுத்த யானையானது இரத்தத்தில் மூழ்கியது. யானையின் கோபத்தை விட அந்தக் கோழியின் கோபம் அதிகமாக இருந்தது. மதவாரணத்தைக் கண்டால் மற்ற வாரணம் விடாதல்லவா ?

### *கலிவிருத்தம்*

பார்த்தனர் மன்னரும் படைக்கை வீரரு
மார்த்தனர் படையெலா மதிச யித்தன
கூர்த்திடு கணையயில் பரிசை விற்கொடு
வேர்த்தன ராசனும் விலக்கி னானரோ! 275

(இ—ள்.) அந்தக் கோழியின் வீரத்தைக் கண்ட அரசர்களும், வீரர்களும் ஆரவாரித்து எழுந்தனர். கூர்மை பொருந்திய அம்புகளையும், வேல்களையும், கேடயங்களோடு கத்திகளையும், வில்களையும் கையில் எடுத்தனர். அதனைப் பார்த்த சோழமன்னன் அவர்களைத் தடுத்தான்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

வலத்தினிற் பறந்து மீள விடப்புறம் வளைந்து போந்து
நிலத்திடை நடந்து வான முகட்டிடை நெடிது பாய்ந்து
சலத்தினிற் குதித்து மேகத் தலத்திடை யடங்கி யைந்து
புலத்தையு மடக்கா யோகி மனமெனப் போயிற் றன்றே 276

(இ—ள்.) பின்னர் மன்னனும், சேனைகளும் இருந்த இடத்திற்கு வலத்திலே பறந்து, இடப்புறமாக வளைந்து நிலத்திலே நடந்து ஆகாயத்தின் மேல் நெடுந்தூரம் பாய்ந்து அப்பால் கடலில் குதித்து மேக மண்டலத்தில் அடங்கிற்று. இக்காட்சி ஐம்புலன்களையும் அடக்கிய யோகியின் மனத்தைப் போலத் தோன்றியது.

**இத்தல வாசியாலிப் பறவைபோ ரிழைத்த தாகு**
**முத்தம தலம்யா மிங்கே யுறைவது கரும மென்னா**
**வத்தலத் தனந்த கோடி யரமிய மரச வீதி**
**சித்திர மாட கூடங் கோபுரஞ் செய்வித் தானே! 277**

(இ—ள்.) அந்தக் கோழி சென்றபின் மன்னன் இந்தப் பூமியினுடைய வலிமையினால் தான் இந்தப் பறவை நம்மை எதிர்த்தது. எனவே, இந்த இடம் ஆட்சி செய்வதற்குரிய நகரத்தை அமைக்கச் சிறந்தது என்று எண்ணினான். அங்கு அளவில்லாத மாடங்களும், கூடங்களும், கோபுரங்களும், அரமியங்களும், கோட்டை கொத்தளங்களும் கொண்டு அரச வீதிகளையும் அமைத்தான்.

*கலிவிருத்தம்*

**மன்னர் வீதி நிறைந்தகை மாவின்மேற்**
**பொன்னி லாமணித் தோரணம் பொங்குதன்**
**மின்னு மேக மிவையென விண்ணவர்**
**வன்ன வில்லு வளைந்தது போலுமே! 278**

(இ—ள்.) அந்த அரசவீதிகளில் நிறைந்திருக்கும் யானைகளின் மேல் பொன்னாலும், மணியாலும் செய்த தோரணங்கள் காட்சி அளித்தன. இது மின்னல் கொண்ட மேகம் இவை என்று எண்ணித் தேவர்கள் பஞ்சவர்ணங்கள் பொருந்திய இந்திர தனுசை வளைத்தது போல் இருந்தது.

**போத கத்தின் மதநதி போதலின்**
**மாதர் கண்டு மருண்டு வனமுலைச்**
**சீத சந்தனத் தாற்கரை செய்ததன்**
**மீது சென்றுதம் வீதி புகுவரே! 279**

(இ–ள்.) யானைகளுடைய மதநீர் பெருக்கெடுத்து நதிபோல ஓடுகின்றது. அதைக் கண்ட பெண்கள் மயங்கி, தங்கள் மார்பிலுள்ள குளிர்ந்த சந்தனத்தை எடுத்துக் கரையாகச் செய்து, அக்கரையின் மேலே நடந்து தங்களுடைய வீடுகளுக்குச் சென்றார்கள்.

**செம்பொ ருட்குப் பிரிந்திடு செல்வர்க**
**டம்பு யத்திற் றழுவி மயங்குவா**
**ரம்பு யத்திரு வன்ன மடந்தையர்**
**கொம்பு சுற்றுங் கொடிக ணிகர்க்கவே! 280**

(இ–ள்.) கல்வியைத் தேடிப் பிரிந்து போக இருக்கும் தங்கள் கணவருடைய தோள்களை, திருமகளைப் போன்ற மனைவியர் மரக்கொம்பைச் சுற்றிக் கொள்ளும் கொடியைப் போல தழுவிக் கொண்டார்கள்.

**தத்தை மார்விளை யாடிய தண்கழன்**
**முத்தி ராசி புகுந்து முகிற்கிடை**
**யுய்த்த மாரித் துளியொ டுதிர்ந்திடு**
**மெத்து மாரி விழுவன போலுமே! 281**

(இ–ள்.) கிளி போன்ற பெண்கள் விளையாடும் இடமான மேல் மாடங்கள் உயர்ந்து இருந்ததால், விளையாடும் பொழுது, அவர்கள் அணிந்த மாலையிலுள்ள முத்துகள் கழன்று மேகமண்டலத்தில் சென்று சேர்ந்தன. பின்னர் மழைத் துளிகளுடன் அந்த முத்துகள் விழுவது ஆலங்கட்டி விழுவது போலக் காட்சியளித்தன.

**ஆடு மஞ்ஞை யனைய மடந்தையர்**
**பாடு மங்கல வள்ளையின் பாடலுந்**
**தோடு தங்கு சுரும்பெழு சும்மையு**
**மோடு தேரி னுருளையி னோசையும் 282**

(இ–ள்.) அந்தக் கோழி மாநகரத்தில் நடனமிடும் மயில் போன்ற பெண்களுடைய இசைப்பாடல், மங்கையர் தங்களின் தலைவனைப் போற்றிப்பாடும் வள்ளைப் பாடலும், மலர் இதழ்களில் தங்கும் வண்டுகள் எழுப்பும் போது உண்டாகும் ஓசையும், வீதிகளில் ஓடுகின்ற தேர்களின் ஓசையும் கலந்து ஒலியெழுப்பிக் கொண்டே இருந்தன.

வெங்க ளிற்றின் விரிந்த விரக்கமும்
மைங்க திப்பரி யாலு முழக்கமுஞ்
சங்கொ லிப்பதுந் தாளமி சைப்பதும்
பொங்கொ லிக்கட லேழும் பொருவுமே! 283

(இ–ள்.) மேலும், அந்த நகரத்திலுள்ள யானைக் கூடங்களிலிருந்து எழும் முழக்கங்களும், பஞ்சகதிகளை உடைய குதிரைகளின் முழக்கங்களும், சங்குகளுடைய ஓசையும், தாளம் முதலிய வாத்திய ஓசைகளும், எழுவது ஏழு கடல்களும் ஒன்றாகக் கூடிப் பொங்கி ஒலிப்பது போல் தோன்றிற்று.

மைய லேற்ற வனங்கொ ளனங்கனை
யைய நீக்கி யழைப்பது போலவே
தைய லார்க டமனியத் தாமரைச்
செய்ய பாதச் சிலம்பு புலம்புமே! 284

(இ–ள்.) அந்த நகரத்துப் பெண்கள் தங்களுடைய தாமரை போன்ற பாதத்தில் அணிந்த பொற்சிலம்புகளின் ஓசை, ஆடவர்களும், மாதர்களும் காதல் கொள்ள மன்மதனை ஐயமின்றி வரலாம் என்று அழைப்பது போல இருந்தது.

*வேறு*

பற்றிய படிகமண் டபத்தின் பாங்கரிற்
சுற்றிய மரகதச் சிகரந் தோன்றுதல்
கொற்றமென் கனகபங் கயத்தின் கோல்வளை
யுற்றவ னுறங்கிடு முததி போலுமே! 285

(இ–ள்.) படிகக் கற்களால் செய்த மண்டபத்தைச் சுற்றி வளைவாக மரகதமணிகளால் செய்த சிகரமானது, வெற்றியோடு கூடிய பொன்மயமான தாமரை போன்ற கையில் சங்கை உடைய திருமால் பள்ளி கொள்ளும் பாற்கடல் போன்று இருந்தது.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

நக்கசெங் கமலத் தாது
குடைந்ததி னறவ மாந்தி
யெக்கர்வெண் மணற்குன் றேறி
யிருஞ்சிறை புலர்த்துந் தும்பி

**செக்கர்வெண் பிறையை வாட்டுஞ்**
**சிறுநுதன் மடவார் சூட்டும்**
**மைக்கருங் குவளை மாலை**
**மாலையில் வைகு மன்றே!** 286

(இ–ள்.) செந்தாமரை மலர்களின் தாதுக்களைக் குடைந்து, தேனை உண்டு, வெள்ளத்தால் சேர்க்கப்பட்ட வெண்மையான மணல்மேடுகளில் வண்டுகள் தங்களுடைய பெரிய சிறகுகளை உலர்த்துகின்றன. இக்காட்சி செவ்வானத்தில் தோன்றும் பிறை நிலவைப் போன்ற சிறிய நெற்றியை உடைய பெண்கள் மார்பில் அணிந்த கருங்குவளை மாலைப் போல் இருந்தது.

**அரவுகொப் புளிக்கு நஞ்சு**
**மமிர்தமு மொழுகப் பார்வை**
**முருகுகொப் புளிக்கு முல்லை**
**முகையென விளங்க மூர**
**லிரவிகொப் புளிக்கும் வெய்யி**
**லிருகுழை யெறிப்பச் செங்கைக்**
**குருகுகொப் புளிக்கப் பந்து**
**பயிலுவார் கோடி பேரே!** 287

(இ–ள்.) பாம்பின் நஞ்சும் அமுர்தமும் கலந்த பார்வையையும், மணம் வீசும் முல்லை அரும்பு போன்ற பற்களையும், வெய்யில் போல ஒளிவீசும் காதணிகளையும் உடைய மாதர்கள் தங்களுடைய சிவந்த கைகள் கொப்பளிக்கும்படிப் பந்து விளையாடுபவர்கள் எண்ணற்றவர்கள்.

**பொற்கலா பார மின்னப்**
**பூணர்முலைக் கலன்க ளோங்க**
**விற்கைமா ரனையும் விற்கும்**
**புருவவில் விழியம் பேவக்**
**கற்கொணா மழலை யன்னங்**
**கலாபமா மயூரஞ் சூழ்**
**நற்கழங் காடிப் பாடு**
**மாதரந் நகர மெல்லாம்!** 288

(இ–ள்.) அந்த நகரத்தில் பொன்னால் செய்த மேகலாபரணம் மின்னவும், மார்பில் அணிகலன்கள் ஒளிரவும், கரும்பு

வில்லையுடைய மன்மதனையும் அடிமைப் படுத்தியிருக்கும் புருவங்ககளாகிய வில்லையும் கண்களாகிய அம்புகளையும் பெண்கள் பெற்றிருந்தனர். அவர்களுடைய நடையைக் கற்றுக் கொள்ள இயலாத இளமையான அன்னங்களும், தோகை மயில்களும் சூழ்ந்து இருக்கின்றன. அவர்கள் கழங்குகளை விளையாடி, பாடி எங்கும் நிறைந்து காணப்பட்டனர்.

*எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**மூசு வண்டு வாச முண்டு**
**முகி லிடத்து முரலவே**
**மாசில் கெண்டை மீனி ரண்டு**
**வள்ளை மீது துள்ளவே**
**பூசல் கொண்ட வாளி யைந்து**
**பூங் கரும்பு பொழியவே**
**யூச லின்க ணாடு கின்ற**
**மாத ரந்த வூரெலாம்** 289

(இ–ள்.) அப்பெண்களின் கார்மேகம் போன்ற கூந்தலிலுள்ள மலர்களில் வண்டுகள் மொய்க்கின்றன. குற்றமில்லாத கெண்டை மீன்கள் துள்ளுகின்றன. கண்கள், வள்ளைக் கொடி போன்ற காதுகளின் மீது துள்ளுகின்றன. போர்புரிய செய்யும் மன்மதனுடைய ஐந்து அம்புகளும் கரும்பு வில்லில் இருந்து பாய்கின்றன. இவ்வாறு ஊஞ்சலில் ஆடும் பெண்கள் அந்த நகரத்தில் எங்கும் இருந்தனர்.

மழைத வழ்ந்த சிகர கூட
மாந கர்க்குள் வைகினா
னழக மைந்த குங்கு மக்கு
ழம்ப ளாவி யறுபதங்
கொழுதி யங்க ராக நுங்கி
மங்கை மாதர் கொங்கையா
லுழுத சந்த னந்தி மிர்ந்த
வொளிகு லாவு மார்பினான்! 290

(இ–ள்.) அழகு நிறைந்த குங்குமக் குழம்பைக் கோதியும், அதன் மணத்தை விழுங்கியும் வண்டுகள் பூமாலையில் பொருந்தி

இருக்கின்றன. அந்த மாலையை அணிந்த மங்கையர்கள் சோழமன்னனின் சந்தனம் பூசிய மார்பைத் தங்களுடைய மார்புகளால் உழுதனர். அந்த மன்னன் மேகங்கள் தவழும் மாட கூடங்கள் நிறைந்த அந்தப் பெரிய நகரத்தில் வாழ்ந்திருந்தான்.

தபன மண்ட லஞ்செ றிந்த
சயில மன்ன வொளியதா
மிபம டங்க லெழுது செம்பொ
னாச னத்தி லெய்தினா
னபிந யங்கள் பெறுகு ரும்பை
யனைய கொங்கை மங்கைமா
ருபய செங்கை கவரி வீச
வூச லாடு தாரினான்! 291

(இ—ள்.) நாட்டியம் கற்ற தெங்கின் குரும்பைப் போன்ற மார்பினை உடைய பெண்கள் உபய சாமரங்கள் வீசினர். அதனால் அவன் மார்பில் அணிந்த மாலைகள் அசைந்தன. அந்தச் சோழ மன்னன் யானைகளும், சிங்கங்களும் எழுதப்பெற்ற செம்பொன் ஆசனத்தில் ஒளியோடு வீற்றிருந்தவாறு தோன்றினான்.

### *கலிநிலைத் துறை*

தோன்று மிக்கதை நிறுத்திமேற்
கதையினைச் சொல்கேன்
கான்று தேன்கமழ் வாரிசங்
குவளைசெங் கழுநீ
ரீன்ற சண்பகங் குருந்துமல்
லிகைதள வனைத்து
மூன்று காலமு மிறையவற்
கணிந்தனன் முனிவன். 292

(இ—ள்.) யாவரும் அறியும்படிக் கூறிய இந்தச் சோழ மன்னனின் கதையை இத்துடன் நிறுத்திச் சாரமாமுனிவருடைய கதையைச் சொல்கிறேன். தேன் சொரியும் செந்தாமரை, குவளை, செங்கழுநீர், சண்பகம், குருந்து, மல்லிகை, முல்லை, இருவாட்சி ஆகிய மலர்களைக் கொண்டு சாரமாமுனிவர் மூன்று காலங்களிலும் சிராமலை நாதரை வணங்கி பூசனையைச் செய்து வந்தார்.

**எந்த நாணமக் கிறையவ னருள்செயு மென்றே**
**புந்தி மேவுற நினைந்துமா முனியுறை பொழுதி**
**னைந்து மாமுக னேவலா லழைக்க வந்ததுபோன்**
**மந்த மாருதங் கொணர்ந்தது புதுமலர்**
**மணமே! 293**

(இ-ள்.) சிவபெருமான் நமக்கு எப்போது திருவருள் செய்வாரோ என்று சாரமாமுனிவர் நினைந்து இருந்தார். அப்போது, பஞ்சமுகங்களை உடைய சிராமலை நாதரும் ஆணையாய் அழைக்க வந்தது போல ஒரு புதுமையான மலருடைய மணத்தைச் சுமந்து தென்றல் வீசியது.

**இன்ன பூமண மெதுவெனத் தெளிகிலா னிறைவன்**
**சொன்ன பூமண மிதுவென மனத்தினாற் றுணிந்தா**
**னன்ன போதினை யரியயற் கரியவற் கணிந்தார்க்**
**கென்ன பேறரி தென்பெற வருள்செயா**
**னென்றான். 294**

(இ-ள்.) இந்த மணம் எந்த மலரினுடையது என்று ஐயுற்றார். பின்னர் சிவபெருமான் முன்னரே கூறிய மலரின் மணம் இதுவென்று முடிவு செய்தார். பிரம்மனும், திருமாலும் காண இயலாத கடவுளுடைய முடிமேல் அணிந்த பேர்களுக்குக் கிடைக்காதது எது? முக்தி முதலிய அனைத்துப் பதவிகளையும் அவர் அருளுவார் என்று முனிவர் நினைத்தார்.

**தாணு வானவற் கிம்மல ரணிந்தவர் தம்மைக்**
**காண வேண்டுமென் றிருந்தன னவன்றுயில் கனவி**
**னாண றாமட மாதர்தம் வரவெலா நாளை**
**வேண வாவினாற் றெளியலா மறைந்து**
**நீவினவில். 295**

(இ-ள்.) தாணுவாகிய சிவபெருமான் இந்த மலரை அளித்தவர்களைப் பார்க்க வேண்டுமென்று நினைத்தார். பின்பு அவர் கனவில் இறைவன் தோன்றி இந்த மலர்களைக் கொண்டு வரும் நாணமும் இளமையும் பொருந்திய மாதர்களிடம் இருந்தே அதனை நீ நம்முடைய சந்நதியில் காணலாம். மறைந்திருந்து பார்ப்பாயாக!

மனதி லெண்ணமு முடிந்திடு மெனச்சொலி
மறைந்தான்
கனவு தீர்த்தபி னற்றையின் கடனெலாங் கழித்தா
னினன கன்றவல் லிருளிலோர் புறத்தொளித்
திருந்தான்
பனக நாட்டினு மடந்தையர் நடந்தனர் பரவ 296

(இ–ள்.) இதனைக் கூறிய இறைவன் மறைந்தார். சாரமா முனிவரும் காலையில் எழுந்து நித்திய கடமைகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு மாலையிருள் வந்தபோதுச் சன்னதியில் ஒரு புறத்தில் மறைந்திருந்தார். அப்போது சிவபெருமானை வணங்கிப் பூசிக்க நாகலோகத்திலிருந்து நாககன்னியர் வந்தனர்.

மண்ணி னிற்சிவ தடத்தொரு பிலத்து நல்வழியா
னண்ணி யற்புத மடந்தைய ரெழுவரு நடந்து
புண்ணி யச்செழும் போதுடன் புகன்றிடு பொருள்க
ளெண்ணி ரட்டியுங் கொணர்ந்துவந் தருச்சனை
யியற்றி 297

(இ–ள்.) சிவதீர்த்தத்தில் அமைந்துள்ள நிலத்துவாரத்தின் நல்ல வழியாக நாக கன்னியர் எழுவரும் வந்தனர். புண்ணியமான மலரான செவ்வந்தி மலருடன் சோடச உபசாரங்களும் கொண்டு வந்து இறைவனுக்கு அருச்சனை செய்தனர்.

மின்னை நேருவார் வலஞ் செய்து வணங்கினர் மீண்டார்
மன்னு மாதவ னெழுந்தனர் முன்புபோய்
வளைந்தான்
கன்னி மார்களு மதிசய மிதுவெனக் கருதி
யென்ன காரண மிவனமைத் தடுத்தவா றென்றார். 298

(இ–ள்.) மின்னலைப் போன்ற அந்த நாக கன்னியர்கள் இறைவனை வலம் வந்து வணங்கி நாகலோகத்துக்குச் செல்ல திரும்பினர். அப்போது மாதவராகிய சாரமாமுனிவர் அந்தக் கன்னியரைத் தடுத்தார். அதனைக் கண்ட அக்கன்னியர்கள் இது அதிசயம் என்று எண்ணி நம்மை இவர் தடுத்தது என்ன காரணம்? என்று சிந்தித்தனர்.

**எண்ணில் காலமா விருட்பொழு திடையிவ ணெய்தி**
**யண்ண லார்பதந் தொழு துமீண் டெம்முல கடைவோங்**
**கண்ணி னாலெமை யொருவருங் கண்டதாக் காணோம்**
**புண்ணி யாபுகல் யாவனீ யெனமுனி புகழ்வான்! 299**

(இ—ள்.) அளவற்ற காலமாக இருட்பொழுதில் நாங்கள் இங்கு வந்து இறைவனைத் தொழுது வணங்கி செல்கிறோம். இதுவரையில் எங்களை யாரும் கண்ணால் கண்டதில்லை. புண்ணியத்தை உடையவனே, நீ யார்? என்று சொல்வாயாக! என்று அவர்கள் கேட்டனர். அதற்கு சாரமாமுனிவர் பதிலுரைத்தார்.

**என்ற னாமமுஞ் சாரனென் றிசைப்பரீ திருக்கச்**
**சென்று மாதவ ரிருடியர் மானவர் தேவர்**
**நன்றி யாலர னருச்சனை புரிவதே நன்மை**
**யன்றி மங்கைய ரருச்சனை புரிந்திட லாமோ! 300**

(இ—ள்.) பெண்களே என் பெயர் சாரன். சிவாலயத்தில் மாதவர்களும், முனிவர்களும், தேவர்களும், மனிதர்களும் பக்தியினால் சிவ அருச்சனை செய்வதே நன்மை. பெண்கள் அருச்சனை செய்யலாமோ? என வினவினார்.

**அஞ்சு சுத்தியும் புரிந்துநல் லாகமத் தடைவே**
**வஞ்சி மங்கையர் பூசனை முடிப்பது வழக்கன்**
**றஞ்ச லிப்பதே கருமமஃ தடுக்கழி வென்றா**
**னஞ்ச கற்றிய காருட மியற்றிய நாவான் 301**

(இ—ள்.) பஞ்ச சுத்திகளும் செய்து சிவாகமத்தின் வழி மாதர்கள் பூசனை செய்வது நீதியன்று. அஞ்சலி செய்து வணங்குவதே நீதி. நீங்கள் செய்வது முறையல்ல, என்று நாக கன்னியரின் விசப்பார்வை தம்மேல் பாயாமல் இருக்க விசத்தை நீக்கும் காருட மந்திரம் என்னும் பஞ்ச மந்திரத்தை உச்சரிக்கும் முனிவர் சாரமாமுனிவர் கூறினார்.

**உத்த மத்தவ னிவ்வணஞ் சொலவவ ருரைப்பார்**
**பத்தி பெற்றவர் யாவரும் பணியலாம் பரனைப்**
**புத்த னாரவ ரெறிந்தது சிலைகொலோ போதோ**
**முத்தி பெற்றவ னல்லனோ வேடனு மொழிவீர்! 302**

(இ–ள்.) உத்தமமுனிவர் இங்ஙனம் கூற நாக கன்னியர், பக்தி உடையவர்கள் எல்லாரும் சிவபெருமானைப் பூசிக்கலாம். பௌத்த மதத்தில் அவதரித்த சாக்கியநாயனார் பக்தியோடு எறிந்த கல் இறைவனுக்கு மலராயிற்று அல்லவா! அதுமட்டுமல்லாமல் வேடர் குலத்தில் பிறந்த கண்ணப்பநாயனார் முக்தியைப் பெறவில்லையா?

**யானை யேமுத லெறும்பது கடையதா வனைத்தும்**
**வான நாடனை வழிபட வில்லையோ மலரான்**
**ஞான முற்றவ ரல்லரோ கிரியையி டைப்போ**
**ரேனை யோர்க்கெலாம் பத்தியே மூலமென் றிசைத்தார்303**

(இ–ள்.) யானை முதல் எறும்பு வரை சிவபெருமானை வழிபட வில்லையா? மலையில் நடப்பவர் ஞானத்தை அடைந்தவர்கள் அல்லவா? சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றை உடைய எல்லார்க்கும் மூலமாக இருப்பது பக்தியே என்று சாக கன்னியர் கூறினர்.

**வீர வேல்விழி மடந்தைய ரிவையெலாம் விளம்பச்**
**சார மாமுனி மொழிவனீ ருரைத்தது தகவே**
**யீர வன்பினார்க் கருளுப தேசமு மெய்திற்**
**சேரு நன்கனி பாலுடன் கலந்திடு செயலாம். 304**

(இ–ள்.) வேல் போன்ற கண்களுடைய அந்த நாக கன்னியர் இங்ஙனம் கூற, சாரமாமுனிவனும் சரியென்று கூறினார். ஆயினும் பக்தி உடையவர்க்கு குரு உபதேசமும் சேர்ந்தால் அது பாலுடன் கலந்த பழம்போல் ஆகும் என்று கூறினார்.

பரவு கூர்விழி விடத்தினாற் கடிதடப் படத்தான்
மருவு நீண்மணிச் சுடிகையா லரவென வாலா
லுரக நாட்டுறை மடந்தையர்க் கொருபுடை யொப்பீர்
தெரிகி லேனுமை யாவர்நீ ரெனவுரை செய்வார்.305

(இ–ள்.) பரந்த கண்களும் நஞ்சு பொருந்திய படமும், அதில் பொருந்திய இரத்தினச் சுடிகையும் கொண்டு நீங்கள் நாக கன்னியரைப் போல் இருக்கின்றீர்கள். உங்களை யார் என்று என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. நீங்கள் யார்? என்று சாரமாமுனிவர் வினவினார்.

**நாக நாட்டுறை யிறையவன் புதல்வியர் நாங்க**
**ளேக மாகவே யித்தலத் தெழுவரு மெய்திச்**
**சோக நீங்கிடப் பாதலப் புதுமலர்த் தொடுத்துப்**
**பாக வான்மதி முடியவற் கணிகுவோம் பரவி 306**

(இ—ள்.) நாங்கள் எழுவரும் நாகலோகத்தில் இருக்கின்ற அரசருடைய மகள்கள் ஆவோம். எங்களுடைய பிறவித் துன்பத்தை நீக்குதல் வேண்டிப் பாதாளத்துப் புதுமலர்களால் மாலை தொடுத்து ஒன்றுபட்ட மனத்தோடு, நிறையணிந்த சிராமலை நாதரை வணங்கி வருகிறோம்.

### *கலிவிருத்தம்*

**தத்துவங் கடந்தவர் தாயி னல்லவர்**
**பத்தருக் கினியவர் பரம யோகியர்**
**சித்தருக் கெளியவர் திருவி னாயகர்**
**புத்திரர்க் கரியவ ரென்று போற்றினார்! 307**

(இ—ள்.) இவர் தத்துவம் கடந்தவர். தாயினும் நல்லவர். அடியவர்களுக்கு இனியவர். யோகியர்களுக்கும், சித்தர்க—ளுக்கும் எளியவர். திருமாலும் பிரம்மாவும் தேடிக் காண்பதற்கு அரியவர் என்று சாரமாமுனிவருக்குக் கூறி, அந்த நாக கன்னியர் இறைவனை வணங்கினர்.

### *கலிநிலைத் துறை*

**அரிவை மீரும தருச்சனை யழகிய ததற்கே**
**குரவர் பாலுப தேசமு நலமெனக் கூறப்**
**பரவி நல்லுப தேசநீ ரருள்கெனப் பகர்ந்தார்**
**தெரிவை மார்களுக் கருளினா னவனுப தேசம் 308**

(இ—ள்.) பெண்களே! உங்கள் அருச்சனை அழகியது. நீங்கள் குரு உபதேசமும் பெற்றுவிட்டால் மிகுந்த நலமாய் இருக்கும் என்று சாரமாமுனிவர் கூறினார். அப்பொழுதே அவர்கள் முனிவரை வணங்கி அந்த நல்ல உபதேசத்தை நீரே அருள் செய்ய வேண்டுமென்று வேண்டினார்கள். அக்கணமே சாரமாமுனிவர் நாக கன்னியர்களுக்கு உபதேசம் செய்தார்.

**அடிக ளேயுமக் கடியவர்க் கடியரேம் பதிக்கு**
**விடைகொ டேகுவோ மெனச்சொலிப் பதத்தின்மேல்**
**வீழ்ந்தார்**
**படவ ராவிறை புதல்விய ரெழுவரைப் பார்த்துத்**
**தொடர்ப தானதன் பிறவியின்வர வெலாஞ்**
**சொன்னான்! 309**

(இ—ள்.) முனிவரே, உங்கள் அடியார்க்கு அடியவராகிய நாங்கள், எங்களின் இருப்பிடத்திற்குச் செல்ல விடை தரவேண்டும் என்று வணங்கினார்கள். சாரமாமுனிவரும் நாக கன்னியரை நோக்கித் தன்னுடைய பிறவியின் வரலாற்றைக் கூறலானார்.

**இற்றை நாளிலென் கனவினி லிறையவ னெய்தி**
**யுற்ற வுங்களைக் காண்பது முதலெலா**
**முரைத்தான்**
**கற்றை வார்குழன் மடந்தையீ ரவ்வணங் கண்டேன்**
**சுற்ற மாயினீ ருமக்குநங் கருத்தினைச்**
**சொல்கேன். 310**

(இ—ள்.) இன்று என்னுடைய கனவில் சிவபெருமான் தோன்றி உங்களைக் காண வேண்டுமென்று அருளிச் செய்தார். அடர்ந்த நீண்ட கூந்தலையுடைய பெண்களே! உங்களைக் கண்டேன். நீங்களும் எனக்குச் சுற்றமானீர்கள். என் கருத்தினைக் கூறுகிறேன் கேளுங்கள்.

பாத லத்தினீர் கொணர்ந்தவிப் புதுமலர் பலவும்
பூத லத்திலே கொணர்ந்துநல் லருச்சனை புரியி
னேத மற்றிடு முத்தியா மெனவிறை யிசைத்தா
னாத விற்புது நாண்மலர் வேண்டினோ மதற்கா 311

(இ—ள்.) நாக கன்னியரே! நீங்கள் நாகலோகத்திலிருந்து கொண்டு வந்த இம்மலர்களைப் பூலோகத்தில் பயிர் செய்து, அவற்றை எடுத்து அருச்சனை செய்தால் முக்தி உண்டாகும் என்று இறைவன் கூறினார். ஆதலால், அந்தப் புதிய மலர்களை நாம் விரும்பினோம்.

உங்க ணாட்டின்யாம் வருகுவோம் வருந்திற
முரையீர்
தங்க நாட்டிய நிறத்தினீ ரெனச்சொனான் றவத்தோ
னெங்க ணாட்டினீர் வருகுவ தரிதரி தென்றார்
கொங்கை நாட்டமென் றிரண்டினுங்
கொலைசெயுங் கொடியார் 312

(இ-ள்.) அந்த மலருக்காக உங்களுடைய நாட்டிற்கு நாம் வருகின்றோம். பொன் போன்ற பெண்களே வழி கூறுங்கள் என்றார் சராமாமுனிவர். அதற்குத் தம்முடைய மார்பகங்களாலும், கண்களாலும், ஆடவர்களை மயக்கி வருத்தும்படியான கொடி போன்ற அந்தப் பெண்கள் எங்களுடைய நாட்டிற்கு நீங்கள் வருவது மிகவும் அரிது என்று கூறினார்கள்.

பிலம தாம்வழி யுலகெலாங் கடுவிருட் பிழம்பு
விலகொ ணாநதி யாவது மாசுண விடநீ
ரிலகு மன்னனைக் காணவு மருமையுண் டெவர்க்கு
மலரு மக்குவந் தெய்துமோ வருமையோ
வறியோம்!313

(இ-ள்.) முனிவரே! எங்களுடைய நாட்டிற்குச் செல்லும் வழியாகிய பிலத்துவாரம் இருள் சூழ்ந்திருக்கும். நஞ்சு நதியாக ஓடும். எங்கள் அரசனைக் காண்பது எளிதன்று. ஆதலால் நீங்கள் விரும்பிய மலர் உங்களுக்குக் கிடைக்குமோ, கிடைக்காதோ நாங்கள் அறியோம்.

என்று கூறினார் யாவையு மிறையவ னியற்கை
யன்றி வேறிலை யடியவர் நினைவெலா மளிப்பான்
சென்று போதுமென் றுரைத்தனன் யோகியர் திலக
னன்று நீரெழுந் தருள்கவென் றவருமுன்
னடந்தார். 314

(இ-ள்.) இவ்வாறு நாக கன்னியர் கூறியதைக் கேட்ட சாரமாமுனிவர் எல்லாம் சிவபெருமானுடைய செயல் என்றார். அடியவர் நினைத்ததை அவர் தருவார். ஆதலால் உமது நாட்டிற்கு வருவோம் என்று உரைத்தார். அப்பெண்களும் வருக! என்று கூறி முன்னே சென்றனர்.

சிவத டக்கரைப் பிலவழி முனியுடன் சென்று
தவமு தற்றனை யொருபுடை நிறுத்தியே தந்தைக்
குவகை யுற்றிடத் தவமுனி வரவினை யுரைத்தார்
பவம கற்றினான் றனையழை யெனவவர்
பணித்தார்! 315

(இ–ள்.) சிவதீர்த்தத்தின் கரையிலுள்ள பிலத்துவாரத்தின் வழியே சாரமாமுனிவருடன் அப்பெண்கள் சென்றனர். அவரை ஒரு பக்கத்தில் நிறுத்தினர். தம்முடைய தந்தையாகிய நாக அரசனிடம் சென்று முனிவர் வருகையை உரைத்தனர். அரசனும் பிறவி நீங்கிய முனிவரை அழைத்து வரும்படிக் கூறினான். அப்பெண்களும் முனிவரை அரசன் முன்னே அழைத்துச் சென்றனர்.

வந்த மாதவ முனிவனைத் தவிசின்மேல் வைத்திட்
டெந்த மாதவ மியற்றினே னீர்வர வென்றா
னந்த மாதவ னுரைசெய் வானுலகமா மனைத்து
முந்து மல்லிகை யரும்பென முடித்திடு முதலே.316

(இ–ள்.) அரசன் முனிவரை ஆசனத்தில் அமர்த்தினான். தாங்கள் இங்கே வருவதற்கு நான் பெரும் தவம் செய்திருக்க வேண்டும் என்றான். சாரமாமுனிவர் அவனை நோக்கி உலகம் அனைத்தையும் மல்லிகை அரும்பைப் போல தலையில் சூடியுள்ள மன்னனே!

வைய முண்டவன் றன்னையுந் தாங்கிடு மணியே
யைய னாடலை விழியினா லருந்துநல் லமிர்தே
மெய்ய தாகவே வியாகர ணங்களை விரித்தோ
யுய்யு மாறுனை யடைந்தன னெனவவ
னுரைப்பான் 317

(இ–ள்.) உலகத்தை உண்ட திருமாலையும் பள்ளியாக இருந்து தாங்கிடும் மணியே! சிவபெருமான் சிற்சபையில் ஆடும் நடனத்தைப் பதஞ்சலி என்னும் முனிவராக இருந்து காணுகின்ற அமிர்தமே! உண்மையாக வியாகரண நூல்களைக் கூறியவனே! நான் கடைத்தேறும் வண்ணம் உன்னை அடைந்தேன் என்று சாரமாமுனிவர் கூற ஆதிசேடன் பேசத் தொடங்கினான்.

வந்த காரியம் யாதென வுரைசெய்வான் மணச்செவ்
வந்தி மாமலர் வேண்டியே யிவ்விடை வந்தே
னெந்தை யாயரு ளென்றன னெழுவரு மிசைந்தார்
தந்தை பான்முனி பிறப்புமற் றவன்செயுந்
தவமும் 318

(இ—ள்.) நீங்கள் வந்த காரியம் யாது? என்று ஆதிசேடன் கேட்க, யான் மணம் பொருந்திய செவ்வந்தி மாமலரை விரும்பி வந்தேன். அய்யனே! அது கிடைக்க அருள் செய்யவேண்டும் என்றார். அப்பொழுது நாக கன்னியர்கள் சாரமாமுனிருடைய பிறப்பையும், தவத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

மாத வத்தனே நறுமலர்ப் புதலைமண் ணுடனே
கோத கற்றியே கொண்டு போதுக
வெனக்கொடுத்திட்
டாத வற்கிணை யானசெம் மணிகளு மளித்து
மேதி னிக்கணே யருச்சனை புரிகென
விடுத்தான்! 319

(இ—ள்.) பெருமையுடைய தவமுனிவரே! மணமுள்ள செவ்வந்தி மலர்ச் செடியை மண்ணுடனே குற்றம் அகற்றி எடுத்துச் செல்வீராக! அத்துடன் இந்த மாணிக்க மணிகளையும் எடுத்துச் சென்று சிவபெருமானை அருச்சனை செய்வீராக! என்று கூறிச் சாரமா்முனிவரை ஆதிசேடன் அனுப்பினான்.

தன்க ணங்களிற் சிலர்தமை யழைத்திவர் தமக்குப்
பின்பு சென்றிடு மெனச்சொனா னவருடன் பெயர்ந்து
மின்கு லாவமு னடந்துநீள் பிலவழி மீண்டு
வன்பினாமுனி யவையெலாங் கோயின்முன்
வைத்தான்! 320

(இ—ள்.) மேலும், தன்னுடைய மக்களில் சிலரையும் முனிவருடன் அனுப்பி வைத்தான். அன்பில் சிறந்த சாரமா முனிவரும் பிலத்துவாரத்தின் வழியே வந்து ஆலயத்தில் இறைவன் முன்னே அவற்றை வைத்தார்.

## *கலிவிருத்தம்*

வரமுனி கொணர்ந்தசெவ் வந்தி மாமுத
றரணியுந் தரணியிற் தருதல் வேண்டியோ
விரிகதிர்க் கரங்களை யூன்றி மேற்றிசை
யிருளுறு பாதலத் திறங்கி யிட்டதே! 321

(இ-ள்.) சாரமாமுனிவர் சிவ அருச்சனைக்காகக் கொண்டு வந்த அந்தச் செவ்வந்தி மலரின் செடியைத் தானும் அவரைப் போல பாதாள உலகத்திலிருந்து கொண்டுவர வேண்டுமென்று விரும்பியவனைப் போல, தன்னுடைய கரங்களாகிய கதிர்களை மேற்குத் திசையில் ஊன்றி, பாதாள உலகத்தில் இறங்கியதைப் போல கதிரவனும் மறைந்தான்.

முகிழ்நகை யிளமுலை முளரி வாண்முகப்
புகரயில் விழியினார் புலவி நீங்கினார்
மகிதல மிசைந்துசெவ் வந்தி வந்ததென்
றகிலமு நிறைந்துசெவ் வந்தி யானதே! 322

(இ-ள்.) தாமரை அரும்பு போன்ற மார்பகங்களையும், தாமரை மலர் போன்ற முகங்களையும், வேலாயுதம் போன்ற விழிகளையும் உடைய பெண்கள், தம் கணவரிடையே கொண்ட ஊடலை விலக்கிக் கொள்ளும் மாலைக்காலம் வந்தது. பூலோகத்திற்குச் செவ்வந்தி மலர் வருவதை எல்லோர்க்கும் அறிவிப்பதைப் போல செவ்வானம் பரவியிருந்தது.

மேனிறைக் கங்குலின் விரிந்து வெள்ளிய
பானிறை யுடுக்கணம் பலவுந் தோன்றுதன்
மாநிலம் பாதல மலரைக் காட்டுமுன்
வானமுங் காட்டிய வாறு போலுமே! 323

(இ-ள்.) இருள் பொருந்திய நேரத்தில் பால் போன்ற வெண்மையாக நிறைந்த விண்மீன்களின் கூட்டம் வானத்தில் தோன்றியது. அது பாதாளலோகத்தின் செவ்வந்தி மலரை மண்ணுலகம் காட்டுவதற்கு முன் விண்ணுலகமும் காட்டியது போலிருந்தது.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**அட்டமா நாகந் தம்முட்**
**குணதிசை யரவந் தங்க**
**விட்டமாம் மிறைவ னீந்த**
**புதன்மல ரெடுக்கும் போது**
**கொட்டிய பழுது பார்த்துக்**
**குயிற்றெனக் கொடுத்த வெள்ளித்**
**தட்டமா மென்னக் கீழ்பாற்**
**சந்திர னுதயஞ் செய்தான் 324**

(இ–ள்.) எட்டுத்திக்கு நாகங்களுக்குள் கிழக்கிலுள்ள நாகமானது, தாம் விரும்பும் நாக அரசனால் கொடுக்கப்பட்ட செவ்வந்திச் செடியிலிருந்து மலர்களை எடுக்கும் பொழுது, அவற்றைக் காட்டிப் பழுது பார்க்க, சாரமாமுனிவருக்குக் கொடுத்த வெள்ளித்தட்டைப் போல, கீழ்த்திசையில் சந்திரன் தோன்றினான்.

### *கலிநிலைத் துறை*

**கோத்த நித்தில மணியென மதியுடன் குழுமிப்**
**பூத்த மீனெலா மகன்றன விடிந்தது பொழுது**
**வாய்த்த மாமுனிக் குதவியாய் மகபதி வகுத்த**
**வேற்ற மானதின் பதலைபோற் கதிரவ**
**னெழுந்தான்! 325**

(இ–ள்.) கோத்த முத்துகளைப் போல சந்திரனுடன் தோன்றிய விண்மீன்கள் மறைந்தன. பொழுதும் புலர்ந்தன. தண்ணீர் இறைப்பதற்கு உதவியாகச் சாரமாமுனிவருக்கு இந்திரன் கொடுத்த தாழியைப் போல, கீழ்த்திசையில் சூரியன் உதித்தது.

**அந்த வேளையி னொருமொழி யுரைசெய்வா னமல**
**னிந்த நற்புதன் முதலையிவ் விடத்திலே யிசைத்தா**
**லந்த நற்புத லொன்றுநூ றனந்தமாய் வளரும்**
**புந்தி யுற்றநம் மடியர்கைத் தானமே போல 326**

(இ–ள்.) இந்த செவ்வந்திப் பயிரை இந்த இடத்தில் பயிர் செய்தால் அது ஒன்றுக்குக் கோடியாய் வளர்ந்து விருத்தியாகி மலரைத் தரும். எப்படி நல்ல அடியவர் கையில் கொடுத்த தானம் செழித்துப் பெருகுமோ அப்படிப் பெருகும் என்று அசரீரியாக இறைவன் கூறினார்.

## *கலிவிருத்தம்*

**அம்மொழி கேட்டபி னதனை யாங்கவன்**
**மெய்மலை மேற்றிசை யடைய வித்தினா**
**னம்முத லனந்தமா யரும்பி யெங்கணுங்**
**கொய்மலர் விரிந்துதேன் கொப்பு ளித்ததே! 327**

(இ–ள்.) அதனைக் கேட்ட சாரமாமுனிவர் சிராமலையின் மேற்குத் திசையில், செவ்வந்தியை வைத்துப் பயிர் செய்தார். அந்தச் செடி எண்ணற்ற செடிகளாகத் தழைத்து அரும்பு விட்டுத் தேன் சிந்தும் மலர்களாகப் பூத்துக் குலுங்கியது.

**சிவதடப் புனலினாற் றெளிந்த போதுகொய்**
**துவகையிற் சங்கநீ ரொருங்கு வீசியே**
**தவமுனி யனுதின மிறைக்குச் சாத்தினான்**
**கவலையும் பாவமுங் கரந்து போயவே! 328**

(இ–ள்.) சாரமாமுனிவர் சிவதீர்த்த நீரில் வளர்ந்த செவ்வந்தி மலர்களைக் கொய்தார். மகிழ்ச்சியோடு சங்கிலுள்ள நீரால் தூய்மை செய்து நாள்தோறும் சிராமலை நாதருக்குச் சாத்தி வந்தார். அவருடைய கவலையும், பாவமும் மறைந்து ஓடின.

**பொறைநிறை தவமுனி புனைந்த தாரினா**
**லறுகணி முடிப்பிறை யழகு பெற்றது**
**மறுவற விளைந்தசெவ் வந்தி மாலையாற்**
**பிறையொளி விடுவது பேச வேண்டுமோ! 329**

(இ–ள்.) பொறுமையும், பெருமையும் உடைய சாரமாமுனிவர் புனைந்த செவ்வந்தி மாலையினால் இறைவன் முடியிலுள்ள பிறை நிலவும் அழகைப் பெற்றது. குற்றமில்லாமல் வனையப்பட்ட அந்தச் செவ்வந்தி மலர் மாலையால் அந்தப் பிறை ஒளி பெற்றதைக் கூறவும் வேண்டுமோ!

### *கலிநிலைத் துறை*

**சார மெய்த்தவன் கதையினை யிடையிலே தடுத்துப்**
**பார முற்றதோர் கதையினை யுமக்கு நாம் பகர்வோஞ்**
**சூர வர்க்கனென் றியற்பெயர் படைத்திடு சோழன்**
**றார ணிக்கெலா மன்னைபோன் முன்னவ தரித்தான்!330**

(இ–ள்.) இப்படிப்பட்ட சாரமாமுனிவரின் கதையை இடையில் நிறுத்தி வேறு ஒரு பெருமைக்குரிய கதையை நாம் சொல்கிறோம். சூரவாதித்தன் என்னும் சோழமன்னன் உயிர்களுக்கெல்லாம், தாயைப் போல விளங்கினான்.

**ஏழு மாமுழ வாரணத் துச்சிமே லிருந்தோன்**
**வாழி குக்குட முயர்த்தொரு மயின்மிசை வருவோ**
**னாழி மாதவ னெனவுயி ரனைத்தையு மளித்துக்**
**கோழி மீதனி லிருந்தனன் பெரும்புகழ் குயிற்றி 331**

(இ–ள்.) அவன் ஏழு முழம் உயரம் பொருந்திய ஐராவதமாகிய வெள்ளை யானையின் மேல் அமரும் இந்திரனைப் போலச் செல்வமும், இன்பமும் பெற்றவன். சேவற்கொடியோன் ஆகிய, மயிலை மேலே வருகின்ற முருகனைப் போல அழகுப் படைத்தவன். சக்கராயுதத்தை உடைய திருமாலைப் போல உயிர்கள் அனைத்தையும் பாதுகாக்கின்றவன். பெரும்புகழோடு கோழி மாநகரமாகிய உறையூரிலிருந்து ஆட்சி செய்தான்.

**அந்த நாளிலோர் தினத்திலே மிருகயாத் திரைக்கு**
**வந்து கானகத் துலவிநற் றிரிசிரா மலையின்**
**முந்தி யேகினான் பின்னருஞ் சாரமா முனிவன்**
**கந்த மார்வனத் தருகினுந் திரிந்தனன் கங்குல் 332**

(இ–ள்.) அப்பொழுது ஒருநாள் மிருகவேட்டைக்குச் சென்று கானகத்தில் உலவினான். திரிசிராமலையின் முன்னே சென்று சாரமாமுனிவருடைய மணம்பொருந்திய நந்தவனத்தின் பக்கத்திலும், இரவுப் பொழுதில் திரிந்தான்.

**ஏக வீரனும் வேட்டைகொண் டுலவுமவ் விரவி**
**னாக கன்னிய ரெழுவரு மவ்விடை நடந்து**
**பாக நாரிய னருச்சனை புரியமுற் படியே**
**சோக நீக்கிடு சிவதடங் குடைந்தனர் தொகையாய் 333**

(இ—ள்.) அப்பொழுது நாக கன்னியர் எழுவரும் அங்கே வந்தனர். உமாதேவியைப் பாகமாகக் கொண்ட சிவபெருமானை அருச்சனை செய்ய தங்கள் வழக்கப்படி, துன்பங்களை நீக்கும் சிவ தீர்த்தத்தில் மூழ்கினர்.

*கலிவிருத்தம்*

**யுவதியர் கோதையி லொழுகு தேனினா**
**லவரவர் கயல்விழி யஞ்ச னத்தினாற்**
**குவிமுலை யெழுதிய குங்கு மத்தினாற்**
**சிவதட முழுவதுஞ் சேறு பட்டதே! 334**

(இ—ள்.) அந்தப் பெண்களுடைய கூந்தலில் அணிந்த பூமாலையிலிருந்து ஒழுகும் தேனாலும், அவர்களுடைய கெண்டை மீன் போன்ற கண்களில் தீட்டிய மை கரைந்ததாலும், குவிந்த மார்பகங்களில் பூசிய குங்குமத்தினாலும் அந்தச் சிவதீர்த்தம் முழுவதும் குழம்பிச் சேறாயிற்று.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**வேட்டைமேல் விருப்ப மாகி**
**கரைமிசை யுலவும் வேந்தன்**
**கோட்டுவார் முலையார் மூழ்கிக்**
**குளிர்ந்திடுஞ் செயலை நோக்கி**
**நாட்டமா யிரங்கள் வேண்டு**
**மெனச்சொலி நயந்தான் பின்னைக்**
**காட்டுமான் கவர்வான் மின்னார்**
**கலையெலாங் கவர்ந்து போனான் 335**

(இ—ள்.) வேட்டையின் மேல் விருப்பமுற்றுச் சிவ தீர்த்தக் கரையில் உலாவிய அந்த அரசன், யானைக் கொம்பு போன்ற மார்பகங்களை உடைய, நாக கன்னிகையர் சிவதீர்த்தத்தில் முழுகியதைப் பார்த்தான். அழகை முற்றிலும் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும் என்று வருந்தினான். பின்னர்

வேட்டையாடாமல் நாக கன்னியரின் ஆடைகளை எல்லாம் கவர்ந்து சென்றான்.

ஆயமங் கையர்க ளீரெண்
ணாயிர ரன்று வைத்த
தூயமென் கலையை வாரி
யொளித்தவச் சுதனே போலச்
சேயமென் கலைக ளெல்லாஞ்
சீருட னெடுத்துக் கொண்டு
மாயமோ வென்ன மற்றோ
ரிடத்திலே மறைந்து நின்றான் 336

(இ–ள்.) ஆயர்பாடியில் உள்ள பதினாராயிரம் இடைப் பெண்களின் ஆடைகளைக் கவர்ந்து சென்ற கண்ணனைப் போல் அந்த நாக கன்னியர்களுடைய சேலைகளை எடுத்துக் கொண்டு மாயமோ என்று சொல்லும்படியாக மற்றொரு இடத்தில் சூரவாதித்த சோழன் மறைந்து நின்றான்.

*கலிநிலைத் துறை*

கன்னி மார்களு மூழ்கிவந் தேறினார் கரையிற்
பொன்னின் மேகலை சொரிந்தன பதத்தின்மேற் புனலை
யன்ன மாதரைச் சிவதடப் புனலெனை யகலா
தின்னம் வாருமென் றழைத்தடி பணிந்ததா
மெனவே 337

(இ–ள்.) அப்பொழுது நாக கன்னியர் முழுகிக் கரையேறினர். அவர்களுடைய பாதத்தின் மேல் பொன் மேகலை நீரைச் சொரிந்தது. அது சிவதீர்த்தத்தின் நீரானது நீங்கள் என்னை விட்டு நீங்காமல் இன்னும் முழுகுவதற்கு வாருங்கள் என்று அடிபணிந்தது போல் இருந்தது.

வைத்த வெல்லையிற் றேடினார் கலைகளை மானா
ரித்த டக்கரை யெய்தியார் கவர்ந்தவ ரென்றார்
சத்தியம் மிவை கவர்ந்தபேர் தாம்விடத் தழலுந்
கொத்த விந்தன மாவரே யெனச்சொலி
யுளைந்தார் 338

(இ—ள்.) நாக கன்னியர் தங்கள் ஆடைகளைத் தேடினர். அவற்றைக் காணாமல், இந்தத் தீர்த்தக்கரையில் இந்த நேரத்தில் வந்து இந்த ஆடைகளை கவர்ந்தவர்கள் யார்? அவர்கள் நமது நஞ்சாகிய நெருப்புக்கு விறகாய் எரியட்டும் என்று சினத்தோடு வருந்தினார்கள்.

**இன்று பூசனை விலக்கிய பாவியங் கெவனோ**
**வென்று கூறிநொந் திரங்கினா ரவர்களுந் கெதிரே**
**குன்று போலிறை நடந்தனன் மடந்தையர் கூட**
**நின்ற மாசுண மிறைத்தன விடங்களா நெருப்பை 339**

(இ—ள்.) இன்றைக்கு நாம் செய்யும் பூசனையை விலக்கிய பாவி எவனோ? என்று சொல்லி மனம் நொந்து நாக கன்னியர் அழுது கொண்டிருக்கும் பொழுது மலையைப் போல சோழமன்னன் நாக கன்னியர் அருகில் வந்தான். அவனைப் பார்த்த நாக கன்னியரின் அருகில் நின்ற பாம்புகள் நஞ்சாகிய நெருப்பை வாரி இறைத்தன.

**கடுவி றைந்திடும் கனவெலாங் கருடமந் திரத்தாற்**
**பொடிப டுத்திநன் புனலிடைப் புகுந்தவன்**
**போன்றான்**
**வடவை யொப்பெனும் விடத்தினைக் கருடமந்**
**திரத்தாற்**
**றடைப டுத்தினா னிவனெவ னெனவதி சயித்தார்.340**

(இ—ள்.) அந்த நஞ்சை எல்லாம் கருட மந்திரத்தினால் பொடி பட்டு ஓடும்படிச் செய்து அந்த மன்னன் நல்ல நீரில் முழுகியவனைப் போல குளிர்ச்சியோடு நின்றான். வடவாமுகாக் கினியைப் போன்ற நஞ்சினைக் கருட மந்திரத்தினால் தடை செய்த இவன் யார்? என்று எண்ணி அந்த நாக கன்னியர் வியப்புற்றார்கள்.

**ஓதி மம்பொரு நடையினார் பயந்துநின் றுரைப்பா**
**ராதி மன்னனீ யென்பதுன் வடிவினா லறிந்தோம்**
**பேதை வஞ்சியர்க் கிடர்விளைத் திடுவரோ**
**பெரியோர்**
**நீதி யல்லவு நல்லற மல்லவு நினைந்தாய் 341**

(இ—ள்.) அன்னம் போன்ற நடையுடைய அவர்கள், உலகத்தை ஆள்கின்ற அரசன் நீ என்பதை உன் தோற்றத்தினால் அறிந்து கொண்டோம். பேதையாகிய பெண்களுக்குப் பெரியோர்கள் துன்பம் தருவார்களா? அது நீதியுமன்று. தருமமுமன்று என்று அரசே! நீ நினைவாயாக.

**அலைவ கற்றுவ வுயிரினுக் கழகினை யளிப்ப**
**வுலகி னுக்கெலா முதவிய மகிழ்ச்சியை யுடைய**
**கலையெ னப்படு மறுபத்து நாலையுங் கடந்தோ**
**யிலகு மெங்கலை பறிப்பது நீதியோ வென்றார்.342**

(இ—ள்.) உயிர்களுக்குத் துன்பங்களை நீக்கி இன்பங்களைக் கொடுப்பதும், எல்லா உலகத்திற்கும் உதவி செய்வதும், மகிழ்ச்சி உடையதாய் இருப்பதும் கலையாகும். அப்படிப்பட்ட அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்து கடந்த அரசனே! நீ இப்பொழுது எங்களுடைய ஆடையைப் பறிப்பது நீதியோ? என்று அப்பெண்கள் கூறினார்கள்.

**தூம முண்டிருண் டலைதருங் குழலியர் சொல்ல**
**வூம னென்னவே யுரைசெயா தேகினா னுரவோன்**
**றாம வேலினான் வீரவேள் சூரவா தித்த**
**நாம னாடிது வல்லவோ வென்றுபி னடந்தார். 343**

(இ—ள்.) அகில் புகையை உண்டு, இருண்ட கூந்தலை யுடைய, அப்பெண்கள் கூறியதைக் கேட்டு, விடையொன்றும் கூறாமல் ஊமையைப் போல் சூரவாதித்தன் சென்றான். அப்பொழுது வெற்றி மாலை பொருந்திய வேலாயுதத்தை உடைய சூரவாதித்தச் சோழன் ஆட்சி செய்கின்ற நாடு இது அல்லவா! என்று கூறி நாக கன்னியர் அவன் பின்னே நடந்தனர்.

**சூர வர்க்கனு மொழிகுவான் மடந்தைமீர் சொன்ன**
**பேரெ மக்குள துமக்குநா னிழைத்தது பிழையோ**
**வேரெ டுத்தசீ ரெழுவரி லொருவரை யிசையுங்**
**கார ணத்தினான் மறைந்துநான் வாரினேன்**
**கலையை 344**

(இ—ள்.) கன்னியர்களே! நீங்கள் சொன்ன பெயர் எமக்கு உள்ளது. நான் செய்தது குற்றமன்று. அழகு பொருந்திய உங்களில்

ஒருவரை மணக்க வேண்டும் என்னும் காரணத்தினால் உங்களுடைய ஆடைகளை நான் எடுத்தேன் என்று சூரவாதித்தன் கூறினான்.

**அன்ன தாகுமென் றவரவர் கலையெலா மளித்துச்**
**சொன்ன போததற் குடன்படா தவர்களுஞ் சொல்வார்**
**மன்ன நீயெமைத் தந்தைதாய் கொடுத்திட வரையா**
**தின்ன வாசகம் பகருவ ததுபழு தென்றார் 345**

(இ-ள்.) பின்னர் அந்த ஆடைகளை அவர்களிடமே கொடுத்தான். அரசே, நீ எங்களுடைய தாய் தந்தையர் உனக்குக் கொடுத்திட விவாகம் செய்து கொள்ளாமல் இப்படி எங்களிடம் கூறுவது பிழையாகும் என்றனர்.

**அரவ நாட்டவர் கடற்புவி யரசருக் காமோ**
**விருளை நேர்விட மமிர்துடன் சேருமோ வென்றா**
**ராச னோதுவா னுரகநாட் டவர்மணி யன்றோ**
**விரவி போலவெம் முடியின்மே லிருக்கும**
**தென்றான் 346**

(இ-ள்.) நாகலோகத்துப் பெண்கள், பூலோகத்து அரசருக்குப் பொருத்தமாக மாட்டார்கள். இருள் போன்ற நஞ்சு, அமிர்தத்துடன் சேர இயலாதென்று நாக கன்னியர் கூறினர். அதைக்கேட்டு நாகங்கள் ஈன்ற மாணிக்க மணிகள் அல்லவா எங்களுடைய முடிகளின் மேல் சூரியனைப் போல பிரகாசிக்கின்றன.

**உங்க ணாட்டிறை யருளினா லுங்களை வரைதற்**
**கெங்க ணாட்டினின் றும்முடன் வருகுவே னென்றான்**
**செங்க ணாட்டிய மலரெலாஞ் சிவனடி சேர்த்துத்**
**தங்க ணாட்டினி லணுகினா ராசனுந் தாமும் 347**

(இ-ள்.) உங்களுடைய தந்தையின் அருளால் உங்களை மணப்பதற்கு இவ்வுலகத்திலிருந்து உங்களுடன் வருகிறேன் என்று சூரவாதித்தன் கூறினான். அதற்குச் சம்மதித்து நாக கன்னியர் சிவபெருமான் திருவடியில் செவ்வந்தி மலரிட்டு அருச்சித்துப் பின்னர் அரசனுடன் நாகலோகம் சென்றனர்.

**சூதடுத்தபூண் முலையினார் தாதையைத் தொழுது**
**பாதலத்துநின் பெருமையும் வளமையும் பார்க்கப்**
**பூதலத்தினோ ராசனீங் கணைந்துபூம் பொழிலின்**
**மீத டுத்தன னெனச்சொல விறைவனும்**
**வியந்தான் 348**

(இ–ள்.) சூதாடுகின்ற சொக்கட்டானைப் போன்ற மார்பகங்களில் ஆபரணங்கள் அணிந்த நாக கன்னியர் தமது தந்தையை வணங்கினர். தந்தையே! நம் உலகத்து வளப்பம், உம்முடைய பெருமை ஆகியவற்றைப் பார்க்க பூலோகத்து மன்னன் இங்கு வந்து நமது பூங்காவனத்தில் இருக்கிறான் என்று கூறினர். மன்னனும் மகிழ்ந்தான்.

**ஆயி ரம்பணா டவியினான் வருகவென் றருள**
**வாயி லாளருங் கொணர்ந்தனர் மனுகுல**
**மணியைக்**
**கோயில் வாயிலைக் கடந்தவ னுறையிடங் குறுகித்**
**தூயத் தாண்மிசைப் பணிந்தன னழகுமேற்**
**றுளும்ப 349**

(இ–ள்.) ஆயிரம் படங்களாகிய காட்டை உடைய ஆதிசேடன் ஆணையிட வாயிலாளர்கள் மனுகுல மணியாகிய சூரவாதித்தனை அழைத்து வந்தனர். சூரவாதித்தனும் ஆதிசேடனுடைய தூய்மையான பாதங்களை அழகு பொங்கும்படி வணங்கினான்.

அகில மன்னனாம் வளவனை யனைத்துவந் தருளி
மகர நான்முகத் தவிசின்மே லமையுற வைத்துப்
புகரி லின்னமிர் தளாவிய பனிமொழி புகன்றான்
சகல பாரமு மொருவனாத் தலைமிசைத்
தரிப்போன் 350

(இ–ள்.) உலகத்தையும், அதிலுள்ள அனைத்தையும் ஒருவனாகவே தாங்குகின்ற ஆதிசேடன், சூரவாதித்தனை அனைத்து மகிழ்ந்து, ஆசனத்தில் அமர்த்தினான். இனிய அமிர்தம் பொருந்தியதைப் போன்ற குளிர்ந்த மொழிகளைக் கூறினான்.

அனைய வாசக மவன்சொல வரவநாட் டரசே
புனையு நின்னொழில் காணவும் புகழவும் புகுந்தா
லுனது கண்கள்போ லாயிரத் திரட்டிக ணுளவோ
வினிய நாவுமப் படியெனக் குள்ளவோ விலையே! 351

(இ–ள்.) இதனைக் கேட்ட சூரவாதித்தன், நாகலோக அரசே! உன் அழகைக் காணவும், உன் பெருமையைப் புகழவும் வேண்டும் என்றால், உனது கண்களைப் போல இரண்டாயிரம் கண்களும், இரண்டாயிரம் நாவுகளும் எனக்கு வேண்டும். ஆதலால் அரசே! உன்னை நான் என் இரண்டு கண்களாலேயே கண்டு ஒரு நாவினாலே எப்படிப் புகழ முடியும் என்றான் சோழமன்னன்.

ஊர்ப ரிப்பவர் நாட்டினை யளிப்பவ ருலகின்
சீர்ப ரிப்பவர் சிறுபுக ழனந்தமாய்ச் சிறக்குந்
தார்ப ரிப்பது நிகரென மலரினான் சமைத்த
பார்ப ரித்துநின் றளிக்குநின் தகமையார் பகர்வார் 352

(இ–ள்.) உலகில் ஓர் ஊரையோ, ஒரு நாட்டையோ, ஒரு சாம்ராஜ்யத்தையோ ஆளுகின்றவர்களுடைய சிறிய புகழைச் சொல்லி விடலாம். ஆனால் பிரம்மன் படைத்த பூமி அனைத்தையும் தாங்கி நின்று காக்கின்ற உன்னுடைய புகழை யாராலும் சொல்லி முடிக்க இயலாது என்று சூரவாதித்தன் கூறினான்.

அன்ப னேயென மொழிந்தனன் மொழிந்தவற் கனந்த
வின்ப மாகவொன் றுரைசெய்வா னெமதுநா டெங்கு
முன்பு கார்விட நிறைந்ததிப் பொழுதுநின் மொழியாற்
றுன்ப நீங்கியின் னமிர்தமா யினதெனச்
சொன்னான் 353

(இ–ள்.) அவனை நோக்கி ஆதிசேடன் எங்களுடைய பாதாளலோகம் எங்கும் முன்பு கருமையான நஞ்சு நிறைந்திருந்தது. இப்பொழுது உன்னுடைய சொல்லால் அந்த நஞ்சு நீங்கி இனிய அமிர்தம் எங்கும் பரவியுள்ளது என்று கூறினான்.

விடைகொ டுத்தனன் வளவனும் பெயர்ந்தொரு வீதி
யிடைவ குத்ததோர் மாளிகைத் தவிசின்மே
விருந்தான்
படைம ணிக்கல மமிர் தம்வெண் சாமரம் பளிதந்
தொடைம லர்க்குலஞ் சந்தனம் விடுத்தனன்
றோகையால் 354

(இ–ள்.) ஆதிசேடன் சூரவாதித்தனுக்கு விடை கொடுத்தான். சோழனும் அந்த நகரத்தில் ஒரு வீதியில் அமைந்த அழகிய மாளிகையில் அமர்ந்திருந்தான். ஆதிசேடன் ஆயுதங்கள், இரத்தின மாலைகள், இனிய உணவுகள், வெண்சாமரம், கருப்பூரம், பூமாலைகள், சந்தனம் முதலியவற்றைக் கொடுத்து அனுப்பினான்.

இந்தி ரன்பெருஞ் செல்வமா மெனுமவை யெல்லா
மைந்து தன்புல னாரவே மகிழ்ச்சியா லயின்றான்
வந்து கங்குலுங் கழிந்தது மற்றைநா ளனந்தன்
முந்து பேரவைக் கெய்தினா னனந்தனு
மொழிவான் 355

(இ–ள்.) இந்திரனுடைய உயர்ந்த செல்வங்களைப் போன்ற அவற்றைச் சூரவாதித்தன் மகிழ்ச்சியோடு அனுபவித்தான். இரவு வந்து நீங்கியது. அடுத்தநாள் ஆதிசேடனுடைய சபைக்குச் சோழன் சென்றான்.

அந்த வாரிதி யுலகினு மிறங்கியிங் கருகில்
வந்த காரிய மெதுவென வுரைசெய்வான் வளவன்
முந்து நல்வினை கொணர்ந்தது முனிக்குநீ
தருஞ்செவ்
வந்தி நின்புகழ் போலவே கிளைத்தது மண்ணில் 356

(இ–ள்.) கடல் சூழ்ந்த உலகத்தை விட்டு இந்தப் பாதாள லோகத்திற்கு வந்த காரியம் யாது? என்று ஆதிசேடன் கேட்க ஆரவாதித்தன் சொல்லத் தொடங்கினான். என்னுடைய நல்வினை என்னை இங்கே கொண்டு வந்தது. சாரமா முனிவருக்கு நீங்கள் தந்த செவ்வந்தி மலர் உங்களுடைய புகழைப் போலவே மண்ணுலகில் செழித்து வளர்ந்துள்ளது.

இன்னு மெங்கணாட் டில்லன விரண்டுள குளத்துச்
செந்நெல் வெற்றிலை யெனச்சொனான்
மொழிகுவான் சேடன்
மன்னர் மன்னவெம் மிடத்தினிற் சிறிதுநாள் வைகிப்
பின்ன ரேகுனக் கவையெலாந் தருகுவோம்
பெரிதும் 357

(இ–ள்.) இன்னும் எங்களுடைய நாட்டில், குளத்துச் செந்நெல்லும், கற்பூர வெள்ளை வெற்றிலையும் இல்லை என்று சோழன் சொன்னான். அதைக் கேட்ட ஆதிசேடன் அரசே! நீ நம்மிடத்தில் சிறிது நாள் இருந்து செல்லும்போது உனக்கு அவற்றைத் தருகிறேன்.

ஈதி ருக்கவென் னுயிர்க்குயிர்த் துணைவனீ யென்றே
யோதி யிப்படி மகிழ்ந்திடு நாளிலே யொருநாள்
பூத லத்திலுன் சேனையெத் தனையுனைப் புணரு
மாத ரெத்தனை பெயரென வுரைசெய்வான் வளவ. 358

(இ–ள்.) இது இருக்கட்டும். என்னுடைய உயிர்க்கு உயிராகிய துணைவன் நீயே என்று கூறி ஆதிசேடன் சோழனுடைய நட்புக் கொண்டான். ஒருநாள் சோழனைப் பார்த்து உன்னுடைய சேனைகள் எவ்வளவு? உன்னைச் சேரும் மனைவியர் எத்தனை பேர்? என்று ஆதிசேடன் கேட்கச் சோழன் சொல்லத் தொடங்கினான்.

ஓங்கு நாற்கட லுடுத்தபா ருலகமென் னுலகந்
தீங்கி லாதவை நிறுத்திவெம் பகையெலாந்
தீர்த்துத்
தாங்க வேண்டிய தெத்தனை யத்தனை தானை
பூங்கை மாதரு மிருவரென் மனத்தினைப்
போல்வார். 359

(இ–ள்.) என் நாடு, நான்கு கடல்களாலும் சூழப்பெற்றது. பகையை நீக்கி நாட்டிலுள்ள உயிர்களைக் காப்பதற்கு எவ்வளவு சேனைகள் வேண்டுமோ அவ்வளவு உள்ளன. என்னுடைய மனத்தைப் போன்ற அழகும் நல்லொழுக்கமும் உள்ள இரு மனைவியர் உள்ளனர்.

காடு நாடெலாஞ் செந்நெலும் பூகமுங் கரும்புங்
கோடு முத்தமுங் கமலமு நிறைந்திடுங் குளங்கண்
மேடை யெங்கனு மிரதிபோன் மடந்தையர் வினோத
மாடல் பாடலுண் டமரர்தே வாலய மனைத்தும். 360

(இ-ள்.) காடுகள், நாடுகள் ஆகிய எல்லா இடங்களிலும் செந்நெல், கமுகு, கரும்பு, சங்குகள், தாமரை மலர்கள் நிறைந்திருக்கும். மேல் மாடங்கள் எங்கும் மாதர்களுடைய விளையாட்டு நிறைந்திருக்கும். அடியார்கள் பரவசப்பட்டு ஆடுவதும், பாடுவதும் நிறைந்த தேவாலயங்கள் எங்கும் உண்டு.

மந்த ராசல மெனப்பல களிற்றினம் வயங்குஞ்
சந்த னாடவித் தலையிலே தடைப்படுந் தபனன்
சுந்த ரானன மடந்தைய ரணிமணித் தோகையா
லந்த காரமு மிலையவர்க் கரியது மிலையால்! 361

(இ-ள்.) மந்தரமலையைப் போன்ற யானைக் கூட்டங்கள் உண்டு. சந்தனக்காடுகளில் சூரியன் தடைப்பட்டு நிற்பான். அழகிய மாதர்கள் அணிந்த ஆபரணங்கள் வீசும் ஒளியால் சோழநாட்டில் இருளே இல்லை. அங்கு உள்ளவர்களுக்குக் கிடைக்காத பொருள் ஏதுமில்லை.

பன்ன சாலையு மறையவர் வேள்வியும் பயிலு
மன்ன தானமே முதலிய தானமு மகலா
மன்ன ரேமுதற் குடிகளும் பலவுள மகவான்
பொன்னி னாடெனப் பொன்னிநா டுளதொரு
புடையின்362

(இ-ள்.) சோழநாட்டில் முனிவர்களுடைய பர்ணசாலைகளும், பிராமணர்கள் செய்யும் யாகங்களும், அன்னதானம் முதலிய தானங்கள் செய்யும் சத்திரங்களும், அரசர் முதலான பல குடிகள் வாழும் இல்லங்களும் நிறைந்திருக்கும். ஆதலால் இந்திரனுடைய பொன்னுலகத்தைப் போலப் பொன்னி நதியைக் கொண்ட சோழநாடு உலகில் சிறந்து விளங்குகின்றன.

அங்க திற்கம லாலயம் வேதவா ரணியங்
கங்கை சுற்றிய வம்பல மம்பர்மா காளம்
புங்க நற்பதி புகலிவெண் காடான் புகலூர்
மங்க லக்குடி கஞ்சனூர் சேய்ஞலூர் வழுவூர் 363

(இ—ள்.) அந்த நாட்டில் திருவாரூர், வேதாரண்யம், சிவகங்கை சூழ்ந்த சிதம்பரம், அம்பர் மாகாளம், சீர்காழி, திருவெண்காடு, திருப்புகலூர், திருமங்கலக்குடி, கஞ்சனூர், சேய்ஞலூர், வழுவூர் ஆகிய தலங்களில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். இன்னும் பல தலங்களும் உண்டு.

**வையை யென்றொரு நதியதன் கரையிலே மதுரை**
**மைய வீக்கிய தலமிரா மீச்சுரம் வடக்கே**
**யையன் வைகிய வதிகைதென் கோவலூ ரருணை**
**துய்ய கம்பையிற் காஞ்சியென் றொருதலந்**
**துலங்கும்.364**

(இ—ள்.) தெற்குத் திசையிலுள்ள வையை நதிக்கரையில் சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய மதுரையுண்டு. இராமபிரானுடைய பிரம்மகத்தியை நீக்கிய இராமேச்சரம் உண்டு. சிவபெருமான் எழுந்தருளிய திருவதிகை, திருக்கோவலூர், அருணாசலம், கம்பாநதிக்கரையில் காஞ்சிபுரம் ஆகிய தலங்களும் உள்ளன.

**கச்சி மாநகர் தனக்குநேர் வடக்கிலே காசி**
**பச்சி மத்திலுங் குணத்திலு மருங்கிலும் பலவுண்**
**டச்சு தன்குகன் கோயிலு நதிகளு மனந்தங்**
**குச்ச ராதியே முதலிய தேசமுங் கோடி 365**

(இ—ள்.) காஞ்சிமாநகரத்திற்கு நேர் வடக்கில் காசி என்ற தலமும், அதற்குக் கிழக்கிலும் மேற்கிலும், பல சிவத்தலங்கள் உண்டு. திருமால் ஆலயங்களும், முருகன் கோயில்களும் நதிகளும் எண்ணற்றவை உண்டு. குச்சரர்கள் முதலிய நாடுகளும் பலவுண்டு.

**பர்ப்ப தங்களும் பலவுள மணிகளும் பலவுண்**
**டற்பு தங்களும் பலவுள வென்றிவை யறைந்தான்**
**சர்ப்ப ராசனு மகிழ்ந்துசிங் காதனத் தவிசு**
**மெற்செ றிந்தசெம் மணிமுத லானவு மீந்தான்.366**

(இ.—ள்.) என்னுடைய நாட்டில் அற்புதங்களும், அதிசயங்களும் மிக்க பல மலைகள் உள்ளன. நவமணிகள் நிறைந்துள்ளன என்று சோழமன்னன் கூறினான். அதனைக்

கேட்ட ஆதிசேடன் மகிழ்ந்து நாகரத்தின சிங்காதனமும், மாணிக்க மணியும் வழங்கினான்.

மற்று மொன்றவற் குரைசெய்வான் மன்னவா
வுன்னைப்
பெற்ற தந்தையேழ் பிறவியிற் பெறும்பயன்
பெற்றான்
கொற்ற வேந்தர்கள் பலருள ரெனினுமிக்
குணத்தைக்
கற்ற வேந்தனீ யன்றிவே றொருவரைக்
காணேன்! 367

(இ-ள்.) ஆதிசேடன் சூரவாதித்தச் சோழனை நோக்கி, அரசே! உன்னுடைய தந்தை உன்னைப் பெற்றதால் ஏழுபிறவிகளில் பெறும் நற்பயன்களெல்லாம் ஒரே பிறவியில் பெற்றவர் ஆவார். வெற்றி வேந்தர்கள் பலர் இருந்தாலும் உத்தமகுணம் பெற்ற மன்னன் உன்னையன்றி வேறு ஒருவரைக் கண்டதில்லை.

கூறு கின்றநின் மொழியினா லுடலெலாங் குளிர்ந்த
வீறு கொண்டநின் னெழிலினா லெமதுகூர் விழிகள்
பேறு கொண்டநீ வருதலா லுலகெலாம் பெறுங்கை
மாறு கண்டிலேன் மருகனீ யாகுதல் வழக்கால். 368

(இ-ள்.) உன்னுடைய சொற்களால் என் உடல் குளிர்ந்தது. உன் அழகால் என் விழிகள் பெறத்தக்க பயனைப் பெற்றன. நீ இங்கு வந்ததால் இவ்வுலகம் பெற்ற நன்மைக்குக் கைம்மாறு இல்லை. ஆனதால் நீ எனக்கு மருமகன் ஆவதே முறையாகும் என்றான் ஆதிசேடன்.

இருவ ருண்டுதோள் புணருதற் கெனவுரைத்
திட்டாய்
திருவொ ருத்தியே போதுமோ மார்பகஞ் செறிய
விரிவு மிக்கதன் றோவினு மொருதிரு வேண்டும்
பொருவி லென்மகள் காந்திமா மதியையும்
புணர்வாய். 369

(இ-ள்.) நீ இரண்டு மனைவியர் உண்டு என்று சொன்னாய். அவ்விருவருள் திருமகள் போன்ற ஒருத்தியே உன் மார்பில் சேரப்

போதாது. அகன்ற உன் மார்பில் சேர இன்னும் ஒரு திருமகள் உனக்கு வேண்டும். ஆதலால் ஒப்பற்ற என் மகள் காந்தியாமதியையும் மணந்து கொள்வாய் என்று ஆதிசேடன் கூறினான்.

மன்னர் மன்னனே யெனச்சொன்னான் வளவனுண்
மகிழ்வுற்று
றென்ன நீபணித் திடினும்யா னியைவதே யென்றான்
பன்ன காதிபன் பணிகளுக் குரைத்தனன் பணிகள்
பொன்னி னாடெனத் தமதுநா டனைத்தையும்
புனைய 370

(இ-ள்.) ஆதிசேடன் கூறியதைக் கேட்ட சோழமன்னன் மனம் மகிழ்ந்து, நீ என்ன சொன்னாலும் அதற்கு நான் இசைவேன் என்று கூறினான். உடனே ஆதிசேடன் அந்த நகரத்தைப் பொன்னுலகம் போல் அலங்காரம் செய்யத் தன் பரிசனங்களுக்கு ஆணையிட்டான்.

சேடர் சேணுயர் வாயிலை நெருக்கினார் தேரா
லாட ரங்கெலாந் தமனிய மணிகளா லமைத்தார்
மாட மாளிகை தொறுமணிக் குடநிரை வைத்தார்
கூட கோபுரம் புனைந்தனர் நேத்திரக்
கொடியால். 371

(இ-ள்.) அந்த ஆணையைக் கேட்டு வானம் வரை உயர்ந்த வாயிலைத் தேர்களால் அழகு செய்தனர். நடன சாலைகளைத் தங்கத்தினாலும், நவமணிகளாலும் அலங்கரித்தனர். மாட மாளிகை தோறும் நவமணிக் குடங்களை வைத்து அழகிய கொடிகளால் அலங்கரித்தார்கள்.

இமச லங்களைத் தெளித்துமான் மதப்புன
லிறைத்திட்
டமரர் கற்பக வனமெனக் காவள மமைத்துத்
தமனி யத்தனி மண்டபங் கோயிலுட் சமைத்துக்
கமல நாயகி யுறையுளா மெனும்படி கண்டார்! 372

(இ-ள்.) எல்லா இடங்களிலும் குளிர்ந்த பனிநீரைத் தெளித்து அதன்மேல் கஸ்தூரி நீரை இறைத்தனர். கற்பக வனத்தைப் போல் பந்தல்கள் அமைத்தனர். கோயில் உள்ளே தங்கத்தாலான மண்டபம் அமைத்து அதனைத் திருமகள் உறையும் ஆலயம் என்று சொல்லும் படியாகச் செய்தனர்.

**அந்த மண்டபந் தன்னிலோ ராதன மமைத்தார்**
**வந்து சூரவா தித்தனு மிருந்தனன் மதியு**
**மிந்து மாமதி யெனவொரு புடையமர்ந் திருந்தா**
**டந்தை யானவன் கொடுத்திட வேற்றனன் றாரை. 373**

(இ-ள்.) அந்த மண்டபத்தில் அமைந்த நவரத்தின சிங்காசனத்தில் சோழமன்னன் அமர்ந்திருந்தான். நிலவைப் போன்ற காந்திமதியும் அவனுடன் அமர்ந்திருந்தாள். ஆதிசேடன் தாரை வார்த்துக் கொடுக்க சோழமன்னன் ஏற்றுக் கொண்டான்.

**ஓம வேள்விமுன் விரைந்தனன் வலம்புரி யொலிக்கக்**
**காம வேளுட னிரதிபோ லிருந்தனன் கலந்து**
**மாம ணங்கவர்க் களித்தனன் தரணியு மணியுந்**
**தாம வாரமுஞ் சேடியர் பலருமா தனமும் 374**

(இ-ள்.) ஓமாக்கினியாகிய வேள்வியின் முன் வலம்புரிச் சங்கம் ஒலிக்கச் சூரவாதித்தன் காந்தியாமதியை மணம் செய்து கொண்டு இரதி மன்மதன் போல வீற்றிருந்தனர். பின்பு ஆதிசேடன் சில இராச்சியங்களையும், நவமணிகளையும், மோகன மாலை முதலிய அணிகலன்களையும் சீதனமாகக் கொடுத்த தோடு, தன் மகளுக்கு ஊழியம் செய்யச் சேடியர் பலரையும் அளித்தான்.

**பணிக ளானவை விடைகொடு போந்தன பணிந்து**
**மணிகு லாமுடி யனந்தனும் புகுந்தனன் மனையிற்**
**றணிவி லாமயற் காந்தியும் வளவனுந் தழுவி**
**யணிகொ ளின்பவா ரிதியிலே மூழ்கினா ரழுந்தி.375**

(இ-ள்.) திருமணத்திற்கு வந்திருந்த நாகங்கள் ஆதிசேடனிடம் விடைபெற்றுச் சென்றன. மணிகள் விளங்கும் முடியையுடைய ஆதிசேடனும் தனது மனைவியிடம் போய்ச் சேர்ந்தான். அளவற்ற அன்புடைய காந்திமதியும் சூரவாதித்தனும் இன்பக்கடலில் மூழ்கி அழுந்தினார்கள்.

தாரு மலையு மயங்கிடக் கருங்குழல் சரிய
வேரு முத்தமுஞ் சொரிந்திட மேகலை மிழற்றக்
கூர வேல்விழி சிவந்திட விளிர்த்திடக் குமுதம்
வார றாமுலை நாஞ்சிலா லுழுதனண் மார்பை 376

(இ–ள்.) சூரவாதித்தன் தோளில் அணிந்த பூமாலையும், காந்திமதியின் முத்து மாலையும் கலந்தன. கருங்கூந்தல் சரிந்தது. வேர்வை முத்துக்களும் மாலையிலுள்ள முத்துக்களும் சிந்தின. மேகலை மணிகள் ஒலித்தன. வேல் போன்ற கண்கள் சிவந்தன. செங்குமுத மலர் போன்ற இதழ்கள் வெளுத்தன. கச்சு அணிந்த மார்பாகிய கலப்பையால் சோழனுடைய மார்பாகிய பூமியை ஆசைப் பயிர் வளரும் பொருட்டு காந்திமதி உழுதாள்.

முற்றிடை யகன்றன கழன்ற முத்தணி
சிற்றிடை யவளொடுஞ் செறிந்து சூழ்ந்தன
பொற்றொடி யெனுமுழை பிடிக்கப் பேரர்மதன்
மற்றொரு வலைகொடு வளைத்தல் போலுமே! 377

(இ–ள்.) இருவரும் கூடி மகிழ்ந்தபொழுது அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்கள் கழன்று வீழ்ந்தன. அவற்றின் முத்தணிகள் காந்திமதியின் இடையை நெருங்கிச் சூழ்ந்து கொண்டன. அக்காட்சி பொற்கொடி என்னும் பெண்ணாகிய மானைப் பிடிக்கப் போர் செய்யும் மன்மதன் வேறொரு வலையைக் கொண்டு வளைப்பது போல் இருந்தது.

பரிபுர மொருதரஞ் சிலம்பப் பல்கலை
யொருதரம் புலம்புற வுவரி யாகிய
சுரதவிஞ் சையிலவன் றோளிற் துஞ்சினாள்
வரைமிசைப் படர்ந்திடும் வல்லி போலவே 378

(இ–ள்.) சிலம்புகள் ஒருமுறை ஒலிக்கவும், மேகலை ஒருமுறை ஒலிக்கவும், காமக்கடலில் திளைத்த களைப்பினால் சூரவாதித்தனுடைய தோளில் காந்திமதி உறங்கினாள். அது மலையின் மேல் ஒரு கொடி படர்ந்திருப்பதைப் போல் தோன்றியது.

### *கலிநிலைத் துறை*

அன்ன மேயெழு பிறப்பினு முனைப்பிரிந் தகலே
னென்ன வேபுகழ்ந் துரைத்தன னெழுபிறப் பிகந்த
பின்ன ராயினு மென்னைநீ ரகன்றுளம் பிணிக்குங்
கன்னிமாருடன் புணருவீ ரெனச்சொலிக்
கலுழ்ந்தாள் 379

(இ-ள்.) அன்னம் போன்றவளே! உன்னை எழுவகைப் பிறப்பிலும் நான் பிரியேன் என்று புகழ்ந்து உரைத்தான். அதைக் கேட்டு அந்த எழுவகைப் பிறப்பு நீங்கிய பின் என்னைப் பிரிந்து உமது உள்ளத்தைக் கவரும் கன்னியருடன் சேர்ந்து வாழ்வீர்களா! என்று கூறி காந்திமதி கலங்கினாள்.

வாடி னாண்மலர்த் திருமுகங் கருகினாள் வருந்தி
யூடி னாளவ னூடலை யுணர்த்தினா னுணர்ந்து
கூடி னாரவ ரிருவருங் கலவியிற் குளித்துத்
தேடி னார்தமை யறிகிலா ரிராப்பகல் சிறிதும் 380

(இ-ள்.) அவ்வாறு மனம் கலங்கி திருமுகம் கருகி காந்திமதி ஊடினாள். சோழன் அவ்வூடலை நீக்கி மீண்டும் அவளுடன் கூடி காமக்கடலில் மூழ்கினான். இராப்பகல் அறியாமல் மகிழ்ந்து இருந்தனர்.

உருகி யிப்படி முயங்குநா ளினிலவ னுரைப்பான்
முருக லர்த்திரு மடந்தையே யுனதுபூண் முலையா
மிரும ருங்கினா லொசிந்தறு பதஞ்சிறை யிழந்து
மருளி சைக்கொடு தவழ்ந்ததுன் றார்மிசை
வண்டு 381

(இ-ள்.) இவ்வாறு கூடிக் கலந்து மகிழ்ச்சியுடன் இருக்கின்ற நாளில் சோழன் மணம் பொருந்திய தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைப் போன்ற பெண்ணே! உன்னுடைய மார்பாகிய இரண்டு கொம்புகளினால் ஆறு கால்களும் ஒடிந்து, சிறகுகளை இழந்த வண்டுகள் உன் மார்பில் தவழ்ந்திருப்பதைப் பார் என்று கூறினார்.

இந்த வண்டொரு காலமுன் போலமுன் னிருந்த
நந்த னந்தனி லணையுமோ வுரையென நவின்றா
னந்த வாசகம் பிரிவுணர்த் தியதென வயர்ந்தா
டந்தை பாலவன் குறிப்பையு முணர்த்தினா டனித்து 382

(இ–ள்.) அப்படிப்பட்ட இந்த வண்டு பூலோகத்தில் முன்பு தான் இருந்த நந்தவனத்தில் உள்ள செவ்வந்தி மலரில் சேருமோ, சொல்வாயாக! என்றான். அதனைக் கேட்ட காந்தியாமதி அவன் பிரிந்து செல்ல நினைக்கிறான் என்பதை அறிந்து, தனது தந்தையாகிய ஆதிசேடனிடம் அதனை அறிவித்தாள்.

மகளு ரைத்தசொல் விடத்தினான் மயங்கிய மன்ன
னிகலி னைனையா னிறுத்துவன் வருந்தனீ யென்றா
னிகரி லாதுல களிப்பவ னல்லனோ நிருபன்
பகரில் யானுமங் கவனுடன் செல்வது பரிவால். 383

(இ–ள்.) காந்தியாமதி கூறிய நஞ்சு போன்ற செய்தியைக் கேட்ட ஆதிசேடன் முதலில் மயங்கி பின்னர் தெளிந்து, வலிமையுள்ள உன் நாயகனை இங்கே இருக்க வைக்கின்றேன். நீ வருந்த வேண்டாம் என்று கூறினான். அதைக்கேட்ட காந்தியாமதி ஒப்பற்ற அரசனாக மண்ணுலகத்தைக் காக்கும் சோழமன்னனை நிறுத்தி வைப்பது நியாயம் அன்று. நானும் அவருடன் செல்வது தான் முறை என்று கூறினாள்.

போகி மன்னனும் வளவனை யழைத்துநின் புவிக்கு
நாக வல்லியுஞ் செந்நெல்லுந் தருகுவோ நாளை
யேகு கென்றுதன் மனையிடைப் புகுந்தன னிப்பான்
மோக வல்லிசூ ராதவற் கிருளிலே மொழிவாள். 384

(இ–ள்.) ஆதிசேடன் சோழனை அழைத்து, நாளைய தினம் கர்ப்பூரவல்லி, வெற்றிலையும், செந்நெல்லும் கொடுக்கிறோம். நீ போகலாம் என்று கூறினான். காந்திமதி தன் கணவனுக்கு அன்றிரவு ஒரு செய்தி கூறினாள்.

அரிய லிங்கமொன் றெந்தைபா லிருக்குமங்
கதனைப்
பரவி யீரெழு பாரையு முடியின்மேற் பரித்தான்
புரவ லன்றனை யிரந்துகொண் டுன்பதி புகுந்தாற்
பெரிய வின்பமுஞ் சித்தியு முத்தியும் பெறலாம். 385

(இ-ள்.) அரிதாகிய சிவலிங்கம் ஒன்று என் தந்தையிடம் உள்ளது. அதை வணங்கி என் தந்தை பதினான்கு உலகங்களையும் தாங்கும் ஆற்றலைப் பெற்றார். எனவே, அவரைக் கேட்டு அந்தச் சிவலிங்கத்தை வாங்கிக் கொண்டு உம்முடைய நகரத்துக்குச் சென்றால் அட்டமாசித்தியும், முக்தியும் பெறலாம்.

என்று கூறினான் மற்றைநாள் வளவனங் கெழுந்து
சென்று சேடனுக் கோதினா னொருபெருஞ் சிறப்பை
யன்று செந்நெலும் வல்லியு மருகனுக் களித்துக்
குன்ற மென்னவே மணிகளு நிதிகளுங்
கொடுத்தான் 386

(இ-ள்.) இதனைக் கேட்ட சூரவாதித்தன் மறுநாள் காலையில் ஆதிசேடனிடம் சென்று அவனைப் போற்றினான். ஆதிசேடனும் கர்ப்பூரவல்லி வெற்றிலையும், செந்நெல்லும் மலைபோன்ற செல்வங்களும் வழங்கினான்.

அண்ண லேயினு மளிப்பதே துனக்கென
வறைந்தான்
மண்ணி லேயெனக் கரியன விலையொரு வரமுண்
டெண்ணி லுன்னிடத் திலிங்கமா மிறைவனைப் பூசை
பண்ண வேணுடுமென் றுரைத்தன னனந்தனும்
பகர்வான் 387

(இ-ள்.) அரசே, இன்னும் நாம் அளிக்க வேண்டியது யாது என்று ஆதிசேடன் வினவினான். அதனைக் கேட்ட சோழன் மண்ணுலகத்தில் எனக்கு அரிய பொருள் ஏதுமில்லை. உன்னிடத்தில் ஒரு வரம் கேட்கின்றேன். நீ வைத்திருக்கும் சிவலிங்கத்தை நான் வழிபட வேண்டுமென்று உரைத்தான்.

எங்கி ளைக்கெலா முறைமுறை வழிபடு மிலிங்க
முங்க ளுக்குநான் றருகுவ தன்றென வுரைத்துச்
சங்கை யுற்றுள மெலிந்துதன் மனையிடைச்
சார்ந்தான்
கங்கு லிற்றுயில் கனவிலே யிறைவனைக்
கண்டான் 388

(இ–ள்.) அதனைக் கேட்ட ஆதிசேடன், அந்தச் சிவலிங்கத்தை எங்கள் கிளைகள் எல்லாம் தலைமுறை தலைமுறையாக வழிபாடு செய்கிறோம். அதை உங்களுக்குத் தர இயலாது என்று கூறி வருத்தத்துடன் தன் அரண்மனை சேர்ந்தான். கனவில் இறைவன் தோன்றினான்.

**மின்கு லாமுடி யனந்தனுக் குரைசெய்வான்**
**விடையோ**
**னன்பி னாலுனைப் போலநின் மருகனு மதிக**
**வின்ப மேனியொன் றிரண்டுகூ றாகநா மிருப்போம்**
**பின்பு வேண்டிய தொன்றவற் கருளெனப்**
**பெயர்ந்தான் 389**

(இ–ள்.) சிவபெருமான் ஆதிசேடனிடம் உன்னைப் போலவே உன்னுடைய மருமகனும் எம்மிடம் மிகுந்த அன்புடையவன். ஆதலால் நம்முடைய மேனி இரண்டு கூறாக இருக்கட்டும். நீ சூரவாதித்தன் விரும்பியவாறு அவனுக்கு ஒன்றை அளிப்பாயாக! என்று கூறி மறைந்தார்.

**புற்ற ராவர சமலனை மகிழ்ந்திருள் புலர்த்த மற்றை**
**நாளெழுந் தருச்சனை மனையிலே வந்தா**
**னற்றை நாளிரு கூறதா யிருந்தன னமல**
**னுற்ற பாதியை மருகனுக் கருளியொன்**
**றுரைப்பான் 390**

(இ–ள்.) ஆதிசேடனும் கனவில் இறைவன் அருளிச் செய்ததை உணர்ந்து மகிழ்ந்தான். காலையில் எழுந்து வழிபடும் மனைக்கு வந்தான். இறைவன் இரண்டு கூறுகளாக இருந்தார். ஒன்றைச் சூரவாதித்தனுக்குக் கொடுத்தான்.

**அகித லத்திலே யிருப்பனான் மகிதலத் தவனி**
**மகளொ ருத்தியிங் குறைவது முறையல மன்னா**
**தகைப டைக்கலா மரும்பொருள் படைக்கலாந்**
**தருமம்**
**புகழ்ப டைக்கலா மிவளுடன் புவியைநீ**
**புரந்தால் 391**

(இ–ள்.) அவ்வாறு கொடுத்தபின் ஆதிசேடன் சோழனை நோக்கி, நான் பாதாள உலகத்தில் உள்ளேன். நீ பூலோகத்தில் இருக்கின்றாய். என்மகள் காந்திமதி உன்னைப் பிரிந்து இங்கு இருப்பது முறையன்று. இவளையும் நீ அழைத்துச் சென்று ஆட்சி செய்தால் பெருமையும், தருமமும், புகழும் உன்னைச் சேரும் என்றார்.

**வாழு நாளிலே தனைப்பிரிந் தவரையும் வருத்தித்**
**தாழு நாளிலே சரணமென் றவரையே சாரு**
**மேழை போன்முலை வளருநா ளிடைக்கிட ரிழைத்து**
**வீழு நாளினுங் காப்பதே கடனென விரித்தான் 392**

(இ–ள்.) செல்வத்துடன் வாழும் காலத்தில் தன்னைத் தாங்கி காத்தவர்களையும் துன்புறுத்தி, பின்பு வறுமை வந்த காலத்தில் அவர்கள்ளயே அடைக்கலமாக அடையும் அறிவற்றவனைப் போல, மார்பகங்கள் வளரும் காலத்தில் தங்களைத் தாங்கும் இடைக்கு துன்பத்தைக் கொடுத்து, முதுமையில் அந்த இடையை நோக்கி, விழுகின்றது. ஆனால் அந்த இடை வெறுப்பின்றி அவற்றைத் தாங்குகின்றது. அதைப் போல நீ என் மகளிடத்தில் எப்பொழுதும் அன்பாக இருக்கவேண்டும் என்று ஆதிசேடன் கேட்டான்.

கூர வாளுமொன் றளித்துமின் னுடன்விடை கொடுத்தான்
சூர வாதவ னனந்தனை யணங்குடன் றொழுது
பார கத்திலே யணைந்தான் கங்கையிற் படிந்து
வார ணத்துரி புனைந்தவன் சிராமலை வணங்கி.393

(இ–ள்.) கூரிய வாளாயுதம் ஒன்றையும் ஆதிசேடன் தன் மருமகனுக்கு அளித்து விடை கொடுத்தான். சூரவாதித்தனும், காந்திமதியும் அவனை வணங்கிப் பூலோகத்திற்கு வந்தனர். சிவகங்கையில் மூழ்கி யானைத்தோல் போர்த்திய சிவபெருமான் எழுந்தருளும் திரிசிராமலையைச் சூரவாதித்தன் வணங்கினான்.

**மாச கற்றிய கோழிமா நகர்தனின் மன்னி**
**யீச னைக்கன காலயத் தணிபெற விருத்தி**
**நாச மற்றதோர் திருவிழா நவங்களா நடத்திப்**
**பூச னைக்குவேன் டியதெலா முதவினான் புரிந்து 394**

(இ—ள்.) பின்னர் கோழி மாநகரத்தில், நாகலோகத்திலிருந்து கொண்டுவந்த சிவலிங்கப் பெருமானை ஆலயம் அமைத்து எழுந்தருளச் செய்தான். எந்தநாளும் குறைவின்றி நடக்கும் விழாக்கள் அனைத்தையும் நடத்தி, ஆகம விதிப்படிப் பூசனைக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் வழங்கினான்.

### *கலிவிருத்தம்*

**செந்நெலுடன் வெற்றிலை செறிந்தகொடி யெல்லா**
**மெந்நிலமு மாகவென வெங்கணும் விளைத்தே**
**மன்னனுல கத்துயிர் வளர்த்துவரு நாளிற்**
**பன்னகத லத்திசிவ பத்தியின் மிகுந்தாள் 395**

(இ—ள்.) சூரவாதித்தன் தான் கொண்டு வந்த செந்நெல்லையும் வெற்றிலையையும் தன்நாடு முழுதும் பயிரிட்டான். உலகத்து உயிர்களையெல்லாம் அவன் சிறப்பாகக் காத்துவரும் நாளில் காந்தியாமதி சிவபக்தியில் மிகுந்து இருந்தவளானாள்.

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**அண்ண லிருதா ளருச்சனையைத்**
**தினமுங் கொழுந னனுமதியாற்**
**பண்ணி யடிசி லயின்றிடுவ**
**தல்லாமற் புனலும் பருகியிடா**
**ணண்ணி நியதி தவறாது**
**நடத்தி வருமந் நாள்களிலே**
**வண்ண வயிற்றா லிலையிவிளங்**
**கருப்பம் பிறைப்போல் வளர்ந்ததுவே 396**

(இ—ள்.) சிராமலைநாதரைத் தன் கணவன் அனுமதியோடு நாள்தோறும் அருச்சனை செய்தாள். இறைவனை வணங்காமல் நீர் கூட அவள் அருந்துவதில்லை. இவ்வாறு வழிபட்டு வரும் நாளில் ஆலிலை போன்ற அவள் வயிற்றில் கரு உண்டாகி, மூன்றாம் பிறை போல் வளர்ந்தது.

கருப்ப முதிர்ந்துந் தவறாதே
காலானடந்து கயிலை யெனும்
பொருப்பின் கொழுந்தின் னடிதொழுவா
ளொருநா ணடபோம் பொழுது
நெருப்பின் குழவி யெனும்பரலா
விளைந்தா ளயர்ந்து நெடிதுயிர்த்தாள்
விருப்பம் பெருகுஞ் சேடியர்கண்
டணைத்தா ரசைத்தார் விசிறியையே! 397

(இ--ள்.) கர்ப்பம் முதிர்ந்த போதும் நடந்தே சென்று சிராமலை நாதரை வணங்கி வந்தாள். ஒருநாள் நெருப்பில் விழுந்த குழந்தையைப் போல் பருக்கைக் கற்களின் வெப்பத்தினால் வாடி இளைத்து விழுந்தாள். அன்பில் சிறந்த தாதியர் அவளை எடுத்து விசிறிக் களைப்பு நீக்கினர்.

அன்னங் களிக்கப் பிடிகளிக்க
நடந்தா ளஞ்சா றடியளவு
மின்னு மயர்ந்து மூச்செறிந்து
விழுந்தா ளங்கோர் வெள்ளிடையின்
மன்னன் விடுத்த சிவிகையிலு
மேறா டிரும்பி மனைபுகுந்தா
ளின்னுஞ் சிவனை யிறைஞ்சியலா
லயிலேன் புனலு மென்றாளே! 398

(இ--ள்.) மீண்டும் எழுந்து அன்னமும், பெண்யானையும் கண்டு மகிழும்படி, ஐந்தாறு அடி நடந்தாள். அப்படி நடந்தபொழுது மீண்டும் சோர்ந்து விழுந்தாள். அதனைக்கேட்ட அரசன் பல்லக்கு ஒன்றை அனுப்பினான். ஆனால் காந்தியாமதி செவ்வந்தி நாதரை வணங்காமல் திரும்புவதில்லை, தண்ணீர் பருகுவதும் இல்லை என்றாள்.

வீர விரத மவள்பிடித்துத்
தனையு மறந்து மெலிவுற்றாள்
சார முனிவன் வனமெனவே
தாரா கிருகஞ் சமைத்தார்க

வீர வளற்றுச் செங்களப
மிறைத்தார் சொரிந்தா ரிமசலநல்
லார வடங்க ளணிந்தார்கள்
படுத்தார் கழுநீ ரகவிதழே! 399

(இ–ள்.) காந்தியாமதி வீர வைராக்கியத்தால் தன்னையும் மறந்து மெலிந்தாள். அப்பொழுது ஏலவர்கள் சாரமாமுனிவருடைய பூங்காவனத்தைப் போலவே ஓர் இடத்தை அமைத்தனர். அவன் மெலிவு நீங்கும்படிச் சிவந்த களபச் சேற்றையும், பனிநீரையும் தெளித்து, முத்து வடங்களால் அலங்காரம் செய்து, செங்கழுநீர்ப் பூக்களின் அகவிதழ்களால் படுக்கை நிரப்பிச் சோர்வை நீக்கினர்.

அயர்ந்து மடந்தை வருந்துதல்கண்
டடியார்க் கெளிய வருட்கடலுஞ்
சுயம்பு வடிவா யவளெதிரே
யிருந்தா னந்தச் சங்கரனை
வயந்த மெனவே கற்பகப்பூ
மலரைச் சொரிந்தார் வானவர்கள்
வியந்து பணிந்து வலம்புரிந்து
மீண்டாண் மனைக்கு மென்கொடியே! 400

(இ–ள்.) இவ்வாறு காந்தியாமதி சோர்வடைந்து இன்றைக்கு இறைவன் தரிசனம் இல்லாமல் இருக்கின்றதே என்று வருந்தினாள். அதனைக் கண்டு அடியார்க்கு எளியவராய் விளங்கும் சிவபெருமான் சுயம்பு வடிவமாகத் தோன்றி காந்தியாமதிக்குக் காட்சி கொடுத்தார். தேவர்கள் அவருடைய திருவருளைப் புகழ்ந்து கர்ப்பக மலர்களைச் சொரிந்தார்கள். காந்தியாமதியும் வியப்புற்று வலம் வந்து வணங்கித் தன் அரண்மனைக்குச் சென்றாள்.

சூர வருக்க னதிசயித்துச்
சூலிற் கிரங்குஞ் சூலிதனக்
கார மதிலுங் கோபுரமு
மணியா லயமு மமைப்பித்துத்

தேருஞ் சிறப்புந் திருநாளு
மகபூ சனையுஞ் செய்வித்தான்
வீர விரத முன்போல
நடத்தி வந்தாண் மென்கொடியே! 401

(இ-ள்.) கர்ப்பம் கொண்ட தன் மனைவிக்கு அருள் செய்த இறைவனான தான்தோன்றிசுரனுக்கு மதிலும், கோபுரமும் சூழ்ந்த ஆலயம் எடுத்தான். தேரும் திருவிழாவும் தினந்தோறும் நடக்கின்ற பூசை முதலியவற்றைச் செய்வித்தான். காந்தியாமதியும் தன் விரதத்தைத் தொடர்ந்தாள்.

ஈன்றாள் குழவி தனையனுந்தன்
குரவன் றனிலு மெண்மடங்காய்ச்
சான்றாண் மையினா லறநெறியாற்
சிவநூற் றெளிவாற் தகைபெற்றான்
மூன்றாம் பெயரான் முடிவாக
நாற்பற் தாறா முடிமன்னர்
பூன்றா குதிசேர் மகமுடித்து
மகவா னுலகம் புக்கனரே! 402

(இ—ள்.) காந்தியாமதியும் புத்திரனைப் பெற்றாள். அவன் தன் தந்தையை விட எட்டு மடங்கு அறிவாலும் சான்றாண்மையாலும், அறத்தாலும், சைவநூல் தெளிவாலும் மேன்மை அடைந்தான். அவ்வரச குமாரர் முதலாக நாற்பத்தாறு தலைமுறை அரசர்கள் ஆட்சி செய்தனர். இறுதியாக மூன்று அரசர்கள் உலகெங்கும் புகழ் பெற்றுப் பல யாகங்களைச் செய்து தேவபதவியைப் பெற்றுச் சிறந்தனர்.

சூரவாதித்த சருக்கம் முற்றும்.

## 10. உறையூரழித்த சருக்கம்

ஐம்பதாந் தலைமுறை யநனி லேயொரு
வன்பராந் தகனெனு மன்னன் றோன்றினான்
மின்குலா மணிமுடி மன்னர் மேனியிற்
புன்புலா விணமழை பொழியும் வேலினான் 403

(இ–ள்.) கோழி மாநகரம் என்கின்ற உறையூரை ஆட்சி செய்த சோழப் பரம்பரையில், ஐம்பதாம் தலைமுறையாக வன்பராந்தகச் சோழன் என்பவன் தோன்றினான். மணி முடியணிந்த மன்னர்களின் உடலில் புலால் நாற்றம் பொருந்திய இரத்த மழை பொழியும் வேலாயுதத்தை உடைய மகா வீரன் அவன் என உரைத்தார்.

அவனிரு புயத்தினுக் கமைந்த மான்றிருப்
புவனமா தேவியோ டுலகம் போற்றினா
னிவனிலை யிருக்குமு னியம்பு மாமுனி
சிவனது பணிவிடை செய லுற்றனன். 404

(இ–ள்.) அந்த அரசனுடைய இரண்டு புயங்களுக்கும் இசைந்த, மான் போன்ற பார்வையும், திருமகளைப் போன்ற அழகும் உள்ள புவன மாதேவியுடன் உலகைக் காத்து வந்தான். இவன் இவ்வாறு ஆளும் எல்லையில் சாரமாமுனிவர் நந்தவனம் வைத்து செவ்வந்தி மலர் எடுத்துச் சிவபெருமானை வழிபட்டு வந்தார்.

புராந்தகற் கவனல ரெடுக்கும் போங்கரிற்
பராந்தகற் கணிமலர் பறிக்க வந்தொரு
பிராந்தகன் மலரெலா மெடுத்துப் பெய்துகொண்
டராந்திகழ் வேலினாற் கணிய நல்கினான் 405

(இ–ள்.) திரிபுரம் எரித்த சிவபெருமானுக்கு எனச் சாரமாமுனிவர் அமைத்த நந்தவனத்திலிருந்து பிராந்தகன் என்னும் பூ வாணிகன் மலர்களை எல்லாம் பறித்துக் கொண்டு போய் வன்பராந்தகச் சோழனுக்கு அணிந்து கொள்ளக் கொடுத்து வந்தான்.

அம்மலர் மன்றலுக் கதிச யிந்தினன்
செம்மறன் முடிக்கணி சிறப்பெண் ணாமலே
யிம்மலர் தினந்தரு கென்று கூறினான்
மெய்ம்மலர் வணிகனும் விடைகொண் டேகினான். 406

(இ—ள்.) வன்பராந்தகன் அந்த மலரின் மணத்தைக் கண்டு வியந்தான். அம்மலர் சிவபெருமானுக்கு உரியது என்று எண்ணாமல் நாள்தோறும் கொண்டு வருக என்று கூறினான். வணிகன் அவ்வாறே செய்வதாகக் கூறிச் சென்றான்.

மாலையிற் றுயின்றனன் வனத்தில் வந்திளங்
காலையிற் புதுமலர்க் கவர்ந்து போயினா
னாலயத் தினுக்கவை யளிக்கு மாமுனி
சோலையிற் புகுந்தலர்த் தொகையைத் தேடினான்.407

(இ—ள்.) சாரமாமுனிவர் உறங்கும் இரவு வேளையில் அந்தப் பூ வாணிகன் நந்தவனத்தில் புகுந்து இளம் காலைப் பொழுதில் புதிய மலர்களைத் திருடிக் கொண்டு போனான். வழக்கம்போலச் சிவாலயத்திற்கு மலரெடுக்கச் சென்ற சாரமாமுனிவர் மலர்கள் குறைந்திருப்பதைக் கண்டார். எங்கும் தேடினார்.

இங்கிவை கண்டிலே னெம்மை யாள்பவர்
சங்கரன் முடிமிசை சாத்தி னார்களோ
வங்கதை யறிவதற் காக வவ்விடைக்
கொங்கவிழ் சிலமலர் கொண்டு போயினான். 408

(இ—ள்.) மலர்கள் காணாமல் போன விதத்தை அறிந்து கொள்ள முடியவில்லையே என்று நினைத்தார். ஒரு வேளை நம்மை விடச் சிறந்த அடியார்கள் மலர்களை எடுத்துச் சென்று இறைவனுக்கு அணிவித்தார்களோ என்று எண்ணி, அங்குள்ள சில மலர்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஆலயத்திற்குச் சென்றார்.

தானணிந் திடுமல ரன்றிச் சங்கரன்
மேனியிற் கண்டில னழுது விம்மினான்
கானகப் புதுமலர் களையக் காவலன்
றேனகப் புனைந்துதன் றேவிக் கீய்ந்தனன். 409

(இ—ள்.) சாரமாமுனிவர் முதல்நாள் இறைவனுக்கு அணிவித்த மலர்களைத் தவிர வேறு மலர்களைக் காணாது கலங்கி விம்மி அழுதார். ஆனால் மன்னன் வாணிகன் கொண்டு வந்த புதுமலர்களைத் தானும் அணிந்து கொண்டு தனது தேவிக்கும் கொடுத்தான்.

**அவ்வலர் பகிர்ந்தவ னளிக்கும் போழ்தினின்**
**மௌவலுந் திறையிடு முறுவன் மாதரா**
**ளிவ்வலர் சிவன்றனக் கினிமை யாதலாற்**
**சைவல வோதியிற் றரிக்க வஞ்சினாள். 410**

(இ—ள்.) அரசன் அவ்வாறு கொடுத்த போது வன மல்லிகை அரும்பைச் சூட்டிக் கொள்ளும் அரசி புவனமாதேவி, இந்த மலர் சிவபெருமானுக்கு உகந்ததல்லவா? என்று எண்ணி கொடிப்பாசி போன்ற தன்னுடைய கூந்தலில் சூடிக் கொள்ள அஞ்சினாள்.

**காவலர் காவலன் மகிழக் கைதவப்**
**பூவலர் வாணிப னுதவும் போழ்தினில்**
**யாவரிவ் வனமதி லெய்தி னாரென**
**மாவனத் தின்முனி மறைந்து நின்றனன். 411**

(இ—ள்.) அரசருக்கு அரசரான பராந்தகச் சோழன் மகிழும் படியான வஞ்சனை பொருந்திய பூ வாணிகன், செவ்வந்தி மலர்களை நாள்தோறும் கொடுத்து வந்தான். அப்போது நமக்குத் தெரியாமல் பூக்களை எடுத்துச் செல்பவர் யாரெனக் கண்டு பிடிக்க வேண்டுமென்று சாரமாமுனிவர் நந்தவனத்தில் மறைந்து நின்றார்.

**பத்திர நூறெனப் படைத்த போதினைக்**
**குத்திர வாணிபன் கொய்யு மெல்லையிற்**
**கைத்தலம் பிடித்தவன் கழுத்தி லேநன**
**துத்தரி யந்தனைச் சுருக்கி யுந்தினான். 412**

(இ—ள்.) நூறு இதழ்கள் படைத்த செவ்வந்திப் பூக்களை வஞ்சனை பொருந்திய பூ வாணிகன் பறித்தான். அதனைக் கண்ட சாரமாமுனிவர் அவன் கையைப் பிடித்து, அவனுடைய கழுத்தில் தன்னுடைய உத்தரியத்தை இட்டு அவனை இழுத்தார்.

**முன்பிடித் தீர்த்திடு முனியைத் தள்ளியே**
**வன்புடைக் கயவனும் வலிதி னெய்தினான்**
**பின்பிடித் தனனிவன் பின்னு முன்னுமாய்**
**வன்புடைக் காவலன் மனையி னண்ணினான். 413**

(இ–ள்.) அப்படி இழுத்த சாரமாமுனிவரை வலிமையுடைய அந்தக் கயவன் பலவந்தமாக தள்ளிவிட்டு ஓடினான். முகிவர் அவனைத் தொடர்ந்து சென்றார். அவன் வலிமை பொருந்திய மன்னனுடைய அரண்மனையில் போய் புகுந்தான்.

**ஆயிரந் தரமுறை யரச வென்றனர்**
**வாயிலை புரப்பவர் வார லென்றனர்**
**தூயனோ ரந்தண னெறியிற் றோன்றியே**
**கோயிலுண் முனிவனைக் கொண்டு**
**போயினான். 414**

(இ–ள்.) சாரமாமுனிவர் ஆயிரம் தலைமுறை மன்னனுக்கு அபயம் என்று முறையிட்டார். அரண்மனைக் காவலர்கள் அவரை உள்ளே விடாமல் தடுத்தனர். அப்பொழுது தூய்மையான ஓர் அந்தணன் தோன்றிச் சாரமாமுனிவரை அரண்மனைக்குள்ளே அழைத்துச் சென்றார்.

*கலிநிலைத் துறை*

**மன்னர் மன்னனு மெதிர்கொடு முனிவனை**
**வணங்கிப்**
**பொன்னு லாவுநல் லாசனங் கொடுத்தெதிர்**
**புகழ்வா**
**னென்ன புண்ணியஞ் செய்தன னீவர வென்றா**
**னன்னை போலுவா யெவர்க்குநீ புகலிட**
**மன்றோ! 415**

(இ–ள்.) பராந்தகச் சோழன் முனிவரை வணங்கி ஒரு பொன் ஆசனத்தில் அமர வைத்தான். நீங்கள் இங்கே வர நான் மிகவும் புண்ணியம் செய்தேன் என்று கூறினான். அனைவர்க்கும் தாய் போன்றவன் நீ! எனவே இங்கே வந்தேன் என்று முனிவர் கூறினார்.

## *கலிவிருத்தம்*

பாதலத் தினும்புதல் கொணர்ந்து பல்பகல்
பூதலத் தினிற்புனல் பொழிந்து பொங்கரிற்
கோதற வளர்த்தலர் கொய்து தார்செய்து
நாதனுக் கணிகுவே னாளு நாளுமே! 416

(இ—ள்.) பாதாள உலகத்திலிருந்து இந்தச் செவ்வந்திச் செடியைக் கொண்டு வந்து பூலோகத்தில் நான் பயிர் செய்தேன். குற்றமின்றி அச்செடிகளை வளர்த்து மலர்களைக் கொய்து நாள்தோறும் செவ்வந்திநாதருக்குச் சாத்தி வந்தேன்.

அப்புதல் வனத்திடை யளிகள் செல்லினுந்
தப்புத லரிதுமற் றவருஞ் சார்கிலார்
மெய்ப்புது மலரிவன் கொய்து மேவினா
னிப்புலை யனைத்தடிந் திடுக வென்றனர். 417

(இ—ள்.) அச்செடிகள் வளர்ந்த நந்தவனத்தில் வண்டுகள் சென்றாலும் தப்ப இயலாது. மனிதர்களும் அதற்குள் செல்ல மாட்டார்கள். ஆனால் இந்தக் கயவன் அந்த நந்தவனத்திலுள்ள புதிய மலர்களைப் பறித்துக் கொண்டு இங்கே வந்தான். இவனைத் தண்டிக்க வேண்டும்.

ஆடர வணிபவற் கலங்கல் பெய்திடுங்
கூடையை யரசுவா பறித்துக் கோடலு
மேடவிழ் தொடையெறி பத்த ரென்பவ
ரோடிவெங் கரிமிசை மழுவை யோச்சினார். 418

(இ—ள்.) பாம்பை அணிந்த சிவபெருமானுக்கு ஒரு சிவனடியார் ஒரு குடலையில் பூமாலை கொண்டு வந்தார். அவனுடைய பட்டத்துயானை அக்குடலையைப் பறித்துக் கொண்டது. எறிபத்த நாயனார் என்பவர் விரைவாகச் சென்று தன் கையிலிருந்த மழுவாயுதத்தினால் அதனுடைய துதிக்கையை வெட்டினார்.

வீழ்ந்தது கடகரி களிற்று வேந்தனுஞ்
சூழ்ந்திது கொடுத்திடு துயர்க்கென் றோளையும்
போழ்ந்திடு கெனச்சொலிப் புனையு மாமுடி
தாழ்ந்தன னதுபெருந் தரும மானதே! 419

(இ—ள்.) அந்த மதயானை பூமியில் வீழ்ந்தது. அதனை அறிந்த புகழ்ச் சோழநாயனார் என்னும் மன்னன், என்னுடைய பட்டத்து யானையின் செயலால் எனக்கும் பழி வந்துற்றது. என்னுடைய தோளையும் வெட்ட வேண்டும் என்று முடியணிந்த அந்த மன்னன் எறிபத்த நாயனாரை வணங்கினார். அது பெருமையுடைய சிவ தருமமாகும்.

**பழுதெனத் தள்ளிய மலரைப் பண்டொரு**
**முழுமதி முகத்தினா ளெடுத்து மோந்தனள்**
**செழுமலர் தொடுப்பவர் கண்டு சென்றவள்**
**குழலினைப் பிடித்துமென் குமிழைக்**
**கொய்தனர். 420**

(இ—ள்.) ஒரு சிவாலயத்தில் பூமாலை தொடுக்கும் அடியார் ஒருவர் தகுதியற்றது என்று ஒரு மலரை விலக்கி வைத்தார். நிலவு போன்ற முகத்தையுடைய அரசி அதனையெடுத்து முகர்ந்தார். அதனைக் கண்ட சிவனடியாராகிய செருத்துணை நாயனார் அரசியின் கூந்தலைப் பற்றி அவளுடைய மூக்கை அரிந்தார்.

**மங்கைதன் கணவனா மரசன் வந்திவ**
**ளங்கைமுன் பற்றிய தலரை யாதலாற்**
**செங்கையைத் தடிந்திவள் வினையைத் தீர்க்கென**
**வெங்கணு மவன்புக ழிசைக்க வில்லையோ! 421**

(இ—ள்.) அதனையறிந்த கணவனான கழற்சிங்க நாயனார் என்னும் அரசர், இவளுடைய கையல்லவா முதலில் பூவை எடுத்தது என்று கூறி கையை வெட்டினார். அந்த அரசனுடைய புகழ் இன்று எங்கும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

**புழுச்சுமை மலக்குவை புலவு நாறிய**
**வழுக்குட லீரல்சீவழியுஞ் செய்யக**
**முழுக்குட லுதிரநீர் மூளையின் பொதி**
**யழுக்குட லதைப்பொரு ளாக எண்ணுமோ? 422**

(இ—ள்.) அரசே! இந்த உடல் புழுக்கள் நிறைந்த சுமை, மலம், நிணம், சீழ் ஆகியவற்றின் துர்நாற்றமும் நிறைந்தது. அப்படிப்பட்ட தூய்மையற்ற இந்த உடலை ஒரு பொருளாக எண்ணுதல் கூடாது.

உழுநரிக் கணங்களுக் குதவு மொண்பொருள்
கழுகினுக் குணவுகட் டியக ளஞ்சியந்
தழலினுக் கிந்தன மான சட்டக
மெழிலுறப் புனையினு மிருப்ப தல்லவே! 423

(இ–ள்.) இந்த உடல் நரிக் கூட்டங்களுக்கும், கழுகு, காக்கைகளுக்கும் உணவுப் பொருளாகும். இதனை அழகு பொருந்தும்படி அலங்கரித்தாலும் அழிந்து போகுமே தவிர நிலைத்து நிற்காது.

நரம்புட னெலும்புதோ லட்ட புன்குடில்
வரம்பறு பிணியெலா மெடுத்த வான்கலந்
திரங்குத னரையிடர் புதைத்த சிற்றறைக்
குரம்பையென் றறிந்திலை கொற்ற வேந்தனே! 424

(இ–ள்.) இந்த உடல் எலும்பும், நரம்பும், தோலும் பொருந்திய அற்பமான குடிசை. வியாதிகள், துன்பங்கள், நிரை, திரை ஆகியவை நிறைந்தது. இதனை நீ இன்னும் அறியவில்லை.

*கலிநிலைத் துறை*

கடிகொ ணீலநுண் மணியெனக் கரும்புழுக் கலந்து
பொடிகொ ணித்தில மாலைபோற் றவளவீர் பொருந்தி
வடிகொண் மாவென வவைக்குளே வருந்திடு
மயிர்க்கோ
முடிகொள் கங்கையான் விரும்பிய மலரைநீ
முடிப்பாய்!425

(இ–ள்.) அரசே! உம்முடைய தலையில் நீலமணி போன்ற பேன்களும், முத்துக்களைப் போன்ற ஈர்களும் நிறைந்து, வடிகட்டிய அரிசி மாலைப் போல வெளுத்து வருந்திடும் தலை மயிருக்கு, கங்கையைத் தலையில் சூடிய சிவபெருமான் விரும்பி அணியும் செவ்வந்தி மலரை அணியலாமா?

*கொச்சகக் கலிப்பா*

எட்பகவு மன்பில்லா ரிவ்வுடலிவ் வாறிருந்தாற்
பெட்புறுவர் பேதைமுதற் பேரிளம்பெண் ணீறாக
வுட்புறம்பா வைத்தா லுகிர்ப்பருந்தும் வாயசமு
முட்கழுகுங் கல்யாணம் பண்ண முயன்றிடுமே! 426

(இ—ள்.) எள்ளளவும் அன்பில்லாத பெண்களுடைய உடல், மங்கைப் பருவத்தில் உள்ளதைப் போலவே எப்போதும் அழகாய் இருப்பதில்லை. கூரிய நகங்களும் அலகுகளும் உடைய பருந்துகளுக்கும், கழுகுகளுக்கும் இவ்வுடல்கள் கல்யாண விருந்தாகும். மலம், மூத்திர, மாமிசப் பிண்டங்களான அவர்களை விரும்பிச் செவ்வந்தி மலரைக் கொடுக்கலாமா?

**பௌவநிகர் காலன் பறித்துயிர்கொண் டேகினா**
**லிவ்வுடல மிந்தனப்பூ மெத்தையின்மே**
**லெய்தியெரி**
**கௌவும் பொழுது சுடுநாறிக் காட்டுமன்றிச்**
**செவ்வந்தி மாலைமணங் காட்டுமோ தேர்வேந்தே! 427**

(இ—ள்.) கடல் போன்ற கரிய நிறத்தையுடைய எமன் உயிரைப் பறித்த பின் இந்த உடம்பு சிதையாகிய மலர்ப் படுக்கையிலிட்டுச் சுடப் படும் பொழுது சுடுநாற்றம் வெளிவருமே யன்றி செவ்வந்தி மாலையின் மணம் தோன்றாது.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**சண்பகத் தயிலம் நீவி யிமசலந்**
**தழைய வாட்டி**
**யொண்புகை கொடுத்து நாவி மெழுகித்தா**
**துறுத்து மோதி**
**வெண்புகை நிறத்து மாய்ந்து வெண்டலை**
**யான போது**
**நண்புகை விடாம விந்த நறுமல**
**ரணிகு வாயோ! 428**

(இ—ள்.) அரசே! சண்பகத் தைலமிட்டுப் பனிநீரில் நீராட்டி வாசனைப் புகைகளை ஊட்டி, கஸ்தூரியினால் தூய்மையாக்கும் தலைமயிர் வெண்மையாக நரைத்து விடும். அவ்வாறு நரைத்த பின்னரும் கூட சிறந்த செவ்வந்தி மலரைச் சூட இயலுமோ?

*வேறு*

**மின்போ லழியும் வயிற்றாமை**
**வடிவா யழியு மெய்யுருவாய்**
**முன்போ லழியும் பிறந்தழியு**
**மடவா ருடனே முயங்கியதன்**

பின்போ யழியு நரைத்தழியும்
பேய்போற் றிரிந்து பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்ந்து மிவ்வுடல
நிலையா தழிந்து போய்விடுமே! 429

(இ—ள்.) இவ்வுடல் கர்ப்பத்தில் அழியலாம். வளர்ந்தும் அழியலாம். மாதர்களுடன் கூடும்போதும் அழியலாம். நரை, திரை தோன்றும் முதுமையிலும் அழியலாம். பொன்போலப் போற்றி வளர்த்தாலும் இவ்வுடல் நிலைக்காது.

## *கலிவிருத்தம்*

சிவன்றனை யிகழ்ந்தொரு கதையைச் செய்தபேர்
சவம்படு பொழுதவர் தசையை நாடியே
யுவந்துவந் தருந்திய கழுகு மோரியுங்
கவர்ந்தது கசந்தரு வருத்துக் காலுமே! 430

(இ—ள்.) சிவபெருமானை இகழ்ந்து வாழ்பவர்கள், இறந்து பிணமாகும் பொழுது அவர்களுடைய உடலை வந்து அருந்து கின்ற கழுகும், நரியும் கூட அந்தத் தசைகளை அருவருப்படைந்து கக்கித் தள்ளிவிடும்.

சிவனது திரவியஞ் சிறிது கொண்டவர்
நவவிதம் படுமெழு நரகு நண்ணுவா
ரவலவெங் குழிகளிற் கிருமி யாகுவார்
குவலயந் தனிலொரு கோடி சன்மமே! 431

(இ—ள்.) சிவபெருமானுடைய திரவியப் பொருள்களில் சிறிது எடுத்துக் கொண்டாலும், அப்படி எடுத்துக் கொண்டவர்கள், ஏழு நரகங்களையும் அடைவர். பின்னரும் அப்பாவம் நீங்காது துன்பக் குழிகளில் புழுக்களாகத் தோன்றி பூமியில் கோடி பிறவிகள் எடுத்து துன்பப்படுவார்கள்.

மெய்க்கடுங் கூற்றுவன் படையில் வெம்புவார்
செக்கிடை யரைகுவா ரழலிற நீகுவார்
துக்கமும் பிணியுமாய்ச் சுழல்வர் சூகரங்
குக்குட மாகுவர் கோடி சன்மமே! 432

(இ—ள்.) எமனுடைய கொடிய ஆயுதங்களால் தண்டிக்கப் படுவார்கள். செக்கில் அரைக்கப்படுவார்கள். நெருப்பில் கொளுத்தப் படுவார்கள். துக்கங்களும், நோய்களும் தொடரப் பட்டும் துன்பப்படுவார்கள். பின்னர் பன்றியும், கோழியுமாகக் கோடி முறை பிறப்பார்கள்.

மானிய நிலம்பதி மகமை யென்பதுந்
தானியந் தனமணி தான மென்பது
மேனிறை கோயிலுள் விதித்த பண்டமு
மானுயர் கொடியினா னமிர்து செய்ததும் 433

(இ—ள்.) சிவாலயத்திற்குரிய மான்ய நிலங்களும், கிராமங்களும், மகமைகளும், நெல் முதலிய தானியங்களும், பூசை திரவியங்களும் இறைவனுக்குச் செய்த நைவேத்தியங்களும் தெய்வத்திற்கு உரியவையாகும்.

தண்டிமுன் கொடுத்திடு தாரு மாரமு
முண்டது முடுத்தது மற்று முள்ளவு
மெண்டரு கோயிலின் புறம்பி லெய்திய
வண்டணி தொடையலுங் கொளார்நன்
மாட்சியோர்! 434

(இ—ள்.) சண்டிகேசுவரருடைய சந்நதியில் கொடுக்கப்படும் மாலைகளும், அன்னங்களும், ஆடைகளும், ஆலயத்தின் அருகே உள்ள அழகிய பூமாலைகளும் தெய்வத்திற்கு உரியன. அவற்றை அறிவுமிக்க பெரியோர்கள் மனத்தாலும் விரும்பமாட்டார்கள்.

அல்லலை யுடையவ ரழுத கண்ணினீர்
செல்வமன் னவர்கெடத் தேய்க்கும் வாளெனச்
சொல்லிய மொழிசெவித் தொளைக்கு ளேபுக
வில்லையோ வுடற்பய னிழந்த மன்னனே! 435

(இ—ள்.) பிறவிப் பயனை இழந்த அரசே! ஏழை அழுத கண்ணீர் மன்னரின் செல்வத்தை அழிக்கும். வாளாயுதம் என்பதை நீ கேட்டதில்லையோ?

வாலிபம் பெருநிலக் கிழமை மாண்பொருண்
மேலறி விலாமையி லொன்று மேவினுஞ்
சீலமுங் குடிமையுஞ் சிதையு மாலிவை
நாலுமுள் ளவர்செய னவில வேண்டுமோ! 436

(இ-ள்.) உலகத்தில் ஒருவனுக்கு இளமையும், ஆட்சி அதிகாரமும், நிறைந்த செல்வமும், அறிவில்லாமையும் ஆகிய இவற்றுள் ஒன்று சேர்ந்தாலும் அவனுடைய நல்லொழுக்கமும், குடிப் பெருமையும் கெட்டு அழிந்துவிடும். இவை நான்கும் உடையவர்கள் எப்படி நடப்பார்கள் என்பதை நீயே நினைத்துப்பார்.

**விழிதெரிந் திருக்கவுங் குருடு மேவுவர்**
**மொழிதெரிந் திருக்கவு மூக ராகுவர்**
**பொழிமது வன்றியு மயக்கம் பூணுவ**
**ரழிதரு காலமா மரசர் வண்ணமே!** 437

(இ-ள்.) கண்கள் இருந்தாலும் குருடனைப் போல் ஆவார்கள். மொழிகளை அறிந்திருந்தாலும் ஊமைகள் ஆவார்கள். சிந்திக்கும் ஆற்றல் இருந்தாலும் மது அருந்தியதைப் போல மயக்கம் அடைவார்கள். அழியும் காலத்தில் அரசர்களின் குணம் இப்படியாக அமைந்திருக்கும்.

**திண்புகழ் படைப்பதும் பகையைத் தேய்ப்பது**
**மண்புரந் தளிப்பது மன்னர் பேரணி**
**வெண்கலை மூசுதல் கவரி வீசுதல்**
**புண்களும் படைத்திடும் புனலு மாடுமே!** 438

(இ-ள்.) புகழைப் பெறுவதும், பகையை அழிப்பதும், மக்களைக் காத்தலும் ஆகிய இவையே அரசர்களுக்குச் சிறந்த அணிகலன்கள் ஆகும். அவ்வாறு இல்லாமல் வெண்மையான ஆடைகள், மணிகளால் செய்த அணிகலன்கள், கவரி வீசுதல் ஆகிய உபகாரங்கள் உடலில் உண்டாகிய புண்களும் அவற்றில் ஒழுகும் சீழும் போல் இழிவானதாக கருதப்படும்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**அந்தண ரருளைச் சாரா ரரும்பய மறுக்குஞ் சேதா**
**மந்திர மறப்பர் நூலோ ராதலான் மகமுண் டாகா**
**விந்திரன் முதலா வுள்ள விமையவ ரவியூண்**
**கொள்ளார்**
**கந்தரஞ் சிறிதும் நல்கா காவலன் கொடுமை**
**யாலே!** 439

(இ–ள்.) அரசனுடைய கொடுங்கோன்மையால், அந்தணர்கள் அவர்களுக்குரிய அறத்தை மறப்பர். பசுக்கள் பால் கொடுக்காது. வேள்வி முதலிய புண்ணியச் செயல்கள் நடக்காது. தேவர்களுக்கு அவி உணவு செல்லாது. மழை பொய்த்துப் போகும்.

இன்புடை யறங்க ணல்லோ ரிளையவர் குரவ ராகத்
தன்பெருங் கிளைகள் சுற்ற மந்திரத் தலைவ ராக
மன்பதை கனிக ளாகத் தானைகண் மணிவீ ழாக
வன்பெலாம் வடிவ மாக வரசுமேல் வளரு மன்றோ! 441

(இ–ள்.) சிறந்த தருமங்களும், நல்லோர்களும், இளையவர் களும், ஆச்சாரியர்களும் பெரிய கிளையாகிய சுற்றத்தாரும், மக்களும் கனியாக விளங்குவர். சேனைகள் அழகிய விழுதுகளாக அமையும். இவற்றைக் கொண்டு அன்பு வடிவமாக விளங்கும் அரசன் உயர்ந்து ஓங்குவான்.

தெருண்ட சிந்தனை மன்னவ னீதிநூ றிசையி
னுருண்ட தேரின னென்னுமூ விழிகளுண் டுலகின்
மருண்டு மன்னனாம் விழியொளி மறைத்திடின் மற்றை
யிரண்டு கண்ணினும் பயனிலை யாகுமே
யென்றான். 440

(இ–ள்.) தெளிந்த சிந்தனையை உடைய அரசனும், நீதிநூலும், சூரியனும் உலகத்திற்கு அமைந்த மூன்று கண்கள். இவற்றுள் அரசனாகிய கண் மங்கிப் போகுமானால் மற்ற இரண்டு கண்கள் இருந்தும் பயனில்லை.

கற்பு மங்கையர் நிறையெனும் வரம்பினைக்
கடந்தால்
வெற்பு நுங்கிட வானகம் புவியின் மேல் வீழ்ந்தா
லற்பு மன்னவன் செய்யகோல் வளைந்திடு மானா
லுற்ப லஞ்செறி மாலையாய் விலக்குவா ருண்டோ!442

(இ–ள்.) மங்கையர்கள் கற்புக் காவலைக் கடந்தாலும், மலைகள் விழுங்குவது போல் விண்ணுலகம் பூமியின் மேல் விழுந்தாலும், அன்புள்ள அரசனுடைய செங்கோல் வளைந்தாலும், மாலையணிந்த சோழமன்னனே! தடுப்பவர்கள் யாருமில்லை.

**வேலி யானது பயிரினை நுகர்ந்திட விழைந்தாற்**
**கால னாருல குயிரெலாங் கவர்ந்திடக் கன்னறா**
**லால மன்னையர் புதல்வருக் கருத்துவ ரானால்**
**வேலை வேலையைக் கடக்கிலார் விலக்குவார்**
**வேந்தே! 443**

(இ–ள்.) வேலியே பயிரை மேய்ந்தாலும், எமன் சினத்தால் உயிர்களையெல்லாம் மடியும்படிச் செய்தாலும், பெற்ற தாயே நஞ்சைப் பாலாக ஊட்டினாலும், கடல் கரையைக் கடந்தாலும் அவற்றை யாராலும் விலக்க முடியாது.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**சிலையின் பிளவு நிலப்பிளவு**
**மணலின் பிளவுஞ் சிறந்தபுனற்**
**தலையின் பிளவு மெனநான்கு**
**வகையாம் வெகுளி தனையுடையோர்**
**தொலைவி னாகம் புள்விலங்கு**
**நரராய்ப் பிறந்து துயருழப்பார்**
**மலையுந் தகர நிழலுடனே**
**மலையுங் களிற்று மன்னவனே! 444**

(இ–ள்.) தன்னுடைய நிழலைப் பார்த்தே போர் செய்யும் யானையை உடைய மன்னவனே! அரசர்கள் கல்பிளந்தது போலவும், நிலம் பிளந்தது போலவும், மணல் பிளந்தது போலவும், தண்ணீர் பிளந்தது போலவும் நான்கு வகைச் சினத்தை உடையவர்களாக இருப்பார்கள். கல் பிளவு போன்றவர்கள் பாம்பாகவும், நிலப்பிளவு போன்றவர்கள் பறவையாகவும், மணற்பிளவு போன்றவர்கள் விலங்குகளாகவும் பிறந்து துன்பம் அனுபவிப்பார்கள் என்று சாரமாமுனிவர் கூறினார்.

*கலிநிலைத் துறை*

**சொல்லு கின்றவன் றனையிறை தகுதியிற் றொழுது**
**நல்ல வாசகம் போலவே நகைமொழி நவிற்றி**
**யல்லில் வேறலர் பறித்தவன் றனையெதி ராக்கி**
**யில்லை யோவலர் பறித்தியோ சூளுரை யென்றான்! 445**

(இ—ள்.) இவ்வாறு கூறிய சாரமாமுனிவரை வணங்கி நல்லது சொல்வது போல், நகையோடு பேசினான் மன்னன். பூவாணிகன் எதிரில் நிறுத்தி, நீ அந்தப் பூக்களைப் பறித்ததுண்டா சொல் என்று வஞ்சனையாகக் கேட்டான்.

**பூவ ளிப்பவ னுரைசெய்வா னிவர்மொழி பொய்யே**
**காவை யென்னிரு விழியினாற் கனவிலுங் காணேன்**
**யாவ ரிப்படி செய்துபோ னார்களோ வென்று**
**நாவ ழற்சுட மொழிந்தன னரசனு நவில்வான்.446**

(இ—ள்.) அந்தப் பூவாணிகள் அரசனை நோக்கி இந்த முனிவர் கூறுவது பொய். அவருடைய நந்தவனத்திற்குள் புகாதபடி தடுப்போம். நீர் போகலாம் என்றான். அப்பொழுது குற்றமற்ற முனிவர், அரசே! தக்கனுடைய வேள்வி எப்படி அழிந்ததோ அப்படியே உம்முடைய அரசும் அழிந்து புழுதி பறந்து போகக் கடவது என்று கூறிச் சென்றார்.

**அழிவு காலம தாகையா லலரெடுப் பவனைப்**
**பொழிலி லேபுகா தகற்றுவோம் போமெனப்**
**புகன்றான்**
**வழுவி லாமுனி மன்னரே தக்கனார் மகம்போற்**
**புழுதி யாடுமும் மகமுமென் றுரைசெய்து**
**போனான்! 447**

(இ—ள்.) அழிவுக்காலம் நெருங்கியதால் மன்னன் கூறினான். பூ வாணிகன் உங்களுடைய நந்தவனத்திற்குள் புகாதபடி தடுப்போம். நீ போகலாம் என்றான். அப்பொழுது குற்றமற்ற முனிவர், அரசே! தக்கனுடைய வேள்வி எப்படி அழிந்ததோ அப்படியே உம்முடைய அரசும் அழிந்து புழுதி பறந்து போகக் கடவது என்று கூறிச் சென்றார்.

**செற்ற மாகவே யிப்படி மொழிதலுஞ் சினந்திட்**
**டிற்ற மன்னவன் வனத்திலே யொருமல ரின்றி**
**நித்த நித்தநீ கொண்டுவா வென்றன னிருபன்**
**கொற்ற வேந்தனைப் பணிந்துவா ணிபன்விடை**
**கொண்டான் 448**

(இ–ள்.) சாபத்தைக் கேட்ட மன்னன் மிகுந்த சினம் கொண்டு பூ வாணிகனே இனிமேல் அந்த நந்தவனத்தில் ஒரு பூவும் மீதமின்றி நாள்தோறும் யாவரும் அறியும்படியாகப் பறித்துக் கொண்டுவா என்று கூறினான். பூ வாணிகன் வேந்தனைப் பணிந்து விடை பெற்றுச் சென்றான்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

முடிந்திடு மரசர்க் கோர்நாண்
முடியாத பழி யுண்டாக
வெடித்தபோ தெல்லா மென்றூழ்
விடியாத போதிற் கொய்தா
னெடுத்தசெவ் வந்திப் போதி
னெதிர்படு நிழலா மென்னக்
கடுத்திகழ் விசும்பிற் றாரா
கணங்களு மறைந்த வன்றே 449

(இ–ள்.) அந்தச் செவ்வந்திப் பூவைச் சூடிய சோழமன்னனுக்கு என்றும் நீங்காத பழி உண்டாகும்படி அந்தப் பூ வாணிகன் அதிகாலையில் பூக்களையெல்லாம் பறித்தான். அந்த மலர்களின் ஒளிக்கும் ஆற்றாத நிழலைப் போல விண்மீன்கள் மறைந்தன.

குரவனா முனிக்கு நாமுன்
கொடுத்தசெவ் வந்தி நாட்போ
தரசனாற் கவரப் பட்ட
தெனநினைந் தரவ வேந்தன்
வரவிடு கனகச் செந்தா
மரைப்புது மலரைப் போலே
யிரவினை யகற்றிக் கீழ்பா
லிரவியு முதயஞ் செய்தான். 450

(இ–ள்.) சாரமாமுனிவருக்கு நாம் கொடுத்த செவ்வந்தி மலர்களை அரசன் அபகரித்துக் கொண்டான் என்று நினைத்து, ஆதிசேடன் அனுப்பிய செந்தாமரைப் போல புதிய மலர் ஒன்று தோன்றியதைப் போல கிழக்குத் திசையில் சூரியன் உதித்தான்.

## கலிநிலைத் துறை

**வண்டு ணாதமு னெடுத்தசெவ் வந்திநாண் மலரைக்**
**கொண்டு யாமுனி காணவே வணிகனுங் கொடுத்தான்**
**கண்டு நெஞ்சுநொந் திறைவர்சந்நிதியிலே**
**கலுழ்ந்தான் பண்டு மாரனை யெரித்தவ ரவனுடன்**
**பகர்வார்! 451**

(இ—ள்.) வண்டுகள் தேன் உண்பதற்கு முன்னமே எடுத்த புதிய செவ்வந்தி மலரைக் கொண்டுபோய் பூ வாணிகன் அரசனிடத்தில் கொடுத்தான். அதைக்கண்டு மனம் நொந்து செவ்வந்தி நாதருடைய சந்நிதியில் சாரமாமுனிவர் முறையிட்டு அழுதார். மன்மதனை எரித்த சிவபெருமான் முனிவர் முன்னே தோன்றினார்.

**அஞ்ச லஞ்சனீ முனிவனே யவனைநா மழிப்போ**
**நஞ்ச மன்னவன் றனதுறை யூரிலே நண்ணி**
**மஞ்சு லாவிய மாளிகை மறுகெலா மருவி**
**யிஞ்சி சூழுமிந் நகரெழு தினத்திலே யிறக்கும். 452**

(இ—ள்.) முனிவரே! நீர் அஞ்சவேண்டாம். நஞ்சு போன்ற அந்த மன்னனுடைய ஊருக்குள் சென்று மேகங்கள் தவழும் மாடமாளிகைகள் வீதிகளை அடைந்து, மதில் சூழ்ந்த இந்த நகரம் இன்று முதல் ஏழு தினத்தில் அழிந்துபோகும் என்று கூறி வா! என்றார்.

**அரன ருச்சனை புரிகுவோ ரிடியரைப் பணிவோர்**
**குரவர் சொற்படி யொழுகுவோ ரிரந்தது கொடுப்போர்**
**நரைமு திர்ச்சியோ ரருமறை சிவாகம நவில்வோர்**
**திருவு டைப்பணி புரிகுவோ ரருமகஞ் செய்வோர் 453**

(இ—ள்.) சிவபெருமானை வணங்குபவர்களும், குரு சொல் கேட்பவர்களும், ஏழைகளுக்கு இரங்கி அவர்கள் யாசித்ததைக் கொடுப்பவர்களும், முதியவர்களும், வேதாகமம் படிப்பவர்களும், வேள்வி செய்பவர்களும் கேட்கும்படியாக இதனைச் சொல்லி வா! என்றார்.

துன்று கற்பினார் யாவருங் கேளுமின் சொல்கே
னின்று தொட்டெழு தினத்திலிப் பதியிறந் தேகு
மன்றி லுற்றவ ராணையாற் சொரியுமண் மாரி
யன்ற டுக்கழி வாகிய வேந்தனு மழிவான்! 454

(இ–ள்.) சிறந்த கற்புடைய மங்கையர் முதலான யாவரும் கேளுங்கள். சிவபெருமான் ஆணையால் இன்று முதல் ஏழு நாட்களில் மண்மாரி பொழிந்து இந்த உறையூர் அழிந்து போகும். அடாத காரியம் செய்த வன்பராந்தகச் சோழனும் அழிவான்.

சுற்ற மோடவன் றானையுங் கயவருந் தொலைவா
ரிற்றை நாளிது சிவனுப தேசமென் றெவர்க்குஞ்
சொற்று வாவென வுரைசெய்தார் முனிவனுந் தொழுது
மற்றை நாளுறை யூரிலே யுரைத்தனன் மறுகில் 455

(இ–ள்.) அரசனைச் சேர்ந்த சுற்றங்கள் சேனைகள் கயவர்கள் யாவரும் அழிந்து போவார்கள். இது சிவபெருமான் கூறியது என்று எல்லாருக்கும் சொல்லி வரும்படி இறைவன் கூறினார். அதைக் கேட்ட சாரமாமுனிவரும் இறைவனை வணங்கி விடை பெற்றுக் கொண்டு உறையூர் சென்று வீதிகள் தோறும் அதனை அறிவித்தார்.

தூய ரானவ ரக்கண மேசெலத் துணிந்தார்
தீய ரானவ ரசங்கதி யாடியிற் செறிந்தார்
தாய ராமென வருள்செயுஞ் சிராமலைத் தலைவர்
வாயு வோடெழு முகிலையும் வரவழைத் துரைப்பார் 456

(இ–ள்.) தூய்மையான அறிவுள்ள நல்லோர்கள் அப்பொழுதே அந்த ஊரைவிட்டுப் போய் விட முடிவு செய்தனர். தீயவர்கள் சாரமாமுனிவர் கூறியதைப் பொய்யென்று கூறி அங்கேயே தங்கிவிட்டனர். தாய் போன்ற அருளையுடைய செவ்வந்தி நாதர் வாயு தேவனுடைய ஏழு மேகங்களையும் அழைத்துக் கூறலானார்.

சந்த நான்மறை முனிவனை யிகழ்ந்தவன் றருஞ்செவ்
வந்தி நாண்மலர்த் தொடையலும் புனைந்திடு மன்னன்
பந்த மாகிய கிளைகளோ டழிந்திடப் பதியும்
விந்த மாமென மறைந்திடு மெனச்சொல்லி விடுத்தார்.457

(இ-ள்.) சந்தவடிவான வேதங்களை உணர்ந்த சாரமா முனிவனை இகழ்ந்து, அவர் நமக்குத் தொடுத்த செவ்வந்தி மலர்களையும் கவர்ந்து வன்பராந்தகன் அணிந்து கொண்டான். அவனும் அவனுடைய சுற்றத்தாரும் உறையூரும் விந்தமலையைப் போல பூமியில் புதையும்படி மண்மாரி பொழியுங்கள் என்று கூறி அனுப்பினார்.

தாமு மந்நகர்க் கெதிர்முக மாகிமுற் றலத்துக்
கேம மாகவே புறங்கொடுத் திருந்தன ரிப்பான்
மாமு கிற்கண மிடித்ததிர்ந் தெழுந்துமண்
மழையைத்
தீமு கங்களா லிறைந்தன புனலையுஞ் சிதறி 458

(இ-ள்.) அவ்வாறு சப்தமேகங்களையும் அனுப்பிய இறைவன் உறையூரைப் பார்க்க மேற்கு முகமாகத் திரும்பினார். அவருடைய ஆணையின்படி மேகக் கூட்டங்கள் மின்னி இடித்து ஆரவாரம் செய்து எழுந்து மண்ணும், மழையும், நெருப்புமாகப் பொழிந்தன.

சண்ட மாருதஞ் சுழன்றுறை யூரெலாஞ் சலியா
வெண்டி சாமுகந் திரிந்திட வொன்றிலொன்
றெடுத்துக்
கொண்டு கீழ்விழ வெறிந்தன பலப்பலக் குவையாய்
மண்டி ரண்டன மலைபெருங் குழவிகண் மான. 459

(இ-ள்.) சண்ட மாருதனின் காற்று சுழன்றது. உறையூரில் இருந்த அனைவரும் தளர்ந்தனர். உறையூர் எட்டுத் திசைகளிலும் சுழன்றது. மாடமாளிகை கூட கோபுரங்கள் பெயர்ந்து விழுந்தன. மலைகள் போலவும் குன்றுகளைப் போலவும் மண் மேலிட்டு அழியத் தொடங்கின.

கூற்ற மன்னவன் றீவினை விளைந்திடுங் கோழி
கீற்ற டைந்துபல் குழிகளா யுயர்ந்தது கிழக்கிற்
காற்று வந்துதன் கரங்களாற் கீழ்நிலங் களைய
வேற்று மண்களைச் சொரிந்தன போன்றன
மேகம். 460

(இ—ள்.) உறையூரில் வாழ்ந்த மக்களுக்கு எமனைப் போலானான் பராந்தகசோழன். அவனுடைய தீவினையால் அந்த நகரம் கோழியின் கால்களால் கீறப்பட்டதைப் போல மேடுபள்ளங்களால் மாறியது. கீழ்க்காற்று மண்ணைக் குத்திப் பெயர்த்தெடுத்தது. மேகங்கள் வேறு மண்ணைப் பொழிவது போல் இருந்தது.

**மாட மாளிகை மறைந்தன மறைந்தன மணித்தே**
**ராட ரங்கெலாம் புதைந்தன புதைந்தன வகங்கள்**
**கூட கோபுரங் கரந்தன கரந்தன குளங்கள்**
**மேடு பட்டன காவுட னாவண வீதி. 461**

(இ—ள்.) மாடமாளிகைகளும், அழகிய தேர்களும், நடன சபைகளும், வீடுகளும், கூடகோபுரங்களும், குளங்களும், சோலைகளும், கடைவீதிகளும் இருந்த இடம் தெரியாமல் மண் மேடிட்டுப் புதைந்து காடாக வீதிகளாயின.

அந்த மாமுனி உரைத்ததை யசங்கதி யாடி
யிந்த வாருயி ரிழந்தன மெனக்கரைந் திடுவார்
தந்தை தாயருக் கிரங்குவார் கலுழுவார் தளர்வார்
மைந்த ரானவர்க் குருகுவா ராயினர் மாக்கள். 462

(இ—ள்.) சாரமாமுனிவர் கூறியதை நம்பாமல் அருமையான உயிரை இழந்தோமே என்று சிலர் இறந்தனர். தந்தையாரும், தாயாரும் மைந்தர்களும் மறைந்ததை எண்ணிச் சிலர் மனம் உருகினார்கள்.

மழைத னக்கிடு குடையெனக் குழவியான் மறைப்பார்
தழைசெ விப்புகர் முகமத மருப்பினைத் தந்தி
புழைப ரப்பிய வாயிடை சிலர்சிலர் புகுவா
ரழலி ரைந்திடு புயனுக் கஞ்சுவா ரானார். 463

(இ—ள்.) சிலர் தங்கள் குழந்தைகளையே குடையாகப் பிடித்துக் கொண்டார்கள். பெரிய காதுகளும், புள்ளிகளுடைய முகமும் இரண்டு கொம்புகளுடைய யானைகள் இறந்து கிடந்தன. அவற்றின் வாய்க்குள்ளே சிலர் அச்சத்தால் நுழைந்தனர். அக்கினிச் சுவாலையாகப் பெய்யும் மழைக்கு அஞ்சினர்.

ஒருவருக்கிடை யொருவர்வந் தொளித்தொளித்
தொதுங்கிப்
பரிவ ருத்தனைப் பண்ணிடு மவரெனப் பயில்வார்
வெருவி யக்கண நிலவறை செயச்சிலர் விரைவார்
புரமெ ரித்திடு பொழுதினி லவுணரைப் போன்றோர். 464

(இ—ள்.) ஒருவர் இருக்குமிடத்தில் மற்றொருவர் வந்து ஒளிந்து கொண்டனர். வேறு சிலர் அங்கேயே வந்து ஒதுங்கி இறந்தனர். சிலர் நிலவறை செய்து புகுந்து கொள்ள விரைந்தனர். திரிபுரங்கள் எரித்த போது அதற்குள்ளே அகப்பட்ட அரக்கர்களைப் போல உறையூர் மக்கள் துடித்தனர்.

பாவி மன்னவன் றன்னகர் படும்துயர் பார்த்துத்
தேவி தன்னுடன் பரியின்மேற் குடதிசைச் சென்றான்
மேவு மவ்விடந் தன்னிலு மண்மழை விழுந்த
வாவி கொண்டவன் வடதிசைக் காவிரி யடைந்தான். 465

(இ—ள்.) மகா பாவியாகிய பராந்தகன் தன்னுடைய நகரம் படும் பாட்டைப் பார்த்துத் தன் மனைவியுடன் குதிரையின் மேலேறி மேற்கு நோக்கிச் சென்றான். அங்கும் அவன் மேல் மண்வாரி விழுந்தது. எனவே உயிர் மேல் ஆசை கொண்ட அவன் வடதிசைக் காவேரியை அடைந்தான்.

சென்னி யவ்விடைத் திரும்பவு மவன்பெருந் தேவி
தன்ன தாகிய கருப்பமெய் முதிர்ந்திடுந் தளர்வாற்
பொன்னி யாற்றிடை விழுந்தனள் புலையரிற் புலைய
னென்னு மன்னவன் றிரும்பிவந் தவளையு மெடாமல்.466

(இ—ள்.) அவ்வாறு அவன் காவிரியை நோக்கிச் சென்றபோது அவனுடைய தேவி தன் வயிற்றிலுள்ள கர்ப்பம் முதிர்ந்து உடல் தளர்ந்து காவிரியில் விழுந்தாள். கொடியவனிலும் கொடியவனாக அந்த அரசன் அவளை எடுக்காமல் சென்றான்.

உயிர்பி ழைத்திடி லேதுவிற் றேனுமுன் பாமென்
செயிரி ழைத்த சொற் படியவன் விரைவுடன் சென்றா
னயிர்கொ ழிந்திடு காவிரிக் கரைபுகு மளவிற்
றுயர்பு டைத்துநொந் தவனொடு விழுந்தது துரகம். 467

(இ—ள்.) பட்டத்து அரசியையும் காக்காமல், எதையேனும் விற்றாவது பிழைக்கலாம் என்று மூடனைப் போல குதிரைமேல் வேகமாகச் சென்றான். காவிரியின் வடகரையில் போகும்போது மண்மாரியாலும், காற்றாலும் அடிபட்டுக் குதிரையோடு மண்ணில் விழுந்தான்.

**மாவு மன்னனு மறைந்திடப் பொழிந்தமண் மாரி**
**காவி னின்றகண் மலரெலாம் பறித்துமுன் கவர்ந்த**
**பாவி யென்றிவன் விருப்பமா னதுகெடும் படிக்குப்**
**பூவி னான்மறைந் திடுவது போன்றன புயல்கள் 468**

(இ—ள்.) குதிரையையும், மன்னனையும் மண்வாரி மூடியது. அக்காட்சி சாரமாமுனிவரின் நந்தவனத்தில் உள்ள தேன் பொருந்திய செவ்வந்தி மலர்களைக் கவர்ந்து கொண்ட மகாபாவி இவன் பூவின் மேல் வைத்த அவனுடைய ஆசையைப் பூவாகிய மண்மாரியினால் மறைப்பது போல் இருந்தது.

**பிறைமு டித்தவர் முனிவனா லவிர்மழை பெய்த**
**தறையி லித்தனை யாயிரத் தலமென வறியு**
**முறைக ளிட்டன போன்றிருந் தனவுறை யூரிற்**
**குறைய றத்திசை திசையெலா நிறைந்தமட்**
**குவைகள்469**

(இ—ள்.) பிறையணிந்த சிவபெருமானுடைய கோபத்தால் மண்மாரி பெய்த பூமியில் அடையாளம் வைத்ததைப் போல உறையூரில் நான்கு திசைகளிலும் மண்மேடுகள் நிறைந்திருந்தன.

**கண்ணி னாலருட் பெருமழை பொழிந்திடுங் கடவுண்**
**மண்ணி னான்மழை பொழிந்திடு முகிலினை மாற்றிப்**
**புண்ணி யஞ்செயா வளவனூ ரழித்தது போதும்**
**விண்ணி லேகுமென் றுரைத்தனன் மறைந்தன மேகம் 470**

## *கலிவிருத்தம்*

(இ—ள்.) தம்முடைய கண்களால் அடியார்களுக்கு அருள் மழை பொழியும் செவ்வந்தி நாதர், மண்மாரி பெய்த மேகங்களைத் தடுத்து நிறுத்தினார். பாவியாகிய சோழனுடைய உறையூரை அழித்தது போதும். இனி உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள் என்று கட்டளையிட்டு அருளினார். மேகங்களும் மறைந்தன.

**வன்னி வண்ணர் மலரை முடித்திடுஞ்**
**சென்னி பட்ட திறமுறை செய்தனம்**
**பொன்னி யாறு புகுந்திடர் மூழ்கிய**
**கன்னி மாதின் கதையை விளம்புவாம் 471**

(இ—ள்.) நெருப்பைப் போன்ற திருமேனியை உடைய சிவபெருமான் அணிகின்ற செவ்வந்தி மலரைத் தன் தலையில் சூடிக் கொண்ட வன்பராந்தகச் சோழன் மண்ணிலே புதைந்து அழிந்ததைக் கூறினோம். இனி காவிரியாற்றிலே விழுந்த பட்டத்து அரசியின் வரலாற்றைச் சொல்லுகிறேன் என்றார் கவுதமமுனிவர்.

### *கலிநிலைத் துறை*

**மேனி றைந்தெழ வருந்தியும் புனலிடை வீழ்ந்துஞ்**
**சூனி றைந்துகொண் டிரும்புனற் சுழிகளிற் சுழன்று**
**மானி றைந்திடு கொடியவர் திருவரு ளாலே**
**தானி றந்தில னொழுகின ளணுகின டடத்தை. 472**

(இ—ள்.) அப்படிக் காவிரியாற்றில் விழுந்த அரசி, பெருமூச்சு விட்டுத் தண்ணீரில் மூழ்கி வருந்தினாள். பூரண கர்ப்பத்துடன் நீர்ச் சுழலில் சுழன்றாள். ஆனாலும் சிவபெருமான் திருவருளால் நீர் ஒழுக்கிலே மிதந்து போய் ஆற்றங்கரை ஓரமாக ஒதுங்கினாள்.

**கரையி லேயருந் தவம்புரி பவனருட் கண்ணான்**
**பிரம மாநதி யென்பவன் குலத்தினும் பெரியோ**
**னரிவை யவ்விடை வருதல்கண் டெடுத்தன னவடன்**
**றேரும ருந்துய ரகற்றினா னடைவிலே தேற்றி 473**

(இ—ள்.) அந்த ஆற்றங்கரையில் சிறந்த தவத்தைச் செய்து கொண்டு பிரம்மாநதி என்ற ஓர் அந்தணர் இருந்தார். அருளையே கண்ணாகக் கொண்ட அவர் சோழமாதேவி மிதந்து வருவதைக் கண்டார். அவளையெடுத்துத் துன்பங்களை நீக்கிக் காப்பாற்றினார்.

**தந்தை யானுன தச்சமுந் தளர்ச்சியுந் தவிர்வா**
**யெந்த வூரெவன் றேவியுன் னாமம்யா தென்றா**
**னந்த ணாளனே யன்னையே யத்தனே யருளே**
**யெந்தை யேயுனக் கடைக்கல மடைக்கல**
**மென்றான். 474**

(இ–ள்.) பெண்ணே! நான் உன்னுடைய தந்தை நீ என்னுடைய மகள். பயத்தையும், சோர்வையும் விலக்கிக் கொள். நீ எந்த ஊரைச் சேர்ந்தவள். யாருடைய மனைவி. உனது பெயர் யாது? என்று கேட்டார். பிராமண உத்தமரே! நீயே எனது தாயும், தந்தையும், குருவும் ஆவாய். நான் உமக்கு அடைக்கலமானேன் என்றாள்.

திரிசி ராமலை யிறையவர் திருவுளஞ் சிதைத்த
புரவ லன்னுயிர்த் தேவியான் புவனமா தேவி
சொரியு மண்மழைக் கச்சமாய் மனுகுலந்
தொலைத்தோன்
குரக தந்தனை யுகைத்தன னென்னையுங்
கொண்டு 475

(இ–ள்.) திரிசிராமலைநாதருக்கு அபசாரம் செய்த சோழ மன்னனின் மனைவி நான். என் பெயர் புவனமாதேவி. மண்மாரிக்குப் பயந்து, மனுக்குலத்தை அழித்த அந்த மன்னன், குதிரையின் மேல் என்னையும் வைத்துக் கொண்டு புறப்பட்டான்.

அச்ச மாய்விழுந் தாற்றிலே மிதந்துனை
யடைந்தேன்
கச்சு வார்கழ லரசனெவ் விடத்தனோ காணே
னெச்ச மானது வேண்டுமிக் குலத்தினுக் கென்று
பிச்சி யாகியு முயிர்சுமந் திருந்தனன் பிழைத்து476

(இ–ள்.) நான் பயந்து குதிரையிலிருந்து நழுவி ஆற்றிலே விழுந்து மிதந்து உன்னை அடைந்தேன். என் கணவனான அரசன் எங்குச் சென்றானோ நான் அறியேன். இந்தச் சோழ வம்சத்திற்குப் பிள்ளை வாரிசு வேண்டுமென்று பிச்சை எடுப்பதைப் போல் உயிரைச் சுமந்து கொண்டு இருக்கின்றேன்.

ஐய வென்றழுது துரைத்தன ளந்தண னவளைப்
பைய வேகொடு சென்றுபோய்ப் புகுந்துதன் பதியின்
மையில் கற்புடை மனைவியோ டுரைத்தனன்
வனத்திற்
தையல் வந்தது மவளது பெருமையுந் தகவும். 477

(இ—ள்.) இவ்வாறு பிராமணரிடம் தன் வரலாற்றைக் கூறினாள். அவனும் அவளை மெல்ல அழைத்துச் சென்று தன்னுடைய கற்பில் சிறந்த மனைவியிடம் சேர்த்தான். அரசி ஆற்று நீரில் வந்ததையும், அவளுடைய பெருமையையும் எடுத்துக் கூறினான்.

**கருப்பமா னதுநிறை கமலச் சீதையை**
**விருப்பமாய் வளர்த்தவான் மீகர் போலவே**
**யருப்பமுங் குறைவிலா தமிர்த நன்புன**
**றருப்பண நிகர்மணித் தாம மாளிகை 478**

(இ—ள்.) நிறைமாதக் கர்ப்பத்தோடு வந்த திருமகளாகிய சீதையை அன்புடன் ஆதரித்த வான்மீக முனிவரைப் போலவே சிறிதும் குறைவின்றி அமுர்தம் போன்ற உணவையும், நல்ல நீரையும், இரத்தின மாலையையும், பூமாலையையும் அளித்து அந்த அரசமாதேவிக்குத் தன் இருப்பிடத்தில் பாதுகாப்பளித்தான்.

**சந்தன மிமசலம் பனிதந் தணமலர்**
**கந்துக மம்மனை கழங்கு பைங்கிளி**
**சுந்தர வோதிமந் தோழி மார்களுந்**
**தந்தன னவளது தளர்ச்சி நீங்கவே! 479**

(இ—ள்.) மேலும் சந்தனமும், பனிநீரும், பச்சைக் கற்பூரமும், குளிர்ந்த பூக்களும், தந்து அம்மானை, கழங்கு, கிளியையும், அன்னம் போன்ற தோழியரையும் தந்து அரசமாதேவியை மகிழ்ச்சியுடன் இருக்கச் செய்தான்.

**இன்புட னிப்படி யிருக்கு நாளிலே**
**யொன்பது திங்களு நிறைந்த தோள்ளிழை**
**தன்புடை மருத்துவத் தலைமை மாதரை**
**யன்புட னமைத்தன னகன்றி டாமலே 480**

(இ—ள்.) இவ்வாறு அரசமாதேவி மகிழ்ந்து இருக்கின்ற நாளில் ஒன்பது மாதங்களும் நிறைந்தன. பத்தாவது மாதம் தலைமையான மருத்துவப் பெண்களை அழைத்து அரசியை நீங்காதவாறு அருகிலேயே இருக்கச் செய்தான்.

பூரண கருப்பமாய்ப் பொறையு யிர்த்திடுஞ்
சீரிய தினத்திலோர் முனிவர் சேர்ந்தன
னோரையுங் கரணமும் யோக முஞ்செறி
வாரமு நன்மையாய் வருதல் கண்டனன் 481

(இ—ள்.) பத்து மாதங்களும் நிறைந்து பேறு காலம் வந்தபோது அந்தப் பிராமணன் ஒரு முனிவருடன் சேர்ந்து இராசியும், கரணமும், யோகமும், வாரமும், லக்னமும், நட்சத்திரமும் சிறப்பாக வருவதைக் கண்டான்.

திரிபுவ னப்பெருந் தேவி யேயின
மொருகடி கையிற்பொறை யுயிர்த்தி டாதுகொள்
பெருநல மெனச்சொலிப் பெயர்ந்து போயினா
னரிவையுஞ் சரணமே லாக நின்றனள் 482

(இ—ள்.) உலகத்தை ஆளும் அரசமாதேவி ஒரு நாழிகை கழித்து குழந்தையைப் பெற்றால் அக்குழந்தையால் பெரிய நன்மை உண்டாகுமென்று அந்த முனிவர் கூறிவிட்டுச் சென்றார். அதைக் கேட்ட அரசிமாதேவி இரண்டு கால்களையும் மேலே தூக்கித் தலைகீழாக நின்றாள்.

முற்றிழை முனிசொலு முகுர்த்தந் தன்னிலே
பெற்றனன் குழவியைப் பிறையை நேரென
நித்தமும் வளர்ந்தது நிதியுஞ் சாதக
முற்றிடு தினத்தினி லோலை தீட்டினார்! 483

(இ—ள்.) முனிவர் சொல்லியபடி நல்ல முகூர்த்தத்தில் அரசமாதேவி குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தை பிறையைப் போல வளர்ந்தது. அந்தணனும் பொருத்தமான நாளில் அக்குழந்தையின் சாதகத்தை ஓலையில் எழுதி வைத்தான்.

ஈண்டுதன் றாயுட னிருந்த கோமக
னாண்டொரு நான்குசென் றழகின் வீறினான்
தூண்டிய பெரும்புகழ்ச் சோழன் மண்டலங்
காண்டக வெங்கணுங் கான மானதே! 484

(இ—ள்.) தன் அன்னையுடன் அரசகுமாரன் நான்கு வருடங்கள் அழகாக வளர்ந்தான். ஒரு காலத்தில் புகழ்பெற்று பொழிவுடன் இருந்த சோழமண்டலம் அரசன் இல்லாத காரணத்தால் அழிந்து காடுகளாக மாறியிருந்தன.

அன்புடைச் சாரமா முனியு மத்தலந்
தன்பொருட் டாகவே யிறந்த தன்மையால்
வன்புடைக் காவலன் மந்தி ரிக்குழா
மின்பமுற் றுறையுவ் விடத்தி லெய்தினான் 485

(இ–ள்.) அன்பையுடைய சாரமாமுனிவர் தன்னால்தான் உறையூர் அழிந்து போனதை எண்ணி வருந்தி அன்பில்லாத பராந்தகச் சோழமன்னனுடைய அமைச்சர்களும், மற்றவர்களும் வாழும் இருப்பிடத்திற்குச் சென்றார்.

தொல்லையி னமைச்சரே சோழ மண்டலம்
புல்லிதா யிப்படிப் போத னீதியோ
வல்லிய முயர்த்தவன் மரபிற் றோன்றினோ
ரில்லையோ தேருமி னென்று கூறினான்! 486

(இ–ள்.) அமைச்சர்களே, இந்தச் சோழமண்டலம் காடுகளால் மூடப்பட்டு தாழ்ந்திருப்பது நியாயமா? புலிக்கொடியை உடைய சோழ வம்சத்தில் தோன்றியவர்கள் யாரேனும் உள்ளனரா என்று ஆராய்ந்து பாருங்கள்? என்று சாரமாமுனிவர் கூறினார்.

அமைச்சருந் திருவுள மாகி லையனே
யுமைக்கிறை யருளினா லுலக மேழையுஞ்
சுமக்குநல் லொருவனைச் சோழன் றோன்றலை
யிமைக்குமுன் கொணருவோ மென்று கூறினார்!487

(இ.–ள்..) அதனைக் கேட்ட அமைச்சர்கள், ஐயனே! உமக்குத் திருவுளம் உண்டாகில், சிவபெருமான் அருளால் ஏழு உலகங்களையும் தாங்கிக் காக்கும் வலிமையுள்ள ஒரு சோழ இளவரசனைக் கண்ணிமைக்கும் நேரத்தில் கொண்டு வருகிறோம் எனக் கூறினர்.

காவலன் காவிரிக் கடக்குங் காலையிற்
றேவியும் புனலிடை வீழ்ந்து தீரமுற்
றாவியோ டிருந்தன ளறிமி னென்றனன்
யாவரும் புகழ்முனி யிருக்கை யெய்தினான் 488

(இ—ள்.) அவர்களை நோக்கிச் சாரமாமுனிவர் பராந்தகச் சோழன் காவிரியாற்றைக் கடக்கும் காலத்தில் அவனுடைய தேவி ஆற்றில் விழுந்தாள். அவள் கரையைச் சேர்ந்து உயிருடன் இருக்கின்றாள். இதனை நீங்கள் அறிவீர்களா? என்று கூறித் தன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

சட்பதங் குடைமதத் தறுகண் யானையைக்
கட்படம் புனைந்துதன் கரையி னேகெனக்
கொட்புற விடினது கொணரு மென்றுதம்
முட்கலந் தமைச்சர்க ளொருமித் தேகினார்! 489

(இ—ள்.) வண்டுகள் குடையும் மதமும், அஞ்சாமையும் உடைய யானையின் இரண்டு கண்களையும் கட்டிக் குளிர்ந்த காவிரிக் கரையிலே செல்லும்படி விட்டால், அந்த யானை அரசனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவரும் என்று அமைச்சர்கள் அனைவரும் சேர்ந்து ஒருமித்த கருத்தின் முடிவை எடுத்தார்கள்.

முனிவனுந் கிவையெலா மொழிகு வாமெனத்
துணிவொடுஞ் சென்றுதங் கருத்தைச் சொல்லினா
ரனைவரு முயலுமென் றருளி னானவர்
கனைகளிற் றினைவிழி கட்டி யேவினார் 490

(இ—ள்.) அமைச்சர்கள் அனைவரும் சாரமாமுனிவரிடம் சென்று தங்கள் கருத்தைக் கூறினார்கள். அவரும் நீங்கள் முயற்சி செய்யுங்கள் என்று கூறினார். அமைச்சர்களும் முழக்கம் செய்கின்ற யானையின் கண்களைக் கட்டி அனுப்பினார்கள்.

அரசிப நடத்துல கனைத்துந் தேடியே
கரைபொரு காவிரிக் கரையிற் செண்பக
மருமலி திருநில மருங்கிற் சென்றது
திருமகன் சிதைத்தனன் சிற்றி லவ்விடை 491

(இ—..) அரசனின் பட்டத்து யானை உலகம் அனைத்திலும் தேடிப் பின்னர் அலைகளையுடைய காவிரி நதியின் கரையில் செண்பகப்பூ மணம் பொருந்திய இடத்தின் அருகில் சென்றது. அங்கே குழந்தைகளுடன் கூடி சிறு வீடு கட்டி அதனைக் காலால் சிதைத்து இளவரசன் விளையாடிக் கொண்டிருந்தான்.

சிறுமகா ருடனவன் சிதைக்குஞ் சிற்றிலின்
மறுவறு கடகரி வந்து முன் பணிந்
திறைமகன் தனைக்கரத் தெடுக்க லுற்றது
குறுமகா ரனைவரு மிரிந்து கூவினார் 492

(இ-ள்.) இளவரசன் விளையாடிச் சிதைக்கும் வீட்டின் அருகே அந்தக் குற்றமற்ற மதயானை வந்து அச்சிறுவனை வணங்கியது. தன் துதிக்கையால் இளவரசனை எடுக்க முற்பட்டது. அருகிலிருந்த மற்ற குழந்தைகள் பயந்து கூக்குரலிட்டனர்.

தாயரை யடைந்துநின் றனையன் றன்னைவந்
தாயிருங் களிறெடுத் தசைத்த தென்றனர்
வாயினி லறைந்துகை வயிற்றில் வைத்தவ
ளுயவந் தணனுடன் றொழுது சொல்லினாள் 493

(இ-ள்.) அக்குழந்தைகள் அரசியிடம் வந்து உங்களுடைய மகனை ஒரு பெரிய யானை எடுக்க முற்பட்டது என்று கூறினர். அதனைக் கேட்ட அரசி வாயிலும், வயிற்றிலும் அறைந்து கொண்டு அந்தணனைக் கண்டு வணங்கி அதனைக் கூறினாள்.

அந்தண னவ்விடை யணுகு மெல்லையிற்
றந்தியுந் துதிக்கரஞ் சலித்து நின்றது
சிந்தையி னுணர்ந்திறை தேவி யேகரி
யிந்தன மிவன்பதத் தெழுது கென்றனன். 494

(இ-ள்.) அரசி கூறியதைக் கேட்ட அந்தணன் யானை இருக்கும் இடத்திற்குச் சென்றான். அங்கு இளவரசனைத் தூக்க முடியாமல் யானை களைத்து நின்றது. அதைக் கண்ட அந்தணன் சிறிது சிந்தித்து அரசியை அழைத்துக் கரியால் இளவரசனின் உள்ளங்காலில் எழுதும்படிக் கூறினான்.

கீறினள் பதத்தினிற் கிரியி னுச்சியி
னேறிய கதிரென வெடுத்த தொண்கரி
வீறிய மத்தக மிசையிற் றோன்றினான்
றேறினள் சிவன்செய லென்று தேவியே. 495

(இ—ள்.) அந்தணன் கூறிவாறே அரசியும் எழுதினாள். உடனே உதயகிரியின் உச்சியில் ஏறிய கதிரவனைப் போல யானையின் பெரிய மத்தகத்தில் இளவரசன் அமர்ந்திருந்தான். இதனைக் கண்ட அரசி இது சிவன் செயல் என்று முடிவு செய்தாள்.

திருநல மறையவர் மலரைச் சிந்தினா
ரருமறை யந்தண னாசி கூறினா
னொருகரிக் கோடுகீ ழிருந்த வுள்ளடி
யிருகரிக் கோடுமே லிருக்க வுற்றதே! 496

(இ—ள்.) வேதங்கள் ஓதும் அந்தணர்கள் மலர்களைத் தூவ முனிவனும் ஆசி கூறினான். ஒரு கரிக்கட்டைக் காலிலே கொண்ட இளவரசன் இரண்டு கோடுகளாகிய கொம்பினை உடைய யானையின் மேல் அமர்ந்திருந்தான்.

உன்னத மதகரி யுவந்து சென்றருண்
மன்னிய திரிசிரா மலைக்கொ ழுந்தனார்
சன்னதி முன்னரா தரிக்க வைத்தது
சென்னிதன் சென்னியின் முடியைச்
சேர்த்தினார்! 497

(இ—ள்.) அந்த உயர்ந்த மதயானை மகிழ்ச்சியுடன் இளவரசனைச் சுமந்து கொண்டு சென்று அருள் பொருந்திய சிராமலைநாதர் சந்நிதானத்தில் அச்சிறுவனை இறைவன் அருள்பெறுமாறு வைத்தது. உடனே அவனுடைய தலையில் மணிமுடியை அணிவித்தார்கள்.

மந்திரக் கிழவருங் கிளையின் மாந்தருந்
தந்திரத் தலைவருந் தானை மாக்களுஞ்
சுந்தரத் துணைவரு முறுதிச் சுற்றமும்
வந்துடன் வளைந்தன வாரி போலவே! 498

(இ—ள்.) அமைச்சர்களும், சோழ வம்சத்தினர்களும், தந்திர உபாயங்களைச் சொல்லும் தலைவர்களும், சேனாவீரர்களும், அழகிய துணைவர்களும், அரசனுக்கு உறுதி கூறும் சுற்றத்தார்களும் கடல் போல் வந்து சூழ்ந்தனர்.

கழைச்சிலை யிவன்கரி காலச் சோழனென்
றழைத்தனர் கடமையு மாறி லொன்றுகொண்
டொழித்தனன் உயிர்ப்பணி உலகம் யாவையும்
பிழைத்தன பகைமையும் பிணியு மற்றவே! 499

(இ—ள்.) கரும்பு வில் கொண்ட மன்மதனைப் போன்ற அழகுள்ள இளவரசனுக்குக் கரிகால் சோழன் என்று பெயரிட்டனர். அவன் குடிகளிடம் ஆறில் ஒரு கடமை வாங்கிக் கொண்டு ஆட்சி செய்தான். அதனால் பகையும், பிணியும், துன்பமும் நீங்கி மக்கள் வாழ்ந்தனர்.

கடலெனுங் காவிரிக் கரையும் கட்டிமுன்
செடிபடு தென்கரைச் சிவால யங்களும்
வடகரை வாய்த்தலை வயலு மாக்கினான்
படவர வின்முடிப் பார நீக்கினான் 500

(இ—ள்.) அந்தக் கரிகாலன் கடல் போன்ற காவிரிக்குக் கரை கட்டினான். செடிகள் நிறைந்த தென்கரையில் சிவாலயங் களையும், வடகரையில் வாய்ந்தலை முதலிய கால்வாய்களையும், வயல்களையும் உருவாக்கி ஆதிசேடனுடைய பாரத்தை நீக்கினான்.

சேரனுஞ் செழியனுந் திறைய ளந்திட
வீரனிப் படிபடி புரக்கும் வேலையிற்
சாரனென் பவன்புரி தவத்தி னான்மகிழ்ந்
தாரணந் தொழுதுமவ னருளி னெய்தினான்! 501

(இ—ள்.) சேரனும், பாண்டியனும் கப்பம் செலுத்துமாறு கரிகாலச் சோழன் ஆட்சி செய்தான். அப்பொழுது சாரமா முனிவருடைய தவத்திற்கு மகிழ்ந்து, வேதங்கள் தொழும் சிவபெருமான் காட்சியளித்தார்.

வரமுனி வணங்கினான் வரங்கள் யாவையுந்
தருகுவ முரையெனச் சாரன கூறுவா
னருமலர் திருமதி யாற ணிந்தவா
பரகதி பெறவருள் பாலி யென்றனன். 502

(இ—ள்.) தம்முன் காட்சியளித்த சிராமலைநாதரைச் சாரமா முனிவர் வணங்கினார். இறைவனும் நீ வேண்டும் வரத்தை அளிப்போம் என்றார். சாரமாமுனிவர், செவ்வந்திமலர், பிறை, கங்கை ஆகியவற்றைச் சூடிய இறைவா! எனக்கு முக்தி அருள்வாயாக! என்றார்.

**இக்கதை விரும்பினோ ரெவர்க ளுங்கதி**
**புக்குறை யவும்வரம் பொழிக வென்றனன்**
**றக்கதென் றருண்மிகு சார மாமுனிக்**
**கக்கணஞ் சிவபத மருளிப் போயினான்!** 503

(இ—ள்.) சாரமாமுனிவர் இக்கதையை விரும்பியவர்கள் சிவகதியடைய வேண்டுமென வேண்டினார். அக்கணமே அவருக்கு முக்தியைத் தந்து இறைவன் ஆட்கொண்டு அருளினார்.

**முனிவனை வழுத்தினார் முனிவர் யாவரும்**
**புனிதன திணையடி புகழு மெந்தையே**
**யினியொரு கதையையு மியம்பு கென்றனர்**
**கனியொடு மமிர்தொடுங் கலந்து கூறுவான்** 504

(இ—ள்.) இவ்வாறு உறையூர் அழித்த வரலாற்றைச் சொன்ன கவுதமமுனிவரை முனிவர்கள் யாவரும் வணங்கினர். இறைவனின் திருவடியைப் போற்றும் எம் தந்தையே, எமக்கு இன்னும் ஒரு கதையையும் சொல்ல வேண்டும் என வேண்டினர். முனிவரும் முக்கனியின் அமுதம் கலந்தவாறு சிறப்பான வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

உறையூரழித்த சருக்கம் முற்றும்.

## 11. தாயானச்சருக்கம்

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**தோளை நெருக்கிக் கிளர்ந்திடையாற் சுமக்க**
**வரிதாய்ப் பகிரண்ட**
**கோள மளவுங் குவிமுலையார் திருமே**
**னியிற்செய் குங்குமமும்**
**வேளை முனிந்த வருந்தவத்தோர் மனத்தைத்**
**திருகு மெல்லோதிப்**
**பாளை மணமும் பரிமளிக்கும் பதிகா**
**விரிப்பூம் பட்டினமே! 505**

(இ-ள்.) இருதோள்களையும் நெருக்கி இருக்கின்ற மார்பினால் நிறைந்து, இடையினால் சுமக்க இயலாத பெரிய கொங்கைகளைக் கொண்ட பெண்களின் அழகிய உடலினை உடையவரும், குங்குமம் சந்தனம் ஆகியவற்றின் மணமும் காமத்தை வென்ற முனிவர் களுடைய மனத்தையும் கலங்கச் செய்யும் பெண்களின் மெல்லிய கூந்தலில் அணிந்த தாழை மடலின் மணமும் நிறைந்தது காவிரிப் பூம்பட்டினமாகும்.

**நச்சோ திமமுந் தொழு நடையார் நயன**
**யுதமு னடைந்தோரைத்**
**தைச்சோ டையிலே கழுநீருஞ் செந்தா**
**மரையுந் தவம்புரியு**
**மைச்சோ லையிலே விளையாடிக் குமிழ்மேற்**
**றிரும்பி வள்ளைசெறி**
**பச்சோ லையிலே மையெழுதும் பதிகா**
**விரிப்பூம் பட்டினமே! 506**

(இ-ள்.) காவிரிப் பூம்பட்டினத்தில் வாழும் பெண்களின் நடையை அன்னமும் விரும்பித் தொழுகின்றன. அவர்களின் கண்களாகிய ஆயுதங்கள் அவர்களின் முன்வருபவர்களைக் குத்துகின்றன. ஓடையில் செங்கழுநீரும் செந்தாமரையும் தவம் செய்வதற்காக இமையின் உள்ளே விளையாடுகின்றன. அக்கண்கள் குமிழம் பூப் போன்ற மூக்கின் மேல் திரும்புகின்றன. வள்ளை போன்ற காதுகளில் அணிந்த பொன் ஓலையில் சென்று தம் மையால் எழுதுகின்றன.

## *கலிநிலைத் துறை*

மாவிரிக்கும் பொழில்கள்சிலை மதனா ரிகளும்
வயப்பரியும்
பூவிரிக்கு நெடுங்கணையு மொழியா தளிக்கும்
பொன்னகரங்
காவிரிக்கும் வடபாலாய் மகரா லயத்தின்
கரையதுவாய்ப்
பாவிரிக்கும் புகழ்படைத்த பதிகா விரிப்பூம்
பட்டினமே!507

(இ–ள்.) மாமரங்கள் நிறைந்த சோலையில் மன்மதனுடைய கரும்பு வில்லுக்கு விருப்புடைய வண்டுகளும், அவனுடைய குதிரையாகிய கிளிகளும், அவனுடைய அம்பாகிய மாபூவும் நிறைந்திருக்கின்றன. காவிரிக்கு வடக்காகவும், கடலின் கரையாகவும் பாடல் பெற்ற காவிரிப்பூம்பட்டினம் விளங்குகின்றது.

பூசவிட்ட வன்பரோடுப் புலவியில் புலர்ந்து நின்ற
பாசிழை யவர்கள் ஓதிய லங்கலைப் பரிந்து வாரி
வீசிய விரைவினா லெய்திலமது வெள்ளம் வீழ்ந்து
மாசகன்று வரியாழி மதுக்கட லாயிற் றன்றே! 508

(இ–ள்.) தலைவி தன் தலைவனுடன் இன்புற்றும், பாசறையில் வாரி வீசிய பழச்சாற்றின் நறுமணமும் அவர்களின் இன்பவாழ்வினை எடுத்து இயம்புவதாக இருந்தது.

### *வேறு*

ஏடவிழ்ந்தார்ப் பேதையர் மணல்களி விழைத்த
வீட ழிந்திடப் பொருந்திரை நிரைகளை வெகுண்டு
கூடி நின்றுநின் றரியநித் திலமணி கொண்டு
நாடி வேலையைத் தூர்ந்திடுஞ் செழும்புகார் நகரம் 509

(இ–ள்.) மாலையணிந்த பேதைப் பருவத்துப் பெண்கள் கடல் மணலில் கட்டிய வீடுகளை அலைகள் அழிக்கின்றன. அதனைக் கண்ட அப்பெண்கள் கோபமடைந்து முத்துமணிகளைக் கொண்டு கடலினை மூடிவிட எண்ணினர் அத்தகைய பெருமையினைப் பெற்றது காவிரிப் பூம்பட்டினம்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**காளைய ருடனே காமக் கள்ளுண்டு**
**களித்த மாதர்**
**தோளினிற் புரித்த முத்தத் தொகைமணித்**
**துராலி னோடே**
**நீளர மிய்த்தி னின்றும் விரைவுட**
**நெருங்கி வீழ்தன்**
**மீளவுங் கடலின் மீதே விளைந்திட**
**வித்தல் போலும் 510**

(இ–ள்.) இளைஞர்களின் காமத்திற்குட்பட்ட பெண்களின் தோள்களில் அணிந்த முத்துக்கள் வேகமாகக் கடலில் தெளித்து விழுந்தன. அக்காட்சி கடலில் மீண்டும் முத்துக்கள் விளைய விதை போடுவதுப் போன்று இருந்தன.

**முற்றிழை மடவார் சூடிக் கழித்து வீழ்**
**முல்லை மாலை**
**சுற்றிய திரையா லாழிச் சுழியிடை**
**யுலவுந் தோற்றங்**
**கற்றிரள் வரையாற் றேவ ரமிர்தினைக்**
**கடைந்த போதி**
**னற்றொழுந் தலையிற் றோன்று மரவுரி**
**யென்ன லாமே! 511**

(இ–ள்.) அழகிய அணிகலன்களை அணிந்த பெண்களின் தலையில் சூடியிருந்த முல்லை மலர் கடலில் வீழ்ந்து மிதந்தன. அக்காட்சி, தேவர்கள் மந்தர மலையை மத்தாக்கி, வாசுகி எனும் பாம்பைக் கயிறாக்கிக் கடலைக் கடைந்தபோது அப்பாம்பினது தோள் உரிந்து மிதந்தது போன்று இருந்தது.

*கலிநிலைத் துறை*

**சிவன ருட்பெறு மியற்பகை நாயனார் சிறப்பா**
**லவத ரித்தது மன்றியே பிள்ளைவந் தருளத்**
**தவமி ழைத்தமா நகரமூன் றாங்குடித் தலைவர்**
**நவநிதிக்கெலாம் பிறப்பிடஞ் செழும்புகார் நகரம் 512**

(இ—ள்.) சிவபெருமானின் அருள்பெற்ற இயற்பகை நாயனாரும், பட்டினத்துப் பிள்ளையாரும் பிறந்தது மட்டுமல்லாமல தவமேற்கோண்ட பெருமை வாய்ந்த நகரமாகும். மூன்றாம் குடியாகிய வணிகர்கள் ஈட்டிய நவநிதிகளும் நிறைந்திருந்த பெருமையான நகரமாகும்.

*அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

அத்திரு நகரில் வாழு மரதன
குத்த னென்னும்
பித்திகை யலங்கன் மார்பன் பெருங்குடி
வணிக னென்பான்
றத்தையே யனைய தேவி தன்னுடன்
செருக்கு நாளிற்
புத்திர செல்வம் வேண்டிப் புரிந்தன
னிறைவர் பூசை 513

(இ—ள்.) அப்படிப்பட்ட நகரமான காவிரிப் பூம்பட்டினத்தில் அரதநகுந்தன் என்பவன் வாழ்ந்தான். இருவாட்சி மாலையை அணிந்தவன். வணிகர் குடியில் பிறந்தவன். தனக்கும் தன்மனைவிக்கும் குழந்தைப் பேறு வேண்டி சிவபூசை செய்தான்.

மதலையைப் பெறமுன் னாளில் வரமிலா
நிலைமை யாலே
புதல்வியைப் பயந்தா னந்தப் புதல்வியுந்
தவழ்ந்து நின்று
குதலையுந் தெளிந்து பொன்னங் கொம்புபோல்
வளர்ந்தாண் மாண்பிற்
றிதலையங் குரும்பை தோன்றிற் றனங்கனுந்
திறையிட் டானே! 514

(இ—ள்.) புதல்வனைப் பெறாத அவன் ஒரு மகளைப் பெற்றான். மன்மதனும் மயங்கும் அளவிற்குப் பொற்கொம்பு போல் வளர்ந்து பருவமடைந்தாள்.

அத்தனு மகட்குத் தன்பே ரளித்தன
னதன்பின் னாகச்
சித்திர மயிலன் னாளைத்திரிசிரா
மலையில் வாழு
மெய்த்தந குத்த னென்னும் பெருங்குடி
வணிகன் வேட்டான்
மத்தகக் களிற்றோன் மானை யளகையான்
வரைந்த தென்ன 515

(இ—ள்.) அரதநகுந்தன் தன் மகள் அரதநமதிக்குத் திரிசிராப் பள்ளியில் வாழும் மெய்த்தநகுந்தன் எனும் உயர்குடியில் பிறந்த வணிகருக்கு மணம் செய்து கொடுத்தான். அவர்களின் திருமணம் இந்திரனுடைய பெண்ணைக் குபேரன் மணந்ததைப் போன்று சிறப்பாக நடைப் பெற்றது.

*கலிவிருத்தம்*

அரதந பாலனன் களித்த வன்னமும்
விரிதந குத்தனு மிரதி வேட்டையிற்
பொருதன ரிளமுலைப் பூத ரங்களு
மிருபுய மலைகளு மெதிர்பு நின்றதே! 516

(இ—ள்.) அரதநகுந்தனின் மகள் அரதநமதியும், அவள் கணவன் மெய்த்தநகுந்தனும் இல்வாழ்க்கையில் இன்ப மடைந்தனர். அவளுடைய மார்பும், தோள்களும் மலைகளுக்குச் சமமாக எதிர்த்து நின்றன.

குருகின நெரிதரக் குவளை சேப்புற
விருவரு முறைமுறை யிலவ வாயிதழ்
பருகினர் மெழுகெனப் பசும்ப தத்திலே
யுருகினர் கரைந்திரண் டுயிரொன் றாயினார்! 517

(இ—ள்.) அவர்கள் ஒன்றுகூடி இன்புற்றபோது, வளையல்கள் உடைந்தன. கண்கள் சிவந்தன. இதழ்களில் அமுதம் பருகினர். மெழுகைப் போன்று உருகி ஈருடலும் ஓர் உயிரெனக் கலந்தனர்.

இரதியு மதனனு மியைந்த வாறெனச்
சுரதமும் புலவியுந் துணிவு மெய்துநாண்
மருகனுந் தன்பதி மருவ வேண்டுமென்
றரதந பாலகனுக் கறிவித் தானரோ 518

(இ—ள்.) இரதியும் மதன்மதனும் போன்று இல்லறத்தில் ஊடலும் கூடலும் என இன்பத்தை அனுபவித்தனர். பின் தன்னுடைய ஊருக்குச் செல்வதாக மெய்த்தநகுந்தன் தன் மாமனாகிய அரதனகுத்தனிடம் கூறினான்.

மணிமுத லியபல வளித்து மாதுல
னிணைமலர்க் கரமெடுத் தேகு கென்றனன்
றுணைவிதன் வருத்தமுந் துயரு மாற்றியே
வணிகனுந் திரிசிரா மலையி லெய்தினான் 519

(இ. ள்.) அரதனகுத்தன் மருமகனுக்கும் மகளுக்கும் பல்வேறு ஆபரணங்களைக் கொடுத்தான். தன்னை வணங்கிய அவர்களை வாழ்த்தி அனுப்பினான். மெய்த்தநகுந்தனும் தன் மனைவியின் துயரை நீக்கி திரிசிராமலைக்கு அழைத்து வந்தான்.

எய்தியங் கிருவரு மியைந்து நல்லறஞ்
செய்தன ரிளங்கொடி திரிசி ராமலை
மெய்யரை யன்பினால் வெள்ளி நாடொறுங்
கைதொழப் புகுந்தனள் கணவ னேவலால் 520

(இ—ள்.) திரிசிராமலையில் கணவனும் மனைவியுமாக சிறந்த முறையில் இல்லறம் நடத்தி வாழ்ந்தனர். அந்த அரதநமதியும் கணவனின் அனுமதிப்பெற்று வெள்ளிக்கிழமை தோறும் செவ்வந்தி நாதரை வழிபட்டு வந்தாள்.

இருவரு மிப்படி யியங்கு நாளிலே
யரதந பாலனு மிறுதி யாயினா
னுருகிய கிளைஞரிங் கோலை யேவினார்
மருகனு மங்கையுங் கண்டு மாழ்கினார் 521

(இ—ள்.) அவ்வாறு வாழ்ந்த காலத்தில் தன் தந்தை அரதநகுந்தன் இறந்தான் என உறவினர்கள் ஓலை அனுப்பினர். அதனைக் கண்டு மகளும் மருமகனும் வருந்தினர்.

தீயுறு மயிலெனத் திரியுந் திண்கனை
பாயிளம் பிணையெனப் பதைக்கும் பைந்தொடித்
தாயரை நினைந்துகுந் தனித்தி யோவெனு
மாயிரந் தாரையா வழுது விம்முமே 522

(இ—ள்.) தன் தந்தை இறந்ததை நினைந்து நெருப்பில் விழுந்த மயில் போல் துடித்தாள். அம்பு பட்ட மான் போன்று பதைத்தாள். தாயை எண்ணி அவள் கணவனைப் பிரிவதற்கு வருந்தினாள். ஆயிரம் தாரைகளாகக் கண்ணீர் பெருகியது.

முலைகளும் விழிசொரி புனலின் மூழ்கின
வலைதரு புனலிடை யணங்கு மூழ்கினா
ளுலையுறு மெழுகென வுருகி னாளவள்
கலைகளுஞ் சொரிந்தன கண்ணி னீரையே! 523

(இ—ள்.) கண்ணீரின் துக்கம் நீங்க காவிரியில் மூழ்கினாள். அப்பொழுதும் துயரம் நீங்காததால் உலையில் விழுந்த மெழுகைப் போல உருகினாள். அவள் உடுத்திய புடைவையும் கண்ணீரால் நினைந்தது.

மங்கையை மகிழ்நனு மார்பிற் புல்கியும்
பங்கய மலர்க்கரம் பற்றி நல்கியுஞ்
செங்கய லொழுகுநித் திலங்கண் மாற்றினா
னங்கவ ளடைவிலே துயரு மாற்றினாள் 524

(இ—ள்.) அவனுடைய கணவனும் அவளை மார்புடன் தழுவிக் கொண்டான். இனிய சொற்களைக் கூறி மலர்க் கரத்தால் அவளுடைய துயரத்தை மாற்றினான். முத்துப் போன்ற கண்ணீரைத் துடைத்தான். நாளடைவில் அவளின் துயரம் நீங்கியது.

சீரிய விரதமும் விருந்துஞ் செய்கையு
மூரிய லாண்மையு மொழுகு நாளிலே
வாரியிற் கவுத்துவ மணியை நேரெனக்
காரிகை வயிற்றிளங் கருப்ப முற்றதே! 525

(இ—ள்.) அவர்கள் கணவனும் மனைவியுமாக இருந்து சிறந்த விரதங்களை மேற்கொண்டனர். விருந்தினரைப்

போற்றியும், நல்ல அறங்களைச் செய்தும் ஊரார் போற்றும்படி வாழ்ந்தனர். பாற்கடலில் கவுத்துவமணி தோன்றியது போன்று அச்சமயத்தில் அப்பெண்ணின் வயிற்றில் மகப்பேறு தோன்றியது.

**சூனிறைந் ததுவரி தொய்யி னீங்கின**
**பானிறம் படைத்தது குமுதம் பங்கய**
**மேனிகழ் சுரும்பென முலைக்கண் வீறின**
**வானிடை வயங்கிய துரோம வல்லியே! 526**

(இ—ள்.) மார்பில் சந்தனக் கோலம் மறைந்து கருவும் வளர்ந்தது. தாமரை போன்ற முகமும், குமுதம் போன்ற வாயும் பால் போன்று வெளுத்தன. வண்டு போல் முலைக்காம்பு கருத்தன. ஆலிலை போன்ற வயிற்றில் ரோமவல்லி வெளிப்பட்டது.

**அன்னையு மகள்செய லறிய வேண்டுமென்**
**றுன்னின ளப்பொழு துவரி நீரயின்**
**மின்னுயிர்ப் பெருமுகி றாரை வீழ்ந்தன**
**பொன்னியு மிருகரை புரண்டு வந்ததே! 527**

(இ—ள்.) அப்பொழுது அப்பெண்ணின் தாயார் தன் மகளின் நிலையை அறிய விரும்பினாள். ஆனால் கடல்நீர்க் குடித்த மேகங்கள் ஆர்ப்பரித்து மழையைப் பொழிந்தன. இதனால் காவிரி ஆற்றில் இரண்டு கரைகளிலும் வெள்ளம் புரண்டு வந்தது.

**ஆறது தடையினா லன்னை யேகுதன்**
**மாறின ளரதந வதிய றிந்திலள்**
**பேறோடு பிறந்தகம் பெரிதுஞ் செய்திடக்**
**கூறரும் பொருளெலாங் கொண்டு செல்லுமே! 528**

(இ—ள்.) காவிரி ஆற்றின் வெள்ளத்தால் தாய் வருவது தடைப்பட்டது. இதனை மகள் அறியாமல் பிறந்த வீட்டிலிருந்து சொல்லுவதற்குரிய சீர்களும், பொருள்களும் அன்னை கொண்டு வருவாள் என எண்ணிக் காத்துக் கொண்டிருந்தாள்.

**பூளையின் சுமையெனக் குழல்பொ லிந்திடப்**
**பாளையங் குழலிதழ்ப் பவளச் சேடியர்**
**தோளையு மணந்துவெண் டுகிலை மேற்கொடு**
**நாளைவந் திடுமல தின்று நண்ணுமே! 529**

(இ—ள்.) பூளைப் பூவைப் போல நரைத்த கூந்தல், தென்னம் பாளைப் போல் விரிந்து தொங்க, பவளம் போன்ற வாயை உடைய சேடியர்களின் தோளைப் பிடித்துக் கொண்டு வெள்ளைப் புடைவை உடுத்தி என்னுடைய தாயார் இன்று அல்லது நாளை இங்கு வந்து சேருவாள் என எண்ணிக் கொண்டிருந்தாள்.

எதிர்நடந் தன்னையை யிறுகப் புல்லுவோங்
கதிநடந் திளைத்தசெங் கமலம் பற்றுவோ
மதிமுக வெயர்வெலா மாற்று வோமென
வதிசய வுணர்வினா லனைத்து மெண்ணினாள்! 530

(இ—ள்.) அப்படி என் தாய் வந்தால் நான் அவளை எதிர்ச் சென்று இறுகத் தழுவிக் கொள்வேன். வழிநடந்து இளைத்த செந்தாமரைப் பாதத்தைப் பற்றுவேன். நிலவு போன்ற முகத்திலிருந்து வருகின்ற வியர்வையைத் துடைப்பேன் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தாள்.

மின்றிகழ் மருங்குலா ணினையும் வேளையிற்
றென்திசை விளங்கிய தேவர் நாயகன்
குன்றெனு நெடுஞ்சிலைக் கொண்ட நாயகன்
மன்றலங் கருங்குழன் மடந்தை நாயகன் 531

(இ—ள்.) மின்னல் போன்ற இடையையுடைய அரதனவதி இங்ஙனம் நினைத்துக் கொண்டிருந்த போது தென்திசையிலுள்ள திரிசிராமலையில் விளங்கும் தேவருக்கு நாயகரான சிராமலைநாதர், மேருமலை தலைவனாகவும் மட்டுவார் குழலம்மையின் நாயகனாகவும் விளங்கினார்.

*கலிநிலைத்துறை*

சங்க ரன்சிவன் சதாசிவ னீசனீ சானன்
புங்க வன்றிரி புராந்தகன் புராதனன் புராணன்
கங்கை நாயகன் கறைமிடற் றிறைநுதற் கண்ணா
னெங்க ணாயக விராமயன் சிராமலை யிறைவன் 532

(இ—ள்.) அவரே சிவபெருமான். முக்தியை அளிப்பவன். சதாசிவன் அருள் செய்யும் எண்குணங்களை உடையவன். ஈசனும் ஈசானாகவும் விளங்குபவன். முப்புரத்தையும் எரித்தவன்.

வேதாகம புராணங்களால் துதிக்கப்படுபவன். கங்கையைத் தாங்கியவன். நஞ்சு தங்கிய கழுத்தினை உடையவன். நெற்றிக் கண் உடையவன். அகண்டமானவன். இக்குணத்தைப் பெற்று சிராநாதனாகவும் விளங்கி விற்றிருக்கின்றான்.

**பூர ணன்பரன் பராபரன் வெள்ளியம் பொருப்பன்**
**கார ணன்மத னாந்தகன் காலனைக் கடிந்தோன்**
**வார ணந்தனை யுரித்தவன் மறைபொருள் வகுத்தோ**
**னார ணன்றனக் கரியவன் சிராமலை நாதன் 533**

(இ–ள்.) பரிபூரமானவர். பர தத்துவம் உடையவர். பராபரமாய் விளங்குபவர். வெள்ளியங்கிரியில் இருக்கும் மூல காரணர். மன்மதனை எரித்தவர். யானையின் உரியை உரித்துப் போர்த்தியவர். வேதத்தின் பொருளை உணர்த்தியவர். திருமாலும் காணமுடியாத அரியவர்.

**இந்த சேகரன் சடாதரன் அடியவற்கு எளியான்**
**தந்தி மாமுகக் களிற்றையும் குகனையும் தந்தோன்**
**மந்தா ராசலச் சிலையவ னிமகிரி மருகன்**
**நந்தி வாகனத் திறையவன் சிராமலை நாதன் 534**

(இ–ள்.) முனிவர்க்கும், துறவியர்க்கும், அடியவர்க்கும் எளிமையாக அருளுபவன். விநாயகப்பெருமாளையும், முருகனையும் தந்தவன். மந்தாராசலச் சிலையவன். இமகிரி மருமகன். நந்தியை வாகனமாகக் கொண்டு சிராப்பள்ளியில் குடிக் கொண்டுள்ள இறைவன் ஆவான்.

முடித்த வெண்பிறை நிகரென வளைந்திடு முதுகி
லடுத்த வெண்ணிலா வளைந்தபோ ஊரைக்குழ லசையத்
திடத்தி னாலரு ணடத்துவோ மெனவொரு செங்கோல்
பிடித்த வாறென வேணுதண் டங்கையிற் பிறங்க 535

(இ–ள்.) அப்படிப்பட்ட சிராப்பள்ளியில் குடிக் கொண்டுள்ள இறைவன் தமது சடையில் முடிந்த பிறையைப் போல வளைந்திருக்கின்ற முதுகின் மேல் நரைத்த மயிர் அசையும்படி வருகின்றார். அடியார்களிடம் கொண்ட கருணையைச் செயலாற்றுவோம் என்று செங்கோல் பிடித்தது போல மூங்கில் தடியைக் கையில் பற்றி வருகின்றார்.

**ஏட விழ்ந்தபூங் குழலிதன் விரதநன் றெனக்கொண்**
**டாடு மாறெனத் திருமுக மண்டல மசையச்**
**சூடு கங்கையின் றிவலைபோ னுதல்வெயர் துளிக்க**
**நீடு கொன்றைபோ லொருபணி களத்திடை நிகழ 536**

(இ—ள்.) மலர் அணிந்த கூந்தலையுடைய பெண்ணின் விரதம் நல்லமுறையில் அமைந்தது போன்று அவர்து திருமுகம் அசைந்தது. கங்கையின் துளிப் போன்று நெற்றியில் வியர்வை அரும்பியது. கழுத்தில் கொன்றை போன்று ஒரு மாலை அசைந்தது.

**நின்று நின்றுசென் றிளைப்புற நெடிதுமுச் செறிய**
**வொன்று செங்கையிற் கழையின்மே லுடலெலா**
**மொடுக்கிக்**
**கன்று மானையு மழுவையும் விடையையுங் கரந்து**
**மன்றி லாடலு மொழிந்தவ ளன்னை போல்**
**வந்தான்! 537**

(இ—ள்.) அவ்வாறு வருகின்ற போது இடைஇடையே நின்று இளைப்பாறி பெருமூச்சு விட்டார். ஊன்றிய மூங்கில் தண்டின் மேல் உடலைச் சாய்த்துக் கொண்டார். காளை, மான், மழு, தன் ஆடல் அனைத்தையும் மறைத்துக் கொண்டு அந்தப் பெண்ணின் தாயைப் போல வந்தார்.

**காய பண்டமு மெண்ணெயின் கலசமுங் கனகத்**
**தூய முத்தணி கலன்களு் விலையிலாத் துகிலு**
**மேய மங்கைய ரிருவர்மேற் சுமைகளா வெடுப்ப**
**மாய வன்றனக் கரியவ னெளியனாய் வந்தான்! 538**

(இ—ள்.) காயபண்டமும், எண்ணெய்க் கலசமும், பொன் முத்து இரத்தினங்களும், விலை உயர்ந்த ஆடைகளும் சுமந்து கொண்டு இரு மங்கையர் தொடர்ந்து வர, திருமாலும் அறியாத சிவபெருமான் எளியவராய் வந்தார்.

**தூர வந்திடு மவளையின் றவளெனத் துணிந்தாள்**
**சேர வந்திடும் பொழுதினி லெழுந்தெதிர் சென்று**
**பார வந்தனை புரிந்திரு பதங்களிற் பணிந்தா**
**ளார வந்திருக் கரங்களாற் றழுவின ளன்னை 539**

(இ—ள்.) தூரத்தில் வரும் அவளை அரதனவதி தன் தாயென்று எண்ணினாள். அருகில் வந்தவுடன் எழுந்து, எதிர்நின்று பாதங்களில் பணிந்து வீழ்ந்து வணங்கினாள். அன்னையும் அவளை இரு கைகளால் தழுவிக் கொண்டாள்.

**மோந்து கொண்டன ளுச்சியை மோந்தனண் முகத்தைக்**
**காத்த ளுந்தொழுங் கரங்களை யழுத்தினள் கண்ணிற்**
**பாய்ந்த கண்ணினீர்ப் புலர்ந்திட வருண்மொழி பகர்ந்து**
**சாய்ந்த கொம்புநேர் மகளுட னிருந்தன டவிசில் 540**

(இ—ள்.) உச்சியையும் முகத்தையும் முகர்ந்தாள். காந்தள் மலர் போன்ற கைகளைப் பற்றிக் கொண்டாள். பெருக்கெடுத்த கண்ணீர் நீங்கும்படி அன்பு மொழிகளைக் கூறி மகளுடன் நாற்காலியில் அமர்ந்தாள்.

**எண்ணி லாவருங் காயபண் டங்களா மெவையும்**
**வண்ண மேகலைப் பேழையுங் கொணர்ந்தமங் கையருக்**
**குண்ணு நீர்முத லளித்துநல் லடிசிலு முதவிக்**
**கண்ணை நேரெனுந் தாயுட னிருந்தனள் களித்து 541**

(இ—ள்.) எண்ணற்ற காயபண்டங்கள், நல்லாடைகள், நகைகள் அடங்கிய பெட்டிகளைக் கொண்டு வந்த பெண்களுக்கு நல்ல உணவை அளித்து கண் போன்ற தன் தாயுடன் அந்தப் பெண் மகிழ்ந்திருந்தாள்.

மற்றை நாளிலே யுதரநொந் தழுங்கின மகளைப்
பெற்ற தாயெடுத் தணைத்துமேற் றயிலமும் பெய்து
முற்று மன்பினான் மருத்துவத் தொழிலெலா முடித்தாள்
குற்ற மொன்றிலா மடந்தையும் பயந்தனள் குழவி 542

(இ—ள்.) அடுத்த நாள் மகப்பேறு வலியால் துடித்த மகளையெடுத்து அணைத்து, தைலம் பூசி அன்பொடு மருத்துவம் செய்தாள். அப்பெண்ணும் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

குழவி யீன்றவட் கருமருந் தெண்ணையுங் கொடுத்தே
யெழுதி னத்தள விழைத்திடுஞ் செயலெலா மியற்றி
யழகு தொட்டிலுட் டுயிற்றியங் கொருமதி யளவா
மழக ளிற்றினை முருகவே ளெனும்படி வளர்த்தாள்! 543

(இ–ள்.) குழந்தையை ஈன்ற அப்பெண்ணுக்கு மருந்து, எண்ணெய் ஆகியவற்றைக் கொடுத்தாள். அவளுக்குரிய செயல்களை எல்லாம் ஏழு தினங்களும் செய்தாள். குழந்தையை அழகிய தொட்டிலில் இட்டு உறங்க வைத்து முருகப் பெருமானைப் போலவே வளர்த்தாள்.

சிதலை சிற்றெறும் பிளஞ்சினை சிலையினுட் டேரை
பதக மானிட ரிமையவ ரிந்திரன் பதுமன்
முதலி னோர்தமை வளர்த்தரு ளிறையெதிர்
முகமாய்
மதலை யொன்றினை வளர்த்தது புதுமையோ
மறையீர்!544

(இ–ள்.) கரையான், சிற்றெறும்பு, இளைய கரு, கல்லினுள் தேரை, அற்பமனிதர்கள், தேவர்கள், இந்திரன், நான்முகன் ஆகியோரை வளர்த்தருளும் இறைவனுக்குக் குழந்தையை வளர்த்தது ஒன்றும் புதுமையன்று.

மையு லாமழைக் கருமுகிற் படத்தினை மாற்றித்
துய்ய வெண்முகிற் படமெனும் விதானம்வான்
றுலக்கிற்
றைய நுண்ணிடை யரதந வதியையங் கறியப்
பைய வந்தன ளவளைமெய் யாகமுன்
பயந்தாள்! 545

(இ–ள்.) கருமையான மேகக் கூட்டங்களை மாற்றி, தூய்மையான வெண்முகில், ஓவியத்தை வானம் தன்னிடத்தில் வைத்துக் கொண்டது. நுண்ணிய இடையுடைய அரதனவதியின் உண்மையான தாய் நலம் அறிய மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தாள்.

மாது லன்பெருந் தேவிதன் மனையிடை வருதல்
காத லன் அன்பினால் பெருந்தந குத்தனும்
கண்டான்
ஏதிலார்கள் இவ் இருவரில் யாவரோ வென்றான்
ஓது முன்னவள் புகுந்தனள் மடநலாள்
உறையுள். 546

(இ—ள்.) தன் இல்லத்தை நோக்கி தாய் வருவதை அன்போடு தனகுத்தன் கண்டான். இவர்கள் இருவரில் யார் உண்மையான தாய் என்று வினவினான். பயந்த அதற்குள் மகள் இருந்த இடத்திற்குத் தாய் சென்று நின்றாள்.

முன்னர் வந்திருந் தருளிய தாயெதிர் முகமாய்ப்
பின்னர் வந்ததா யிருந்தன ளதிசயம் பிறந்த
தன்னை யாவளென் றாதந வதிமருண் டணைந்தாண்
மின்னை நேரென விசும்பிலே மறைந்தனன்
விமலன் 547

(இ—ள்.) முன்னர் வந்து அருளி நின்ற தாயின் வடிவினைப் போன்று பின்னர் வந்த தாயும் இருந்த அதிசயத்தைக் கண்டான். இவர்களுள் தன்னை ஈன்ற தாய் யார் என அரதனவதி மருள மின்னலைப் போன்று இறைவன் விண்ணில் மறைந்தார்.

உந்தி யாறணி சடையிளம் பிறைதனக் குறவுத்
தொந்த முண்டென வருமதி போற்குடை துலங்க
விந்த மண்டல மிந்துமண் டலமென விறங்கி
வந்த தாரகைக் கணமெனச் சொரிந்திட மலர்கள் 548

(இ—ள்.) கங்கை ஆறு அணிந்த சடையில் விளங்கும் இளம்பிறைக்கும், தனக்கும் உறவு உண்டு என்பது போல வெண்ணிலாவாகிய குடை விளங்கியது. விந்தமண்டலம், இந்து மண்டலம் ஆகியவற்றை விட்டு இறங்கிய விண்மீன் கூட்டங்கள் போல மலர்கள் தூவின.

தேடி யோதிமம் பறந்திட விரிந்தவெண் சிறைபோன்
மாடி ரண்டினு மசைந்தன சாமரை வயங்கத்
தோடு சேர்குழை மருவிய தும்புரு விசைகொண்
டாடு பாம்பென வாலவட் டங்கணின் றசைய 549

(இ—ள்.) இறைவனுடைய முடியைத் தேடிப் பறந்த அன்னத்தின் சிறகுகளைப் போல வெண் சாமரைகள் வீசின. இறைவனுடைய தோடு அணிந்த காதைச் சார்ந்த தும்புருவின் இசைக்கு ஆடும் பாம்புகளைப் போல ஆலவட்டங்கள் அசைந்தன.

அந்த ரத்திலோ ரிருபது விற்கிடை யளவின்
மந்த ரப்பெருஞ் சிகரிமேல் வருமணி மலைபோற்
சுந்த ரத்தொளிர் விடையின்மேற் றோன்றினான் றோன்ற
லிந்தி ரப்பெய ருடையவன் முதலினோ ரிறைஞ்ச 550

(இ—ள்.) விண்ணகத்தில் இருபது வில்வின் அளவு மந்தரமலைக்கு மேலே வரும். இரத்தினமணியைப் போன்று ஒளி வீசுகின்ற சிவபெருமான் காளையின் மீது தோன்றினார். அச்சமயம் இந்திரன் முதலான தேவர்களும் தொழுது நின்றனர்.

தேவ துந்துபி முழங்கின முழங்கின சின்ன
மாவ லம்புரி யொலித்தன வொலித்தன மதங்க
மூவ ரொடுமுப் பதின்மரு முனிவரு முளரிப்
பூவை நேர்சொலு மிருகரங் குவித்தெதிர் போற்ற 551

(இ—ள்.) தேவதுந்துமி முழங்கின. வலம்புரி சங்கு, மதங்கம் ஒலித்தன. முப்பத்தி மூன்று முனிவர்களும் தம் தாமரை போன்ற கரங்களைக் குவித்து வணங்கி நின்றனர்.

தொல்லை யாகம நான்மறை யெதிரெதிர் துதிக்க
வல்லி நாண்மலர்க் கடவுளு மம்புய மனையின்
வல்லி நாதனு நடத்திரு புடையினும் வணங்க
மெல்ல மெல்லவே யு வந்துகைத் தருளினான்
விடையை 552

(இ—ள்.) பழமையான வேதங்களைத் துதிக்க பிரமனும், திருமாலும் இருபுறமும் வணங்கி நிற்க சிவபெருமான் காளை வாகனத்தில் மெல்ல வந்து அருளினார்.

வேத வேள்வியந் தணர்கள்பா சுபதர்மா விரத
ராதி சைவர்க ளாதியா வாலய மமைப்போர்
காத லைந்தெழுத் துரைப்பவ ரனைவருங் காணப்
பூத நாயக னுடன்றிருக் கோயிலுட் புகுந்தான் 553

(இ—ள்.) வேதங்களினால் வேள்வி செய்யும் அந்தணர்கள், பாசுபதர், மாவிரதர், ஆதி சைவர்கள், ஆலயம் அமைப்போர், அன்போடு ஐந்து எழுத்து மந்திரத்தை ஓதுபவர் ஆகிய அனைவரும் காணுமாறு இறைவன் திருக்கோயிலுக்குள் சென்றார்.

**நாயி னுங்கடை யானவ ராயினு நயந்தாற்**
**சேயி னும்பரி வாகவந் தருள்செயுஞ் சிவனை**
**யாயி ரம்பெய ருடையவண் ணலையுல கனைத்துந்**
**தாயி னல்லவ னல்லவ னென்றன தழைக்க. 554**

(இ–ள்.) நாயினும் கீழ்மக்கள் விரும்பி வணங்கினால் குழந்தையை விட அன்பாக அருளுகின்ற சிவபெருமான், ஆயிரம் பெயருடைய இறைவனைத் 'தாயினும் நல்லவன் நல்லவன்' என உலகமெல்லாம் ஓங்கி அழைத்து வணங்கியது.

## *கலிவிருத்தம்*

**மாதந குத்தனு மனைம டந்தையு**
**மேதமில் கிளைஞரு மிமய நாயகி**
**நாதனை யனுதினம் பணிந்து நாரணன்**
**வேதனு மறிவரும் பதத்தின் மேவினார் 555**

(இ–ள்.) தனகுத்தன் என்பவனும், அவனுடைய மனைவியும் மற்றும் குற்றமில்லாத உறவுடையவரும் பார்வதி நாதனை நாள்தோறும் பணிந்தனர். திருமாலும், நான்முகனும் காணமுடியாத திருவடிகளை அடைந்தனர்.

**சத்திய மிதுவெனச் சாற்றி னான்முனி**
**பத்திகொ டனைவரும் பரவிக் கூறுவா**
**ரித்தல மினையதே விதனில் வைகுவார்**
**முத்தியை யடைவது மொழிய வேண்டுமோ! 556**

(இ–ள்.) இது சத்தியம் என்று முனிவன் கூறுகின்றான். இதனைக் கேட்ட அனைவரும் இந்தத் தலம் இவ்வளவு உயர்ந்தது என்றால் இங்கு வாழ்வோரும் உறுதியாக முக்தியை அடைவர் என்றார்.

## *வேறு*

**வைய மின்புற மாதர்கற் போங்குக**
**செய்ய கோலை யரசன் செலுத்துக**
**பெய்க வானஞ் சிவாலயம் பீடுற**
**சைவ மென்னுஞ் சமயந் தழைக்கவே! 557**

(இ–ள்.) உலகம் இன்புற்று வாழ்க. மாதர் கற்பு ஓங்குக. அரசன் செங்கோல் செலுத்துக. வானம் மழை பொழிக. சிவாலயங்கள் ஓங்குமாறு சைவம் என்னும் ஒப்பற்ற சமயமாகத் தழைத்து ஓங்குக.

**இனியவிந்தக் கதையினொன்று படித்த பேரு**
**மெழுதினரு மிருசெவியி லேற்ற பேரு**
**மனையிடத்தி லுபசரித்து வைத்த பேரும்**
**வாசிப்போர்க் குறையுளுண்டி வழங்கினோருந்**
**தனமிகுதி நெடுவாழ்க்கை யடைவர் நல்ல**
**தனையரையும் பெறுவர் சிவபதமும் சார்வ**
**ரனலனுகா தரவமுறா தலகை சேரா**
**தருளுறுமிம் முறையிருந்த அகத்திற்**
**றானே. 558**

(இ–ள்.) இனிமையான இந்தக் கதையொன்றினைப் படித்தவர்கள், எழுதியவர்கள், கேட்டவர்கள், இல்லத்தில் வைத்திருப்பவர்கள், படிப்பவர்களுக்கு உறங்க இடமும் உணவும் வழங்கியவர்கள், உயர்ந்த செல்வத்தையும், நீண்ட ஆயுளையும் அடைவார்கள். நல்ல மக்களைப் பெறுவார்கள். அவர்களுக்குத் தீயும், பாம்பும், பேயும் துன்பம் தராது. இந்த உயர்ந்த நூல் இருக்கும் இல்லத்தில் இறைவனின் அருள் என்றும் நிறைந்திருக்கும்.

தாயானச்சருக்கம் முற்றும்.

செவ்வந்திப் புராணம் நிறைந்தது.

ஆக சருக்கம் 11 விருத்தம் 558

தாயான செல்வர் பாதார விந்தமே கெதி
மட்டுவார் குழலம்மன் பாதார விந்தமே கெதி

விகாரி வருடம் ஐப்பசி மாதம் 7 – ஆம் தேதி புதன் வாரநாள் தசமி சதய நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் சுவாமிநாதன் செவ்வந்திப் புராணம் எழுதி நிறைந்தது.

முகிழ்ந்தது.

திருச்சிற்றம்பலம்.

■ ■ ■ ■ ■ ■

# திருச்சி தாயுமானவர் பாடல்கள்

## திருஞானசம்பந்தர் அருளியது

நன்றுடையானைத் தீயதில்லானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானை
சென்றடையாத திருவுடை யானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே! 1

கைம்மகவுஏந்திக் கடுவனோடுஊடிக் கழை பாய்வான்
செம்முகமந்தி கருவறை ஏறும் சிராப்பள்ளி
வெம்முக வேழத்துஈருரி போர்த்த விகிர்தாநீ
பைம்முக நாகம்மதியுடன் வைத்தல் பழியன்றே! 2

மந்தம்முழவம் மழலை ததும்ப வரை நீழல்
செந்தண் புனமும்சுனையும் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேல் உடையார் விடையூரும்
எந்தம்அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே! 3

துறைமல்குசாரல் சுனைமல்கு நீலத்து இடைவைகிச்
சிறைமல்கு வண்டும்தும்பியும் பாடும் சிராப்பள்ளி
கறைமல்குகண்டன் கனல்எரி ஆடும் கடவுள்எம்
பிறைமல்கு சென்னிஉடையவன் எங்கள் பெருமானே! 4

கொலை வரையாத கொள்கையர்தங்கள் மதில்மூன்றும்
சிலை வரையாகச் செற்றனரேனும் சிராப்பள்ளித்
தலைவரை நாளும் தலைவரல்லாமை உரைப்பீர்காள்
நிலவரைநீலம் உண்டதும் வெள்ளை நிறமாமே! 5

வெய்யதண் சாரல்விரிநிற வேங்கைத் தண்போது
செய்யபொன் சேரும்சிராப்பள்ளி மேவிய செல்வனார்
தையல்ஓர்பாகம் மகிழ்வர் நஞ்சுண்பர் தலைஓட்டில்
ஐயமும்கொள்வர் யாரிவர் செய்கை அறிவாரே! 6

வேயுயர்சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்
சேயுயர் கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
பேயுயர் கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்து ஆடல் திருக்குறிப்பு ஆயிற்றாகாதே! 7

மலைமல்கு தோளாண்வலிகெட ஊன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்து உண்பர் பழிஓரார்
சொலவல வேதம்சொலவல கீதம் சொல்லுங்கால்
சிலவல போலும்சிராப்பள்ளிச் சேடர் செய்கையே! 8

அரப்பள்ளியானும் மலர்உறை வானும் அறியாமைக்
கரப்பள்ளிநாடிக் கண்டிலரேனும் கல்சூழ்ந்த
சிராப்பள்ளிமேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர்உம்மை ஏதிலர் கண்டால் இகழாரே! 9

நாணாதுஉடை நீத்தோர்கம் கஞ்சி நாட்காலே
ஊணாப்பகலுண்டு ஓதுவோர்களும் உரைக்கும் சொல்
பேணாதுறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே! 10

தேன்நயம்பாடும் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல்சங்கு ஏறும்கழுமல ஊரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகுபாடல் இவை வல்லார்
வானசம்பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே! 11

## திருநாவுக்கரசர் அருளியது

மட்டுவார் குழலாயொடும் மால்விடை
இட்டமாவுகந்து ஏறும் இறைவனார்
கட்டுநீத்தவர்க்கு இன்னருளே செயும்
சிட்டர்போலும் சிராப்பள்ளிச் செல்வரே! 1

அரிஅயன் தலைவெட்டி வட்டாடினார்
அரிஅயன்தொழுது ஏத்தும் அரும்பொருள்
பெரியவன் சிராப்பள்ளிப் பேணுவார்
அரிஅயன்தொழ அங்கு இருப்பார்களே! 2

அரிசிராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு
கரிச்சிராதுநெஞ்சே ஒன்று சொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளி என்றலும் தீவினை
நரிச்சிராது நடக்கும் நடக்குமே! 3

தாயுமாய்எனக்கே தலை கண்ணுமாய்
பேயனேன்எனையும் ஆண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனாரென நம்வினை நாசமே! 4

## மணிவாசகப் பெருமான் அருளியது

"சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி'' 1

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென்செய் பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ 2

## ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளியது

கழிந்தது நன்னெற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்தது உடல் இராவண்ணம் – அழிந்தது
இராமலையா கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

## தாயுமான சுவாமிகள் அருளியது

எடுத்ததேகம் பொருளாவி மூன்றும்நீ
எனக்கொன்று இல்லையெனமோன நன்னெறி
கொடுத்தபோது கொடுத்தன்றோ பினும்
குன்றிநானென்று கூத்தாட மாயையை
விடுத்தவாறும் கண்ணீரொடு கம்பலை
விலகுமாறுமென் வேட்கைப் பிரவாகத்தைத்
தடுத்தவாறும் புகலாய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே 1

நோயும்வெங்கலிப் பேயும் தொடரநின்
நூலில்சொன்ன முறைஇயமாதி நான்
தோயும்வண்ணம் எனைக்காக்கும் காவலும்
தொழும்புகொள்ளும் சுவாமியும்நீ கண்டாய்
ஓயும்சென்மம்இனி அஞ்சல்அஞ்சல் என்று
உலகம்கண்டு தொழவோர் உருவிலே
தாயும்தந்தையும் ஆனோய் சிரகிரித்
தாயுமான தயாபர மூர்த்தியே 2

தந்தைதாயும்நீ என்உயிர் துணையும்நீ
சஞ்சலம் அது தீர்க்க
வந்ததேசிக வடிவம்நீ உனையலால்
மற்றொரு துணை காணேன்
அந்தம்ஆதியும் அளப்பரும் சோதியே
ஆதியே அடியார் தம்
சிந்தைமேவிய தாயுமானவன் எனும்
சிர கிரிப் பெருமானே. 3

## அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

தறையின் மானுடர் ஆசையினால் மடல்
எழுது மாலருள் மாதர்கள் தோதக
சரசர் மாமலர் ஓதியினால் இரு – கொங்கையாலும்
தளர்மின்நேர் இடையால் உடையால் நடை
அழகினால் மொழியால் விழியால் மருள
சவலை நாயடியேன் மிக வாடி – மயங்கலாமோ.

பறவையான மெய்ஞ்ஞானிகள் மோனிகள்
அணுக ஒணாவகை நீடும் இராசிய
பவனபூரக வேகிய மாகிய – விந்துநாதம்
பகர ஒணாதது ஆன தயாபர
நினைய ஒணாதது ஆன தயாபர
பதியதான சமாதி மனோலயம் – வந்துதாராய்

சிறைவிடாத நிசாசரர் சேனைகள்
மடியநீல கலாபம் அது ஏறிய
திறல் விநோத சமேன் தயாபர – அம்புராசித்
திரைகள் போல் அலைமோதிய சீதள
குடக காவிரிநீள் அலைசூடிய
திரிசிராமலை மேல் உறைவீர – குறிஞ்சிவாழும்

மறவர் நாயக ஆதிவிநாயகர்
இளைய நாயக காவிரி நாயக
வடிவிநாயக ஆனைதன் நாயக – எங்கள்மானின்
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயகனார் குரு நாயக
வடிவதாம் மலை யாவையும் மேவிய – தம்பிரானே. 1

அங்கை நீட்டி அழைத்துப் பாரிய
கொங்கை காட்டி மறைத்துச் சீரிய
அன்புபோல் பொய் நடித்துக் காசள – உறவாடி
அம்பு தோற்றக ணிட்டுத் தோதக
இன்ப சாஸ்த்ரம் உரைத்துக் கோகிலம்
அன்றில் போல் குரலிட்டுக் கூரிய – நகரேகை

பங்கம் ஆக்கிய வைத்துத் தாடனை
கொண்டு வேட்கை எழுப்பிக் காமுகர்
பண்பில் வாய்க்க மயக்கிக் கூடுதல் – இயல்பாகப்
பண்டி ராப்பகல் சுற்றுச் சூளைகள்
தங்கள்மேல் பிரம்மை விட்டுப் பார்வதி
பங்கர் போற்றிய பத்மத் தாள்தொழ – அருள்வாயே

எங்கமாய்க் குறைவு அற்றுச் சேதன
அங்கமாய்ப் பரிசுத்தத் தோர் பெறும்
இன்பமாய்ப் புகழ் முப்பத்தாறில் நின் – முடிவேறாய்
இந்த்ர கோட்டி மயக்கத்தால் மிக
மந்த்ர மூர்த்தம் எடுத்துத் தாமதம்
இன்றி வாழ்த்திய சொர்க்கக் காவல – வயலூரா

செங்கை வேற்கொடு துட்டச் சூரனை
வென்று தோற்பறை கொட்டக் கூளிகள்
தின்று கூத்து நடிக்கத் தோகையில் – வரும்வீர
செம்பொனால் திகழ் சித்ர கோபுர
மஞ்சு இராப்பகல் மெத்தச் சூழ்
தென் சிராப்பள்ளி வெற்பில் தேவர்கள் – பெருமானே. 2

அந்தோ மனமே நமது ஆக்கையை
நம்பாது எயி தாகிய சூத்திரம்
அம்போருகன் ஆடிய பூட்டிது – இனிமேல்நாம்
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவனார்க்கு இயல்
அங்காகுவம் வா இனிதாக் கையை – ஒழியாமல்

வந்தோம் இதுவே கதி யாட்சியும்
இந்தா மயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாம் என் வீக்கிய – சிவநீறும்
வந்தே வெகுவா நமை ஆட்கொளும்
வந்தார் மதமேதினி மேற் கொள்
மைந்தா குமரா எனும் ஆர்ப்புய – மறவாதே.

திந்தோ திமி தீத்த மாத்துடி
தந்தா தன ணாதன தாத்தன
செம்பூரிகை பேரிகை ஆர்த்து எழ – மறவாதே
செங்காடு எனவே வரும் மூர்க்கரை
சங்கார சிகா மணி வேற்கொடு
திண்டாடி மகா மயில் மேற்கொளு – முருகோனே

இந்தோடு இதழ் நாக மகாக்கடல்
கங்காளம் மின்ஆர் சடை சூட்டிய
என்தாதை சதா சிவ கோத்திரன் – அருள்பாலா
என்கூட அருளால் நௌவி நோக்கியை
நன்பூ மணம் மேவி சிராப்பளி
என்பார் மன மேதினி நோக்கிய – பெருமானே. 3

அரிவையர் நெஞ்சு உருகாப் புணர்
தருவிரகங் களினால் பெரிது
அவசம் விளைந்து விடாய்த்தடா – முலைமேல் வீழ்ந்து
அகிலொடு சந்தன சேற்றினில்
முழுகி எழுந்து எதிர் கூப்புகை
அடியின் கம்பிறை போல் பட – விளையாடி

பரிமளம் விஞ்சிய பூக் குழல்
சரிய மருங் குடை போய்ச்சில
பறவைகளின் குரலாய்க் கயல் – விழிசோரப்
பனி முகமும்குறு வேர்ப்பு எழ
இதழமுது உண்டு இரவாய்ப் பகல்
பகடி இடும் படி தூர்த்தனை – விடலாமோ.

சரியை யுடன் கிரியை போற்றிய
பரம பதம் பெறுவார்க்கு அருள்
தருகணன் ரங்க புரோச்சிதன் – மருகோனே
சயிலவம் அறிந்தகை வேற் காடு
மயிலினில் வந்தெனை ஆட் கொளல்
சம்மறியும் படி காட்டிய – குருநாதா

திரி புவனம் தொழு பார்த்திபன்
மருவிய மண்டவ கோட்டிகள்
தெருவில் விளங்கு சிராப்பள்ளி – மலைமீதே
திரிய இருந்த பராக் ரம
உருவளர் குன்றுடையார்க்கு ஒரு
திலதம் எனும் படி தோற்றிய – பெருமானே. 4

அழுது அழுது ஆசார நேசமும்
உடையவர் போல் எடுபாய் சூழ்வுறும்
அசடிகள் மாலான காமுகர் – பொன்கொடா நாள்
அவருடன் வாய் பேசி டாமையும்
முனிதலும் மாறாத தோழிகள்
அறுதியில் காசாசை வேசைகள் – நஞ்சுதோயும்

விழி களினால் மாட வீதியில்
முலை களை ஓராமல் ஆரோடும்
விலையிடு மாமாய ரூபிகள் – பண்பிலாத
விரகிகள் வேதாளமோ என
முறையிடு கோமாள மூளிகள்
வினை செயலாலே என் ஆவியும் – மயங்கலாமோ

வழியினில் வாழ் ஞான போதக
பரம சுவாமி வரோதய
வயலியில் வேலாயுதா வரை – எங்குமானா
மதுரையில் மீதால வாயினில்
எதிர் அமணார் ஓரே எணாயிரர்
மறி கழுமீது ஏள நீறு – பரந்துலாவச்

செழியனும் ஆளாக வாது செய்
கவிமத சீகாமு மா முனி
சிவசிவ மகா தேவ காவென – வந்துபாடும்
திரு வுடையாய் தீதிலாதவர்
உமை ஒருபால் ஆன மேனியர்
சிர கிரி வாழ்வான தேவர்கள் – தம்பிரானே 5

இளையவர் நெஞ்சத் தளையம் எனும்சிற்று
இடை கொடு வஞ்சிக் – கொடிபோல்வார்
இணையடி கும்பிட்ட அணியல்குல் பம்பித்து
இதழமுதுந் துய்ந்து – தனியாரக்

களப சுகந்தப் புளகித இன்பக்
கன தன கும்பத்து – இடை மூழ்கும்
கலவியை நிந்தித்து இலகிய நின்பொன்
கழல் தொழும் அன்பைத் – தருவாயே

தளர்வுரும் அன்பர்க்கு உளம் எனும் மன்றில்
சதுமறை சந்தத் – தொடு பாடத்
தரிகிட தந்தத் திரிகிட திந்தித்
தகுர்தி எனும் கொட் – டுடன் ஆடித்

தெளிவுற வந்துற் றொளிர் சிவன் அன்பில்
சிறுவ அலங்கல் – திருமார்பா
செழுமறை அம்சொல் பரிபுரசண்டத்
திரிசிர குன்றப் – பெருமாளே 6

பகலவன் ஒக்கும் கனவிய ரத்நம்
பவள வெண்முத்தம் – திரமாகப்
பயில முலைக் குன்றுடையவர் சுற்றம்
பரிவென வைக்கும் – பணஆசை

அகமகிழ் துட்டன் பகிடி மருள் கொண்டு
அழியும் அவத்தன் – குண ஈனன்
அறிவிலி சற்றும் பொறையிலி பெற்றுண்டு
அலைதல் ஒழித்து என்று – அருள்வாயே

சகலரும் மெச்சும் பரிமள பத்மம்
தருண பதத்தின் – சுரலோகத்
தலைவர் மகட்கும் குறவர் மகட்கும்
தழுவ அணைக்கும் – திருமார்பா

செகதலம் மெச்சும் புகழ் வயலிக்கும்
திகுதிகெனப் பொங் – கியவோசை
திமிலைதவில் துந்துமிகள் முழக்கும்
சிரகிரி இற்கும் – பெருமாளே. 7

ஒருவரொடு கண்கள் ஒருவரொடு கொங்கை
ஒருவரொடு செங்கை – உறவாடி
ஒருவரொடு சிந்தை ஒருவரொடு நிந்தை
ஒருவரொடு இரண்டும் – உரையாரை

அரவம் எதிர்கொண்டு நடு நடு நடுங்க
அடல் இடு ப்ரசண்ட – மயில் வீரா
அமரர் முதல் அன்பர் முனிவர்கள் வணங்கி
அடிதொழ விளங்கு – வயலூரா.

திருவை ஒருபங்கர் கமலமலர் வந்த
திசைமுகன் மகிழ்ந்த – பெருமாணர்
திகுதகுதி என்று நடமிட முழங்கு
த்ரிசிரகிரி வந்த – பொருளே 8

குமுத வாய்க்களி அமுத வாக்கினர்
கோலே வேலே சேலே போலே – அழகான
குழைகள் தாக்கிய விழிகளால் களி
கூரா வீறா தீரா மாலாய் – அவரோட

உமது தோள்களில் எமது வேட்கையை
ஓரீர் பாரீர் வாரீர் சேரீர் – எனவே நின்று
உடைதொடாப் பணம் இடை பொறாத் தனம்
ஊடே வீழ்வேன் ஈடேறாதே – உழல்வேனோ

தமர வாக்கிய அமரர் வாழ்த்திய
தாதாவே மாஞாதாவே – தோகையில் ஏறி
சயிலநாட்டு இறை வயலி நாட்டு இறை
சாவா மூவா மேவா நீவா – இளையோனே

திமிர ராக்கதர் சமர வேற்கர
தீரா வீரா நேரா தோரா – உமைபாலா
திரிசிராப்பள்ளி மலையின் மேல் திகழ்
தேவா கோவே வேளே வானோர் – பெருமாளே 9

குவளை பூசல் விளைந்திடும் அம்கயல்
கடுவதாம் எனும் மைக்கண் மடந்தையர்
குதுதவாய் அமுதத்தை நுகர்ந்திசை – பொருகாடை
குயில் புறா மயில் குக்கில் சுரும்பினம்
வளர் பதாயுதம் ஒக்கும் எனும்படி
குரல்விடா இரு பொற்குடமும் புள – கிதமாகப்

பவளரேகை படைத்த அதரம் குறி
உறவியாள படத்தை அணைந்துகை
பரிச தாடன மெய்க்கரணங்களின் – மதநூலின்
படியிலே செய்து உருக்கி முயங்கியே
அவசரமாய் வட பத்ர நெடுஞ்சுழி
படியும் மோக சமுத்ரம் அழுந்துதல் – ஒழிவேனா

தவளரூப சரச்சுதி இந்திரை
ரதி புலோமசை க்ருத்திகை ரம்பையர்
சமுக சேவித துர்க்கை பயங்கரி – புவனேசை
சகல காரணி சத்தி பரம்பரி
இமய பார்வதி ருத்ரி நிரஞ்சனி
சமய நாயகி நிஷ்களிகுண்டலி – எமதாயி
சிவை மனோமணி சிற்சுக சுந்தரி
கௌரி வேதவி தட்சணி அம்பிகை
திரிபுரை யாமளை அற்பொடு தந்தருள் – முருகோனே
சிகர கோபுர சித்திரமண்டப
மகர தோரண ரத்ந அலங்க்ருத
திரிசிராமலை அப்பர் வணங்கிய – பெருமாளே. 10

சத்தி பாணீ நமோ நம முத்தி ஞானீ நமோ நம
தத்வ வாதீ நமோ நம – விந்துநாத
சத்துருபா நமோ நம ரத்ன தீபா நமோ நம
தற்பர தாபா நமோ நம – என்று பாடும்

பத்தி பூணாமலே உலகத்தின் மாணார் சதவாகில்
பச்சை பாடீர பூசித – கொங்கைமேல் வீழ்
பட்டி மாடான நானுனை விரட்டிராமே உலோகித
பத்மசீர் பாத நீயினி – வந்துதாராய்

அத்ர தேவா யுதாகர ருத்ர சேனாபதீ சுசி
அர்க்ய சோமாசியா குரு – சம்ப்தாயா
அர்ச்சனா வாகனா வயலிக்குள் வாழ்நாயகாபுய
அட்சமாலா தாராகுற – மங்கை கோவே

சித்ர கோலாகலா விரலட்சுமி சாதாரதாபல
திக்கு பாலா சிவாகம – தந்த்ர போதா
சிட்ட நாதா சிராமலை அப்பர் சுவாமி மகாவ்ருத
தெர்ப்பை ஆசார வேதியர் – தம்பிரானே. 11

பகல் இரவினில் தடுமாறா பதிகுரு எனத் தெளிபோத
ரகசியம் உரைத்து அனுபதி ரத நிலைதனைத் தருவாயே
இகபரம் அதற்கு இறையோனே இயலிசையின் முத்தமிழோனே
சகசிரகிரிப் பதிவேளே சரவணபவப் பெருமாளே. 12

பொருளின் மேல் ப்ரிய காமாகாரிகள்
பரிவுபோல் புணர் க்ரீடர் பீடிகள்
புருசர் கோட்டியில் நாணா மோடிகள்–கொங்கை மேலே
புடவை போட்டிடு மாயாரூபிகள்
மிடியராக்கும் பொலா மூதேவிகள்
புலையர் மாட்டு மறாதே கூடிகள் – நெஞ்சமாயம்

கருதொணாப்பல கோடா கோடிகள்
விரகினால்பலர் மேல்வீழ் வீணிகள்
கலவி சாத்திர நூலே ஓதிகள் – தங்களாசைக்
கவிகள் கூப்பிடும் ஓயா மாரிகள்
அவசமாக்கிடு பேய் நீருணிகள்
கருணை நோக்கம் இலா மாபாவிகள் – இன்பமாமே

குரு கடாட்ச கலா வேதாகம
பரம வாக்கிய ஞானாசாரிய
குறைவு தீர்த்தருள் சுவாமீ கார்முக – வன்பரான
கொடிய வேட்டுவர் கோ கோ கோ என
மடிய நீட்டிய கூர்வேலாயுத
குருகு சேத்ர புரேசா வாசுகி – அஞ்சமாறும்

செரு பராக்ரம கேகே வாகன
சரவணோற்பவ மாலா லாளித
திரள் புயாத்திரி ஈரா் ஆறாகிய – கந்தவேளே
சிகர தீர்க்கம் காசீ கோபுர
முக சடாக்கர சேணாடாக்ருத
திரிசிராப்பள்ளி வாழ்வே தேவர்கள் – தம்பிரானே. 13

பொருள்கவர் சிந்தை அரிவையர் தங்கள்
புழுகு அகில் சந்து – பனி நீர்தோய்
புளகித கொங்கை இளகவடங்கள்
புரள மரங்கில் – உடைசோர

இருவளர் கொண்டை சரிய இசைந்து
இணைதரு பங்க – அநுராகத்து
இரிதல் ஒரிந்து மனது கசிந்துன்
இணையடி என்று – புகழ்வேனோ
மருள்கொடு சென்று பரிவுடன் அன்று
மலையில் விளைந்த – தினைகாவல்
மயிலை மணந்த அயிலவ எங்கள்
வயலியில் வந்த – முருகோனே

தெருளுறும் அன்பர் பரவ விளங்கு
திரிசிர குன்றில் – முதநாளில்
தெரிய இருந்த பெரியவர் தந்த
சிறியவ அண்டர் – பெருமாளே. 14

வாசித்துக் காண ஒணாதது
பூசித்துக் கூட ஒணாதது
வாய்விட்டுப் பேச ஒணாதது – நெஞ்சினாலே
மாசர்க்குத் தோண ஒணாதது
நேசர்க்குப் பேர ஒணாதது
மாயைக்குச் சூழ ஒணாதது – விந்துநாத

ஓசைக்குத் தூரமானது
மாகத்துக்கு ஈறதானது
லோகத்துக்கு ஆதியானது – கண்டு நாயேன்
யோகத்தைச் சேருமாறு மெய்ஞ்
ஞானத்தைப் போதியாய் இனி
ஊனத்தைப் போடிடாது – மயங்கலாமோ

ஆசைப்பட்டு ஏனல் காவல்செய்
வேடிச்சிக்காக மாமயல்
ஆகிப் பொற்பாதமே பணி – கந்தவேளே
ஆலித்துச் சேல்கள் பாய்வயல்
ஊரத்தில் காளமோடு அடர்
ஆரத்தைப் பூண் மாயூரது – ரங்கவூரா.

நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்து எட்டாத யோகிகள்
நாடிற்றுக் காண ஒணாது என – நின்றநாதா
நாகத்துச் சாகை போய்உயர்
மேகத்தைச் சேர் சிராமலை
நாதர்க்குச் சாமியே சுரர் – தம்பிரானே. 15

வெருட்டி ஆட்கொளும் விடமகள் புடைவையை
நெகிழ்த்த ணாப்பிகள் படிதறிகள் சடுதியில்
விரப்பமாக்கிகள் விரவிய திரவியம் – இலரானால்
வெறுத்து நோக்கிகள் கபடிகள் நடமிடு
பதத்தர் தூர்த்திகள் மருகமத பரிமள
விசித்ர மேற்படு முலையினும் நிலையினும் – எவரோடும்

மருட்டி வேட்கைசொல் மொழியினும் விழியினும்
அவிழ்த்த பூக்கமழ் குழலினும் நிழலினும்
மதிக்கொணாத் தனி இடையினும் நடையினும்–வமேயான
மயக்கமாய்ப் பொருள் வரும்வகை க்ருசிபணு
தடத்துமோட்சமதருளிய பல மலர்
மணத்த வார்க்கழல் கனவிலும் நனவிலும் – மறவேனே.

இருட்டில் ஆச்சுரர் உலகினில் இலகிய
சகஸ்த்ர நேத்ரம் உடையவன் மிடி அற
இரட்சை வாய்த்தருள் முருக பனிருகர – குகவீரா
இலட்சுமீச்சுர பசுபதி குருபர
சமஸ்த ராச்சிய நிருப புகழ் வயமியல்
இலக்கர் எய்படை முகடுஎழு ககபதி – களிகூரத்

திருட்டு ராட்சதர் பொடிபட வெடிபட
எடுத்த வேற்கொடு கடுகிய முடுகிய
செருக்கு வேட்டுவர் திறையிட முறையிட – மயிலேறும்
செருப்பராக்ரம நிதி சரவண பவ
சிவத்த பாற்கரன் இமகரன் வலம்வரு
திருச்சிராப்பள்ளி மலைமிசை நிலைபே–பெருமாளே. 10

முகிழ்ந்தது

0580